தலங்களின் அதிசயங்களைக்கண்டுகளித்துக் கடந்து தேவலோகத்துக்குச்சமீபத்தில் வருவதைக்கண்ட தூதர்களிற் சிலர் வாயுவேகத்தினுமேலிட்டோடி இந்திரனைச்சேவித்துச் சுவாமி சூரனென்னுங்கொடியவீரன் தம்பியருடன் அளவற்றராட்சதச்சேனைகள் சூழ இதோ வந்துவிட்டானென்றமாத்திரத்தில் இடியுண்டசற்பம்போலமனநடுக்குற்று முகம்வாடிச் சரீரம்வியர்க்கப் பயப்பிராந்திகொண்டு பெருமூச்செறிந்து பதைத்து இறந்தவனைப்போல அசைவற்றுச் சோர்ந்து தேறித் தன் வலியையும் வீரத்தினையுஞ் செல்வச்செருக்கையும்மறந்து ஏக்கமுற்றவனாய் இதனையெண்ணுவான் இத்தலத்தினைத்தேடிவருகின்ற அவுணராசனெதிரில் நமது சயின்னியங்களுடன் போய்ச் சண்டைமுகத்திலெதிர்ப்பேனாயினும் என்னுயிருக்கபாயம்வருவதுமன்றியிற் றுக்கசாகரத்திலழுந்தி எக்காலத்தினுந் தீராதபழியையுஞ் சுமப்பதல்லது வெற்றிபெறவல்லேனோ மேலும் ஆதியிற்றன் வற்சத்தவனைநான் அலைத்ததைச்சேவிப்பட்டுஞ் சூரபன்மன்கோபித்து யிவடம்வருவது என்னைப்பற்றித்துன்பப்படுத்துவல்லது வேறுமுண்டோ முற்பகற்செய்யின் பிற்பகல்விளையுமென்று பெரியோர்களாற்சொல்லியிருப்பதுவீண்படுவதோ ஆதலாற்சிறந்தசக்திகளையுஞ் சாஸ்திரவிசாரணைகளையுமுடைய சிரியோரானவர் பரயசியபடாட்சத்தினாற் பெற்றசெல்வப்பெருக்கினையனுபவிக்குமுன்னிலையில் மகிழ்ந்தும் அப்பேறுமாறும்போது துக்கத்திலழுந்தியும் யான் எனதென்னும் பாசத்திற்கட்டுண்டு முன்தான் அனுபவித்தவைகளை நினைந்து வாடிவருந்துவார்களோ மேலுஞ் சிவபிரான்கட்டளையின்படி வருவதுவந்துநேருமல்லது தன்முயற்சியினால்மறுக்கக்கூடுவதோ ஆதலால் வருங்கருமம்நேராய்த்தெரிந்தும் வீணிற்சண்டைக்குநேர்ந்து பிராணனையிழந்து கிலேசமும்பழியும் பூணேன் மேலும் பொருட்செல்வமும் நிலைபெற்றதல்லச் சிறப்பாகவாழ்ந்தவர் சிலகாலம் வருந்திப் பலரும் இகழத்தாழ்வதும் அல்பராய் ஒருவராலும் மதிக்கப்படாதவருமாய்த் தரித்திரத்தையனுபவித்திருப்பவர் மேலானசெல்வத்தினைப்பெற்றுப் பலர்புகழ உயர்வதுஞ் சிவச்செயலல்லது வேறுமுண்டோ இதைப்பிராணிகளையலைத்துவாட்டும் அவுணரிடத்தில் திஷ்டாந்தமாகக்கண்டேன் மேலுஞ் சத்துராதிகள்நகைக்க நாணித் தலைகவிழ்ந்திருக்குந் தசையினைப்பெறவிரும்பேன் அல்லது கற்கம்பத்தினையொத்த புயங்களையுடைய சூரனைக்கண்டு உறவாடி நாளைக்கழிக்கநினைத்தாலுங் கறுவியிருக்கும் மனதைப்பெற்றவனாதலாற் பார்த்தவுடன் பிடித்துப் பாரவிலங்கைப்பூட்டி அரியசிறையில்வைத்துத் தகாத ஏவல்களைக்கொண்டு அலைப்பான் இதற்கையமில்லையென்று தேவராசன் யோசித்துச் சீக்கிரமாகச்சிங்காதனத்தைவிட்டிறங்கி அரமனையைச்சேர்ந்து இந்திராணிக்குயிச்சேதிகளைத்தெருட்டி இருவருங்குயில்வடிவுகொண்டு மனவாட்டத்துடன் புலம்புற்றுவிண்ணிற்பறந்தோ

டிமறைந்தனர் இதன்மத்தியின் ராட்சதவீரர்பொன்னுலகத்தினை முற்றிக்கை
செய்து கொண்டு இந்திரனைத்தேடிக்காணுமல்மூலைமுடுக்குகளெங்கும் ஆ
ராய்வதைத்தேவர்தெரிந்து நடுங்கி நமது அரசன்வெற்றியுஞ்செல்வப்பெ
ருக்கும் அழியுங்காலமும் நேர்ந்ததோ யினிநம்மாற்செய்யவேண்டும்மு
யற்சியாதிருக்கின்றதென்று வருந்திவாடிச்சோருந் தன்மையினாற்பொன்
னுலகச்சிறப்பனைத்தும் அழிபட்டுப்புலம்புகின்றதுவாயில் ராட்சதவீரர்
மேவிட்டுத்தேவர்வீடுகளிற்புகுந்து அவர்களைப்பிடித்துச் சதறிப்புலம்பத்
தக்கதாகத்தெண்டங்களினுல்மோதியடித்துக்கரங்களைக்குவித்துக் கோடை
யிடிகளைப்போல முதுகெலும்புமுறியக்குத்தியுப்பருத்திருக்குந்தோள்கள்
முறிந்துதென்றுசொல்லத்தக்கதாக வலியகரங்களினுல்நெருக்கிச்சேர்த்துக்
கயற்றினுல்அணிவகுத்துக்கட்டியும் இவ்விதமாகச்சற்றும் யிரக்கமற்றதான
வர் வானவரைத்துன்பப்படுத்தி யிழுத்துக்கொண்டுவந்து அகண்டசாம்பி
ராச்சியப்பெருக்கினைக் கிடைத்திருக்குந்தங்கள்தந்தன்முன்னம்பிட்டது
வாயில் விண்ணவர்தொழுதுபோற்றத் துடங்கி ஓ ராசாதிராசனேராசபரா
பேல்பரனே ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கதிபனே வீராதிவீரனேவாழி
வாழி தேவரீர் அவுணமரபிலுதித்தீர் மேலும் அரியதவங்களைச்செய்துபரம
சிவத்தின்பரிபூரணகடாட்சத்துடன் சகலசம்பத்துக்களையும்பெற்றீர் இரு
தன்றியும் அஷ்டதிக்குப்பாலகர்முதலானசகலரையும்வெற்றிகொண்டுசெய
த்தைநாட்டினீரென்றுசொல்லுவார்கள் ஆதலால் அபலாளாகியஅடியோங்க
ளைத் துன்பஞ்செய்வதுநன்றோ இதனுல் உமதுசிறந்தவெற்றிக்கிழிவல்ல
வோ மேலுந் தமதுபுசபெலபராக்கிரமம் எப்படிக்கொத்தது நீர்சற்று
கோபிப்பீராயிற் பிராணிகளனைத்தையும் வாட்டுந்திறம்பெற்ற எமன் தா
பரித்திருப்பானே திக்குப்பாலகர் முதலானதேவரும் பிழைப்பதுமுண்
டோ சகலபுவனசராசரங்களும் நாசமடையாதோ ஆதலால் இத்தினமு
தற் றேவரீரேஎங்கள் குலதெய்வமாகவும் வழிபடுகடவுளாகவும் நெருங்
கியசுற்றமாகவுங் கொடிப்பதுமல்லாமல் தேவரீர்கட்டளையிட்ட வேலைச்
சிரசாவகித்துச் செய்யக்கடவோமென்று புகழ்ந்துவேண்டுகின்றதேவர்
கூட்டங்களைப்பார்த்து உங்கள்செய்கை வெகுநேர்த்தியெனச் சீராங்குலு
ங்கநகைத்தவனுய்க் கட்டுகளையவிழ்ப்பித்து இனிநமதேவலின்வழியேநிற்
பீரென்றருளிவிட்டு இதன்மத்தியில் ராட்சதச்சேனைகள் இந்திரன்வளங்
களைக்கொள்ளைகொண்டுவருவதைப் பூர்வத்தில் தான்மகஞ்செய்த தருவா
யில் பிராணனைவிட்டும் பரமசிவகடாட்சத்தினுல் சகலவளன்களுடனும்
மீட்டும்பெற்றகாசிபர்புத்திரனுன சூரன்கண்டுகளித்து அப்பதியைக்கடந்
து அளவற்றசயின்னியங்கள் சூழ்ந்துவர வேதகோஷ்டமாருமலொலித்
திருக்கும் முயற்சிபெற்றமகலோகத்தைச்சேர்ந்ததுவாயில் வேதாகமசா

ஸ்திரசம்பன்னராய்ப் பரமசிவத் தமைத்தாட்கொள்ளப்பெற்றவராய்த் தவ
சிரேஷ்டராயிருக்கும் மார்க்கண்டர்முதலானபெரியோர்கள் வாசஞ்செ
ய்யும்யிடமேமுதலான முப்பதவிகளிலிருப்பவர் சூரன்வரவையறிந்தபய
ப்பிராந்தியினால் மறையக்கண்டு அவர்களையிகழ்ந்து அவ்விடம்நீங்கிப்பிரம
தேவன்வாழும் மனோவதிபட்டினத்துக்குப்போகுமுன்னிலையில் இச்செ
தியைநான்முகன்கேள்விப்பட்டவுடன் திடுக்கிட்டு சயம்பெற்றவாமுய
ற்சியைநினைந்து இவனுடன்நன்மைகொண்டாடி அனுப்பிவிடுவது நன்
றெனக்கருதிக் குற்றமற்ற தவவிரதங்களைமுடித்துப் பேரறிவைவாய்ந்த
ரிஷிபுங்கவர் வேதபாராயணஞ்செய்துசூழ்ந்துவர அன்புவிளங்கவந்து
பெரும்புறக்கடல்புறண்டதைப்போல வருகின்றராட்சதசேனைகளின் மத்
தியில் இந்திரஞாலத்தேரின்மீது விளங்குகின்றசூரபன்மனைக்கண்டு கரங்
களைநீட்டி ஓராசாதிராசனே நீரும் உமதுதுணைவருஞ் சகலசெல்வங்களை
யும்பெற்று நீடூழிகாலம்வாழிவாழியெனச் சிறந்தஆசீர்வாதங்களைச்சொல்
லியபின்பு அரசனே பரமசிவகடாட்சத்தைச் சம்பூரணமாகக்கிடைத்து
சகலருக்குமிறைவனாய் ஆயிரத்தெட்டுஅண்டங்களையும் ஆளும்பெருமை
களையுடைய உம்மைப்போன்றதலைவனாயொருவன் இந்தநகரைப்பெரும்பிர
யோசனமாகநினைந்துவருவதற்கு யாமென்னதவஞ்செய்தேனோதெரியா
து உன்பெருமைகளைப் பரமசிவமல்லது மற்றெவர்களாற்கணித்துப்பே
சப்படும் அளவற்றகாலம் மனமுந்தேகமும்வருந்திப் பரமனைக்குறித்
து அரியவேள்விகளைச்செய்து அவனருளினால் இவ்விதவரங்களைப்பெற்ற
துமல்லாமல் விராதிவீரனாய்ச் சகலபுவனங்களிலும் உன்வெற்றியைநாட்
டிச் செயவிருதுக்கட்டினாய் லட்சுமிவிலாசனாவிஷ்ணுமுதலாயதேவரா
உன்தம்பியைக்கொண்டுவென்றாய் ஆதலால் உனக்கொப்பெடுத்துச்சொ
ல்லத் திரிலோகங்களிலும் யாவரிருக்கின்றார்கள் மேலும் காசிபனுக்கு
நீங்கள் அன்பாகியபிள்ளைகளாதலால் ராட்சதராசனே நான்உங்களுக்குப்
பாட்டனாகும் இதனையெதார்த்தமாகநம்பக்கடவை ஆதலால் நீபெற்றசீர்
சிறப்புகளனைத்தும் நம்முதாம் யானும்புறம்பல்லவென்று பற்பலவுபசா
ரவார்த்தைகளைச்சொல்லிப் பக்கத்தில்வருகின்ற சிங்கமுகன் தாருகனைக்
கலந்து தீர்க்காயுசாயிருப்பீரென்றுவாழ்த்தி எவரையும்அசைப்படுத்தவல்ல
அழிவற்றதேர்களையும் விற்களையுந் தமதுநாமத்தினால்விளங்கும் பிரம
சரத்தினையுந் துணைவருக்குத்தந்ததைச் சகலராலும் புகழ்ந்துவணங்கும்
வெற்றிபெற்றசூரன்பார்த்து அதிகமகிழ்ச்சியையடைந்தவனாய்ப் பாட்ட
னிடத்துஅன்புடன் ஆதரித்து நிறுத்தி அப்பதியைக்கடந்து மாயைபுத்தி
ரனாகுமவன் தன்னனிகஞ்சூழ்ந்தவாய் பரிமளமிகுந்ததிருத்துழாய்மாலை
மார்பனான கண்ணன்வாசஞ்செய்யும் வைகுந்தத்தினைச் சேர்ந்தனனத்திக்

வானதேவனறிந்து சூரனையெதிர்கொண்டு அசுரேந்திரனை சகலசம்பத்துக்களையும் அனுபவித்து அளவற்றகாலஞ்செயசாலியாய்வாழ்வையென மலஆசிகளையும் முகமன்புகளையுஞ்சொல்லக்கேட்டு சூரன்மகிழ்ந்து அவ்வுலகத்தின் சிறப்புகளைத் துணைவர்மித்திராளுடன்பார்த்துப்பாம்பணைப் பள்ளியானை மாதவனிடத்திற்பரிவாய் எதாப்பிரகாரம் இவ்விடத்திற்சுகமாயிருமெனச்சிலவுகொடுத்துத் தன்சேனைகளுடன் அப்பதியைக்கடந்து காளகண்டத்தினையுந் திறிநேத்திரங்களையும்பெற்று விஷ்ணுபிரமன்முதலான தேவருக்குத் தத்தமக்குரிய ஏவல்களைக்காட்டி இவ்விததிருவிளையாடலைநடிப்பிக்கும் பரமன்வீற்றிருக்குந் திருக்கயிலையைச்சேர்ந்துவானத்தைவிட்டிறங்கிப் பரிசனங்களைக்கடந்து தேவராதியர்புகழும் வெற்றிபெற்ற சூரன்தனதுதுணைவருடன் ஆலயத்துக்கருகில்வந்து முதல்வாயிற்காவல்கொண்டிருக்கும் மதுகற்தனனநந்திதேவர் அனுமதியின்பேரில் பரமேஸ்பரன் சன்னிதானத்திற்போய் காந்தள்மலரையொத்துச் சிவந்துவிளங்கும் கரகமலங்களையுடைய கவுரிசமேதராய் வீற்றிருக்கும் இறைவன் முன்னுஞ்சென்று பத்திவிசுவாசத்துடன் மும்முறைவணங்கிப் போற்றிநிற்கின்றதருவாயிற் காளகண்டமூர்த்தியானவர் கிருபாநோக்கம் பாலித்து இனிமற்றஅண்டங்கள்முற்றினும்போய்ப்பார்த்துவந்து அகிலங்களனைத்திறுக்கும் இறைமைபூண்டு அஷ்டதிக்குகளெங்கும்புகழச்செங்கோல்செலுத்தியாளக்கடவையென்று அனுக்கிரகஞ்செய்யச் செந்தாமரையையொத்த திருவடிகளில் மீட்டுஞ்சேவித்து விடைபெற்றுப்போய் அலைகடலை நிகர்த்து ஆறபாரித்திருக்குஞ் சேனைப்பெருக்கிற்கலந்து செயபேரிகைபேரிமுதலானவாத்தியங்கள்முழங்கநடந்துசிறந்தோங்கியஅண்டகோளகைமுகப்பைநோக்கிசெல்லுமுன்னிலையிற் பரமசிவக்கோலமாய்அவனருளைப்பெற்று குமலிபினெறி நடாத்தும் அளவற்றஉருத்திரர் சூரபன்மனையெதிர்கொண்டு உபசரித்து அண்டங்களுக்குப் போகும் வழிகளைக் காட்ட அதன்மூலமாய்ச்சூரனானவன் தன்சேனைப்பெருக்குடன் சென்று அவ்விடங்களிலிருப்பவர் அனைவரையும்வென்று தன்வசப்படுத்தினவனாய் மற்றவைகளினும் அவ்வாறே உருத்திரகோடிகள் தொடர்ந்துகாட்ட முற்றினும்நாடி அத்தலங்களின்வாசஞ்செய்யுந் தேவராதியரைச்செயித்து அவர்களுங்களைக்கொள்ளைகொண்டு தன்சேனைத்தலைவர் பலரைக்காவலிருத்தி இவ்வாறே அளவற்ற அண்டங்கள்தோறுஞ் சுற்றிச்சுற்றிப்பார்த்துத் தன்சுற்றமாகிய அவுணவீரரை அப்பதங்களில் அதிபராய்வைத்து மனமகிழ்ச்சியுடன் தம்பியர் மற்றசேனைகள்சூழ்ந்து போற்றத்திரும்பி இவ்வண்டப்பித்திகையைச்சேர்ந்து கிடைத்தற்கரிய பெருமையையுடைய துறக்கநாட்டிற் புகுந்தான்.

இவ்விதமாக மாயைபுத்திரனான சூரன் தேவலோகத்தைச் சேர்ந்த
தறுவாயிற் பூர்வத்தில் விண்ணவர்களுக்குத் தோற்றோடி மறைந்திருக்குந்
தானவர் இச்செதிகளையறிந்து களித்துச்சந்தோஷசாகரத்தில் முழுகத்தக்க
தாகவுஞ் சூரனெனுங்குமுலவிச்செயசாலியாகவருகின்றசம்பிறமத்தினைத் அ
தீர்தெரிந்தோடி அவுணர்நாயகனுக்கு விண்ணப்பஞ் செய்யக்கேட்டவுட
ன்அரியவமுதத்தை யெளிதாகப்பெற்றுப் புசித்தவனைப்போல் மகிழ்ந்து
மூன்றாம்பிறையினை பணிந்தசடாமண்டலதாரியாகிய பரமசிவகடாட்சத்தி
னூற் சூரன்பெற்றஅருட்டிறக்கையுஞ் சிறந்தபேறுகளையும் படைகளின்
சீரையும் மற்றஅயிஸ்வரியங்களையுந் தெரிந்து அவைகளை நினைந்துநினைந்
து சரீரம்பூரிக்கவும் புயங்கள் வானத்தையளாவவும் விழிகளில் ஆனந்தவா
ரிபெருகவும் மனவெழுச்சிபெற்றவனாய் விரைந்து ஆசிரியனாகிய சுக்கிர
னிடத்திற்போய்ச்சேவித்துச் சுவாமி தேவரீர்கடாட்சத்தினாலுதித்த நங்கு
லத்துக்குத்தலைவனாகுஞ் செயசாலியாகிய சூரபன்மன் ஆயிரத்தெட்டண்
டங்களுக்கும் அதிபனாய்த் திசைகளனைத்தையும் வென்று வருகின்றானெ
னக்கேழ்விப்பட்டேன் அவனைத்துரிதமாகக் காணவிருப்புற்றதால்தேவரீர்
தயைசெய்து முந்திச்சென்று நமக்கிருக்கின்ற சம்பந்தங்களையுந் தேவர்
எனக்குச்செய்த கொடுமைகளையுந் தெரிவிப்பதுமல்லாமல் நான்காணவரு
வதாகவும் அறிவிக்கவேண்டுமென வேண்டுகின்ற அரசனை வாழ்த்தியுடன்அஷ்
ட்டப்படிக்குச்செய்வோமெனத்தேற்றி ராட்சதர்குருவாகியசுக்கிரன் சொ
ர்ணமயமாகவிளங்கும் விமானத்திலேறிப் பலசீஷர்சூழ்ந்து வேதங்களை
யோதிவரப் போகின்றதறுவாயில் அசுரவேந்தனும் ரதத்திலாரோகணித்
துத் தன்னவர்கள் சேனைகளுடன் பின்பற்றிவரச் சுக்கிராச்சாரி யானவன்
தலையில்வருவதைச் சூரன்கண்டவுடன் பரமனைப்போலப்பாவித்து சீக்கி
ரமாகத் தன்தேராவிட்டிறங்கி யெதிர்கொண்டு கரங்களைக்கூப்பிச் சேவி
த்தபோது சுக்கிரன்மனமகிழ்ந்து உமதுசெல்வம் விறிச்செயமோங்கி வா
ழக்கடவையென்று பலஆசிகளைச்சொல்லி யிருக்கின்றதறுவாயிற் பாதகரா
கிய சிங்கமுகன் தாருகன் யிவ்விருவரும் யிரதங்களைத்துரத்திவந்து யிறங்
கிக் குருவைவலம்வந்து வணங்கித்துதிக்க அவர்களையுஞ் சுகசீவிகளாய்அஷ்
ட்ட அயிஸ்வரியங்களையுஞ் சென்றயிடங்களெங்குஞ் செயத்தைப்பெற்
று வாழவும் வாழ்த்திபின்பு சூரபன்மனைப்பார்த்து அரசனே உமக்கொரு
சேதிசொல்லுவோம் அதனைக்கியாபகமாய்க் கேழ்ப்பாயாக அதென்னவெ
ன்றால் தவச்சிரேஷ்ட்டராகிய காசிபர்பத்தினியான உன்தாயைப்பெற்றவன்
மேலும என்னிடத்திற் பலநூல்களையும் ராசதந்திரங்களையுங் கூர்மையாக
க்கேட்டறிந்த விவேகசம்பன்னன் அளவற்ற தானவச்சேனையைப்படைத்த
வன் என்பொலிகளுக்குவேண்டும் உதவிகளைச்செய்து பாதுகாக்குங் குண

திசெயத்தைக் கிடைத்தவன் சுமாந்திரனென்பவன் இவன்ராசயோக்கியனு
ய்ச் சகலரையும்வென்று அரசாட்சிசெய்துவருகையில் யிவன் செல்வத்துக்
குஞ் செயத்துக்கும் பொறாமைகொண்டு உங்கள்குலத்துக் கெக்காலமும்
பகைவனாயிருக்கின்ற தேவேந்திரனானவன் விண்ணவரைச் சேர்த்துக் கொ
ண்டுவந்து யிவனுடனெதுத்து அளவற்றகாலங் கொடியபோரைச்செய்து
கடையில் ராட்சதச்சேனைகளனைத்தையும் வாட்டி உன்பாட்டனையும் புறங்
கண்டு வெற்றிகொண்டு செயவுச்சாகத்துடன் களித்தவனாய் இந்திரன்றோ
ன்னுலகைச்சேர்ந்து யின்புற்றிருந்தான் அக்காரணத்தினால் அவ்வசுரேந்தி
ரன் மாரிகாலத்திற்றன் பிரகாசங்கள்மழுங்க வொடுங்கிக்காட்டுஞ் சூரிய
னைப்போலத் தன்பதியிற் பெட்டியிலடங்கிய பாம்பைப்போலத் துப் பது
ங்கி மனம்புழுங்கி வருந்தியிருந்தவன் தன்பெண்வயத்தில் நீங்களுதித்த
தைக் கேழ்விப்பட்டுச்சமுசாரியானவன் விற்றைப்புலத்தில்விளைத்த விளை
வையெதிர்நோக்கி யிருப்பதுக்கொப்பாகத் தன்சிறுமையை யொழித்து
சவுக்கியத்திலிருப்பதாக உங்களை யெக்காலத்தும் நினைந்து நினைந்து
எதிர்பாத்திருக்கின்ற தருவாயில் நீங்கள் அரியதவநிலையைவகித்து சிறந்த
வேள்விகளைச்செய்ததையும் அதற்குச் சிவபிரானிரங்கிகாட்சிதந்து வேண்
டியவரங்களைக் கடாட்சித்துப்போனதையுந் தெரிந்தவுடன் சந்தோஷசா
கரத்தில் முழுகி மனவாட்டமொழிந்து புயங்கள் வானத்தையளாவக் களித்
திருந்தான் பின்பு திரிபுரதகனராகிய பரமன்றந்த வரமுயற்சியினாலிக்கு
விசையஞ்செய்து சத்திராதிகளையடக்கி வருவதையறிந்து முன்னினும் பதி
ன்மடங்கு மகிழ்ச்சியைப்பெற்றவனாய்உங்களைப்பார்த்துப்போகச்சுற்றத்
தாருடன்வருகின்றான் அவனை ஆதரிப்பாயெனக் கமலாசித்தமுடைய சுக்கிர
ன் சொன்னமாத்திரத்தில் வீரவெண்டையங்கள் சத்திக்கும் பாதங்களையு
டைய சூரன் களிசிறந்து பாட்டன்வரவையெதிர்பாத்துநிற்கின்ற தருவா
யில் அவுணராசன் பந்துக்கள் சினேகிதருடன் நெருங்கி நீங்கிய பிராணன்
மீட்டும் அவ்வுடலைக் கூடுமாறுபோல் மனமுங் கண்களுங்களிக்கப் பேர
னைக்கண்டு கரங்களைக் கூப்பித்தொழுது வாழ்த்தும்போது பாட்டனிடத்
துப்பரிவாய் நீர் சுகமாயிருக்கின்றீரோவென் றுவிசாரிக்கராட்சதராசன்களி
த்து ஐயனே யிக்குலம்வீறி யோங்குவதாக நீங்களுதித்துப் பரமசிவகடா
ட்சத்தைச் சம்பூரணமாசப்பெற்றுச் செயசாலிகளாயிருக்கும்போது என
க்கொருகுறைகளுந் துன்பங்களுஞ் சிறுமைகளும் நேருவதுண்டோ வெ
ன நயமொழிகளைப்பெசித் துடர்ந்துவரத் தேவலோகத்தைநீங்கி வெற்றிச்
சங்கங்கள் செயபேரிமுதலான பலவாத்தியங்களுந் திசைகளெங்குஞ் செ
விடுபடமுழங்சத் துணைவர் ஆசிரியன் பாட்டனுதியர்சூழச் சேனைப்பெரு
க்குடன் புவியில்வந்து சேர்ந்தான் - இச்செதிகளைப் பிரமதேவன் இந்திர

ன் மற்றுந்தேவர் முனிவரனைவருந் தெரிந்து சகலரும் வேகமாய்க்கூடி மன்
வாட்டத்துட னொன்றுந்தோற்றாமல் திருப்பாற்கடலைச் சேர்ந்து அரவ
ணையிற் பள்ளியமர்ந்த திருத்துழாய்மாலைமார்பனை விஷ்ணுவைக்கண்டு
கரங்களைக்கூப்பித்தொழுது போற்றிச் செயசாலியாய்க்கொடியமனதைப்
பெற்றிருக்கின்றசூரபன்மனால் தாங்கள்படுந் துன்பங்களை முறையிட்டுச்
சுவாமி யினிநாங்கள்நடந்து கொள்ளவேண்டும் மார்க்கங்களை யோசித்துச்
சொல்லி ரட்சிக்கவேண்டுமெனத் துதிக்கின்றவர்களைக் கேசவன்பார்த்தரு
ளி வருந்தாதீர்கள் ஆதியிற்றக்கன் பரமனைநீக்கிச்செய்தவேள்வியில் யாமெ
ல்லவரும் போயிருந்த கொடுமையினால் இத்துன்பங்களை யனுபவிக்கநேர்
ந்ததல்லது வேறல்ல யிதனையாவரால் நீக்கப்படும் ஆகிலும் மேற்செய்யத்
தக்கதைக் கேழ்ப்பீராகச் சூரபன்மனைச் சாமான்னியனாக நினைக்கப்போகா
து திரிபுரங்களைத் தகித்த பரமசிவ கடாட்சத்தினால் அளவற்ற வரங்களைப்
பெற்று அண்டங்களனைத்தினையும்வென்று செயவுச்சாகத்துடன் இருக்க
ப்பட்டவன் அவனையொருபோதும் நாம்வெல்லமாட்டோம் இனிச்செ
ய்யவேண்டுவதென்னவென்றால் நாமெல்லவரும்போய் அவனைக்கண்டு
விசாரித்துச் சுபங்களைக்கொண்டாடி நட்புகொண்டு சிவகடாட்சம்நேரு
கிறவரையில் நாளைக்கழிப்பதே யோக்கியமாயிருக்கின்றது எனச்சொல்
லப் பிரமன்முதலானவர்கள் மாதவனையஞ்சலித்துத் தேவரீர்போதித்த
தே காரியமாமெனச்சம்மதித்தமாத்திரத்தில் விஷ்ணுவானவர் சேஷசய
னத்தைநீங்கி அவர்களுடன்கலந்து வந்து பெரும்புறக்கடலைப்போல
விரிந்து பரந்திருக்கும் ராட்சதச்சேனைகளைக்கடந்து அதன்மத்தியில்
இந்திரஞாலத்தேரின்மீது விளங்குஞ்சூரனைக்கண்டவுடன் உடலைவளைத்
துக்கரங்களைவிரித்து மனம்நயந்து சமீபித்து ராசசங்கிரேஷ்டனே சகல
புவனங்களுக்கும் அதிபனே சுகசீவியாய்ச் செயசாலியாய்ப்புத்திரமித்திர
தனதானிய சம்பத்துக்களைப்பெற்று வாழ்ந்திருப்பையென்று பற்பல
வாழ்த்துக்களைச்செய்து நிற்கின்றவர்மத்தியிற் பதினொருகோடி உருத்தி
ரகணங்களிருப்பதைச்சூரன்பார்த்து அதிசெயித்தவனாய் மாயன்மீது விழி
களைச்செலுத்தி யிமையாமுக்கட்பெருமானைப்போலவே அமைந்திருக்கு
ம் வடிவைப்பெற்று அளவிறந்தவர்களாய் உங்களுடன்வந்த யிவர்களியாவ
ர் யிவர்கள்சரித்திர மென்னென்று கேட்டான் அப்போது துழாய்மாலை
சூடிய விஷ்ணுவானவர் அவ்வுருத்திரர்வரலாற்றினைச்சொல்வதாயினார்.

உருத்திரர்கேள்விப்படலம்

ராசாதிராசனே யிவர்கள்விருத்தாந்தத்தினைக் கேழ்ப்பாயாக முன்
னமொருகற்பாந்தமுடிவிற் சராசரப்பிரபஞ்சங்களனைத்தையும் மறைப்ப

டிக்குச் சிருஷ்டிக்கப் பிரமன்றினைந்துசொற்கமத்திய பாதலங்களையும்
அதிலடங்கிய எறும்புமுதல் யானையீறுகச்சொல்லும் எண்பத்திநான்கு ல
ட்சஞ் சீவபேதங்கள் முதலானதுகளைப்படைத்து உலகங்கள் எதாப்பிறகா
ரம் நிலைபெற்றதைப்பார்த்துக்களித்தவனாய் இவையனைத்தும் நம்மால்
உண்டுபண்ணுங்காரணத்தினால் நாமேபரமெனநிச்சயித்து அந்தமமதை
யினால் நமதுபிதாவாகிய பரமசிவனைமறந்தான் அப்பாதகமுயற்சினால்
நான்உண்டுபண்ணியதொகையல்லது விறிப்பெருகாதகாரணத்தையறிந்து
மனம்நொந்துவருந்தி யிவ்விதமாக விர்த்தியாகாமலிருப்பதற்குக் காரண
மென்னவென்று ஆலோசித்து நம்மையெல்லாம் ஆதியிற்பெற்றுச் சிரு
ஷ்டி திதி சங்காரந் திரோபவம் அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்
களைநடாத்தும் பரமசிவத்தைமதியாததால் நமதுசிருஷ்டியடங்காமல்அட
ங்கிற்று ஆதலால் அவன் அருட்டிறத்தைப்பெற்றலது இக்கருமம் நிறை
வேறாதெனநிச்சயித்தவனாய்நமதுகுமாரனாகியபிரமன தவநிலையில்நின்
றுஅநேககாலம்வருந்திநோற்றுஞ் சந்திரசடாதரமூர்த்தியாகியமுக்கணெ
ம்மான் அவனுக்குக்காட்சிதராமையைக்கருதி ஐயோ கொடியதீவினை
யினேன் முன்னைப்பிதாவாகிய பரமன் எவ்வாறுவெளிவருவானெனவருந்
தித் திகைத்துச் சர்வசங்காரகாலத்தில் அவனும்பானும் யிறக்கநின்றகளே
பரத்தைப் புயங்களிற்றாங்கிநடிக்கும் பரமன் தன்முன்னம் எழுந்தரு
ளாததை நினைந்துநினைந்து அறிவிலானைப்போலவே ஏக்கமுற்றுத் துன்
பக்கடலிற்பட்டவனாய்க் குமாரனென்செய்வான் கடையில் ஓவெனுமோ
சையெழஅழுதான் அக்காலத்திலொழுகிய கண்ணீர்த்துளிகளனைத்தும்
பேய்க்கூட்டங்களாகிப் பரந்து கூத்தாடுவதைப்பிரமன்கண்டவுடன்கருத்
தழிந்துசோர்ந்து மாண்டவனைப்போலப்புவியில்விழுந்து கிடக்குந்தரு
வாயில் திரிபுவனங்களினும்விளங்கிய உயிருக்குயிராய்நின்று ஆட்டுந்தேவ
தேவனான பரமன்கிருபையுற்று அவன்கனவிற்றோற்றிப் புத்திரனேவருந்
தவேண்டாமென்றுதரித்து ஐயனே படையில்விசேஷத்தைப்பெரிதாய்நினை
த்து நமதுமாயையிற்சிக்கினவனாய் அஞ்ஞானகெர்வத்திற்பட்டு உன்னை
யேஆதியாகவெண்ணி முன்னம் உன்னைப்படைத்து இத்தொழிலையுங்காட்
டிய நம்மைமறந்தாய் அக்காரணத்தினால் நீநினைந்தசிருஷ்டிவிர்த்திக்காமற்
குறைவது அருந்துரிதமாய் முற்றுப்பெற நமதுஅருளுருவாகிய உரு
த்திரரை உன்னிடத்துக்கனுப்புவோமென்றுதோற்றமொடுக்கமின்றிஅனை
த்தினையுமுண்டுபண்ணி நடிப்பிக்கும்பெருமைகளையுடைய எமதுகர்த்தன்
பிரமன்சொற்பனத்திற்சொல்லி மறைந்ததனுவாயில் அவனருளைப்பெற்ற
பிரமன்திடுக்கிட்டெழுந்து கர்த்தன்போதித்ததைநினைந்து நினைந்துகளி
த்து ஆனந்தபரவசனாய் வாட்டமொழிந்து மனம் வாக்குக் காயமொரு

வித்துப் பரமனைக்கருதி நிஷ்டையிலிருக்கின்றதறுவாயிற்பிதாவாகியசிவனு
ன்சட்டளையின்படிக்கு ஏகாதசவுருத்திரர் பிரமன்நெற்றிமூலமாய்வெளி
வந்துநிற்கஅவர்களைக்கண்டவுடன்நான்முகன் அற்புதமடைந்தவனாய்நம
துநுதலில் நீவிர்வருங்காரணமென்னை நீங்கள்யாவர் உமதுசரித்திரமென்
னென்றுவினவ திரிபுரதகனராகிய பரமசிவக்கோலமாயெழுந்தருளிய அவ்
வுருத்திரர்பிரமனைப்பார்த்து சற்வசீவ தயாபரமூர்த்தியாகிய சிவபிரான் அரு
ளின்படிக்குஉன்படைப்பை அபிவிர்த்தியாக்கும்பொருட்டுவந்தோம் நாங்
கள்பரமன் அருட்டிறத்தில் உதித்த உருத்திரராகுமெனச்சொன்னவுடன்
பிரமன்களித்துத் திரோசம்பூரிக்கக் கற்றனைப்புகழ்ந்து அவ்வுருத்திரரைத்
தொழுது சிவத்தின்அனுக்கிரகப்படிக்குஎன்னிடத்திற்றோற்றினீர் ஆதலாற்
சீவராசிகளைப் படைத்து அடியேன்மனக்கவலையை தீர்க்கவேண்டுமென்று
போற்றுகின்றதறுவாயில் அவ்வுருத்திரர் தமதுருவைப்பெற்றபதினொரு
கோடியரைப்படைத்தார்கள் அதனைநான்முகன்தெரிந்து ஆவிகளைவினைக்
கீடாகவிதியாமல்அறிவாளிகளைத் தந்ததினாற்பரமசிவத்தின்திருவிளையாடல்
முடிவதற்குமாற்கமல்லவென்றுவிண்ணப்பஞ்செய்யதல்லகாரியம் பிரம
னேபழையபடிக்கினிஉன்சிருஷ்டியினைச்செய்யத்துடங்குவையாயின் முற்
குறித்தஉருத்திரர் உற்பத்தியின்முயற்சிகொண்டு முற்றுப்பெறுமென்றரு
ளி தாம்படைத்தபதினொருகோடி உருத்திரரையுந்தேவர்களுடன்கலந்திருக்
கக்கட்டளையிட்டுஉணர்வாளிகளாகியஅவ்வேகாதச உருத்திரரும்பரமன்றங்
களுக்கு ஆதியிற்றந்த அண்டகோளகையிலிருக்கும் புவனங்களிற்சேர்ந்
தார்கள் அத்தினமுதல்இவர்களும் பரமசிவத்தின்கோலம்பெற்று தேவரு
டன்கூடி என்போலிகளுந்துதிக்கப் பிராணிகளுக்கிடையூறின்றிப்பாதுகா
த்துவருவர் இவையிவர்கள் சரித்திரமென்று விஷ்ணுவானவர் சூரபன்ம
னுக்குத்தெரிவித்தார்.

நகர்செய்படலம்.

இவ்வாறுகேசவன்சொல்லச் சூரபன்மன்கேட்டு இதுவோர்வியக்க
விற்றாந்தமெனத்தலையையசைத்து அக்கூட்டத்தில்வந்திருக்குந் தெய்
வதச்சனைப்பார்த்துநாங்கள்மூவரும் யிருக்கயோக்கியமாகியசிறந்தநகரங்
களைச்சீக்கிரமாகமுடிக்கக்கடவாயென்க் கட்டளையிட்டதறுவாயில் சூரமெ
ண்டையமணிந்த ராசாதிராசன்பாதங்களிற்சேவித்துத்தேவரீர்குறித்தபட்
டினங்களைச்செய்யுமிடத்தை நேயித்தருள்கவென்றவுடன் பக்கத்திலிருந்த

சுக்கிராசிரியன்யோசித்து அவைகளுக்குத்தக்கவெல்லைகளை அளவைப்பிரமாணங்களுடன்போதிக்கத்தெரிந்தவனுப்விடைபெற்றுப்போய்த் தென்பிறதேசத்திலிருக்குஞ் சமுத்திரத்தைச்சேர்ந்து அதின்மத்தியில் எண்பதினாயிரயோசனையளவையில் நாற்பாங்கைக்குறித்துத் தன்சிஷர்மூலமாய்ப்பூமியிலிரானின்ற பருத்தமலைகளைத்தருவித்துக் கடலைத்தூர்த்துத்திருத்திச் சமன்செய்து திருக்காஞ்சிப்பதியில் ஏகாம்பரநாதர்வீற்றிருக்கும் ஆலயத்தைச் சூரியர்சந்திரர்முதலான நவக்கிறகங்கள் வலம்வருமாறுபோலச் சுற்றிப்போகும்படியான உன்னதமுள்ளதாய்ப் பொன்மயமாய்ப்புடையார்ந்து வானவெல்லையைக்கடந்தோங்கியிருக்குஞ் சத்தப்பிராகார மதில்களையெழுப்பி அதின் நாற்புறங்களினும் அண்டங்களின் துவாரங்களைப் போல விசாலமாய் உயர்ந்த வாயல்களைநிர்மித்து அம்மதில்கடோறுங் கொத்தளங்களையுஞ் சத்துருக்கள்மனதையும் வாட்டவல்ல சித்திரஉறுப்புவைகளையும் சிருஷ்டித்து முற்குறித்த நான்குவாயல்களின்மீது மகம்மேருவேவந்திறங்கியதையொப்பாகப் பற்பல நிலைகளைக்கொண்டதாய்ச் சித்திரப்பிறதமைகளமைந்து நவரத்தினகாந்திகளைவீசிப்பலசிகரங்கள்விளங்கவானத்தையளாவும்உன்னதமுள்ளகோபுரங்களைத்தூக்கியபின்புஅதன்மத்தியில் யிலக்கணப்படிக்குநூறுயோசனையளவையுள்ளதாய்யிருபாரிசத்தினும் அணியணியாகச்சித்திரமாடங்கள் உப்பரிகைகள் அமைந்ததாய்விசாலமாயிருக்கும் பலமாடவீதிகளைப்படைத்து அதன் நடுப்பிறதேசத்தில் திரிபுரங்களையொப்பச் சொர்ணமயமாகிய மும்மதிட்களைவளைத்து ஒப்பற்ற லட்சுமீகரம்பொருந்திய பற்பலதெருக்களைத்திருத்திச் சந்திரன்பதியை நிகர்த்த மாளிகைமுதலானவைகளைஅபரிமிதமாய்ப்படைத்துஇலக்குமியைப் போன்றசுந்தரமுள்ள மங்கையர் ஆடல்பாடல் ஊஞ்சல்விளையாடல் கணவருடன் உல்லாசமாயிருத்தல் யிவ்விதச்சம்பிறமங்களுக்குயோக்கியமாகிய சந்திரகாந்தமண்டபங்கள் சித்திரக்கூடங்கள் பொற்றிண்ணைகளாதியாகப்படைத்து முற்குறித்தமாளிகையேமுதலிய யிடங்களில் நிலாமுத்தங்கள் பளிங்குத்திண்ணைகள் சிரோரத்தினமயமாய் பிறகாசிக்கும்விதானங்கள் சொர்ணமயமாய் விளங்கும் இயாளியாதிய பிறதமைகள் தாங்க ஓங்கிய கோபுரங்கள் செய்குன்றங்கள் பொற்றூளிகைகள் சாலைகள் சபைகள் சந்திரகாந்தம் பளிங்கு இவைகளினாற்சோடித்த மேலுப்பரிகைகள் அத்தலங்களில் வயிரமரகதவகைகளினாற்செய்தசன்னல்கள் பிலைகளையமைத்து இத்தலங்களின்மேல் கீழ்பாரிசங்களினிடங்களிற்பார்க்களிப்பைத்தரும் பிறதமைகள் ஓவியங்கள் முதலான சித்திரங்களைத்திருத்திமுடிந்தபின்பு ஸ்ரீபூமான்கள் களித்துலவத்தக்க சோலைகள் பூங்காவுகள் நந்தவனங்கள் தோப்புகள் யிவற்றையும்விதித்து நீர்ச்சுழலின்

வேடிக்கைகளைக்காட்டுந் தடாகங்கள் குளங்கள் மடுக்கள் கூவல்களின்பின
ங்களையும் உண்டுபண்ணிமுற்றியவுடன் அத்தலத்தின்பக்கத்திற்பதினுயிர
யோசனைபெல்லையிற் பொன்மதிலெழுப்பி மாயைபுத்திரனுகிய சூரபன்ம
ன் வாசஞ்செய்யத்தக்க நவரத்தினமயமாய்ப்பொன்னினுற்சோடித்துசிங்
காரமுள்ள அரமனையைவிதித்து வரைகளைப்போன்ற மதயானைகள்உன்னத
மாய்ப் பலசித்திரப்படாங்களினுல்அலங்கரித்ததேர்கள் குதிரைகள் தாரான
மாய்வரப்போகப்பக்குவமாயுயர்ந்திருக்குந் தோரணவாயல்களைப்படைத்
து அதுகளி னிருபாரிசங்களிலும் பொற்றிண்ணைகளையிட்டுச்சொர்ணமய
மாய்ச் சிறந்திருக்குஞ் சிங்காரங்களையுடைய கோபுரங்கள் பலவகைரத்தி
னங்களினுற்சோடித்த சூளிகையிவற்றைப்படைத்தபின்பு சித்திரத்தேர்க
ள்வைக்குங்கூடங்களும் மதயானைகளிருக்கச்சாலைகளும் புரவிகள்நிற்குமி
டங்களும் படைத்தலைவர் வாசஞ்செய்யத் தகுதியாகச் சிறப்புள்ள மாளி
கைகளுஞ் சேனைவீரர்யிருக்கத்தக்க விசாலமான தெருக்களும் அரம்பை
யூர்வசி திலோத்தமை ஆதியானதெவகணிகையர் திறதஞ்செய்யயோக்கி
யமாகிய நடனசாலைகளுஞ் சங்கீதங்களைப்பாடியிருக்கும் பொற்கூடங்க
ளுந் தேவகாந்தாரங்களை வாசிப்பவரிருக்கு வயிரமண்டபங்களும் யிரு
தன்றியும் அழகியகலாபத்தையுடைய மயிலினம் மாடப்புறுக்கள் மெல்
லியநடையையுடைய அன்னங்கள் கொஞ்சிவசனிக்கும் பஞ்சவற்னக்கிளிக
ள் சிரவணனந்தமாகக்கூவுங்குயில்கள் பகையின்றிக்கண்டவுடன்சீறிப்பொ
ருங்காடை கவுதாரி கோழிமுதலானபட்சிகளிருக்குஞ் சித்திரகூடங்களும்
டீக்கடாய் புலிமானுதியமிருகங்கள் நிற்குஞ்சாலைகளும் வேதமோதுவோ
ர்அமரும் மண்டபங்களும்ஐவிதவேள்விகளை நடாத்துஞ்சாலைகளும்இராச
தந்திர ஆராச்சிசெய்யும் மண்டபங்களுந் தேவேந்திரனுதியர் வீற்றிருக்
கத்தக்கமாளிகைகளும் செயசாலியாகிய சூரபன்மன் விண்ணவர்முதலாக
ச்சூழ்ந்து போற்றியிருக்க அரசுசெலுத்திவரும் நவரத்தினமயமாகிய
ஆஸ்தானமண்டபமுந் திரவியக்குவைகள் மணிவகைகள் வஸ்திராபரண
விதங்களாதியாகவைக்கும் அறைகளுஞ் சிவனுதன் அனுக்கிறகஞ்செய்த
தேவாஸ்திரங்களைவைக்கும்ஆயுதச்சாலைகளுந்திவ்வியபோசனங்களைச்சமை
க்கும் மடப்பள்ளிகளும் அளவற்றவர் பந்திதீர்ந்து சாப்பிடயோக்கியமா
கிய நீண்டகூடங்களுங் களபகஸ்தூரி சந்தனக்கலவை பனிநீர் பாக்கில
வாசனைத்திரவியங்களாதியாகச் சேர்க்கும்வீடுதிகளும் மயிலைபொத்த சாய
லினையும் அன்னத்தைநிகர்த்தநடையினையும்மானுக்கிணையாகியநோக்கையு
முடைய மங்கையர்வாழுஞ் சுந்தரமுள்ளசித்திரமாளிகைகளும் அவர்பொ
ன்னுசல்களிலாடியும்பாடியும் பகடைசாலையாடியுங் கிள்ளைகளுடன்கொஞ்
சிப்பேசியும் விவ்விதங்களாகப் போதுபோக்கியிருக்கும் பளிங்குக்கூட

வகைகளுஞ் சந்திரகைபைவீசும் பளிக்குமண்டபங்களும் வானையளாவிய சந்திரகாந்தமேடைகளும் பிறகாசமுடைய பவழங்களினால் அமைத்த மண்டபங்களும்பார்த்தவர்கள்களிக்கும் மரகதமண்டபங்களுந் தாமரைகளலர்ந்து ரமணியமாகவிளங்கும் நீராழிமண்டபங்களும் இவ்விதமாக ராசாதிராசராயிருப்பவர் அமர்ந்து அரசுசெலுத்தியிருக்க யோக்கியமான எவற்றையுஞ் சிற்பசாஸ்திரவிதிப்படிக்கு அமைத்தபின்பு யிதன்மத்தியில் வீரலட்சுமிவாசஞ்செய்யுந் திரணடபுயங்களையுடையசூரபன்மனும்அவன்பட்டத்துத்தேவியும் வாசஞ்செய்யச்சிறந்ததாகப் பொன்னினாலும் பலவகை யிரத்தினங்களினாலுஞ் சித்திரவிசித்திரச்சிங்காரமுள்ளதாய்த் தன்வல்லபத்தைக்காட்டி ஒருஅந்தப்புரத்தையும்விதித்துயிதைச்சூழமங்களாகரமாகியமாடவீதிகளும் அதையளாயப்பொன் மதில் அகழ்முதலானகாவல்களையும் உண்டுபண்ணி ராசபரமேஸ்பரன் காந்தர்வவிவாகமேமுதலானவிதங்களிற்சேருங் கன்னியரிருக்கத்தகுதியாகிய சித்திரமாடமாளிகைகளையும் படைத்து அக்கன்னியருடன் அரசன் சலக்கிரீடைசெய்வதற்கான தாமரைத்தடாகங்கள் நீலோற்பலம் அல்லிமுதலியபுஷ்பங்களலர்ந்து குளிர்ந்து மதுரமாகிய நீர்ப்பெருக்கையுடைய மடுக்கள் சந்திரகாந்தத்தினாற் படியிருத்திய சித்திரக்குளங்கள் யிவற்றைச்சிருஷ்டித்து மேலும் அரசன்தேவியருடன் வசந்தகாலத்தில் உலவிக்களிக்கயோக்கியமானதாய் வானத்தையளாவித்தழைத்துக் குளிர்ந்த நிழலைபரப்பிப் புஷ்பவகைகள் கனிவற்கங்கள் மல்கிப் பரிமளித்துத் தேன்களைத் துளித்திருக்கும் உத்தியானவனங்கள் பொற்குன்றங்கள் முதலானதுகள் அனைத்தையுந் தேவதச்சனானவன் அளவைப்பிரமாணப்படிக்கு மனதினாலெண்ணிவிதித்துச் செயசாலியாகியசூரபன்மன் வாசஞ்செய்வதாதலால் அதற்கு வீரமாமயேந்திரமென்னும்பெயருமிட்டு அப்பட்டினத்தை அஷ்டதிசைகளினுங் காவல்கொண்டிருக்கத்தக்கதாகச் சமுத்திரத்தைத்துத்து மதில்முதவான உறுப்புகள் மாடமாளிகை கூடகோபுரங்கள் ஆதியான சிறப்புகளுடன் எமபுரம் இயமபுரம் இலங்கைபுரம் நீலபுரம் சோமபுரமெனச்சொல்லுஞ்சுவேதபுரம்அவுணபுரம் வாமபுரம் பதுமபுரம் என்பவைகளையும் படைத்தபின்பு வடசமுத்திரத்தைச்சேர்ந்து மேற்குறித்த அளவைப்பிரமாணப்படிக்கு அகழ் மதில் கோபுரம் மாடவீதி பொன்மயமாய் நவரத்தினகாந்திகளைவீசும் உப்பரிகை மாளிகை ஆஸ்தானமண்டபம் அரமனையேமுதலானதுகளைப்பொன்னுலகமும் நாணும்படிக்குப்படைத்து அதிககாவலையுடைய பட்டினமாக்கிச் சூரனுக்கிளைய வீராதிவீரனான சிங்கமுகன் வாசஞ்செய்யப்படுவதாதலால் அதற்கு ஆசுரமென்னும்பெயருமிட்டு அதற்பின் சூரபன்மன் சேனைப்பெருக்கான அசுரர்கள் சுற்றங்களுடனிருக்கத்தக்கதாக மற்றசாகரங்களின்

மத்தியிலிராநின்ற தீவுகள்தோறும் பற்பல பதிகளையுண்டுபண்ணியவுடன் மயன்பிதாவாகிய தேவசிற்பியானவன் தன்சீஷருடன் மகம்மேருவுக்குத் தென்பாரிசத்திற் சகலராலும்புகழும்பெருமையைப்பெற்ற நாவலந்தீவிலிராநின்ற எமகூடபர்வதத்தினருகில்வந்து சுத்திட்பாக்கு விசாலமாகிய யிடமொன்றையேற்படுத்தினவனாய் முற்குறித்தபடியே சகலவளங்களையுங்கொண்டிருப்பதாய்ச் சிறந்தநகராவித்துத் திசைகளனைத்தையும்வென்று செயத்தைநாட்டியிருக்கும் புயவலிக்கொருவனான தாருகனிருக்கப் பெறுவதால் அதற்கு மாயாபுரமென்னும் நாமமுமிட்டு இவ்வாறு விசுவகர்மனானவன் சாஸ்திர அளவைப்படிக்குச் சீஷர்களை வைத்துக்கொண்டு தன் மனதுக்கிசைந்த எழுவகைநகரங்களையும் மற்றபுறக்காவற்பதிகளையுமுதலாகப்படைத்து முற்றியபின்பு ராசாதிராசனாகிய சூரபன்மனிடத்துக்குவந்து வணங்கி அரசனே தேவரீர்கட்டளையின்பிரகாரம் முப்புரங்களையும் யிலக்கணப்படிக்குச் செய்தாயிற்று யினி தம்பியருடன்போய் மணமகிழ்ச்சியாயிருக்கலாமென்று விண்ணப்பஞ்செய்யச் சிற்பியின்வல்லபத்துக்குச்சந்தோஷித்தவனாய்ச் சகலருஞ்சூழ்ந்துவரத்தனக்கேற்படுத்தியபதியைச்சேர்ந்தான்.

பட்டாபிஷேகப்படலம்.

இவ்வித்மாகத் தம்பியர் சேனைத்தலைவர் விஷ்ணு பிரமனாதியர்சூழ்ந்து போற்றிவரச் சூரபன்மனானவன் வீரமாமயேந்திரபுரத்திற் பிரவேசித்து எங்குமுலவிக் கண்டவர்மனதையும்விழிகளையுங் கிறங்கிக்கவல்ல சிங்காரங்களைப் பார்த்துக்களித்து சிற்பி கற்றவித்தையின் முயற்சிக்குமெச்சிக்கொண்டாடிக் கட்டுக்காவலையுடைய தன் அரமனையைச்சேர்ந்ததறுவாயிற் பிரமனாதியர் நமது அரசனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யவேண்டுமென நிச்சயித்து அதற்குவேண்டும்வஸ்துக்களைத் தருவித்தவராய்ச் சூரபன்மனை மஞ்சனச்சாலையிலழைத்துப்போய் நவரத்தினமயமாய்விளங்கும் பொற்பீடத்திலிருத்திச் சந்தனக்குழம்பினால் நலங்கிட்டுச் சுத்தோதகசமுத்திர முதலான கங்காசலத்தினால் ஸ்தானஞ்செய்வித்துச் சிகையைக்கோதி அகிற்சந்தனப்புகையையூட்டி முடித்து விலையுயர்ந்த பீதாம்பரத்தையுடுத்தி வாசமிகுத்த கலவைச்சாந்துகளைப்பூசி சிரோரத்தினங்களினாற்சோடித்த கிரீடம் வாகுவலயங்கள் மதாணிப்பதக்கம் முத்துத்தாழ்வடம் மோகனமாலை சரப்பளி மகரகுண்டலம் ரத்தினக்கடையங்களாதியான பணிகளைப்பூட்

டி கற்பகப்புஷ்பமாலைகளைச்சூட்டிச் சகல அலங்காரங்களும் முடிந்தபி
ன்பு தம்பியர் யிருமருங்கினும் உபையபுயங்களைப்போலத் தொடர்ந்து
வரவும் விஷ்ணு பிரமன் யிந்திரன்முதலானதேவர் சூழ்ந்துபோற்றவுஞ்
சேனைத்தலைவர் முன் பின்நெருங்கி புகழ்ந்துகளித்துச்செல்லவும் பட்டுவ
ர்பாவின்ங்களினற்புகழவும் ராசாதிராசன்வருகின்றார் ஆயிரத்தெட்டண்
டங்களுக்கும் அதிபன்வருகின்றார் புவனங்களனைத்தினையும் வெற்றிகொ
ண்ட புசபெலபராக்கிரமசாலியாகிய சூரன்வருகின்றானென்று கட்டியக்கா
றர் எச்சரிக்கைசொல்லிமுன்னடக்கவும் பல ராட்சதவீரர் அணிவகுப்பாய்
நின்று வெண்சாமரையினைவீசித்தொடரவும் பலர் ஆலவட்டங்களை அசைத்
துப்போகவுஞ் சந்திரனையொத்தமுத்துக்குடைகளைப் பலர்தாங்கிநடக்க
வுந் தவளச்சங்கங்கள் பொம்பொம்மென்றொலிக்கவுந் தி..ச்சின்னங்க
ளூதவுஞ் செயபேரிமுதலானவாத்தியங்கள் முழங்கவும் அரம்பையூர்வசி
திலோத்தமை மேனகையாதிய தேவகன்னியர்நடித்துப்போகவுங் கந்திரு
வர் வீணைவாசித்துவரவும் இவ்வித ராசசின்னங்களுடன் மெல்லநடந்து
நிகரற்றநிருதராசன் தொழுதேற்றவுஞ் சுக்கிராசிரியன் முதலானரிஷிகள்
ஆசீர்வதித்துவாழ்த்தவும் விண்ணவர்பத்திவினயங்களுடன் கைகட்டித்தொ
டரவும்இந்தி ன் மனவாட்டமுற்றுளங்கவுஞ்சொற்ணமயமாய்ரத்தினகாந்தி
களைவீசி விசாலமாய்விளங்குஞ் சபாமண்டபத்தைச்சேர்ந்து அதின்முகப்
பிற்கோடிசூரியப்பிரகாசமாய்வயிரங்களினற்சோதித்திருக்குஞ் சிங்காசன
த்தில் வீற்றிருந்தான் அத்தருணத்தில் மகாவிஷ்ணுவுக்கு யோக்கியமாகிய
சுந்தரமுள்ளவயிரமுடியினை நான்முகன் ஏந்திவேதங்களையோதிராசாதிரா
சன்சிரத்திற்சூட்டினன் யிதைக்கண்ட தானவவீரர் காசிபன்புத்திரன்பாதங்க
ளிற்சேவித்து அளவற்றசந்தோஷத்தைப்பெற்று அமுதத்தினை யொருங்
கெய்தவுண்டவர்களைப்போல மனமகிழ்ந்தனர் அம்மகோச்சவகாலத்தில்
முப்பத்துமுக்கோடிதேவர் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கற்பகமலர்க
ளைக் கரங்களிலேந்தி செயா விசைபவாவென்று மங்களவாழ்த்துகளெடுத்
து ராசபரமேஸ்பரன் மகுடத்தின்மீது முறைமுறையாகயிறைத்துநிற்கச்
சிங்கமுகன் தாருகன் மனவெழுச்சியுடன் விஷ்ணுபிரமனைப்பார்த்து நீங்
களிருக்கலாமென்றுசொல்ல அவ்வாறேயெதிரிலிருந்த பீடங்களிலெழு
ந்தருளினார்கள் இவ்வாறு அனைவருங்களித்திருக்குமுன்னிலையில் திரிலோ
கவாழ்வைப்பெற்றதேவேந்திரன் பொற்பழுக்கமேந்திப் பக்கத்தில்நிற்க
வும் நிதிபதியாகிய குபேரன் அடைப்பைதாங்கியிருக்கவும் வாயுதேவன்
வெண்சாமரைவீசவும் நிருதருக்காசன் உடைவாள்கொண்டு நிற்கவுஞ்
சூரியசந்திரர் குளிர்ந்தநிழலைப்பரப்பும் முத்துக்குடைகளை யிருபாரிசத்
திலுந்தாங்கவும் வருணனுஞ் சமுத்திராசனும் ஆலவட்டங்களைப்பணி

மாறவுஞ் சருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் யாழ்களைமீட்டித் தேவகாந்தாரங்களைப்பாடவும் முத்தலைச்சூலத்தைக்கொண்டு முறைவழுவின்றிமன்னுயிர்களையடக்கியாளுந்திறம்பெற்ற எமதருமராசனும் அக்கினிதேவனும் பொற்பிரம்புகளைக் கரங்களிற்பற்றிச் சூரனெதிரில் எவ்வெவர்களும் விலகிநிற்கத்தக்கதாய் விழிகள்சிவக்க உருட்டிப்பார்த்து மிடியும் அஞ்ச அதட்டி யிருமருங்கினும் வரிசைப்படநிறுத்திப் பராபரிசெய்துவரவும் பிரகஸ்பதிபகவானுஞ் சுக்கிராசிரியனும் அளவற்ற ரிஷிபுங்கவர்களுந் தங்கக்குடங்களில் வானகங்கையையேந்தி வேதங்களையோதி அறுகினுற் சூரன்மீது தெளித்துப் பல ஆசிகளைச்சொல்லவும் அளவிறந்த அரம்பையர்கள் பரதசாத்திரவிலக்கணப்படிக்கு கின்னரிப்பட்சியைப்போலத் தேவகாந்தாரங்களைப்பாடியும் மயிலையொத்துப் பதநாட்டிய முறைப்படியே அபிநயங்களைக்காட்டி நடிக்கவும் இவ்விதமாக விண்ணவர்தவத்தர் அவுணவீரர் நெருங்கித் தத்தஞ்செய்கைகளிற் குறைவின்றி நடத்தவரச்செயசாலியாகிய சூரபன்மன் நவரத்தினமயமாகிய சிங்காதனத்தின்மீது விளங்கி வித்துவச்சனங்கள் புகழ்வோர்முதலானவர்களுக்குமேகத்தைப்போல விலையுயர்ந்த பற்பலவஸ்திராபரணங்களை யிடையறாமற்கொடுத்து வருகின்றதனுவாயிற் சபையிலிருப்பவர்மீது விழிகளைப்பரப்பி யிதனைக் கட்டளையிடுவதாயினன்.

அரசியற்படலம்.

மேற்குறித்தவைபவங்களை அனுபவித்திருந்த சூரனுனவன் வண்டினங்கள் ரீங்காரத்தொனியைச்செய்திறங்கியுண்டுகளிக்கத்தக்கதாகத்தேன்களைத்துளிக்கும் பரிமளமிகுத்த திருத்துழாய்மாலைமார்பனாகிய விஷ்ணுவைப்பார்த்து நீர் நமது தந்தையின்றந்தைக்குத்தகப்பனாதலால் யின்றுமுதலெக்காலங்களில் நாம்வேண்டுவோமாயினும் அந்நிமிஷத்தில் விரைந்திவ்விடம்வந்துசேதிகளைக்கேட்டுப்போகக்கடவையென்றும்உந்திகமலவாசியாகியபிரமனைநோக்கிப்பாட்டனேநீர்உமதுகுமாரர்களுடன் நித்தியம்பிருதகாலத்திவ்வந்து பஞ்சாங்கமாகிய திதி வார நட்சத்திரயோக கரணசாரங்களைச்சொல்லிப்போவையெனக்கட்டளையிட்டுஞ்சூரியனையழைத்துநீரமதுபட்டினத்தின் மேலாகப்போகாமற் கிழக்குமேற்குக் கோபுரவாயல்களின் பக்கமாகக் குளிர்ந்த கிரணங்களைவீசிச்சென்று உன்தொழிலை நடத்துவையென்றுஞ் சந்திரனைக்கூவித் தேய்தலும் வளர்தலும் மறைதலுமின்றி யெக்காலமுஞ்சூரியனைப்போலவே சோடசகலைகளையும்விளக்கித் திரி

வையென்றும் எமதருமராசனைக்குறித்து இவ்வுலகங்களினிரா நின்ற சேவரா
சிகளைக்கொல்வதைப்போல நமதுசேனை யானை குதிரைகள் முதலானவை
களை வாட்டுவதைக்கனவிலும் நினையாமல் பயபத்தியுடன் அவைகட்குக்கு
றைவில்லாமல் விசாரித்துவருவையென்றும் அக்கினிதேவனைச்சுட்டி நம
து நாட்டிலிருப்பவர் யாவர் நினைந்தபோதிலுந் தட்சணத்தில் அவ்விட
ங்களிற்போய் யிட்டவேவல்களைச்செய்து யாவர்தொடினுஞ் செங்கமலத்
தைப்போலக் குளிர்ந்துகாட்டி உன்முறையைச் செலுத்துவையென்றும்
வாயுதேவனைப்பார்த்து நமது நகரத்திலிருப்பவர் தெருக்களில்வசிய வஸ்
திராபரணங்கள் புஷ்பமாலைகள் கலவைச்சாந்து சுண்ணப்பொடி மகரந்
தமுதலான குப்பைகளை யிராப்பகலின்றிச்சுத்திசெய்துபோவையென்றும்
வருணராசனையெச்சரித்துப் புனுகுசவ்வாது அகிற்சந்தனத்தைலங்கள
கஸ்தூரியாலின்மணமுதலான பரிமளங்களைத் திவ்வியசுகந்தங்கமழும்
பனிநீரிற்கூட்டி யிப்பதியெல்லாமுற்றிலும் வாயுசுத்திசெய்தவுடன் சிறு
துளிகளாயிறைத்துத் துகளெழாமல் அடக்கியிருப்பையென்றுந் தேவே
ந்திரன்மீது விழிகளைச் செலுத்தித் துறக்கநாட்டிலிருக்கும் விண்ணவர்
அஷ்டதிக்குப்பாலகர் ரிஷிகளுடன்வந்து நமது அரமனைமுதலானயிடங்க
ளில்வேண்டும் பணிவிடைகளில்யாதுங் குறைவில்லாமற்செய்து காத்திரு
ப்பையென்றும் இவ்விதமாகச்சபையிலிருப்பவர்களுக்கு வெவ்வேறுபணி
விடைகளை யேற்படுத்தியதறுவாயில் அவர்கள் பயத்துடன் அரசனே தே
வரீர் கட்டளையின்படியேசெய்யக்கடவோமென்று வணங்க நல்லசாரியமெ
னக்கையமத்தி யிவ்விதமாக அரசாட்சிசெலுத்திவருகின்றகாலத்திற் றிருக்
கலியாணமுடிக்க நினைந்தவனாய்க் குலக்குருவனாகிய சுக்கிராசிரியனுக்கு
த்தெரிவித்தமாத்திரத்தில் தகுந்தகன்னியை விசாரித்து விசுவகர்மன்புத்
திரியாகிய பதுமகோமளையானவள் லட்சுமிக்கொப்பானசுந்தரமுஞ் சந்
திரனை நிகர்த்த முகாரவிந்தமேமுதலானவடிவுகளும் நற்குண நற்செய்
கைகளும் பெற்றிருப்பதையறிந்து அவனுடன்பேசித் தினவாரயோககர
ணமாதியதுகள் அமைந்தசுபதினத்தில் அம்மங்கையைத்தரிவித்துக் கலி
யாணமண்டபத்தைச்சிங்காரித்து விஷ்ணு பிரமன் தானவர் முதலாகத்தி
ரண்டு வேதவிதிப்படிக்குச்சடங்குகளை நடத்தி மங்களவாத்தியங்கள்முழங்
க சகலவைபவங்களுடனும் மணத்தினைமுடித்தபின்பு சூரபன்மன் அவ
ளின்பநலத்தையனுபவித்துவருகையில் மீட்டுந் தேவர் அவுணர் கந்திருவர்
சித்தர் கின்னரர் இயக்கர் நாகர் கிம்புருடராதியர் பெண்களில் அளவற்ற
வரைக் கடிமணஞ்செய்து புஷ்பங்களினிடத்திறங்கித் தேனையுண்டுகளிக்
கும் வண்டினங்களைப்போல அவ்வவர் கலவிச்சுகங்களை யனுபவித்தவனாய்
ப் பின்பு தன் தம்பியாகிய சிங்கமுகாசுரனுக்கு அக்கினிதேவன்பெண்

றுகிய சுந்தரமுள்ள விபுதைவென்னுங்கன்னிகையைப்பேசி விவாகத்தை முடித்து அதற்பின்பு வனப்புக்கரசியாகிய திருவிபுத்திரிசவுரிவென்னுந் தருணமங்கையைத்தேடித் தாருகாசூரனுக்குமணஞ்செய்வித்தான் இவ்விதமாகத் திருக்கலியாணங்கள் முடிந்ததறுவாயில் தம்பியரைப்பார்த்து உங்களுக்கேற்படுத்திய நகரங்களிற்சேர்ந்து நம்மைப்போலவேசகலசெல்வங்களையும் அனுபவித்திருப்பீர்களென்றுசொல்லி ஒவ்வொருவருக்கு இரண்டுகோடிவெள்ளஞ்சதுரங்கச்சேனைகளையுங்கூட்டிச் செலவுகொடுத்தனுப்பிய பின்பு தன் சயின்னியங்களுக்குத் தலைவரைநோக்கி நீங்கள் இரண்டுகோடி வெள்ளஞ்சேனைப்பெருக்குடன் சத்தசாகரங்களின் மத்தியில்விளங்குந் தீபாந்திரங்களிலிராநின்ற பதிகளிற்சேர்ந்திருப்பீரென்று விடைதந்தனுப்பி மற்றுஞ் சிலசேனைக்காவலரைக்குறித்து ஆறுகோடிவெள்ளம்படைகளைக்கொண்டு நீங்கள்போய் அஷ்டதிக்குகளிலும்வானுலகேழிலும் பூமிவட்டத்திலும் பாதலப்பிலங்களிலும் மற்றைய எல்லைகளிலும் அமர்ந்து நமதுஆணை ஆக்கினைகளைச்செலுத்தியிருப்பீரென்றேவியதறுவாயில் அவர்கள்வானத்தில் நட்சத்திரவகைகள்பிரகாசிப்பதைப்போலஎங்கும்பரவிக்காவல்கொண்டிருந்தனர் இவ்வாறு எங்குந் தன்காவலைநாட்டி மேலுந்தன்றேவியர்வாசஞ்செய்யும் மங்களகரமாகிய அரமனை அந்தப்புர எல்லைகளில் லட்சம்வெள்ளஞ் சுத்தவீரரைப்போற்றுதல்நாட்டியபின்பு சிங்கம் யானை குதிரை யாளி கரடி புலி பன்றி மான் இவற்றின் முகங்களைப்பெற்ற அவுணவீரரைநோக்கி அளவற்றபடைகளுடன் நீங்கள்போய் யிந்த மயேந்திரபுரியைச்சூழ்ந்த எண்டிசைகளிலும் ஏற்படுத்தியிருக்கும் இலங்கைகளிலுஞ்சேர்ந்து நமதுகட்டளையின்றி ஒருவரையும் இப்பதியில் வரவொட்டாமற் காத்திருப்பீர்களென்றனுப்பிக் கொத்தளங்களமைந்த மதிட்புறங்களிலும் மகம்மேருவைப்போல ஓங்கிவிளங்குங் கோபுரங்களினிடங்களிலுந் தன்னரமனையைச்சூழ்ந்த சுவரமுதலானதலங்களிலுமிருந்துகண்ணிமையைப்போலக் காவல்கொண்டிருக்கப் பலதானவவீரர்களுக்குக்கட்டளையிட்டு இத்தன்மைய காவல்களைத் தகுந்தவிடங்களில்வைத்தபின்பு துற்குணன் - தருமகோபன் - துன்முகன் - சங்கபாலன் - வக்கிறபாலன் - தியன்மயிடன் - முதலானவர்களை மந்திரித்தலைவராகவேற்படுத்தினவனாய்ச் சூரபுன்மன் தேவாதியர்போற்றிவணங்க அரசுசெலுத்தியிருந்தான்.

தேவரையேவல்கொள்படலம்

சவுனகாதிரிஷிகளே, கேட்பீராக.—இப்படிக்குச்சூரபன்மன் ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் அதிபனாய்க் கொடுங்கோல்செலுத்திவருகின்

௨௫௨ தேவரையேவல்கொள்படலம்.

றதறுவாயில் தேவேந்திரன் விண்ணவர் ரிஷிகளைக்கூட்டிக்கொண்டு பொ
ன்வரையைப்போன்ற மாடமாளிகை கூடகோபுரங்கள் நெருங்கிவிளங்
குகின்ற மயேந்திரபுரியில் வாசமாயிருந்துமேற்குறித்த கட்டளையின்படி
க்கு நடத்திவருவதன்றியிற் சிங்கமுகன் தாருகன் மற்றப்பிரமுகாளாகிய
அவுணவீரர்வாசஞ்செய்யும்பதிகளினுந் தினந்தோறுஞ்சென்று அவர்கள்
பணித்தவைகளைக் குறைவறமுடித்து உஞ்சலைப்போலநிலைபெறாமல் இங்
குமங்குமாய்உழன்று அலைந்து பங்கப்பட்டு மனம்வாடிநடந்துவருகி
ன்றதறுவாயில் ஓர்தினஞ்சூரபன்மனானவன் இந்திராணியைத்தருவித்து
நீங்கள்தானவருக்குத்தம்பியராகும் அவர்களுக்குரியதொழில்களைமுடிப்
பது உங்களுக்கு உரிமையாதலால் யிதுபரியந்தம் நீங்கள்செலுத்திவரு
ம்வேலைகளுடன் அலைகள்பெருத்தசமுத்திரத்திலிராநின்றமகரமச்சங்களே
முதலானவைகளில்நாம்புசிப்பதற்குயோக்கியமாகிய பருத்தமீன்களைப்பற்
றிவந்துகொடுப்பீர்களெனப் புதியகட்டளையிட்டான் அவ்வார்த்தையினை
விண்ணவர்கேட்டவுடன் மனந்திடுக்கிட்டுவாடி ஏங்கினவராய்ப் பூமியைச்
சூழ்ந்த கடலில்வாழும் புல்லியசலகரங்களைப்பிடித்துவந்து கொடுக்கப்ப
ணிக்கின்றான் இதற்குநாஞ்செய்யவேண்டுவதெல்லை பரிமளமிகுந்த தாம
ரைக்கமலவாசியாகிய பிரமன் நமது தலையில் யிவ்வினைத்தொழிலைப்போற்
றிவரவும் எழுதினானோவென்றிரங்கித் தடுக்கப்பயந்து ராசாதிராசனே அவ்
வாறேசெய்யக்கடவோமெனப்பணிந்து விடைபெற்றுப்போகின்றமார்க்க
த்தில் தேவராசனும் இமையவரும் புலம்பி ஏக்கமுற்று யிவர்பணித்த
கருமத்தினைச்செய்வதினால் தீராதபழியாதகம் நேருதற்கையமில்லை அவை
வந்தடுப்பதற்குமுன்னம் அரியபிராணனைவிதிற்போக்கிச்சாகின்றதுமிக
வும்நன்காகும் பாழான அமுதத்தினையுண்டமுயற்சியினால் அதுவும் நம
க்குநேருவது அரிதாகக்காணுகின்றது ஐயையோ புழுங்குகின்றமனதையு
டைய யாம் யினி யெண்ணியாகவேண்டுங் கருமமொன்றுங்காணோமென
ப் பலபலகுறைகளைப்பேசிக்கொண்டு சமுத்திரக்கரையைச் சேர்ந்தவுடன்
தேவேந்திரன்கடலைநோக்கிக் குரலோசையுடன் ஓ வருணராசனே யென்ற
ழைத்து யிக்கருநீரையுடைய சாகரத்துக்கு நீர் தலைவனாதலால் உம்மையன்
றிவலிபெற்றவருமுண்டோ இக்காலத்தில் எங்கள்மனக்குறைமுடியத்தக்க
தாகத்திரைக்கரங்களினால்திமிதிமிங்கலமுதலானமீனினங்களைவெளியிடுவை
யாயில் நாங்கள்பட்டலையுந்துக்கசாகரத்தின்கரையிலேறியதாகநினைந்து
களிப்போமென்று அயிராபதத்தலைவன் கூவிச்சொன்ன வசனத்தினைக்
கேட்டவுடன் தேவருக்கதிபனாகியநீரும் இப்படிக் கிரங்குங்காலமும்
நேர்ந்ததோ உமது யிஷ்டப்படிக்குத்தருவேனென்று விரைவாய்ச்சேறு
ட ஆழ்ந்திருக்குஞ் சமுத்திரத்திற்புகுந்து அலைக்கரங்களினால் அலைத்து

றிலிருக்கும் பருத்தமீன்களை வாரிவாரி விசாலமாகிய கரையின்கண்மலைகளைப்போலக்குவிப்பதாயினான் இதனைக்கண்ட இந்திரன் தேவரைப்பார்த்து இவற்றை உமது வலிகொண்டெடுத்தவரக்கடவீரெனக் கட்டளையிட்டமாத்திரத்தில் அவர்கள் உடல்நடுக்குற்று மனம்பதைக்க விழிகளில் சலத்தைப்பெருக்கிக் கரங்களைத்தட்டிப்பிசைந்து அளவுபடாத வெந்துக்கமுடையவராய்த் தமது அரசன் கட்டளையின்படிக்குக்கடற்கிறைவன் குவித்த சின்னை திமிங்கலமுதலான மச்சங்களின் ஆவியை யெமன்வாட்டவும் தீர்ப்பசையைச் சூரியன்காய்ந்துபுலர்த்தவும் அனந்தன் வாசுகி தட்சன்முதலிய சற்பங்கள் திரண்டு பிணித்தசுமைகளைக் கடாவாகனனாகிய எமன் தேவரினும் அதிகமனக்கவலையுடன் தூக்கப் பவுத்திரமாகிய தங்கள்சிரங்களிற்றாங்கி வரிசைப்படப்போகின்ற தேவர் இவ்விதமாகப் புலம்புவர் உலகங்களனைத்தினுங் கொடுங்கோல்செலுத்திச் சகலரும் நடுங்கிப் புகழ்ந்து வணங்குங் கீர்த்திபெற்றசூரனென்னும் பாதகனால் இதற்குமுன்னமே மகத்தாகிய துக்கசாகரத்திலழுந்தி மனவூக்கமும் வலியுமிழந்து வருந்திய யாம் எப்புவனங்களினும் பிரகாசமாய் வெறுக்கும் பழிபாதகத்துக்கேதுவாகிய இவ்வினைத்தொழிலையுஞ் செய்யத்துணிந்தோம் இன்னமுமென்னென்ன கொடியகிருத்தியங்களை நடத்த விருக்கின்றனமோ தெரியாது மேருவையொத்த புசபலபராக்கிரமசாலியாகிய அரசன்பணித்த இக்காரணத்தினாற் பலராலும் இகழ்ந்து தூறப்படுவோம் ஐயையோ மானம் உயிரைவாட்டுகின்றது ஓ விதியே எமக்குத்தகாததொழில் நீங்குங்காலமும் நேருமோ தயைசெய்து ஒருவாற்றையினைச் சொல்லாயோ பூமியின்கண் வாசமாய் இருவினைத்துவக்கிற்பட்டலைகின்ற மானிடருஞ் சாஸ்திரமுன்னிலையில் மகாபாதகமென்றிகழ்ந்து நீக்கியிருக்கும் இப்புல்லியதொழிலையாவர்செய்வார்கள் இக்கொடியசெய்கையெமக்கோநேரவேண்டும் ஆதலாற் சிறப்பாகப்புகழுந் தேவகதியினும் அழற்பிழம்பைவீசும் ரவரவாதிநரகபாதனை மேலாகக்காணப்படுகின்றது மேலும் நன்குதீதென்றறியும் விவேகமில்லாததானவர்களினும் பேரறிவற்ற பூலோகவாசிகளினுந் தாழ்வுபெற்றபுலைஞர்தொழிலைச்செய்கின்றோம் இச்சொற்கவாழ்வினை மேம்பாடாகக் கருதி நாங்கள் வருந்திநோற்றதவப்பலனானது கடையில் வினைப்போகத்துக்குக்காரணமாய்முடிந்தது லோகநாயகனாகிய பரமசிவத்தினால்திருமித்த வேதவொழுக்கங்களைக்கடந்ததுமன்றியிற் சிறந்தோங்கிய ஞானவரம்புக்கும் இலக்காகியவராய்க் கொடிய சூரபன்மன்கட்டளையிட்ட கடிய செய்கையைச்சுருதிவாக்கியமாயெண்ணிச் சிரசாகவகித்து முடிப்போமாயின் எங்களினுஞ்சிறந்தவர் யெங்கேனுமுண்டோ இடைவிடாமற்றேனைத்துளித்து திவ்வியபரிமளங்களைவீசும் புஷ்பங்களலர்ந்த பஞ்சதருக்கள்

திமிலமர்ந்து தேவபோகங்களையனுபவித்து களித்திருக்கும் பெருமையினையுடைய வான்வரெனப்பலராலும் புகழத்தக்க சீர்த்திபெற்ற நாங் கண்டவர் கைகொட்டிநகைக்கப் பரதவரைப்போலப் புலால்நாற்றத்தினைவீசும் மீனினங்களைச்சுமந்து மயேந்திரபுரியிலிருக்குந்தானவர் முன்போவதினுஞ் சாகின்றது மிகவும் நன்றாகுமென்று மிவ்விதங்களாகப்பலபல பேசிப்புலம்பிக்கொண்டு ராட்சதர்புகழ்ந்து போற்றுஞ்சீர்த்திபெற்ற சூரபன்மன்வாசஞ்செய்யும் கெடிலத்தலத்திற் றிசைக்காவலருடன் தேவர் பிறவேசித்தகாலத்தில் அவர்செய்கைகளை அந்நகரவாசிகள்கண்டு மிவர்கள்நமதரசன் கட்டளைப்படிக்குப் பெருமைபொருந்திய சமுத்திரத்தைக்கலக்கி மச்சவினங்களைக்கொண்டு வருகின்றனரெனச் சிலர்சொல்லவுஞ் சூரியன்காய்ந்து பசையற்ற நிலத்தையும் உண்டு நின்ற வெறுங்கோதினைத்தருகின்றனரெனச் சிலர்கூறவுங் கடலையலைத்து அதிலிருந்த மச்சங்களைப்பற்றிச் சிரசிற்சுமந்து வருகின்றனர் மிதனால் மிவர்களுக்குச் சிறிதும் நாணமில்லையோவென்று பலர்பேசவுஞ் சத்துருக்களேயாயினும் மித்தொழிலைச்செய்யத் தகாதென்று அளவற்றவர் மிரங்கிப்பரிந்துசொல்லவும் ஒன்றும்பேசாமற்போகின்றனர் மிவர்ஆண்மைகளோவெனப் பலர்பரியாசஞ்செய்யவும் பூமியைச்சூழ்ந்த சாகரத்தின்கரையில் வாசஞ்செய்யும் வலைஞருக்குரிய மித்தொழிலானது சிலாக்கியமாகப் பேசிக்கொள்ளும் மிவர்களுக்குநேருவதோவெனப்பலர் பரிவப்படவும் என்னேவார்த்தையாடுகின்றீர் விதியின்முயற்சியினை யாவரால் விலக்கப்படுமெனப்பலர்சமாதானஞ்சொல்லவும் வேதமாற்கப்பயிற்சியினை மறந்து வினையாளர்செய்யும் மீனத்தொழிலை யேற்றுநடத்துகின்றனரெனச் சிலர் விசனப்படவுஞ் செயசாலிகளாகிய நங்குலத்தவரைப்பலகாலந்துன்பப்படுத்திவாட்டித் தேவபோகங்களை மிதுபரியந்தம் அனுபவித்து மிழுமாந்திருந்த மித்தேவருக்கு மிதுபோதாது மின்னமெப்பாடுகளிடைக்கவிருக்கின்றதோவெனச் சிலர் சீறவும் பூலோகவாசிகளாகிய மானிடரும் அஞ்சத்தக்க பழிபாதகந்தனக்கு நேர்ந்தும் மிவ்விந்திரன்பிராணனைப்போககிக்கொள்ளாமற் பிணம்போலப் போகின்றனன் ஆதலாற் கண்களாலந்தமிருந்தபோதினும் அறிவுசிறிதாகும் மிவனுக்கென்று சிலர் ஏசவும் மிப்படிக்கு நாம் மிகழ்ந்துபேசவுஞ் சற்றும் நாணமில்லாமல் நடக்கின்ற மிந்த இந்திரன்பெண்ணோ அலியோ பேடோவெனச் சிலர்பரியாசஞ்செய்யவும் இவ்விதங்களாகப் புரசெனங்கள் கூட்டங் கூட்டங்களாகத்தெருக்களிற்சேர்ந்து பற்பல நிந்தாஸ்துதிகளைப்பேச அச்சொற்கள் விஷத்தையொத்துச் செவிகளில் நுழைந்தமாத்திரத்தில் நாணமும் மானமும் மனதைவாட்ட வருந்தியதேவேந்திரன் விண்ணவர்கூட்டத்துடன் அவ்வீதிகளைக்கடந்து பாதகனான சூரபன்மன்வாசஞ்செய்யும் அரமனை

ஆசாரவாயலிற்சேர்ந்ததறுவாயிற் காவலரிற்சிலரோடி இராசனுக்கிவர் வர
வை விண்ணப்பஞ்செய்து விடைபெற்றுவந்து சிலவுகொடுத்தவுடன் அத்
தேவர் அடங்கி ஒடுங்கித் திரைகள்பெருத்தசமுத்திரத்தில் வாழும் மீன்சு
மைகளைப் பவித்திரமாகிய சிரங்களிற் றாங்கிச் சபாமண்டபத்தில்வீற்றிரு
ந்து கொடுங்கோல்செலுத்திவருஞ் சூரபன்மனெதிரில் நின்றகாலத்தில்
அவர்கள்கோலத்தைப்பார்த்துக்களித்தவனாய் தேவர்களே யிவ்வாறே தின
ந்தோறும் பருத்தமச்சங்களைத் தரக்கடவீர்களெனப்பணித்தவுடன் மச்சி
பாக்கியமென அக்கட்டளையைச்சிரசாவகித்துத் திரும்பி மடப்பள்ளிக்களி
ற்சேர்த்தனர் அத்தினமுதல் இவ்வாறே நாள்தோறும் அப்புல்லியதொழி
லமுதலிய துஷ்க்கிருத்தியங்களை மனம்வருந்திக் குற்றவறச்செய்துத் துக்
கசாகரத்திலழுந்தி வேதவொழுக்கங்களைமறந்து தங்கள்பதங்களையிழந்து
பிரமாமயேந்திரமே குடியாகவிருந்து சிங்கமுகன் தாருகனுக்குரிய பணி
விடைகளையும்முடித்துவருவார்கள் சேட்டர்களொருநைமிசாரணியவாசிகளே
முற்பகல்செய்யிற் பிற்பகல்விளையுமென்பதாகப் பரமசிவத்தையிகழ்ந்து
தக்கன்செய்தயாகத்திற் களித்திருந்த பாதகசம்பந்தத்தினாற் சிறந்ததேவ
ரும் இப்பாடுபடும் எதுவையும்நேர்ந்தது இதுநிற்க யினிசூரனுக்குநேர்
ந்த புத்திரோற்சவமுதலான சரித்திரங்களைக்கேட்பீராகவெனச் சூதபுரா
ணிகர் சொல்லுவதாயினர்.

புதல்வற்பெறுபடலம்.

இவ்வாறு தேவர்கள் தகாதபணிவிடைகளைச் செய்துவரத்தக்கதாக
ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் ஏகச்சக்கிராதிபத்தியத்தினைச்செலுத்தி ஆண்டுவ
ருந்ததறுவாயிற் செயசாலியாகிய சூரபன்மன் அரிதிற்செய்த தவமுயற்சி
யினால் இலக்குமிக்கொப்பாகிய சுந்தரமுள்ள பதுமகோமளையென்னும்
பட்டமகிஷியின் திருவயிற்றிற் பாலசந்திரன்தோற்றம்போலக் கருவுண்
டாகிப் பத்துமாதமும் நிறைந்தவுடன்கிரகநிலைகள் மங்களகரமாக அமை
ந்திருக்குஞ் சுபதினத்தில் மன்னுயிர்களைவாட்டும் எமனுக்கும் எமனைப்
போல் றச்சுரியவானுருகுங் குமாரன் அவதரித்தான் அச்சந்தோஷவார்த்தை
யினை ராசராசன்கேள்விப்பட்டவுடன் ஆனந்தவாரியில்முழ்கி மங்கலவாத்
தியங்கள்முழங்கவுந் தேவேந்திரனாதியர் மனந்திடுக்கிட்டுவாடவும் புர
செல்வர்கள் களிகொண்டாடவும் அந்நகரத்திலிருக்கும் அவுணருக்குச்சி

பகத்தருக்களும் நாளும்படிக்கு நவரத்தினமயமாகிய பூஷணவகைகளை
யும் பீதாம்பரவிதங்களையுஞ்சொர்ணக்குவைகளையுஞ் சிவிகையானை தேர்
குதிரை முதலானவைகளையும் வெறுக்கக் கொடுத்து போசனவிதங்களினா
லுந் திருத்திசெய்து யிவ்விதங்களாகப்பலநாள் சுபங்களைக்கொண்டாடி
மற்றொரு சிறந்ததினத்திற் பொன்னினாலுஞ்சிரோரத்தினவகைகளினாலும்
பருத்த முத்தினங்களினாலுஞ் சித்திரவிசித்திரமாகச் சோடித்துவிளங்குந்
தொட்டிலினிடத்திற் பர்யலவேடிக்கைகளுடன் தேவகன்னியரும் அவுண
மங்கையருந்திரண்டு மங்களவாழ்த்தெடுத்து அக்குழந்தையினைச்சேர்த்
துத் தாலாட்டிப்போற்றிவரக் குற்றமற்றசந்திரனைப்போலத் தினமொரு
மேனியாகவளருந்தறுவாயில் ஒருதினங்கட்டழகுள்ள ராசபுத்திரன் விதா
னந்தூக்கிய பொற்றொட்டிலில்நித்திரைசெய்யும்போது சூரியப்பிரகாசத்
தினாலுண்டாகும் ஆதபமானது சன்னலின்மூலமாகப்பாய்ந்து தன்மீதிற்
றாக்கக்கண்டு பாலன்கோபித்து உருத்துப்பாத்து உடனே பலமணிகளினா
ற் சோடித்திருக்கும் உஞ்சலினின்றும் வேகமாக அண்டத்திற்பாய்ந்து
கேதுவானவன்கவ்வியதைப்போல ஆயிரங்கிரண சமோகங்களைவீசி உல
கைவிளக்குஞ் சூரியனைக் கைப்பிடியாகப்பற்றி நிமைப்போதிற்றிரும்பி
த் தான்பள்ளிகொள்ளுஞ் சிறந்த தொட்டிலின் வயிரக்காலில் வலித்திறுக்
கிக்கட்டிப் பழையபடிக்கு நித்திரைசெய்தான் கேட்டீர்களோசவுனகாதி
ரிஷிகளே தவழவறியாத சிசுவானது கொடியவெப்பத்தினைப்பெற்ற ஆதித்
தனைப்பிணிக்குமாயிற் றவத்தினும் மேலானபொருளொன்றுண்டோ அத்
தறுவாயில் யிச்செய்கையினைத்தேவர்கண்டுமனம் நடுக்குற்றுவெருவி அம்
மம்ம யிந்த ராசகுமாரன் குழந்தைப்பருவத்திற்றானே யிவ்வலியினைச்
செய்வானாயிற் காளைப்பருவத்தில்நாமெல்லவரும் யிவனாலென்னபாடுபட
விருக்கின்றதோவெனப் பயந்துவசனித்திருக்குந்தறுவாயிற் சூரியன்வெ
ளிச்சமில்லாமையாற் சகலபிராணிகளும் வருந்த உலகமெங்கும் யிருள்மூ
டியிருப்பதைப்பிரமன்கண்டு அதிசெயப்பட்டவனாய் இந்திரன் முதலிய
தேவருடன் சூரபன்மன்சபைக்குப்போய் ராசாதிராசனே உமது திருக்கு
மாரன் சூரியனைப்பற்றித் தளைசெய்தகாரணத்தினாற் பிரபஞ்சம் ஒளியிழ
ந்து வாடுகின்றது அவனைவிடுவிக்கத்தயைசெய்யவேண்டுமெனத் துதிப்ப
தை அரசன்கேட்டு நமது குமாரன்சூரியனைச்சிறைசெய்தகாரணத்தினைய
றியமாட்டோம்அப்படிக்கவன் நடத்தத்தக்ககுறைபாடேதேனுமுண்டோ
வெனப்பாதகன்கேழ்க்கப்பிராணிகள் வினைக்கீடாகப்படைக்குந்தொழிலை
யுடைய பிரமன் அரசனைப்பார்த்துத் தேவரீர்குமாரன் நித்திரைசெய்யு
முன்னிலையிற் சூரியனிடகிரணகாந்தியானது முகத்திற்றாக்கிய நிமித்திய
மாகப்பிடித்துச் சிறையிலிட்டானென்றுசொல்லக்கேட்டு மனமகிழ்ந்தவ

னுப் பிரமனே அதற்குநாஞ்செய்யவேண்டுவதென்னை நீங்களனைவரும் போய் ராசபுத்திரனுக்கு யிதம்பெறநன்மொழிகளாற்புகழ்ந்து அவன்சம்மதம்பெற்றுச் சூரியனைவிடுவிக்கக்கடவீரென்றமாத்திரத்தில் அவ்வாறே செய்வோமெனப்பிரமன் சிலவுகொண்டு திருப்பிப்பொன்னுலகவாசிகளாகிய அரம்பை மேனகை திலோத்தமை முதலிய கன்னியர் சிரவணனந்தமாகப்பாடித் தாலாட்டிப்போற்றப் பாலன் நித்திரைசெய்திருக்கும்பொற்றொட்டிலினருகில்வந்து பற்பல ஆசீர்வாதங்களைச்சொல்லி உபசரித்துப் புகழுகின்ற பிரமனை அக்குமாரன் கண்ணெடுத்துப்பார்த்துத் திருநகைகொண்டு உமக்கென்ன பெறவேண்டிவந்தீரென்றவுடன் ஐயனே சூரியகதியில்லாமையாற் சகலபிராணிகளும் வருந்துகின்றது அவன் வாடப்பிணித்திருக்குங்கட்டினை நீக்கிவிடவேண்டுமெனக் கேட்க நல்லகாரியம் பாட்டனே அவன்வேண்டுமாயில் உமதுபடையினைத்தந்தால் அப்படிக்குச்செய்வோமென்னுங் குதலைவாக்கியத்தினுக்குமெச்சித் தன்பாணமாகிய பிரமசரத்தினை மந்திரபூர்வசமாகக்கொடுத்துச் சூரியனை விடுவித்து மேலும் ராசபுத்திரன் வலியினுக்குந் தீரத்துக்கும் அதிசெயித்தவனும் மோகனுஸ்திரத்தையுந்தந்து வாழ்த்த ராசபுத்திரன்களித்துப் பிரமனுக்குஞ் சூரியனுக்கும் விடைகொடுக்கப்பெற்றுப்போனசேதியைப்பிதாவாகிய சூரன்கேழ்விப்பட்டுச் சரீரம்பூரிக்கச் சபையைக்கடந்து புத்திரனிருக்கும் மாளிகையில்வந்து குமாரனையெடுத்து முத்தாடித் தழுவி உச்சியைமோந்து வாழ்த்தினவனுய்ச் சூரியனைக்கோபித்துத் தளைசெய்தகாரணத்தினால் அச்சுபதினத்திற் குமாரனுக்குப் பானுகோபனென்னுந் திருநாமஞ்சாத்திச் சகலவைபவங்களுடனும் பாதுகாத்துவருகின்றதறுவாயிற் பாலபருவங்கடந்து மான்பார்வையினைப்பெற்ற தருணமங்கையர்மோகிக்கும் மன்மதனையொத்த வடிவுவிளங்குங் காளைப்பருவம் நேருமுன்னிலையில் வேதாகமபுராணமுதலிய கலைகளைப்பூரணமாக வாசித்து தனுர்வித்தைகளை வரையறக்கற்று யானையேற்றமாதியான பயிற்சிகளையும் பழகிப் புசபெலபராக்கிரமத்துக்கொப்பில்லாதவனுக விருக்கின்றதறுவாயில் ஒருதினம் ரதாரூடனுய் சதுரங்கச்சேனைகளுஞ் சூழ்ந்து போற்றிவர உலகங்களிற்பவனிவருமுன்னிலையில் லட்சுமிகாந்தனுகிய மகாவிஷ்ணுவாழும் வைகுந்தத்துக்குப்போய் அவருடன் கொடியபோர்செய்து வென்று அவராற்புகழப்பெற்று மற்றதேவரைசுல்பமாகமதித்துந் திக்குவிசையங்கொண்டும் யிவ்விதமாகப் பிறமுகனுய்ப் பிதாமனங் களிக்கவிருக்கின்றகாலத்தில் வனப்பினுக்கொப்பற்றுப் பரிமளபுஷ்பமணிந்த அளகபாரத்தினையுடைய பதுமகோமளையானவள் பானுகோபனைத்தந்தபின்பு இறமப்படிக்கு அக்கினிமுகன் இரணியன் வச்சிரவாகு யிவர்களையுஞ் சூரன் மனை

வெழுச்சிப்பேறப்பெற்றாள் அவ்வாறே வேலைப்போன்ற கூரிய விழிகளையுடைய மற்றதேவிமாரும் ராசராசன் மனதுக்கினிய மூவாயிரம்புத்திரரையீன்றார்கள் இக்குழந்தைகளின் அழகினையுஞ் சூரத்தினையும் பார்த்துமனங்களித்துப்பூரிச்சூரபன்மன்கொடுங்கோல்செலுத்தி மயேந்திரபுரியிலிருக்கின்றகாலத்திற் சிங்கமுகனுக்கு அதிசூரனென்றும் மற்றும் நூறுபிள்ளைகளும் பிறந்தார்கள் யிவர்கள்சூரத்தினையும் புயவன்மையினையும் ஒருவராலும் புகழப்படாமல் செயசாலிகளாயிருந்தனர் இப்பால் யிவனுக்கிளையதாருகன் செய்த தவமுயற்சியினாற் பாலசூரியனைப்போன்ற குமாரனைப்பெற அவன்குணாதிசெயங்களையும் பராக்கிரமத்தையுஞ் சுக்கிராசிரியன்கண்டு குறித்தபடிக்கு அசுரேந்திரனென்னும் பெயரையிட்டுச் சகலசீருடனும் போற்றிவருகின்றதனாயிற் றாய்தந்தையர்களிக்கச் சிறந்தும்மன்மதனை யிவனெனப் பலருங்காதலித்துக்கொண்டாடும் வனப்பைப்பெற்றுக் காளையாய்ப் பள்ளியிற்சகலசாத்திரங்களையும் வாசிக்குமுன்னிலையிற் குற்றத்துக்கேதுவாகிய வித்தைகளைக்கற்காமலும் பாதகத்தொழிலினைச்செய்யவிரும்பாமலும் பழிகொலைகளுக்கஞ்சியும் நீதியல்லாதவைகளை மனதிலும் நினையாமலும் வேதமுதலானவைகளை வலாயறக்கற்றபின்பு தனுர்வித்தைகளைப் பூரணமாகத் தெளிந்தவனாயிருந்தும் யாவராயினும் விரம்பேசிப் படைகளுடன் வலிதிற்றன்மீதெடுத்துவருவாராயின் அவர்களைச் சின்னபின்னப்படக்கண்டித்தும் மற்றையனாத்தாயினும் யரிவாகப் போஷித்தும் யித்தியாதிகுணாதிசெயங்களைப் பெற்றிருக்கின்றதனாயிற் பலசிகரங்கள்விளங்கும் பர்வதத்தினிடத்திற் கிளைத்தோங்கிநிற்குஞ் சுதரக்கள்ளியானது முற்றுச் சுகந்தத்தினையுடைய அகிற்றுண்டத்தினைத்தந்து மேம்பட்டிருப்பதைப்போல அச்சுபுத்திரனையீன்று சகலசெல்வப்பெருக்கினையும்வாய்ந்த மாயமாபுரத்திற் பலரும்போற்றத் தாருகாசூரன் களித்திருந்தான்.

வாதாவிவில்வலப்படலம்.

இவ்விதமாகச்சூரபன்மனுந் தனைவரும்மனதுக்கினிய புத்திரரைப்பெற்றுச் சிறந்த செல்வப்பெருக்கினையும் அனுபவித்து வருந்தருவாயில் யிவர்களுக்குத் தங்கையாகிய அசமுகியென்பவள் கலியாணமேனுமாக ஒருவருக்குப்பத்தினியென்னும் முறைபாடில்லாமல் நாணமடமச்சமென்

னும் நிறைவரம்பற்ற விலைமாதரைப்போலமனயிஷ்டப்படிக்குத்திரிந்து தருமமென்பதை யெவ்வளவும் பாராட்டாதவளாகிச் சிறந்தவடிவுள்ள தேவர்பத்தினியரைப் பலவந்தமாகக்கொண்டுவந்து தமையன்மார் புயங்களாரத்தழுவி மணங்களிக்கக்கொடுத்தும் இருவினைத்துடர்பை வெல்வதாக நற்கருமங்களை யனுஷ்டித்து மேம்பட்ட ரிஷிகள்செய்யும் மகத்துவமுள்ள வேழ்விகள் முற்றுப்பெறாமல் பின்னப்பட அவ்விடங்களில் ஆகுதியாகிய காரியங்களை நடத்திடும் அவர்களை வதைத்தழுவியும் யிவ்விதக்கொடியதொழில்களைமுடித்தும் அழித்தும் பிராணிகள்செய்த நீடித்த வினைகளின்வடிவைவொத்துத்தொடர்ந்துவாட்டித் தின்றும் அசுரர்குலமுழுதும் மாளுதற்கு ஆழிபோன்பயனைநிகர்த்துத் தினமும் புவனங்களனைத்திலுந் திரிபவளாகிக் கட்டழகுள்ள புருஷனைத்தேடி யிரவுபகலென்னும் பேதமில்லாமல் நேர்ந்தபோது வலிந்திறுகத்தழுவி யின்பநலத்தினையனுபவித்துக் களித்தும் அச்சுகத்துக்குச் சம்மதப்படாதவரை யிமனைப்போலக்கொன்று தின்றும் யித்தன்மையாகத்திரிபவள் ஒருதினந் தவச்சிரேஷ்டராகிய துருவாசமுனி வாசமாகிய வனத்திற்போய் அத்தபோதனரைக்கண்டு யிவன் விரதமுயற்சியினை யழிப்பதன்றியில் வலியபிள்ளைகளையும்பெறுவேனென நிச்சயித்தவளாய்த் துருவாசரெதிரிற்போய் நிற்கின்றவளை ரிஷிபார்த்து ஓ பெண்ணே நீயார் தனித்தவிவிடத்தில்வருங் காரியமென்னவென்று கேழ்க்கக் குற்றமற்ற தபோதனரோ நானும்மைத்தழுவிப்பிள்ளைகளைப்பெற்றுக்கொண்டு போகவந்தேனெனக்குறிக்கத் துருவாசர்யோசித்து யிவள்சூரபன்மன் தங்கையென்றறிந்து முயற்சிபெற்றபெண்கொடியே சேட்பாயாக உன்னிஷ்டப்படிக்குக் காமயின்பத்தினையிச்சித்து வுன்னையனைவேறுயில் யிதுபரியந்தம்வருந்தி அரிதாகச்செய்ததவமனைத்தையும் அவத்திற்போக்கவரும் ஆதலால் நீ யிவடத்தில் நிற்பது பழியாதகத்துக்கேதுவாகின்றதன்றியில் நம்மையொத்தவருக்கு உன்னைப்போன்ற ராசபுத்திரியுடன்வாற்றையாடுவதே நீதியல்ல பின்னையாரையாவது தேடிப்போகக்கடவாயென்று சொல்லியதை பரிமளபுஷ்பமணிந்த அளகத்தினையுடைய அசமுகிகேட்டுநகைத்து ரிஷியேஉம்மைக்கூடிக்களியாது யிவடம்நீங்கமாட்டேன் மெண்ணத்தினைவிட்டுவிடுமென்று மேல்விழுந்து அணைத்து வலிந்திற்புணர்ந்து யிசழுறலமிர்தினையுண்டு யின்பமுற்றியதருவாயில் ஆலத்தையும் வடவையையும்போன்று வலிபெற்ற யிரண்டுபிள்ளைகளுதித்தார்கள் அவரை அசமுகிகண்டு களித்து மார்பிலணைத்து முத்தமிட்டவளாய் வலிய ரிஷிபத்தையொத்தகாளைகாள் அசுரர் திறத்திலுதித்த நீங்கள் வருந்தித்தவங்களைச்செய்து வலியராய்ச்சிறந்து விதிவிளங்குமொனப்போதிந்து வில்வலன் வாதாவி யென்றும்பெயரையுமிட்டாள் அப்போது தாயி

ளிட வுருவாகித் தந்தையின்தோற்றம்பெற்றுதித்த அவ்விருபிள்ளைகளும்
அன்னைகுறித்தவாக்கியத்தை நிதானித்தவராய்ப் பிதாவாகிய துறுவாசரிஷி
யினது பாதங்களிற்சேவித்து நிற்க கோபமேயுருவாகவிளங்குந் தவத்தர்
மக்களைப்பரிந்துநோக்கி உமக்குவேண்டுவதென்னையென வினவியகால
த்திற் சுவாமி யிதுபரியந்தந் தேவரீர்நோற்றதவமுயற்சிகளை எங்களிருவ
ருக்குந்தரக்கடவீரெனக்கேழ்க்கக் குமாரர்களே பெருகாலமாகவருந்திப்
பெற்ற விரதமகிமையினை யெளிதிற்கொடுத்துவிட்டு வறுமையாளனாக
மாட்டேன் யிதுவன்றியில் மற்றதுகளெதனை விரும்பினாலுந் தருவோ
மென்று துறுவாசர்தடுத்தமாத்திரத்தில் அவ்விருவருங் காலத்தைப்போ
லக்கொதித்து யிப்பிராமணன்பிராணனை வாங்கித் தவத்தையும்பெற்றுக்
கொள்ளுவோமெனச் சீறி மேல்வருந்தருவாயில் அதனை ரிஷிகண்டு குரு
துரோகிகளாகிய பாவிகாள் யிதுமுதலாக வெப்போதுங் குற்றமற்றதவத்
தருக்குத் துன்பங்களையேசெய்துழன்று கடையிற் றவச்சிரேஷ்டராகிய
அகஸ்தியமுனியினால் மாளக்கடவீரெனச்சபித்துத்தாழ்த்தோமாகிற் றடை
யில்லாமற்கொல்வது நிச்சயமென்றெண்ணிச் சீக்கிரமாக ஒருமாயமந்தி
ரத்தையுச்சரித்து அப்பாதகர்விழிகளுக்குத்தோற்றாமல் மறைந்தனர் அக்
காலத்திற் பிதாவைக்காணாதவராய்அவ்விருவருந் தாயைச்சேவித்து விடை
பெற்று அந்தவனத்தைநீங்கி மற்றொருவனத்தைச்சேர்ந்து துறுவாசரிட்
ட சாபவன்மையினாற் பிரமநிலையினைத்தெளிந்த மகத்துக்களாகிய தபசிக
ளைக்கொல்வதையே ஒரு பலப்பிரப்தியாகநினைந்து அவ்விடத்திலமர்ந்து
அக்கினியையவளத்தி அதின்மத்தியில் நின்று வெய்யல் மழை குளிர் முதலி
யவருத்தங்களுக்கு மனமிடையாமற் பிரமதேவனைநோக்கி அளவற்றகால
ம்வருந்தித் தவத்தைச்செய்தும் அதற்கிரங்கி நான்முகன் காட்சிதராமை
யால் வேறொருசெய்கையைக்குறித்து வில்வலனென்னும் பாதகன் தன்து
ணைவனாகிய வாதாவியை மின்னலையொத்துப் பிரகாசிக்கும் வாளாயுதத்தி
னாற்கண்டித்துப் பலதுண்டங்களாகச்சேதித்து உதிரங்களைக்கூட்டி
அவியாக ஓமகுண்டத்திற்சொரிந்து பிரமமந்திரப் பிறகரணங்களையுச்சரி
த்து வீரமாமகத்தினை மனவுறுதிகொண்டு வில்வலன் பலநாள்செய்துவரு
முன்னிலையில் அக்கனல்பாவி உலகங்களிலிரானின்ற பிராணிகளைவருத்துகி
ன்றதையும் ராட்சதகுமாரன் நிரத்தையும் பிரமன்கண்டிரங்கி அவன்
எதிரில் அன்னவாகனத்தின்மீதெழுந்தருளி அளவிறந்தகாலமாக வருந்
திநோற்றனை உன்தவத்தினைமெச்சினேம் வேண்டும்வரங்களைத்தருவோங்
கேளுமென்று திருவாய்மலர்ந்தருளக்கேட்ட வில்வலன் பத்தியினையத்
துடன் பிறதட்சணம்வந்து சேவித்துப்போற்றிச் சுவாமி வேள்விமுன்
னிலையிற் றேவரீருக்குப்பிரீதியாக ஓமஞ்செய்தஅடியேன் தம்பியானவ

ன் உருப்பெற்றெழக் கடாட்சிக்கவேண்டுமெனத் துதிக்கப் பிரமன்மகிழ்ந்து வாதாவியாவென்றழைத்தமாத்திரத்தில் அப்பாதகன் கோடையிடியைப்போலக் கொக்கரித்தெழுந்ததை முன்னவன் கண்டுகளித்து மேலுந் துஷ்கிருத்தியங்களுக்கேதுவாகிய கியாபகங்கொண்டு தாமரைப்பீடத்திலுறை பிரமனைமீட்டும்வணங்கி அடியேனுக்குப் பின்னுமொருவரந்தரவேண்டும் அருதென்னையெனின் ஆட்டினுருவாகவிருக்கின்ற என்றுணைவன் இனிமேலும் உடல்துணிபடுவானாயினும் நானழைக்கும்போது பழையபடிக்கு உயிர்பெற்றெழ வேண்டுமெனத்துதிக்க அவ்வாறே பலகாலமும் நடந்துவரக்கடவதென்றருளித் தமதுலகத்துக்கெழுந்தருளினார் பின்பு அவ்விருவருஞ்சிங்கத்தினையொத்த வலிபெற்ற சூரபன்மன் சபைக்குப்போய் சிரவெண்குடையமணிந்த திருவடிகளிற்பணிந்து யாங்கள்வேறல்ல தேவரீர்தங்கைபுத்திரர் உமக்குமருகராவோம் இதுவுமல்லாமற் பிரமனைவழிபட்டு ரிஷிக்கூட்டங்களைவாட்டும் வரப்பிரசாதத்தினையும் பெற்றோமெனத் தமதுவரலாற்றினைத் தெருவித்தமாத்திரத்தில் சூரன் அவர்களைச்சேரவழைத்து மார்பிலிறுகத்தழுவி மருகரே உங்களைப் பார்க்க மிகவுங்களித்தனம் இவ்விடத்திற்சகலசவுக்கியங்களையும் அனுபவித்துச்சுகமாயிருப்பீரெனச்சொல்லச் சம்மதித்துமயேந்திரபுரத்தில்ராசவுபசாரங்களைப்பெற்று சிலதினமிருந்தபின்பு மாதுலனிடத்திற்சிலவுபெற்றுக்கொண்டு பூமியின்கண்வந்து பற்வதங்கள்பெருத்துச் சோலைகள் மிகுத்து மதயானைகள்களித்து வயல்கள்செழித்துச் சலசமற்றியாய் பலவளங்களையும்பெற்றுச் சிறந்திருக்குங் குடகநாட்டினைச்சேர்ந்து தருக்களடர்ந்து குளிர்ந்தநிழலைப்பரப்பியிருக்கும் ஒருவனத்தில் நாலுபாதையுங்கூடுமிடத்தில் ஆசிரமமுண்டுபண்ணினவர்களாய் எவ்வெவர்களும்யிச்சிக்கத்தக்க வஸ்துக்களெவ்வெவத்தினையும் விளைவோங்கச்செய்து அம்மாற்கத்தில் ஆண்பிள்ளைகளாகவிருப்பவர் யாவராயினும் அவர்கள்பிராணனைவாங்கியலைக்கநிச்சயித்து அவ்விருவரில் இளையவனாகிய வாதாவியானவன் திருகிவளர்ந்து பொன்னையொத்துவிளங்குங் கோட்டினையுடைய ஆட்டுக்கடாயினுருப்பெற்றுப் புலத்தில்மேய்ந்தும் முன்னவனாகியவில்வலன் தவவேள்விகளைச்செய்யுஞ் சிறந்தமுனிவனைப்போல மாயவேஷந்தாங்கியிருந்தும் அம்மூலமாகப்போகின்ற ரிஷிகளைக்கண்டவுடன் அதிகவேகமாயெதிர்கொண்டுபணிந்து உபசரித்து உமதடியேன் ஆசிரமத்தில் எழுந்தருளிப்பவித்திரமாக்கிப் போகவேண்டுமெனப் போற்றியழைத்துப்போய் அர்க்கியபாத்தியமுதலிய கடன்களைநடாத்தியபின் சுவாமிகளுக்கு யித்தினம் இச்சிறுகுடிசையிற் பொசிப்பினைப்படைக்க விரும்பினேன் விரைவில்முடியும் ஆதலாற் இலையுற்று மனங்களிக்கவேண்டு

தாயினேனைக் கிஷதார்த்தனுக்கிப்போகவேண்டுமெனத்துதித்திருத்தி அறுசுவைப்பதார்த்தங்களைப் பாகமாகச்சமைத்தபின்பு ஆடாகிமேஷின்றதுணைவனைப்பிடித்துவந்து கண்டித்துத் தோலைப்போக்கி மின்னலைப்போத்துப்பிறகாசிக்கும்வாளினால் உறுப்புகளை வகைவகையாகச்சேதித்தெடுத்துச் சுத்திசெய்துபதப்படுத்தியவுடன்விசாலமாகிய வாழையிலையைப்பரப்பிகறிவகைகளைச் சுற்றிலும்வைத்துத் திவ்விய போசனத்தையும்படைத்து அவர்கள் திருத்தியாகச்சாப்பிட்டபின்புவாதாவிவாவென்றழைப்பன் அவ்வொலியினைக்கேட்டமாத்திரத்தில் பிரமன்வரமுபற்சியினால் உருப்பெற்றுக் கூரியகோட்டினால் அம்முனிவன்வயிற்றைப்பீறி வெளிவந்துயிறந்தவுடலை யிருவருமாகப்புசித்துப் பழையபடியே தம்பி ஆடாகமெய்த்துத் தமையன்றிஷியாகவிருந்தும் யிவ்விதமாகப் பற்பலதவத்தனை நாள்தோறும் கொலைசெய்துண்டு அம்மரபினருக்கு எமனைப்போலத்துட்டர்த்தலைத்திருப்பார்கள்.

இந்திரன்கரந்துறைபடலம்.

இவ்விதமாகவில்வலனும் வாதாவியும் மற்றுஞ்சமேளசித்தம்பெற்றார்ட்சதருமாகப் பலதிசைகளிலுமிருந்து நேர்ந்த தவச்சிரேஷ்டராகியரிஷிக்கூட்டங்களையுந் தினராகியதேவரினங்களையுந் தருமசீலராய்த் தெய்வபக்திவிளங்கி ஒப்பற்றிருக்கும் மானிடவகைகளையும் வளைத்து மாய்கையினாலும் வலிதினும்வாட்டி நாசஞ்செய்துவர மாயையபுத்திரனாகிய சூரபன்மன் மயேந்திரபுரத்திலிருந்து கொடுங்கோல்செலுத்து முன்னிலையிற் பொன்மயமாய் ரத்தினகாந்திகளைவீசி ஒப்பனையற்றிரான்ற இந்திரஞாலத்தேரிலாரோகணித்துப்பரமசிவந்தனக்கனுக்கிரகஞ்செய்தஆயிரத்தெட்டண்டங்களினுந் தினந்தோறும்போய் நிமைப்போதில்முற்றமுலவி அவ்விடங்களிற்காவல்கொண்டிருக்குந் தன்படைவீரருக்குத்திட்டவட்டங்களைக்கட்டளையிட்டு எங்குந்தன்னுக்கிணைசெல்ல அரசுசெய்பவன் ஒருதினம்பாதலங்களினுலவி விசாரித்துமொருதினந் திசைகளைச்சுற்றிப்பார்த்தும் ஒருதினம் வானநாடுகள்தோறுஞ்சென்றும் ஒருதினம் பிரமனுலகிற்போய்ப் பாட்டனைக்கண்டுவார்த்தையாடியும் ஒருதினங்குளிர்ந்து பரிமளமிகுத்துத் தழைத்து சிறந்திருக்குந் திருத்துழாய்மாலைமார்பனைவிஷ்ணுலோகத்தைக்கண்டும் யிவ்விதமாக அளவற்ற உலகங்கள்தோறுந்

தினமுமுலவி விசாரித்தும் மாலைப்போது நேருவதன்முன்னந் தன்பதியைச்சேர்ந்து சகலசெல்வங்களையும் அனுபவித்தும் பலகன்னியர் யின்பநலங்களைப்பெற்றுக் களித்தும் யிருக்கின்றதருவாயில் ஒருதினம் மேல்வருங்கெடுதியை யோசியாமற் காமாந்தகாரனாய்த் தேவராசனாகிய இந்திரனைப்பிடித்துச் சிறைசெய்யவும் அவன்பத்தினியாகிய கற்புவாய்ந்த இந்திராணியைத்தருவித்து அவளின்பநலங்களையனுபவித்துக்களிக்கவும் யித்தகைய கெடுநினைவுகொண்டு தன்படைத்தலைவர்களி லொருவனையழைத்து யிந்த நிமிஷத்திற் சேனைகளுடன்போய்ப்பொன்னுலகிலிருக்கின்றதேவேந்திரனைக் கைப்பிடியாகப்பற்றிவந்து நமதுமுன்விடக்கடவாயெனக் கட்டளையிட்டுமுந்தியனுப்பி வாள் கேடயம் வேலாதியபடைகளைக் கரங்களிற் பற்றித் தன்னரமனை அந்தப்புரங்கள் யிவ்விடங்களிற்காவல்கொண்டுபாதகங்களுருப்பெற்றதையொத்துக்கறுத்துபாரித்த திரேகத்தைப்பெற்றுக் கொடியமனதையுடையவராய்ப் பாடகங்கள் பாதங்களிற்பிறகாசிக்கப் பலபூண்களையணிந்து பாதகராகிய ராட்சதகுலத்திலுதித்து வீரத்தன்மைபெற்ற ஒன்பது கோடிபெண்சேனைகளைத்தருவித்து நீங்கள் அதிசீக்கிரமத்திற்றேவலோகத்தைச்சேர்ந்து இந்திரன்மனதுக்கினிய சுந்தரமுள்ள இந்திராணியைப்பிடித்துவந்து தாக்கடவீரென நிற்தாட்சண்ணியமாகிய வுத்திரவைத்தர அவர்களவ்வணங்கி விடைபெற்று வடவையைப்போலச் சோதிக்கும் மனதையுடையவராய் உருத்துவேகங்கொண்டு வானநாட்டைநோக்கிவருவதைத் தேவதூதர்கண்டுதிடுக்கிட்டு வாயுவேகத்தினுமேலிட்டோடித் தமதரசனைக்கண்டு சேவித்து ஐயனே சூரபன்மன் சயின்னியங்களிற் பலராட்சதவீரருஞ் செயசாலிகளாகிய திரண்டபெண்படைகளுஞ் சற்வாயுதபாணிகளாய்ச் சண்டைக் காயுத்தப்பட்டவரைப்போன்று ஆர்ப்பரித்து யிதோவந்துவிட்டார்கள் அவர்கருத்தின்னதெனத்தெரியவில்லை யிச்செதியைச் சித்தமறிகவென்று விண்ணப்பஞ்செய்து கரங்களைக்கூப்பி. நிற்கின்றவனை யனுப்பிவிட்டுக் கொடியமனதைப்பெற்ற பகைவர்நினைவை நிதானித்தறிந்தவனாய் விரைவில் அந்தப்புரத்தைச்சேர்ந்து திருத்தேவிக்கிதனைத்தெருட்டி அவளுந்தானுமாகக் குயிலினுருப்பெற்று மாயமாகத்தன்னகரைக்கடந்து யிப்பூமியைச்சேர்ந்தான் அத்தருவாயிற் சூரனேவிய ராட்சதப்படைகளும் பெண்சேனைகளுமாகஇந்திரன்பதியைச்சேர்ந்து அரமனைமுதலியயிடங்களில் தேவேந்திரனையும் இந்திராணியையுந் தேடிக்காணாதவர்களாய் மனவலியற்றுக் கவலையுற்றுச் சகலருமோரிடத்திற்கூடி அரசன் நம்மையொரு காரியக்காறராக நிதானித்து அனுப்பிய பணிவிடையைமுடிக்க வகையற்றோம் இந்திராணியுடன் தேவராசன் யிவ்விடத்தை நீங்கிப் போய்விட்டதாகக் காணுகின்றது ஆகிலும் மற்றொருவிசை சுத்திபா

த்து மூலைமுடுக்குகள் முதலிய தலங்கள்தோறும் ஆராய்ந்து பார்ப்போமெனநிச்சயித்துப் பட்டினமெங்குங் கவனிப்பாக நாடிக்காணாமையால் தேவர்க்களைப்பற்றி வரைகள்சிறகினையரிந்தஉமதிறைவனைக்காட்டுமெனப் பல்லுதிர அடிப்பார்கள்இந்திராணி எவ்விடத்திருக்கின்றாள் சொல்லுமென்று முதுகெலும்பொடிந்து வாய்வழியாக உதிரத்தினைக் கக்கக்குத்துவார்கள் அண்ணாந்தாள் கிட்டியாதியதுகளினால் வாட்டுவார்கள் யிவ்விதமாகத் தாமரைத்தடாகத்தில் மதயானைகள்விழுந்து கலக்கினாற்போல அலைக்கும்போது அவ்வுபத்திரவத்தினைத் தேவர் சகிக்கமாட்டாதவராய் ராட்சதவீரர்களே தேவேந்திரன்தேவியுடன் யிருக்குமிடம்யெங்களுக்கு யெவ்வளவுந்தெரியாது நருக்கிப்பிழிவீராயினும் உங்களுக்கு வேண்டும்பிரயோசனங்கிடையாது மிகவும்வருந்துகின்றோந் தீனராகிய எங்களிடத்துக் கிருபையுற்று மன்னிக்கக்கடவீரென்று அவர்களிரங்கும்படிக்குப் பலவாகமுறையிடுவதை ராட்சதரும் பெண்படைகளுங்கேட்டுப் பரிவாய்அவர்களைவிட்டுத் தேவலோகத்தினைக்கடந்து சமுத்திரமத்தியிலிருக்கும் வீரமாமயேந்திரபுரியைச்சேர்ந்து சபாமண்டபத்தில் வீற்றிருந் தரசுசெலுத்தும் ராசராசனைக்கண்டு சேவித்துமனக்கவலையுடன் தாங்கள் பொன்னுலகத்துக்குப் போனதையுந் தேவராசனையும் புலோமிசையையுந் தேடிக்காணமல் வந்ததையும் விபரமாகச்சொல்லக்கேட்டவுடன் சூரபன்மன் வடவையைப்போற் சீறித் தேடற்கரிய சிரோரத்தினத்தையிழந்த சர்ப்பத்தினைநிகர்த்து மனம்வருந்தித்திகைத்துத் தேறினவனாய்ச் சமர்த்தராகிய பலகோடி தூதரைக்கூவி நீங்கள் அதிவேகமாகப்போய் விண்மண்பாதலமிடங்களெங்குங் கிரமமாக ஆராய்ந்து தேவேந்திரன் இந்திராணியிருக்குமிடத்தைத்தெரிந்து சீக்கிரமத்தில்வந்து நமக்குத் தெரிவிப்பீரெனக்கட்டளையிட்டமாத்திரத்தில் வெற்றிமாலையணிந்த சூரனைவணங்கிப்போய்ப்பலதிசையிலும் பரந்து உலகங்களெங்குந்தேடுவதாயினர் யிது நிற்கப் பொன்னகரம்பட்ட துன்பத்தினையும் மற்றசேதிகளையும்யினிச்சொல்லுவோம் மேகவாகனனாகிய தேவேந்திரனும் இந்திராணியும் நீங்கியவுடன் பொன்னகரமானது சோடசகலைகளையுடையசந்திரனும் நட்சத்திரராசிகளுமில்லாமல் யிருள்மூடியவானம்போலப் பொலிவழிந்து சிறப்புகளற்று லட்சுமிவிலாசம்மழுங்கிச் சகலவளங்களுங்குன்றி வாழுவோர்செருக்குகளடங்கித் துயரமேலிட அப்புரியெங்கும் அழுங்குரல்மேலிட்டுயாவத்திராள் விழிகளினுஞ் சலத்தாரைபொழிய யெங்கும் புகழத்தக்க சொற்கலோகம் பிராணனையிழந்த பிரேதம்போன்று விளங்கியது இச்சம்பவம் நேருகின்றதற்குமுன்னம் இந்திரனுக்குத் துணைவனாகவிருந்த உபேந்திரனானவன் வானநாட்டைநீங்கித் தன்பதியாகிய வைகுந்தத்தினைச்சேர்ந்து அவ்வி

டத்திற்சீதேவி பூதேவிகளிக்கவீற்றிருந்தார் அதெப்படிக் கிருந்ததென்னிற் பூர்வத்தில் ரிஷிகள் கலிவருவதையறிந்து லோகநாயகியாகிய பார்பதியார் முப்பத்திரண்டு அறங்களைவளர்த்துத் தவத்தினைச் செய்திருந்த பெருமையினையுடைய திருக்காஞ்சிநகரையடைந்து மனவெழுச்சிபெறக் களித்திருந்ததைப்போலத் தோற்றியது அக்காலத்திற் றேவராசபுத்திரனைப் கற்கம்புத்தினையொத்த சுந்தரமுள்ள புயங்களைப்பெற்ற சயந்தனானவன் சிறிய தந்தையைக்கண்டுவர நினைவுகொண்டவனாய் வைகுந்தத்திற்குப் போய்ச்சிலபகல் அன்னையர்போஷிக்கச்சகலசம்பத்துகளையும் அநுபவித்திருக்கின்றதறுவாயிற்சிலதேவதூதரோடிவந்துவணங்கிராட்சதர்உபாதிக்கஞ்சித் தாய்தந்தையரோடியொளித்ததையும் அத்தருணத்தில் அவுணப்படைகள் பொன்னுலகைமுத்திக்கைபோட்டுக்கொண்டு ஆராய்ந்து அவர்களைக்காணாதவர்களாய்த் தேவரை அலைத்துத் திரும்பியதையும் அதனால்விண்ணுலகம்மாறுபட்டுத்தேவர்பங்கப்பட்டொடுங்கியதையும்விண்ணப்பஞ்செய்யக்கேட்டு வருந்தினவனாய்ப் பிதாவுக்கு யாதொருமெலிவு நேருமாயின் அக்குடித்தலைமையைப் புத்திரனாயிருப்பவன் யேத்துக்கொண்டு சுற்றமுதலியனைப்பாதுகாப்பது முறைமையாகுந் தர்மசாஸ்திரங்களிலும் அப்படிக்கேசொல்லுகின்றது மேலும் என்பிதாவுமில்லாமற் பட்டணம்வாடியிருப்பதைத்தெரிந்துந் தாமசப்படலாகாது சீக்கிரமாகப்போய் நமதுபதியினைத் துயரகற்றிப்புரப்பதுகடனென்று ஆலோசித்து உபேந்திரனாகிய சிறியதகப்பனுக்கு யிச்சேதிகளைத்தெருட்டிச் சிலவுபெற்றவனாய்ப் பொன்னகரையடைந்துவாடி வருந்திக்கிலேசிக்கின்ற தேவரைக்கண்டு யிரக்கமுற்று தன்பிராணனையொத்த தாய்தந்தையரைப்பார்க்கப்பெறாமையால் துக்கசாகரத்திலழுந்தியேக்கமுற்று மனந்தெளிவுபெறாமலும் யாதொருசெய்கையையும் நினையாமலும் பித்தனைப்போலச் சோபித்திருப்பதைத்தவச்சிரேஷ்டராகிய நாரதர்தெரிந்து தேவராசபுத்திரன் மனக்கவலையைநீக்கவெண்ணினவராய் அப்பதியில்வருவதைச் சயந்தன்கண்டவுடன் நடுக்குற்று பத்திவினயத்துடன் எதிர்கொண்டு சேவித்து நவரத்தினமயமாகியபீடத்திலெழுந்தருளச்செய்துகரங்களைக்கூப்பிப்பக்கத்தில்நின்று சுவாமி தயைதாட்சண்ணியமற்றுத் தினந்தோறுந் தகாதயேவல்களைக்கொண்டிருந்த சூரபன்மன் புதிதாயேதோவொன்றை முடிக்க நினைந்த காரணத்தையறிநது பயந்து அடியேனையரிதிற்பெற்றுச்சீராட்டிவளர்த்த தாய்தந்தையர் என்னையும்மறந்து யிப்பதியையும் வெறுத்துப்போயினர் சென்றவிடமுந் தெரியவில்லை ஓ கர்த்தனே தீங்குகள் நீங்கி யாங்கள் தாபரித்திருக்குங்காலமுமுண்டோ தயைசெய்துசொல்லவேண்டுமென்று மனச்செருக்கற்றவனுமிஞ் சயந்தன்போற்ற நாரதர்யோதவுணர்விலுளாரா

யீந்தறிந்து அக்குமாரன் மீது கிருபாநோக்கம்பாலித்து அருகிலிருக்கின்ற நவரத்தினமயமாகிய சிறந்த சிங்காதனத்திலிருக்கக்கட்டளையிட்டு ஐயனே தீங்குகள் சம்பவிப்பதும் நன்மைகளைப்பெறுவதுந் தாங்கள்செய்த பூர்வகர்மவசத்தினால் தத்தமக்கடுப்பதல்லது ஒருவர்முயற்சியினால்வருவதன்று அதற்குச் சிலதிஷ்டாந்தரஞ்சொல்லக்கேட்பாயாக அமுதத்துக்கும் விஷத்துக்குஞ்சுவைப்பேதங்களைக்கூட்டினவருமுண்டோ அதுவியற்கையாகவே தோன்றும் அவ்வாறே முற்றுமுணர்ந்த மேலையோர் பரமசிவகடாட்சத்தினால் யின்பம்வந்தடர்ந்தத்தறுவாயிற் களித்திறுமாந்திராமலுந் துன்பம்விளைந்தகாலத்தில்திடுக்கிட்டுவாடி வருந்தாமலும் யிவ்விரண்டும் பிராரத்தசம்மந்தமெனக்கருதிச் சமமாகவேபாவித்தனுபவிப்பார்கள் யிவையன்றியும் மிகுந்த தரித்திரராயிருப்பவர் அகண்டசாம்பிராச்சியத்தினைப்பெறுவதுஞ் சகலசெல்வங்களையும் அனுபவித்திருந்த பாக்கியவான்கள் சிலதினத்தில்வறுமையுற்று வாடுவதுமுண்டு சிறியர் பலரும்புகழமேன்மையை யடைவதுஞ் சிறந்தகல்விமுதலியதை யொருங்கெய்தப்பெற்ற மேலையோர் தீனராவதுமுண்டு யிவ்விதங்களாக மாறிமாறிவருவது ஊழ்வினைத்தொடக்காகும் யிவை உங்களுக்குமாத்திரமல்ல சூரியனொளிபரவியிருக்கும் உலகங்களெங்குஞ் சாதாரணமாகவேநடந்துவருஞ் செல்வமும் வறுமையும் யின்பமுந்துன்பமும் பிராணிகளுக்கு நிலைபட்டதென்றெண்ணப்படுவதோ சோடச அமுதகிரணங்களைப் பரப்பி வானத்திற்சென்று உலகைவிளக்குஞ் சந்திரன் பூர்வபட்சத்தில் விர்த்தியாகியும் அமரபட்சத்திற்றேய்ந்தும் நாளாதிகளிற் பேதப்பட்டுவருவதைக்கண்டதில்லையோ ஆதலால் ராசகுமாரனே உங்கள் தாழ்வும் அவுணர் வாழ்வும் பிசகின்றி நிற்கவறியாது உண்மைக்கெக்காலத்துமழிவில்லை பொய் ஸ்தாபிதமாகநிற்பதுமில்லை யிதினால் நிதானித்துக்கொள்ளக்கடவை ஐயனே யிந்நகரைநீங்கிப்போகிய உன் தாய்தந்தையருஞ் சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலத்திற் சிரேஷ்டமாகிய தலத்தைச்சேர்ந்து சுகமாயிருக்கின்றனர் இந்திரகுமாரனே நீ பிறப்பதற்குமுன்னந் தேவர்க்களையலைத்திருந்த கெசமுகனென்னும் ராட்சதராசன் மாளும்படிக்கு உன்பிதாவானவன் பரமசிவத்தினைவழிபட்டு அவனுபத்திரத்தை நீங்கினான் அதைப்போலவே பாதகனாகிய சூரபன்மன்முடிவெய்தத் தவங்களைச்செய்துபெறுவேனெனப் பலதிஷ்டாந்திரங்களைச் சொல்லிக்காட்டி யினி சீக்கிரமத்திற் கொடிய சூரன்கிளைகளுடன் மாண்டுபோவன் உங்களுக்கடுத்திருக்குந் துன்பமுஞ் சடுதியில் நிவாரணமாகும் யிதனை உறுதியாகக்கொள்ளக் கடவையென்று சயந்தனைத்தேற்றி நாரதர்போயினர் பின்பு இந்திரதனையன் மனத்தெளிவுபெற்றுதயிரியங்கொண்டுபொன்னுலகில் வருந்திவாடின்றதேவர்களைக்

கு நாரதர் போதித்த வுண்மைகளைத்தெரிவித்து மனக்கிலேசங்களைநீக்கி
சத்துருவாகிய சூரன்பணிவிடைகளிற் குறைவில்லாமல் நடத்திவந்தங்க
தாகக் காலங்கள்தோறும் விண்ணவரையனுப்பித் தானுங்களித்திருந்தான்
இவை நிற்க முன்னம் பூமியிற்போன தேவேந்திரன் செய்கைகளையி
னி விரிப்போங் கேட்பீராக பஞ்சதருக்கள் சுகந்தபரிமளங்களை வீசிப்
பரப்பிய குளிர்ந்தநிழலில்வாசமாய் மகிழ்ந்திருந்த மகதயிஸ்வரியத்தினை
வெறுத்துப் புனிதனுயச் சுந்தரவதியாகிய தேவியுடன் பூலோகத்திற் சிறந்
த தென்பிறதேசத்திற்போய்ப் பன்னிரு திருநாமங்களைப்பெற்ற தெய்வீ
கத்தலமாகிய சீகாழியைச்சேர்ந்து அதன்பெருமைகளைக்கண்டு யித்தலம்
வாசயோக்கியமாகுமென்றெண்ணித் தேவாசன் இந்திராணியுடன் மன
ம்வருந்தி துக்கசாகரத்திற்பட்டுக் கிலேசித்திருக்கின்றதறுவாயில் லோக
நாயகனுகியபரமசிவனைப் பத்திவினையங்களுடன் அருச்சனைவிதிகளைச்செய்
துபோற்றித் தன்மனவாட்டத்தினைப்போக்கவெண்ணி அவ்வாலயத்தருக
ருகில் நந்தவனமுண்டாக்கவுத்தேசித்துச் சந்தனம் அகில் பலா தித்திப்பு
மா ஆச்சா மஞ்சாடிதேக்கு தழைத்திருக்கும் அசோகு புன்முருங்கை
குரா தெங்கு யிலைவிரிந்திருக்கும்வாழை கரும்பு வன்னி காஞ்சி வேம்பை
யிவைமுதலிய தருக்களினுல் விஸ்தீரணமாய்வேலிகோலி அதன்மத்தியிற் சி
றுசண்பகங் கோங்கு புன்னை சண்பகங் கொன்றை குங்குமம் பாதிரி சுர
புன்னை பாரிசாதஞ் செருந்தி நாரத்தை வில்வம் அலரி வெட்சி இருவாட்
சி வனமல்லிகை மருக்கொழுந்து செவ்வந்திமுல்லை இவைமுதலாகிய
திவ்விய மலர்களை யுதவுந்தருக்களையும் புதர்களையும் யோக்கியமாகத்
தருவித்துக் குளிர்ந்த நந்தவனமாக்கிப் பருவக்குவப்படுத்திக் காலங்
களிற்சலம்விட்டுப்போற்றிவரச் சிலதினத்தில் அவைதழைத்து விர்த்தியாய்
அரும்பெடுத்துச் சுகந்தமலர்களை அபரிமிதமாகப் பூத்ததை இந்திரன்
கண்டுகளித்துத் தினமும் பிருதகாலையில் ஸ்நானஞ்செய்து நித்தியகரும
ங்களைமுடித்தபின்பு புழுக்கடியாகிய குற்றங்களில்லனவாய் வண்டுகளூ
தாதனவாய் நன்றாக மலர்ந்திருப்பதைத் தேடிப்பறித்துக்குடலைகளிற்
சேர்த்துக்கொண்டு ஆலயத்திற்போய் மாலைகள்விதங்களைத்தொடுத்துப்
பரமேஸ்பரனைத்திரிகாலங்களினும் ஆகமவிதிப்படிக்கு அருச்சனை முத
லிய சோடச உபசாரங்களைச்செய்துபணிந்துபோற்றித் தன்குறைகளைவி
ண்ணப்பஞ்செய்து யிவ்விதமாகத் தினந்தோறும் வழிபட்டு தேவேந்திர
ன் தன்பத்தினியுடன் அத்தலத்திலிருக்கின்றதறுவாயில் உலகங்களிலிருக்
கின்ற அவுணருக்கரசனுய் ஆயிரத்தெட்டண்டங்களினுஞ் செங்கோல்
செலுத்திச் சிறந்ததேவரைவாட்டி ஏவல்கொண்டிருக்கின்ற சூரனுனவன்
முன்னம்விடுத்த கோடாகோடி தூதர்கள் பூலோகமெங்கும் பலவித்தே

உ௰அ இந்திரன்கரந்துறைபடலம்.

வேதை இந்திரனறிந்து திடுக்கிட்டுத் துரிதமாய்த் தேவியுடன் மூங்கில் வடிவுகொண்டு பூங்காவன வேலியில் மறைந்திருந்து மனவருத்தத்துடன் தினந்தோறுஞ் சிவபிரானைக் கிரமப்படிக்குப்பூசித்து அரியதவவிரதங்களைச்செய்துவருகையில் முற்குறித்த சாரணர் திரிலோகங்களினுந்துருவித்தேடி இந்திரனைக்காணமல் திரும்பிவிட்டார்கள் காளமேகம்போன்ற ராட்சதவீரர் ஆணை ஆக்கினைபிசகின்றி எங்கும் நடப்பதென்பதற்கையமிலாததைக் காட்டுமாறுபோல மழைப்பசுமை நீங்கியதால் அப்பூங்காவானது நெருப்புப்பட்டு வெந்ததையொத்துச் சூரியவெப்பம்பரவிவாடிச் சரகாய் மங்கிப்போவதைத் தேவேந்திரன் தெரிந்துவருந்தி வேறொருசெயலில்லாததாற் பிரமனும் விஷ்ணுவுந் தேடுதற்கரிய பரமசிவனைநினைந்து முறையிட்டுப்போற்றுமுன்னிலையில் நந்தவனம்வாட்டமுறினுந்திரிபுரதகனராகிய பரமன் அனுக்கிரகப்படிக்கு நசிந்துப்போகாமற்பிழைத்திருந்ததுமன்றியிற் றேவராசனே யிக்காவின்மத்தியில் ஒருநதிபெருகவிருக்கின்றது அதினால் இவ்வனம் மிகவுஞ்செழித்து உன் பூசனைக்குத் தாழ்வில்லாமற் புஷ்பங்களைத் தருமென்றொருவாக்கிடம் வானத்திலுண்டாகியதை இந்திரன்கேட்டமாத்திரத்தில் இஃது சிவகடாட்சத்தினுலுண்டாயதென நிச்சயித்து அத்திசையைநோக்கிப் பலதிரந்தொழுதுவாழ்த்திச் சரீரம்பூரித்து மயிர்புளகிக்க மகிழ்ந்து தயிரியத்துடன் அவ்விடத்திற் பழையபடிக்கு நோற்றிருந்தான் சவுனகாதிரிஷிகளே யினி தெய்வீகம்பொருந்திய நதி அதன் கண்பெருகிய சரித்திரத்தைக்கேட்பீரெனச் சூதபுராணிகர்சொல்லத்துடங்கினர்

விந்தகிரிப்படலம்.

அத்தலவூரில் மெய்ப்பத்தியையுடைய மகத்துக்களுக்கெளிதாகிய காட்சிதந்தருளுங் கிருபாநிதியாகிய பரமேஸ்வரகடாட்சத்தினால்திரிகாலங்களையும் பகுத்தறியும் பேரறிவினைப்பெற்ற நாரதமுனிவன் விந்தகிரியினருகில்வந்து பற்பல ஆசிகளைச்சொல்லக்கேட்டவுடன் தெய்வப்படிவமாகவிருக்குமக்கிரியானது களித்துச்சேவித்துத் தேவரீர் யிவ்விடத்தெழுந்தருளியது அற்புதக்காட்சியாகுஞ் சுவாமி வந்தகாரியமென்னென்றபோற்றுமந்தலவாயில்வளைகளிற்சிறந்தவிந்தமேருஅதிசெயித்தினைக்கேழ்ப்பாயசமகம்மேருவான குபிரமன் தேடிக்காணரிய சிவனுதன் தன்

னை தனுசாகத்தாங்கியபெருமையினையெண்ணியுஞ் சகலபுவனசராசரங்களை
யும்பெற்ற பரமேஸ்பரி தன்மராயில் விளங்கும் இமவந்தனுக்குப்புத்தி
ரியாகத்தோற்றியகாரணத்தைநினைந்தும் பற்வதங்களனைத்துக்குமரசனு
கச்சொல்லும் வெற்றியைக்கருதியும் அண்டகோளகையைமுட்ட வானத்தி
லோங்கிநிற்குந் தருக்கைமதித்தும் நித்தியத்தினைப்பெற்றபரமன்சமஸ்த
த்தினையுஞ் சற்வசங்காரகாலத்தில் நாசஞ்செய்கின்றபரியந்தம் யிப்பூமி
யை யசையவொட்டாமற் றாங்கும் வலியைமதித்தும் ஆயிரம் பொற்சிக
ரங்களைக்கொண்டிருக்கும் பெருமையை நினைந்துங் காளகண்டமூற்றியெ
ழுந்தருளுந் திருக்கயிலாயத்துக்கருகிலிருக்கும் பெருமையினைமதித்தும்
பிறசண்டவாயுவின்மோதலினாற் சலனப்படாமல் உறுதிபெற்றிருப்பதினா
லும் ஆயிரங்கிரணங்களைவிரித்துப் பகலைவிளக்குஞ் சூரியனும் குளிர்ந்த
சோடசகலைகளைப்பரப்பி யிரவைத்துலக்குஞ் சந்திரனாகிய நவக்கிறகங்க
ளுஞ் சத்தரிஷிகளும் மற்ற நட்சத்திரங்கள்முதலாகத் தினந்தோறுந்த
ன்னைத் தொண்டுதொட்டு வலம்வர நிற்பதினாலுந் தேவர்களுந் தன்னிட
த்தில் வாசஞ்செய்வதினாலுஞ் சொர்ணமயமாகிய பலசிகரங்களைப் பெற்
றிருப்பதினாலுங் குலகிரிகள் சூழநிற்கின்ற தோற்றத்தினாலுந்தனக்கொரு
வரும் நிகரில்லையென்று மேருவானது தன்னையே முக்கியமாகவெண்ணி
யிறுமாந்திருக்குங்காரணத்தை அதற்குமேம்பட்ட சிறப்பையுடையவிந்
தகிரியே நீ மதித்துப்பார்த்ததில்லையோ இவ்வனியாயத்தினை யுனக்குத்
தெரிவிக்கத்தான் யிவ்விடம்வந்தோமென்று நாரதர்சொன்னவிசேஷத்தி
னைக்கேட்டமாத்திரத்திற் பொன்மயமாய்த் தெய்வப்படிவத்தினைப்பெற்
று நிற்கின்ற விந்தகிரியானது மனம்பொறாமல் வெம்பிப் பெருமூச்செ
றிந்து தேவரீர்குறித்தகாரணங்கள் வெகு நேத்தியெனநகைத்திகழ்ந்து த
போநிதியே கேழ்ப்பீராக மேற்குறித்ததனைத்தினையும் நித்தியமாகவெண்
ணிநின்ற வீறுப்படங்கவும் பலருஞ் சுலபமாகநினைந்து நிந்திக்க நாணியி
னாற்கட்டுண்டு பரமன்கரத்திலடங்கி வில்லாகவளைந்து நாணப்படுவதுமே
ம்பாடென்றெண்ணப்படுவதோ சொர்ணமயமாகிய இமையவனை வெகு
காலம் தோற்றதவமுயற்சியினாற் பார்பதியார் அபிமானபுத்திரியாகத்தோ
ற்றினள் அக்காரணத்தினாற் பற்வதராசனெனச் சொல்வதல்லது வேறுமு
ண்டோ அப்பட்டத்தினை யார்கட்டினர்சராசரப்பிறபஞ்சங்களை யிடைவி
டாமற்படைத்தாட்டிவைக்கும் பெருமையினையுடைய பராசக்தி அவன்
பெண்ணாகிவிட்டனளோ பாந்தபூமியைத் தாங்குகின்றனனென்றியம்பி
னீரேல் யிவனைப்போலவே பலகிரிகள் புவனங்களைச் சுமந்திருக்கின்றது
யிவையன்றித் திரிநேத்திரதாரியினிட சத்தியின்முயற்சியினாற் பரிப்பு
தல்லதுவேறுமுண்டோ கிரணசமோசங்களைப்படைத்த சூரியனாகிய நவ

சிகரங்களைமுதலானவர் தன்னைமாத்திரமோ வலம்வருவர் என்னையுஞ்
சூழ்ந்துபோவதில்லையோ யிதன்றியுஞ் சத்ததீவுகளில் நிற்கின்ற பர்வத
ங்களைவலம்வரவில்லையோ கடல்களைச்சுற்றிப்போவது பொய்மையோ பல
சிகரங்களைப்பெற்றிருப்பதாகச் சொல்லுவானாயிற் கள்ளிக்கும் அளவற்
றதலைகளுண்டு யிதனாற்சிறப்பென்னை நான்கு சிரங்களையுடைய பிரமதே
வனுக்குத்தான் நேராகப்பேசப்படுவதோ பூர்வத்திற் சிலகாரணத்தினால்
வாயுதேவன்மோதியபோது தேவர்போற்றவிரங்கியபடியால் அச்சிகரங்க
ள் நிலைபெற்றிருந்ததல்லது ஒன்றேனும் படைக்கப்பெறுவனோ யிதை
மேருமறந்தனனோ யிவையன்றியுஞ் சக்கிரதரனாகிய விஷ்ணுவுக்குமேலா
னவல்லமைபெற்றானோ குளிர்ந்தபிரகாசத்தினைத்தரும் ஆயிரத்தெட்டுமா
த்தையுடைய தங்கப்படிவத்தினையுடையவனென நினைப்பானாயில் நல்லு
ணர்வில்லவனாகும் அதேதென்றால் மண்ணினாற்செய்த பாவையைச்சொ
ர்ணப்பணிகளினால் அலங்கரித்தால் அதுவும் பொன்மயமாகவேதோற்று
ம் யிதுவல்லாமற் றன்னிடத்திற் சகலதேவர்களும் வாசஞ்செய்வதென்று
மதித்தால் அவர்கள் என்னிடத்திலும்பொருந்தாமல் யிகழ்ந்தார்களோ
வெள்ளியங்கிரிக்கருகில் மேருநிற்பதானால் திரிநேத்திரதாரியாகிய சுத்த
ன் வீற்றிருக்கப்பெற்ற அவ்வரையினைச்சேர்ந்திராத பர்வதங்களுமுண்
டோ லட்சுமிவிலாசனாகிய விஷ்ணுவானவர்பள்ளிகொள்ளும் ஆதிசேஷன்
தன்படத்தினால்மூடியபோது கோபித்து மோதியவாயுதேவன் தன்சிகரங்
களில் மூன்றைப்பறித்துக்கடலிற்போட யிக்காலத்தினுங் குறைபட்டுநிற்
கும் வெட்கத்தைமறந்தானோ விஷ்ணுவானவர் நாரசிங்கமாகத்தோற்
றியகாலத்தில் வெறிகொண்டுஉலகையலைக்கப் பரமன்யிரங்கி அண்டங்க
ளைமூடும்வடிவுடன் சரபப்பட்சியாகிப்பறந்துமூளையைக்கொத்தி அதின்
கெர்வபரிகாரஞ்செய்து ரட்சித்ததறுவாயில் அப்பட்சியின்காலினாற் றன்
னைப்பருக்காங்கல்லைப்போலவாரியெறிந்ததையும் அதன்சிறகடிக்காற்றினா
ல் மின்மினியையொத்து அங்குமிங்குமுழன்றதையும் மறந்தானோ ஆதி
யில் விநாயகமூர்த்தியானவர் கெசமுகாசூரன்மீதுமுறித்தெறிந்துகொன்ற
தமது கோட்டினாற் பஞ்சமவேதமெனச்சொல்லும்பாரதசரித்திரத்தினைத்
தன்மீதிலெழுதஉடல முற்றினும் பொற்றப்பட்டதென்னபொய்யோமே
லும் இவ்வண்டத்தில் நிற்கின்ற வரைகளைப்போலத் தானும் ஒன்றல்லது
லோகநாயகனாகிய பரமசிவமோ சாமளவண்ணனாகியவிஷ்ணுவோ திரி
லோகசக்கிரேஸ்வரனாகிய தேவேந்திரனோ என்னகாரணத்தினாற்றன்னைமே
லாக நினைப்பதென்று யிவ்விதங்களாகவடமேருவையிகழ்ந்து விந்தபர்
வதம்பேசியதை நாரதர்கேட்டு நீ சொல்லியது உண்மையாகும் ஆதலா
ற் றுரிதமாய் அக்கிரியினது கெர்வத்தையடக்கநினைப்பாயெனத் தூண்டி

யவுடன் அவரெதிரில்நின்ற உருவைமாற்றிப் பலரும் துதிக்கும்படியத்தி பெற்றகோடிவிஷ்ணுக்கள் திரண்டுமாய வுருப்பெற்றெழுந்ததைப்போல முன்னம் வானத்தையளாவிநின்ற விந்தகிரியானது ஒரு மந்திரத்தையுச்சரித்து அண்டகோளகையையளாவித்தாமரைக்கமலவாசியாகிய பிரமனுலகவரையினும் உயர்ந்து மேருவைநெருங்கப்பரந்து நின்றது எப்படிச்சிருந்ததென்றால் உலகையளந்த மகாவிஷ்ணு பீதாம்பரத்தினைப்போர்த்தோங்கிய காட்சியாகவிளங்கியது இவ்விதமாக விந்தகிரியானது பாதலமுதல் அண்டவரையில் நிமிர்ந்து திசைகளைமூடி வெள்ளிடையில்லாமல் அடர்ந்த காரணத்தினால் வானவழியடைபட்டுச் சூரியன் சந்திரன் சனி ராகு கேது சுக்கிரன் பிரகஸ்பதிமுதலிய கிரகங்கள் தங்கள்கெதிகளிற் சஞ்சரிக்கப்படாமையால் மனம்நடுக்குற்று யிஃது பாதகராகிய தானவர் செய்கையோவென்றுந் தருமத்தினைச்சற்றும் நினையாத அரக்கருடையதோவென்றும் அல்லது பிரமன் விஷ்ணுவினுலுண்டாயதோவென்றும் யோசிக்குமிடத்தில் மாயமாகவிருப்பதென்றும் எங்கும் மூடியபர்வதத்தின்தோற்றமல்லது வெள்ளிடைகாணப்படவில்லையென்றும் யிவ்வாறுபலபலவிதங்களாகமயங்கிக் கடையிற் சிவபிரானருளின்படிக்குப் போதவுணர்வினாராய்ந்துபார்க்குமுன்னிலையில் விந்தகிரியானது மகம்மேருவுடன் பகைத்து விண்மண்திசையெங்கும் மூடி வளர்ந்திருக்கின்றதெனத்தெளிந்து யினி யென்னசெய்வதெனக்கருதிப்பொன்வரைச் சாரலிற் சிவனதனைநினைத்து தவஞ்செய்திருக்கின்ற கடலையுண்ட அகஸ்தியமுனிவர் யிவ்விடமெழுந்தருளப்பெறின் அண்டமெங்கும் நிறைந்திருக்கின்ற விந்தகிரி ஒடுங்கி நமது தொழில்களுக்குவிரோதமில்லாமல் முடியுமென நிச்சயித்தவர்களாய் அத்திசையைநோக்கிச் சகலரும் யிதனை முறையிடத்துடங்கினர்.

அகத்தியப்படலம்.

ஓ தபோநிதியே பூர்வத்தில் கஜேந்திரனென்னுங் களிறானது தன் பவத்தைப்போக்கநினைந்து ஆகமவிதிப்படிக்கு விஷ்ணுவை யருச்சிக்கும்பொருட்டுச் செந்தாமரைமுதலிய புஷ்பங்களைப்பறிக்கத் தடாகத்திலிறங்குமுன்னிலையில் அதிலிருந்தமுதலை காலைப்பற்றிவலிக்கப் பலகாலம் அத்துடன்வாதுகொடுத்திளைத்தவேறுகெதிகாணாமல் ஆதிமூலமே யித்தருணத்திற் காத்துரட்சிக்கக்கடவையென முறையிட்டதுவாயிற் கே

வன் பீதாம்பரம் நிலத்திற்புரளவோடிவந்து சக்கரத்தைச்செலுத்திக் கரா
வைக்கொன்று யானையைக்காத்த சரித்திரந் தேவரீருக்குத் தெரியாததல்ல
வே தாமரைக்கமலவாசியாகிய பிரமன் தான்படைத்த திலோத்தமை வன
ப்பையிச்சித்துத்துரத்த அவள்பெண்கிளியாய்ப்பறக்கத் தானும் ஆண்கிளி
யுருக்கொண்டு தொடருமுன்னிலையில் திலோத்தமைதிகைத்துப் பரம்பொ
ருளே தேவாதிதேவனே காத்து ரட்சியும்ரட்சியுமெனப்போற்ற பயங்
கொள்ளவேண்டாமென்றுதரித்துப் பரமசிவமெழுந்தருளி ஆண்ட சேதி
உமக்குத்தோற்றுதோ பிரமநிலையைத்தெளிந்த பிருகுரிஷிபத்தினியை
விஷ்ணுசக்கரத்தைவிட்டுக்கொன்றகாரணத்தைத்தெரிந்து பிருகுகோபித்
து யோனித்தழும்பிற்பட்டு உலகத்திற்பலசனனமெடுத்து அலைந்து திரி
கையெனச்சபிக்கக்கேசவன்வருந்திப் பரமனை அளவற்றகாலம்வழிபடச்
சிவனிரங்கிக்காட்சிதந்து பத்தவதாரமாக நியதிகட்டளையிட்டுக் காத்த
காரணம் அடிகளுக்குத் தெரியாததோ பொன்னுலக வாழ்விலிருக்
குந் தேவர்க்களாயினும் பூலோகத்திலிருக்கும் மானிடருக்கும் நாகரு
க்கும் வருத்தம்நேர்ந்தகாலத்தில் அதைப்போக்கிக்காத்தல் பரமன்கட
னுக்கும் அக்கடைப்பாட்டைச் சீர்தூக்கிப்போற்றுவானாயில் அவனுக்குச்
சிறந்தமுத்தியும் வேண்டுமோ ஓதினைப்பவுத்திரமாக்குஞ் சதுர்வேதங்
களையுந்திருடிக் கடலிலொளித்தசோமுகாசுரனை வாட்டி அவற்றைப்பழை
யபடிக்கு நிலைபெறச்செய்த மச்சாவதாரனாகிய விஷ்ணுவைப்போலச் சே
றுடைய சமுத்திரநீரை உள்ளங்கையிலடக்கி வஞ்சகராகிய ராட்சதரை வெ
ளியிட்டுத் தேவேந்திரனாற்கொல்லுவித்து எங்கள்பதவியிற்சலனமற்றிரு
க்கவைத்த பிதாவையொத்த தேவரீர்கிருபாசமுத்திரப்பெருக்கானது உல
கங்களெங்கும்பரந்து போற்றநின்றது ஆதலால் ஐயனே இக்காலத்தில்
விந்தகிரியானது நாரதர்சூட்சியிற்பட்டு மேருகிரியுடன்மாறுகொண்டு
பாதலமுதல் அண்டபரியந்தம்வளர்ந்து திசைகளைமூடிச் சர்வசங்கார
காலத்திலும் அழிவின்றிநிற்குந் திருக்கயிலையைப்போலாக நினைந்தோ
தெரியாது எங்கும்நிறைந்து பூர்வத்தில்பூமியையளந்தவிஷ்ணுவையொ
ப்பச் சகலருந்தியங்கிப்பார்க்க அண்டகோளைபரியந்தம் ஓங்கியிருக்
கின்றது இக்காரணத்தினாற்கிருபையுற்றுத் திரிநேத்திரதாரி அடிகளிற்
செலுத்திய தேவரீர்பார்வையை அடியோங்கள்மீது திருப்பி ஆளநினை
யீரோ தவத்திற்சிறந்த விந்தகிரிநீண்டு வானவழியைமாற்றிய காரணத்தி
னால் எங்கள்கெதிகளில் உலவுவதுகஷ்டமாகவிருக்கின்றதுமேலுஞ்சொ
ற்கமத்தியபாதலமெங்கும் இரவுபகலெனத்தெரியாமற் காடாந்தகார
மாய்ச் சகலபிராணிகளும்மயங்கிவாடுகின்றது இதனைப்போக்கியாளத்த
க்கதாக முனிபுங்கவரே விரைவில்வரவேண்டுஞ்சற்றுதாமதிப்பீராயில் உல

கஅடுக்கழிந்து பிராணிகள்மாண்டுபோமெனத் தியானித்து முறையிடு
தைபூமிச்சச்சாணியாகநின்று சலனமில்லாமற்றாங்கும் பொன்வரைச்சார
லில்விளங்கும் நந்தவனத்திற்றவஞ்செய்திருக்கின்ற முத்தமிழையோதி
ய அகஸ்தியர்திருவுளத்திற்றெரிந்து நல்லகாரியம் அண்டத்தினை யளாவி
நிற்கும் விந்தகிரியின்வலியையொடுக்கி வானவழியை பழையபடிக்கு வி
ளக்கித் தேவர்முதலானவர் துன்பங்களைநீக்குவேனெனக் கடலையுண்டகு
றுமுனி நிச்சயங்கொண்டு பொற்சடிலத்தையுடைய பரமசிவனைத்தியானி
த்து விழிகளில் ஆனந்தவாரிதுளிக்கக் கரங்களைச்சிரத்திற்கூப்பித்தொழு
து அன்பினால்உள்ளங்கரைந்துருகத் தேகம்பூரித்து மயிர்சிலிர்க்கப்
போற்றுகின்றதருவாயில் வெள்ளியங்கிரியினிடத்திற் பொன்மலைதோற்
றியதைப்போலப் பரமசிவன்ரிஷபவாகனத்திலாரோகணித்து கணங்கள்சூ
ழ்ந்துதுதித்துவரக்காட்சிதந்தபோது நவவியாகரணங்களையும் மற்றத்த
மிழ்நூலினது நுட்பங்களையுந்தெளிந்த அகஸ்தியர்பயபத்தியுடன் விரை
ந்தெழுந்தெதிர்க்கொண்டு சிரம் பூமியிற்பொருந்தத் திருவடிகளிற்சேவி
த்தெழுந்து கரங்களைக்கூப்பி நின்று வேதவாக்கியங்களினாற் போற்றுந்த
ருவாயிற் பொன்போன்றசடைமுடியையுடைய பரமேஸ்பரன் கிருபா
நோக்கம்பாலித்துத் தவச்சிரேஷ்டரே உமக்கு வேண்டுவதென்னைகேளு
மென்று திருவாய்மலர்ந்தவுடன் சுவாமி விந்தகிரியானது மேருவுடன்
பகைத்துயர்ந்து வானமெல்லையையடைந்திருக்கின்றது அதன் மனதுங்க
த்தினையடக்கத்தக்கவலியினை அடியேனுக்குக் கடாட்சிக்கவேண்டுமெனத்
தமிழைவிரித்த அகஸ்தியர் வேண்டுதற்கிரங்கி அவ்வாறேதந்தனம் விந்
தத்தினுருத்தோற்றமற் பாதலத்திற்சேர்ந்தபின்பு தென்தேசத்திற் சிறந்
தோங்கிய பொதியபர்வதத்தைச்சேர்ந்து தவத்தைச்செய்திருப்பையென
ப்பணிக்கஅகஸ்தியர் மீளவும் வாழ்த்திக் கர்த்தனே தேவரீர்பூசனைகளை நிலை
பெறச்செய்வதற்குக் குளிர்ந்தசலப்பெருக்கையுடைய தடாகங்களுஞ்சோ
ணிகளும் நீடித்திருக்க நீர்வளம்வேண்டுமாதலால் அத்தலத்தில் ஒருபவித்
திரமாகிய சிவநதிபெருகக்கடாட்சிக்கத்தலைசெய்யவென்று விண்ணப்பஞ்
செய்தார் அப்போது பரமன் திருக்கயிலாயத்திலிருக்கின்ற சத்தநதிகளி
லும் பவித்திரமாகிய காவிரியைத் திருவுளத்தில்நினைந்தருள அக்கிருபை
யைப் பொன்னிநதிதெரிந்து மஞ்சுவேகமும்பிற்படவும் உலகங்கள் நடு
ங்கவும் ஆர்ப்பரித்துப்பெருகிவந்து பத்தியுடன் கர்த்தன்பாதங்களிற்பணி
ந்ததருவாயில் எமதிறைவன் அவளிடத்திற்பரிவாய் காவிரிப்பெண்கொடி
யே யித்தவச்சிரேஷ்டர் நமதேவலின்படிக்குத் தென்தேசத்திற்குப்போ
கின்றனர் அவர்பின்செல்லக்கடவையென்றருளுமுன்னிலையிற் காவிரிமீட்
டுஞ்சேவித்துச் சுவாமி யித்தபோநிதியானவர் வலிபெற்றுபஞ்சேர்நிரிய

செஷ்டைகளைவென்று ஒருமைப்பட்டமனதையுடையவனாயினும் ஆண்பாலாதலால் யான்தனித்து யிவருடன்போவது நீதியோ உலகத்துக்கடுக்குமோ யித்தனைத்திருவுளத்தினாலோசித்தருள்கவென்று விண்ணப்பஞ்செய்யக்கேட்டு யிகுது உண்மையேயாயினும்யித்தவசிரேஷ்டனைப்பிசகாக நினைக்கப்படாது நல்லொழுக்கத்தில்மாறுபடாத பழுத்த மனதைப்பெற்றவர் நல்வினைதீவினைச்சம்பவங்களிற்படாத ஒருமைப்பட்டபேரறிவாளர் மேலும் நமது பத்தரிற்சிறந்தவர் ஆதலால் யிவர் பின்போகலாமென மீட்டுங்குறித்தபோது காவிரியாள் சம்மதித்துப்பரமனைவணங்கித் திருக்கயிலைக்கிறைவனே தேவரீர்கட்டளையின்படிக்கு யித்தவத்தர்பின்போவேனாயினும் யிவரை நீங்குங்காலத்தினையருளிச்செய்கவெனக்கேழ்க்க நல்லகாரியம் பெண்ணேயிவர் உன்னிலையத்திற் கரத்தினைக்காட்டும் எதுவைநேருமாயில் அத்தினம்பிறிந்து பூமியின்கண்பெருகிச்சகலரும் மூழ்கிப்போற்றிக் கதியைப்பெறநிற்பையென்ற வாக்கியத்தினைச் செவிகளுக்கமுதமாகக்கொண்டு காவிரியாளவள் பரமனிடத்துவிடைபெற்று அகஸ்தியர்பின்பற்றிப் போகுமுன்னிலையில் ஒப்புவமையற்று உயிர்களுக்குயிராய்விளங்கும் பரமசிவன் ரிஷியைப்பார்த்து இக்கங்கையை உமது கமண்டலத்திற்கொண்டு நடக்கலாமென்றருளினார் அவ்வாறேசேகரிக்கக் காவிரி அத்தவத்தர்பாலாயினள் அத்தருவாயில் அகஸ்தியருக்குத் தெக்கணதேசத்துக்குப்போகச் சிலவுகொடுத்துப் பூதகணங்கள் போற்றிச்சூழச் சிவனுதன் ரிஷபவாகனரூடராய்த் திருக்கயிலையைச்சேர்ந்தார் அத்திசையைநோக்கிவணங்கி விதற்பதேசாதிபதி தவத்திற்பெற்ற லோபாமுத்திரையம்மனைமணந்து நித்தியத்தைக்கிடைத்திருக்குஞ் சித்தனைத்தந்த அகஸ்தியர் தென்திசையைநோக்கி நடந்தனர்.

கிறவுஞ்சப்படலம்.

சவுனகாதிரிஷிகளே கேட்பீராக.—கும்பமுனி மகம்மேருச்சாரலினின்றும்புறப்பட்டு நாடுநகரம்வனம் பறவதமே முதலானதுகளைக்கடந்து தென்றிசைக்குவருமுன்னிலையில் சிங்கமுகாசூரனுக்கிளைய தாருகாசூரன் அரசுசெய்திருக்கும் மாயமாபுரத்தைநெருங்கிவருவதை அப்பதியையடுத்துப் பறவதவடிவுகொண்டிருந்த கிறவுஞ்சனென்னும் ராட்சதப்பாதகன்தெரிந்து வஞ்சிக்கநினைத்தவனாய் மாயமந்திரங்களை யுச்சரித்

து அவற்றின் முயற்சியினால் வானகத்திலிருக்கும் பொன்னுலகத்தினை மண்ணுலகமாக்கியும் பூமண்டலத்தினை விண்ணுலகங்களாக்கியுந் நிலைகளைச் சமுத்திரங்களைவானையளாவிய மலைகளாக்கியுங் குலகிரிகளைக் கடல்களாக்கியுங் கொடியகிரணங்களையுடைய சூரியனைக் குளிர்ந்த கலைகளைப்பெற்ற சந்திரனாக்கியுஞ் சந்திரனை வெப்பங்கொண்ட சூரியனாக்கியும் அணுவை மகாமேருவாக்கியும் மேருவைப்பரமாணுவாக்கியும் புவனங்களைப் பெரும்புறக்கடலாக்கியும் பெரும்புறக்கடலை புவனங்களாக்கியும் வடவாமுகாக்கினியை விரிந்தகடலாக்கியும் இதுவன்றியும் ஒருநாழிகையிற் பதினாயிரத்தி னொருகூறுகியகாலத்தை தேவர்களுக்காயினுந் துறந்தயோகிகளுக்காயினுந் தோற்றவொட்டாமல்மயக்கி பலகாலங்கழிந்ததாகப் பிரமிக்கச்செய்து வாட்டுவானாயின் அம்மம்ம அவன்சற்றவிஞ்சையின்வலிமை யாவராலெடுத்துச்சொல்லப்படும் இவ்விதவல்லபங்களைப்பெற்ற கிரவுஞ்சராட்சதன் அகஸ்தியருக்கெதிரில் விந்தகிரியைப்போல பலசிகரங்களைக்காட்டிப் பறவைவடிவுகொண்டு தன்மூலமார்க்கப்போகும்படிக்கு வழியைக்காட்டி நிற்பதைக்குறுமுனிகண்டு அதிசயங்கொண்டு நல்லகாரியம் இதனிடத்திற்றோற்றும்வழியின்மூலமாகக்கடப்போமென நிச்சயித்து அதனைப்பற்றிக்கூவப்படுதூரஞ் சென்றதனுவாயில் அப்பாதைமறைந்து மற்றொருமார்க்கந்தோற்ற அதன்வழியாக அகஸ்தியர் போகும்போது தடைபட்டுத்திரும்பிவருகையில் முன்தான்வந்தவழியுங்காணமல் மயங்குமுன்னிலையில் மற்றொருமார்க்கந்தோற்ற மனவருத்தத்துடன் அதைத்தொடர்ந்து நடக்கும்போது கிரவுஞ்சன்மாய்கையினால் ஒருபுறத்திற் சண்டமாகிய தீயானது மண்டியெரிந்துவரவும் மற்றொருபுறத்தில் சூறைவளிசுழன்று அலைக்கவும் மற்றொருபுறத்தில் மேகங்கள்மூடிச் சோனைமழையைப் பொழிந்து கோடையிடிகளைப்பெருக்கிக் காடாந்தகாரமாகக்கம்மவும் இவ்விதவுபாதிகளைக்காட்டுவதை அகஸ்தியர்கண்டு இவையனைத்தும் பாதகராகிய ராட்சதர்வஞ்சகமென நிதானித்து போதவுணர்வைப்பெருக்கி அதன்மூலங் காணப்பட்டவுடன் சிவபிரான் நுதல்விழித்தீயைப்போலச் சிறிக் கரங்களைத்தட்டிநகைத்து நல்லகாரியம் ஒருஅவுணனோ நமக்கிவ்விதக் கொடுமைகளைச்செய்வான் இந்நிமிஷத்தில் அவன்மாயவலியினை அடக்குகின்றனமெனக்கொதித்து ராட்சதப்பாதகனுருக்கொண்ட மலையினிடத்தில் நமதுகரத்திற்பற்றிய தெண்டினாற்குத்தி விசாலமாகிய பற்பலதுவாரங்களாக்கி நல்லநிலைபெறாதவண்ணம் உன்பழையவடிவை நீங்கி மலையுருவாகவே நின்று கொடியராட்சதருக்கிருப்பிடமாகித் தேவர்களுக்குந் தபோதனர்களுக்கும் பலகாலந்தீங்குகளைச் செய்திருப்பை மேலும்நமது தெண்டத்தினாற்றுளைபட்ட இடங்கள்முற்றும் பலவாய்

கைகள் விளையக்கடவது கடையில் எமது இறைவனாகிய பரமேஸ்பரன் நுதல்வி
ழியிற்றோற்றவிருக்கின்ற சரவணபவன் கரத்தில் விளங்கும் வெற்றிவேலினால்
மாள்வை யெனக் கொடியவசை சொல்லித் தமது கமண்டலத்தி லிருக்கும்
பொன்னியின் சலத்திற் சிறிது கரத்திற்கொண்டு மந்திரபூர்வகமாக இறைத்து
மாய்கைகளைக் கடந்து வெளிவந்து தென்பிறதேசத்தினை நோக்கி நடந்தார்.

விந்தம்பிலம்புகுபடலம்.

சவுனகாதிரிஷிகளே கேட்பீராக அகஸ்தியனை வளைத்து மயக்கிய
கொடிய கிரவுஞ்சனென்னும் ராட்சதவீரன் அத்தினமுதற் குறுமுனிசா
பவன்மையினாற் பற்வதாகிருதியாகவிருப்பதன்றியும் பாதகராகிய ராட்
சதர்களுக்குக் காவலையுடைய கோட்டையாக ஸ்தாபிதமாகத்தோன்றி
அம்மார்க்கத்திற்போகின்ற தவத்தர்முதலானவரை அலைத்திருந்தவன்செ
ய்கைகளையும் வல்லபத்தையும் நமது கற்தனாகிய சுப்பிறமணியக்கடவுள
ல்லது யாவராலடக்கப்படும் இவ்விதமாகத் தமிழைவளர்த்த கும்பமுனி
யானவர் வர்னத்தையளாவி மேகங்கள் சஞ்சரிக்கும் அவ்வரையின் செரு
க்கைவாட்டியபின்பு விண்ணகத்தைத் தாவும் பலசிகரங்களையுடைய தேவ
கிரியின் மார்க்கமாகச்சென்று பாசபந்தமுடிவைக்கடந்த மகத்துக்களிட
த்திற்கிருபையுற்றுப் பஞ்சாட்சரத்தைப்போதித்தாளும் பெருமையினை
யுடைய சிவபிரான் மகிழ்ந்தெழுந்தருளியிருக்குங் காசிஸ்தலத்தைச்சேர்
ந்து அப்பதிக்கருகிற்பரந்து பெருகுந் தெய்வீசம்பொருந்திய கங்
கையின் மூழ்கிப்பவித்திரனாய் விசுவநாதர்வீற்றிருக்குஞ் சன்னிதானத்தி
ற்பிறவேசித்துக்கண்களாரக்கண்டு வாழ்த்திவழிபட்டு அத்தலத்தைக்கட
ந்து விருப்பைக்கொண்டோங்கி யிறுமாந்திருக்கும் விந்தகிரியின் ச
மீபத்தில் வந்தவராய் அவ்வரையின் நிலைமைகளைமதித்து வானத்தை யு
டைத்து அண்டத்தைமுட்டநிற்கின்ற ஒவிந்தமே கேட்பாயாக பரமன
ருளின்படிக்குப் பொதியவரையைச்சேர்ந்திருக்கவந்தனம் ஆதலால் இவ்
வெல்லையைக்கடக்க நீகிறிதுவழிகாட்டவென்று கூவிச்சொல்லுவதை விந்
தகிரிகேட்டமாத்திரத்தில் நகைத்துச் சூரியர்சந்திரர்முதலாகிய நவக்கிற
கங்களும் போதற்கொண்ணமல் வானவழியையடைத்து ஆதியிற் பாரை
யளந்த விஷ்ணுவைப்போல நிற்கின்றேன் குறியவனே உனக்கஞ்சிவழிகொ
டுப்பேனோ என்வலிமையை யெவ்வளவுந்தெரிந்தவனல்லை என் விருதாவாய்
நீநின்றனை வந்தமார்க்கத்தைத் தேடிப்போவாயெனச் சொல்லிய ஓசை
அகஸ்தியர்செவிகளில்விழுந்தமாத்திரத்திற் கோபஞ்சொலிக்க நகைத்துப்

பரமசிவத்தின்பாதாரவிந்தங்களைச் சிந்தித்துப்போற்றிப் பூர்வத்தில் தேவேந்திரனது துயரத்தையகற்றச் சமுத்திரநீரைவற்ற குடிபகரத்தைப்பிரமலோகபரியந்தம் நீட்டினார் ஆதலாற் சவுனகாதிரிஷிகளே தவத்திலுஞ்சிறந்தபொருளொன்றுமில்லை அதனிடத்திற் சிறத்தைவைத்துச் செய்பவனே செனனசாகரத்தைக்கடந்து பரமன்பாதநீழலிற்சேரப்பெறுவன்பின்புதேவர்களும் அதிசெயிக்க அங்குலப்பிரமாணமுள்ள திரேகம்பெற்ற அகஸ்தியர் விந்தகிரியினது உச்சியினிடத்திற்றமதுஉள்ளங்கையினைச்சேர்த்து வலிகொண்டழுத்தியமாத்திரத்தில் விந்தகிரியானது நக்கசகபரியந்தம்நறுங்கப்பட்டு யிறங்கிப் புவியிற்குழிந்து பாதலத்தைச்சேர்ந்து ஆதிசேஷன்வாழுந்தலத்திலொடுங்கி நடுநடுங்கியடங்கி நரகக்குழியிற்பட்டுவாடுகின்றவனையொத்துக் கீழ்நிலையில் ஆழ்ந்தமுன்னிலையில் இடுக்கிட்டுவருந்தி ஓ தபோநிதியே அடியேனிடத்திற்கிருபையுற்று யிவ்விண்ணப்பத்தினைக் கேட்டருள்க தேவரீரைவழிபட்டு யிட்டேறவறியாமல் யிகழ்ந்தகாரணத்தினுற் றெண்டுதொட்டுக் கிடைத்திருந்தபெருமைகளனைத்தையும்யிழந்தேன் யிக்காலத்திற் கிருபையுற்று நாயினேன்செய்த அபராதத்தைப் பெரிதாயெண்ணாமல் க்ஷமித்து அடியேன் பழையபடிக்குப் பூமியின்கண்ணெழுந்து நிற்குங்காலத்தை அருளிச்செய்யவேண்டுமெனப் பரிதாபப்பட்டு போற்றுவதைத் தமிழ்முனிகேட்டுக்குறுநகைகொண்டு தாம் நினைந்தகாரணத்துக்கடுத்த தந்திரமாகவும் அதன்மனதுக்குத்திருத்திபெறவும் நினைந்து விந்தமே நாம்பொதிகையிற் சேர்ந்துயிப்பாதையிற்றிரும்பப் பெறுங்காலத்தில் நீயும் எதாப்பிறகாரம்பெயர்ந்து நிற்பையெனச்சொல்லியபடியே விந்தம் அத்தவணையை நோக்கிப் யிலத்திலிருந்தது பின்பு முக்குறும்பைவென்றரிஷியானவர் பழையபடிக்குத் தமது கரத்தைக்குறுக்கிநின்றனர் அதுபரியந்தந் துக்கசாகரத்திற்பட்டு வாடிய தேவராதியர்கள் மனவெழுச்சிபெற்று ஆனந்தவாரியில்மூழ்கிக்களித்தவராய்ப் பஞ்சதருக்களின் மலர்களை மழையைப்போலச்சொரிந்து யின்றெமது குறைகள்தீர்ந்தோம் நீடூழிவாழிவாழியெனத்துதித்து வாழ்த்துதலைக்கேட்டுக் களித்தவராய் அகஸ்தியர் தென்பாரிசத்தைநோக்கி நடக்கபெத்தனப்படுமுன்னிலையில் விந்தகிரியானது பாதலத்தில்மறைந்து பழையபடிக்கு வானவெல்லை விளக்கிச் சூரியர் சந்திரர்முதலான நவக்கிறகங்களின் பிறகாசம் எவ்விடத்தும் பரந்தோங்கியது எப்படிச்சிருந்ததென்னில் பிரளயகாலத்திற் சத்தசாகரங்களும் அணைகடந்து புவனங்களனைத்திலும் மூடிநின்றதைப் போன்றது அக்காலத்திற்சூரியனுதியதேவர்மகிழ்ந்து துரிதமாய் அகஸ்தியரிடத்துக்குவந்து கரங்களைக்கூப்பித்தொழுது தேவரீர்செய்த உதவிக்குக்கைமாறுண்டோ வெகுகாலமாகவாட்டமுற்றிருந்த எங்கள் கவலைநீங்கி

னமெனத்துதிக்கின்றவர்களை ஆதரித்துச்சிலவுகொடுத்து அவர்களை விண்ணிடத்திலனுப்பிவிட்டுப் போகும்போது பர்வதங்களடர்ந்து காடோங்கியிருக்கும் மேற்குத்திசையில் வாசமாய் ரிஷிகளை யலைத்திருக்கும் வில்வலன் வாதாவியென்னுங்கொடியராட்சதர்தங்கள்பிராணனையிழக்குங் காலம்நேர்ந்தபடியால் அகஸ்தியர்வரவைக்கண்டு யிதனையோசிக்கின்றனர்.

வில்வலன்வாதாவிவதைப்படலம்.

இந்தமுனிவன்கோலத்தைப்பார்க்க அதிசெயமாக விருக்கின்றது ஆதியிற் கடல் நீரை யுள்ளங்கையிலேத்துண்டு தேவராசனைக்கொண்டு ராட்சதரைக்கொல்லுவித்த. பாதகன் யிவனுக்கும் யிப்போதுந்தேவர்களுக்கு உதவிசெய்யவருபவனுக்கும் நல்லகாரியம் யிவனைமடக்கி விருந்திட்டு யித்தினம் யிவன் பிராணனுடன் தசையையுங்கொள்ளைகொண்டு பழியையுந் தீத்துக்கொள்ளலாமென நிதானித்தவர்களாய்த் தம்பியாகிய வாதாவி ஆட்டினுருப்பெற்று அவ்விடத்திலிருக்கும் மலைச்சாரலில் தழைகளைமேய்ந்திருக்க மூத்தவனாகியவில்வலன் தபோதனர்வடிவுகொண்டு சடைகள் விரிந்தசையவுந் திருநீறுநெற்றியில்விளங்கவுங் காதுகளிற்குண்டலங்கள் அசையவும் ருத்திராட்சத்தாவடங்கள் சிரசுமுதல்துலங்கவும் வெள்ளியங்கிரியைப்போலச் சற்வாங்கதூளிதனாய்க் கரங்களில் தண்டுகமண்டலமுமேந்திப் புலியதளையுடுத்துக் கண்டவர்கள்பூசிக்கத்தக்க கோலத்தினைப் புறம்பிற்காட்டி உள்ளத்தில்வஞ்சகத்தைக்கொண்டு எட்டிக்கனியைநிகர்த்துவிளங்கும் பாதகன்கும்பமுனிவருக்கெதிரிற்சென்றுபோற்றி மும்முறைவலம்வந்து வணங்கி நெடுங்காலமாய் அரியதவங்களைச்செய்த முயற்சியினாற் சுவாமிகளைத்தெரிசிக்கக் கிருபையுற்று யிவ்விடத்திலெழுந்தருளியது அடியேனுந் தவத்தரிற் சிறப்பெய்தப்பெற்றேன் ஆதலால் எளியனாகிய தொண்டனிருக்கின்ற பர்ணசாலை யிதோயிருக்கின்றது அது பவித்திரமாகக் கிருபையுற்றெழுந்தருள்கவென மீட்டும்பணிந்துவேண்டத் தாமரையிலையிற்பட்ட நீர்த்துளியைப்போலச் சமுத்திரசலத்தைக்குடங்கையிலேந்தியுண்ட அகஸ்தியர்பாதகன்கொண்ட சூதையறியாதவராய் அவன்செய்யும் உபசாரத்துக்கிரங்கி ஓ தவச்சிரேஷ்டமா சத்தரிஷிகள்முதலிய தவத்தரில் உன்னிடத்திற்றோற்றும்பத்தியில் அணுப்பிரமாணமுங்கண்டதில்லை யிதனை உண்மையாகச்சொல்லுகின்றனன் உமது யிருப்பிடமெங்கிருக்கின்றதுவாரும்போவோமென்று யிசைந்தமாத்திரத்தில் சுவாமி சமீபந்தான் எழுந்தருளுமென்று நாசகாலமடுத்தபாதகன் வழிகாட்டிஅழைத்துப்போய்யிடத்தை

சேர்ந்த உடன் தருப்பாசனத்தைவிரித்து அதிலிருக்கச்செய்து தமோன்டைசலத்தினால் பாதங்களைவிளக்கி அருக்கியபாத்தியமுதலான பூசனைகளையைந்திமுடித்தவனாய்க் கரங்களைக்கூப்பி அடியேன் முன்னோர்களும்யானும் பிதாத்ராளும்பொருட்டுத் தவஞ்செய்து இச்சிறுகுடிசையிலவதீர் இருந்து பவித்திரப்பட்டதன்றியில் யாங்களும்பிழைத்தோம் ஆதலால் யித்தினம் நாயினேனிருக்கைத்திறங்கிப் போசனஞ்செய்து அடியேனுக்குச்சேஷப்பிரசாதந்தந்துபோமென்று உபசரித்துக்கேட்டுக்கொண்டுவதற்கிரங்கிக் குரூரமருசனிடத்தில் கருணைபூத்தவராய் முனிபுங்கவனே உன்பணிவிடைகளுக்குமெச்சினோம் உன்னையொத்தபத்தன் கோடிக்கையைமீடேற்றுவதே என்பொலிகளுக்குக்கடனாதலால்அவ்வாறே உண்டிடையையுண்டுபோவோமெனத் தவத்தருக்கடுத்ததுன்பங்களை நீக்கியாளுங்குணநிதியாகியகும்பமுனிவன் சம்மதித்தவுடன் பாதகனாகிய வில்வலன் அகமுகமலர்ந்தவனாகக்காட்டி நிலத்திற்படியச்சேவித்துஎமது ஐயனே சற்றுநேரம் பொறுப்பீராகப் புனிதமாகிய பிரசாதத்தை விரைவிற் சமைத்துவருவேனெனவிடைபெற்றுப்போய்ப் பக்கத்திலிருக்குங் கையத்தில்முழுமடியுடுத்தி மடைப்பள்ளியைச்சேர்ந்து பசுவின்சாணத்தினால்மெழுகிட்டுக்கோலமுமிட்டு முத்துகளைப்போலத்துல்லியமாயிருக்குஞ் சன்னசம்பாவின் அரிசியைநன்றாகத்தீட்டிப் பலகால்அலம்பிச் சீர்படுத்தியபின்தீக்கடைக்கோலினால் அக்கினியை உண்டாக்கி அடுப்பிற்போட்டுத் தேக்குசந்தனவிறகினால்மூட்டிப் பவித்திரமாகியபாண்டத்தை அலம்பி சுத்தோதகத்தைநிரப்பி உலையேற்றி அரிசியையுமிட்டுச் சிறுக எரித்துப்பக்குவப்பட்டதைச்சோதித்துவடித்திறக்கிவைத்தபின்பு மற்றப்பாத்திரங்களில் பொன்னையொத்துவிளங்கும் பருப்பு கந்தமூலவருக்கங்கள் பாற்சோறு சக்கரைப்பொங்கல் குழைகறி புளிங்கறி தீங்கறி பொரியல் கரியல்முதலியவித்தங்களைச் சம்பாரங்களைச்சேர்த்துத்திசைபெங்கும்மணக்கத்தக்கபுனிதமாகியபதார்த்தங்களைச்சமைத்தும் பக்ஷணவிதங்களையுஞ் சுட்டு முடிந்தவுடன் வேகமாய் ஓடிப்பேதையராகிய பிராமணர்பிராணனைவாங்கவிருக்கின்றவனைக்காட்டுமாறுபோலத் தலையையசைத்து மேய்ந்திருக்குந்தம்பியாகிய கடாவைத்துரத்திப்பிடித்தவனாய் இவர்களுயிருக்குஎமனையொத்து எழுந்தருளியிருக்குங் குறுமுனிவனெதிரில் வலித்துவந்து இருகூறாகவாளினாற்கண்டித்துத்தூக்கித் தோலைப்போக்கி உறுப்புகளைவெவ்வேறாக்கித் துடைமார்க்கண்டம் நால் தலை முதலாகிய மாம்சங்களைப்பக்குவமாக அரிந்துசேர்த்துப் பாத்திரங்களிலிட்டு முக்கால் அலம்பிச் சுத்திசெய்து அதற்குவேண்டும்சம்பாரங்களைக்கூட்டி அடுப்புகளிலேவைத்துச் சிறுதீயாகவெரித்துக் கறித்துகள் பொரித்துகளைத்தாளி நெய்யைவிட்டுத்தாரம்பார்த்துப் பொ

௨௮-ம் வில்வலன்வாதாவிவதைப்படலம்.

ரியல் குழம்பு வறல் சுண்டல்விதங்களைச்சமைத்துக் காயங்களைப்புகட்டு
வாசனைத்திரவியங்களைச்சேர்த்து முடிந்தவுடன் மணம்போகாமல் மூடிப்
பச்சடி தொகையல் மற்றவெவைகளையும் பக்குவமாக்கியபின்பு வாழைக்க
னி மாங்கனி பலாக்கனிமுதலியபழவகைகளையுந் திருத்திக்கொண்டு தேன்
கருப்பஞ்சாறு பாயசம் யிவ்விதங்களையுந்தெய்வ ஆராதனைக்கு யோக்கிய
மாகும்படிக்குமுடித்து யிப்படிக்குப் பஞ்சகச்சாயவகையினையும் அறு
சுவைவற்கங்களையுந் துரிதமாகச்சமைத்துமுடித்தவுடன் அகஸ்தியர்யிருக்கு
மிடத்தைச்சேர்ந்து வணங்கிச் சுவாமிகள் பசி உபாதியினால் வருத்திச்சரீ
ரம்வாட்டமுற்று யிளைத்தது யினிகாலதாமசஞ்செய்யாமல் அடியேன்சுத்
தியாகச்சமைத்திருக்கும் உண்டியை உண்டு ஆயாசந் தீர்ந்தருளவேண்டுந்
தயைசெய்துவாருமென்றுவேண்டச்சம்மதித்தெழுந்தமாத்திரத்தில் அழை
த்துப்போய் மடப்பள்ளிக்கருகிலிருக்கும் அறையில் பீடத்தைப்போட்
டு ரிஷியைவீற்றிருக்கச்செய்து உபசரித்துப் பாதங்களைச் சுத்திசெய்து
சந்தனபுஷ்பங்களைச்சாத்தித் தூபதீபங்களைக்கொடுத்துப் பாததீர்த்தத்
தை உள்கொண்டு சேவித்துக்கொண்டவனாய்ப் பொன்மயமாகப் பரந்து
நீண்டிருக்கும் வாழையிலையைப்பரப்பி அதைச்சூழ பலதங்கக்கிண்ணக்க
ளைவைத்து சலத்தினால் அவைகளைச்சுத்திசெய்தபின்பு அகஸ்தியர்மனங்கு
ளிர அமுதமொத்தபோசனத்தைப்படைத்துப் பருப்பை அதின்மேல்வை
த்து முதற்சொல்லியகறிவகைகளை வெவ்வேறாக யிலைமுற்றிலும்பரப்பி
யினி சற்றுநேரத்திற் றன்பிராணனைப்போக்கவிருக்கின்றவில்வலன் பசுவி
ன் நறுநெய்யை ஏராளமாகவிட்டு ஆட்டின் யிறைச்சிவிதங்களையும் புஷ்
டியாகக்கிண்ணங்களிற்படைத்துச் சித்திரான்னம் பலகாரங்கள் பழவகை
களையும் மறவாமல்வைத்தவுடன் கடல்நீரையேற்ற அகஸ்தியர்கரத்திற் கம
ண்டலசலத்தைவார்க்க, யிரண்டுவிசைபோசனத்தைச் சூழயிறைத்து ஒருதர
ம் ஆசமனஞ்செய்து சூரியனுதியகடவுளருக்குப் பிரீதியாக அருக்கியங்
களை வரன்முறையாகயிறைத்து யிவ்விதமாகச் சகலமும் முடித்தபின்பு
போசனஞ்செய்கையிற் சற்றுந்தயையற்ற வில்வலப்பாதகன் அருகிலிருந்
து யிக்கறிபதார்த்தங்கள் மதுரமாகவிருக்கும் யிந்தமாம்சந்திவ்வியமாகு
ஞ் சுவாமிகள்தேனிற்றொட்டுப் பொசிக்கலாகுமென்று யிலையிலிருக்கின்
றவைகளைக்காட்டிக்காட்டி உபசரித்து மேலும்மேலுஞ்சாதிக்கஅகஸ்திய
ர் மனங்களித்துக்கண்டமட்டும்பூர்த்தியாகஉண்டவராய் சாட்சதக்கொடிய
ன்கொண்டுவந்தசுத்தோதகத்தினையுஞ் சாப்பிட்டுக் கைலாகுகொடுக்கவெ
ழுந்துசாணப்பொடியினாற்கரங்களைத்திமிர்ந்துவெந்நீரினாற் சுத்திசெய்த
பின்சுத்தோதகத்தினால்முக்காலம் ஆசமனித்துவாயைப்பூசிமுறைப்படிக்
கு அங்கங்களையலம்பியவுடன் மற்றொருயிடத்திற்றருப்பாசனத்தைவிரித்

ஆதரமொழிகளினால் அதின்மீதிருத்திச்சந்தனம் புஷ்பந்தாம்பூலமிதங்களையுங்கொடுத்து அவர்பள்ளிகொண்டிருக்குந்தருவாயில் இத்தருணமென்றெண்ணிச்சண்டாளனாகியவில்வலன் றனக்குமுன்னம்பிரமதேவன் அனுக்கிரகஞ்செய்தமந்திரத்தினையுச்சரித்து அப்பாதம்பிவாதாவி சீக்கிரத்தில்வெளிவருவாயெனக்கரங்களைத்தட்டிக்கூவிய சத்தங்கேட்டவுடன் முனிவன்வயிற்றில் ஆட்டினுருப்பெற்றவனாய்ச் சற்றும் யிரக்கமில்லாமற் பூர்வத்திற் கடல்நீரையுண்டு தம்மவரைமாய்த்ததைப்போலவே சுலபமாகநினைந்து என்றனையுண்டபாதகன் அகத்திலிருக்கும் உயிரையும் யிவன்வலியையுங்கொண்டு குதியவயற்றைக்கீறி அண்ணா யிதோ வந்துவிட்டேனெனச் சிங்கத்தைப்போல முழங்கிச்சொல்லுவதைத் திரிலோகங்களினும் புகழ்ந்துவணங்குந் தவச்சிரேஷ்டராகிய கும்பமுனிகேட்டமாத்திரத்தில் யிது கொடியராட்சதர்வஞ்சகமென்றறிந்து வடவா முகாக்கினியைப்போலக் கொதித்துப் பவுத்திரமாகிய திருநீற்றைக் கரத்திலள்ளி மாம்சவகைகளினாற்செய்யப்படுங் கறியாகப்பொசிக்கப்பெற்ற வாதாவி அவ்வாறேசீர்ணியாகக்கடவையென்றுபரமனைநினைந்து மூன்றுதரம் வயிற்றைத்தடவியபோது மண்டியெரிந்துவருங் காட்டுத் தீயினெதிர்ப்பட்ட சிறுபுதரைப்போல உதர அங்கிகொளுந்த அப்பாதகன்மலமாய் அடங்கினான் இக்காரணங்களை மேகத்தையொத்து எதிரிலிருந்தவில்வலன் தெரிந்து ரவுத்திராகாரமாகக்கோபித்து மாயவடிவைநீங்கிப் பழையகோலங்கொண்டு தண்டமொன்றையெடுத்துச்சுழற்றிப்பாய்ந்து முனிவர்சிரத்தில்மோதிக்கொல்ல வருவதை அகஸ்தியர்கண்டவுடன் தருப்பையைக்கிள்ளி பாசுபதமந்திரத்தையுச்சரித்துப் பிரயோகித்தமாத்திரத்திற் றமையனைப்போலவே வில்வலனுஞ்சாம்பலாய்விழுந்தான் அக்காலத்தில் அகஸ்தியருக்குக் கோபந்தணிந்து அவ்விடத்தைக்கடந்து தமதெண்ணப்படிக்குப் போவதாயினர்.

காவிரிநீங்குபடலம்.

சூதபுராணிகர் சவுனகாதிரிஷிகளைப்பார்த்து அகஸ்தியர் யிவ்விதமாக அசுரர்களைமாய்த்தபின்பு காவிரிப்புனலடங்கிய கமண்டலத்தைத்தாங்கித் தெண்டையூன்றிநடந்துகொங்குதேசத்தைச்சேருமுன்னிலையில் அவர் கோபக்கனலிற்பட்டு மாண்டராட்சதகுமாரர்களிருவரும் பரா

சத்துவத்தைப்பெற்றுத் தவத்தர்கோலமாய்க் காளமேகத்தைப்போலக் க
றுத்தநிறேகத்துடன் அகஸ்தியர் எதிரில்நின்று தீயெழ விழிகளைச்சுழற்றி
அதிகோபங்கொண்டு நீராய் ஆவ் ஆவெனை ஆர்ப்பரித்து மேல்வருமவர்
நெருங்கிப்பயமுறுத்துவர் பின்போவர் கோறரூபமாகத்தோற்றுவர் உரு
த்தெரியாமல் மறைவர் விண்ணகத்திலிருக்கும் மேகத்தில் ஒடுங்கி ஓவென
க்கூவுவர் மண்ணில் யிறங்கி ரிஷியைவளைந்துவளைந்துசுற்றுவர் யிவ்விதமா
கத்தடங்கல்செய்துவருவதைத் தவச்சிரேஷ்டராகிய அகஸ்தியர்கண்டு யிவர்
களைமுன்னமேவாட்டினோம் மீட்டும்நம்மைநெருங்குங்காரணம் யாதெ
னநிதானித்து யிவர்கள் துறுவாசர் புத்திராதலாற் பிற்ம அங்சைபெற்ற
னர் யிவனாவதைத்ததாற் பிற்மத்திசுற்றியதெனத் தெளிந்து நல்லகாரியம்
தீத்தற்கரிய யிப்பாதகத்தை அகற்றப் பரமேஸ்பரன் பாதாரவிந்தங்களை
அருச்சிப்போமென நிச்சயித்தவராய்க் கொங்குதேசவெல்லையில் ஒருவனத்
தைக்கண்டு யித்தலஞ் சிவபூசனைக்குத்தகுதியென்றெண்ணி அவ்விடத்திற்
பரமனை லிங்கமுகுற்தமாக ஸ்தாபித்துக் கமண்டலத்திலிருக்குங் காவிரிதீ
ர்த்தத்தினால் அபிஷேகஞ்செய்து சந்தனம் புஷ்பவகைகளினால் அருச்சித்
து திவ்வியபோசனங்களைப்படைத்து வணங்கித்தேவாதிதேவா பத்தவற்ச
லா சகலசீவதயாபரமூர்த்தி தவங்களிற்சிறந்த ரிஷிகள்முதலானவர்களை வழி
கட்டிக் கபடவேடந்தாங்கி வஞ்சித்துக்கொன்றுவருவதைப்போலவே நம்
மையுஞ் சூதுகள்செய்தபாதகனாவாட்டியகாரணத்தினாற்சம்பவித்தமகாபா
தகத்தைப்போக்கி ரட்சிக்கவேண்டுமெனப் பலநாட்கள் யிவ்வாறுபார்பதி
பாசனைவழிபட்டுவருமுன்னிலையிற் பரமசிவகடாட்சத்தினால் அப்பாதகமா
னது நெருப்பைநேர்ந்தபஞ்சைப்போலப் பறந்துபோயது இதன்மத்தியி
ல் அகஸ்தியர் செயல்களைத்தெரிந்தநாரதர் அதிவேகமாய் தேவேந்திரன்
தவஞ்செய்திருக்குஞ் சீகாழிஸ்தலத்தைச் சேரவருவதை பரமசிவத்தின்பா
தகமலங்களைச் சிந்தையிலிருத்தி மூங்கிலுருப்பெற்று நோற்றிருக்குந்தே
வராசன்கண்டவுடன் பத்திவிநயத்துடன் எதிர்கொண்டு திருவடிகளிற்சே
வித்தவனைவாழ்த்தி எழுந்திரும் ராசனேயென்றுதூக்கி மார்பிலுறச்சேர்
த்தணைத்துச் சுகமோவெனப்பிரியமாகவிசாரித்தனர். அக்காலத்தில் இந்திர
ன்கரங்களைக் கூப்பிநின்று சுவாமி தேவரீர்கிருபையினால் யித்தினவரையிற்
சவுக்கியமாயிருக்கின்றனனாயினுஞ் சிவபிரான்பூசனைக்கொருயிடையூறுநே
ரிந்திருக்கின்றது ஆனைக்குன்றனைய தபோநிதியே அதனைக்கேட்டருள்க
திவ்வியபரிமளமலர்களைத்தரும் பூங்காவனத்துக்குச்சிறிதும் நீர்ப்பசுமை
யின்றிச் சாகின்றது ஆதலாற் பரமனைப்போற்றுவதற்குப் போதுமாகிய
போதுகள்கிடைப்பது அரிதாயிருது யிக்குறையேயென்மனதை வாட்டுவ
தினால் யிதற்கொருமார்க்கத்தைக் கட்டளையிடவேண்டுமெனப் பலவாகமுறையிட்டு

ஒருதவிசில் முனிவனையெழுந்தருளச்செய்து அவரனுமதியில் தானுமொருபீடத்திலிருந்தான் அக்குறுவாயில் நாரதர் இந்திரனைப்பார்த்துச் சிவகடாட்சத்தினால் உமது பதியும் அரசாட்சியுஞ் சிலதினத்திற்கிடைக்கவிருக்கின்றது மனந்தளரவேண்டாம் யிப்போது கங்காசடாதரமூர்த்தி பூசனைக்குத் தவறுநேர்ந்திருப்பதெனப்பேசினை அதுவும் விரைவிற்றவிருங்காலமும் நெருங்கியது அதன்காரணங்களைச்சொல்லுவோம் ராசனேகேழ்ப்பாயாகவென்று ஒப்புவமையற்ற முக்கட்பிரான் அகஸ்தியனைப் பொதிகைமலையைச்சேர்ந்து தவத்தைச்செய்திருமென்று அனுப்பியவிதமும் அவர்வருமார்க்கத்தில் வானவழியைமூடிநின்ற விந்தபர்வதத்தினைப் பாதலத்திலடக்கியவிதமும் ரிஷிகளுக்குப்பலகாலங்கெடுதிசெய்திருந்த சூரன்மருகனைத்தொலைத்தவிதமும் அப்பழியினைத்தவிர்ப்பதாகக் கோங்குநாட்டைச்சேர்ந்து திரிபுரதகனராகிய கர்த்தனையருச்சித்துப் பவித்திரமாகிய விற்தாந்தங்களையும் யார்த்தமாகத்தெரிவித்து ஒ ராசனே அகஸ்தியர் யிப்போதும் அத்தலத்திற்பரமனைவழிபட்டிருக்கின்றனர் நான்கண்டுவந்தேன் பரமசிவகடாட்சத்தினால் அவர்குண்டிகையில் அடங்கியிருக்குங்காவிரிநதி வெளிப்பட்டு யிம்மூலமாகப் பெருகும்படிக்கு மனவருத்தங்கொள்ளுவீராயில் உமக்கமைத்த கிலேசமுழுதுந் தீர்ந்துமனமகிழ்ந் திருப்பையெனச்சொல்லியவுடன் சுவாமி அகஸ்தியர்தமக்கு உதவியாகும்பொருட்டு சம்பாதித்துவைத்திருக்கின்ற காவிரிப்புனல் இக்காவினிடத்தில் வருவதற்குக்காரணமென்னை அதனையுங் கிருபையுற்றுப் போதிப்பீரெனவேண்ட நல்லகாரியம் விரைவில் விநாயகமூர்த்தியைப்பூசித்துப் பலகாரவகைகள் பாற்சோறு பழவருக்கங்களைப்புஷ்டியாகப்படைத்துப்போற்றி வேண்டுவையாயில் அக்கமண்டலத்தைக் கவிழ்த்துவிடுவர் ஆகலால் தாமதஞ்செய்யாமல் விரைவில்முடிப்பையென்று இவ்வுபாயத்தினைக் குற்றமற்றகுணக்குன்றம்போன்ற நாரதர்போதித்தவுடன் மனவாட்டமொழிந்து களித்தவனாய் சூரபன்மனால்இழந்தபதியும் நிதியும் அரசும்பெற்றவனைப்போலச்சந்தோஷித்து சுவாமிகள்தயைசெய்து இவ்வரியமார்க்கத்தைக்காட்டியது இதனாற்கிறுதார்த்தனானேன் தேவரீர்கட்டளையின்படிக்கு அகஸ்தியர் கமண்டலத்திலிருக்கும்நதி இத்தலத்திற்பெருகத்தக்கதாகக் கணபதியை இதோபூசிப்பேனென்றவாக்கியத்தை நாரதர்கேட்டு அதுவேகாரியம் விரைவில் விக்கினகர்த்தனை வழிபடக்கடவையெனவாழ்த்தி அத்தலத்தைக் கடந்து தேவர்கள்போற்றும் பெருமையுடைய பிரமலோகத்துக்குப் போயினர் பின்புதேவேந்திரனும் பரிசுத்தனாய்க் கங்கையையுஞ் சர்ப்பங்களையும் பிறையையும் முடியிற்றரித்தருளிய சிவநாதன்பெற்றகணபதியின்வடிவை ஆகமவிதிப்படிக்குஸ்தாபித்துத் திவ்வியமலர்களினால்திருவடி

களில் அருச்சித்துச் சோடசவுபசாரங்களைச்செய்து முடித்தபின்பு கரு.
ம்பு தேங்காய் கினைமா தேன்முக்கனி பாகு உருண்டை தோசை வடை
அதிரசந் திரட்டுப்பால் பாற்சோறு பயறு கடலைமுதலிய சுண்டல் எள்
ளுருண்டைமற்றுந்தேவபோக்கியமாகிய பதார்த்தங்களெவற்றினையுந்தேடி
ச்சேகரித்து ராசிராசியாகப்படைத்து நிவேதித்து எமதிறைவனை வேத
வாக்கியங்களினால் பற்பலவாகப்போற்றுமுன்னிலையில் நீலகிரியையொத்
த வடிவைப்பெற்ற யானைமுகத்தினையுற்றபிள்ளையார் பலகோடிபூதப்படை
கள்சூழ்ந்து திசைகளதிரப்போற்றிவரப் பெருச்சாளிவாகனத்தில் எழுந்த
ருளிய காட்சியைத் தேவராசன்தெரிசித்தமாத்திரத்தில் திங்கிட்டுச்சரீர
ம்நடுங்கத் தியங்குவதை விநாயகர்தெரிந்து இந்திரனேபயப்படவேண்
டாம் பயப்படவேண்டாமெனக்கையமைத்தியபோது அச்சம்நீங்கிப் பே
ரானந்தவாரியில்மூழ்கினவனாய்ப் பூமியில்விழுந்து ஐயன்திருவடிகளிற்
பன்முறைபணிந்தெழுந்து விழிகளிற் போதநீர்பெருகத் திரோகபரவசப்
பட்டு மயிர்சிலிர்க்கக் கரங்களைச்சிரத்திற்கூப்பிப் பிரணவச்சுரூபியாகிய
கர்த்தனைப்பலவாகத்துதித்து நிற்கின்றவன்மீது கணேசர் கிருபாநோக்கம்
பாலித்து ஓதேவேந்திரனே உன்பூசனையை நாம்விருப்பமாய் அங்கீகரி
த்தோம் இனிஉனக்குவேண்டும்வரங்களைத்தருவோம் கேட்பாயென்றருள
மறுபடியுஞ்சேவித்து வாயைப்பொத்தி ஐயனேஎமதிறைவனாகிய சிவனு
தன் பூசனைக்குவேண்டும் புஷ்பங்களைத்தருவதாக இவ்விடத்தில் ஒருநந்
தவனம்வைத்திருக்கின்றனன் அது சலப்பசுமையில்லையாமல் அக்கினியி
ற்பட்டதைப்போலச் சூரியன்வெப்பத்தினால் வாடிவதங்கித் துகள்பட்டு
ப் பரமன் நுதல்விழியிற்பட்டுத் திரிபுரங்கள்சாம்பற்பட்டதைநிகர்த்து
க் காத்திற்பறக்கின்றது இம்மனக்கோட்டத்தினைத் தீர்த்தாட்சிக்கவேண்
டுமென்றுயிரக்கவிநாயகர்கிருபையுற்றவராய் நல்லகாரியஞ்சத்தியாதலங்க
ளிலிருக்குங்கங்கைகளைத்தருவிப்போமோ வானகங்கையேமுதலிய தீர்த்த
ங்களையழைத்துஉதவுவமோஅத்தோதக்கடலினைவரச்செய்வமோயிவற்றுள்
உனக்குவேண்டியதைச்சொல்வாயெனக் காட்சித்தபோது தேவேந்திரன்க
ரங்களைக்கூப்பிச்சுவாமி உலகங்களில்யிராநின்ற பிராணிகள்வேண்டியவை
அனைத்தையுந்தரவல்லபிரமன் விஷ்ணுபோற்றி வழிபடுதற்கரிய புராதன
க்கடவுளே இவை தேவரீருக்கு அரியனவோ யித்தீர்த்தங்களில் எதனையும்
வேண்டினவனன்று என்மனம் விரும்பியதொன்றைக்கேட்டருள்க உலக
த்திற்சிறந்த மேருச்சாரலைக்கடந்துவந்துசகலருக்கும் அதிகதுயரைச்செய்
திருந்த பாதகியாகிய அசமுகிபிள்ளைகளைச்கொன்றபாதகம் நிவாரணமாத
ற்பொருட்டுக் கோங்குதேசத்தைச்சேர்ந்து தக்கன் கெற்வத்தையடக்கிய
பரமசிவத்தின் பாதாரவிந்தங்களில்வழிபட்டிருக்கும் அகஸ்தியர்கமண்ட

யத்திற் காவிரியென்னுஞ்சிறந்ததீர்த்தமிருக்கின்றது தேவரீர்கிருபையுற்று
அவ்விடத்துக்கெழுந்தருளி அக்கமண்டலத்தைக்கவிழ்ப்பீராயின் அந்த
நதிபெருகி யிப்பூங்காவிற்பாயும் அதனால் தமியேன்குறைகள்நீங்கிக் கிரு
தார்த்தனாவேனென்று தேவராசன்வேண்டப் பிறையும் வீரபட்டமும் விள
ங்கும் மத்தகம்பொருந்தியயானைமுகத்தினைப்பெற்ற விநாயகர்நகைத்து
யிக்காரியத்தைமுடித்துத்தருவோமென்றருளி இந்திரனைநிறுத்திவேகமா
ய்ச்சென்று சமீபித்தவுடன்காக்கையின்உருவினைத்தாங்கி அத்தீர்த்தத்தை
ப் பரமன்கடாட்சித்தவிதமும் அதற்கநித்தகாரணத்தையும் யூகித்தறிந்து
பறந்து அகஸ்தியர்கமண்டலத்தின்கண்வீற்றிருந்ததறுவாயிற் கும்பமுனி
க்குக் கணபதியென்பது தோற்றமற் காக்கையிறக்கியதென்றெண்ணிக்
கரத்தைநீட்டிப் போ போவெனத்துரத்தியபோது தேவரையலைத்த கயமு
காசூரனைக்கொன்றவிநாயகர் குண்டிகையைத்தள்ளித் தேவராசன்கோரிக்
கையின்படிக்குப் பூமியிற் பெருகக்கடவையென் றனுக்கிரகஞ்செய்ததறு
வாயில் பூர்வத்திற் திருக்காஞ்சிப்பதியினிடத்து நோற்றிருந்த பார்வதி
யார் பத்திமையைவிளக்கப் பரமசிவந்திருவுளங்கொண்டுவரவழைத்த கம்
பாநதியைப்போலக் காவிரிப்பெருக்கானது மண்விண்ணெங்கும் நடுங்க
ஆர்ப்பரித்து உலகத்திற்சென்றது பின்பு உமைமைந்தனாகிய விநாயகர் காக்
கைவடிவினைமாற்றி வேதபாராயணராகிய பிராமணப்பிள்ளைவடிவுகொண்
டுபோவதைத்தவங்களிற்சிறந்த அகஸ்தியர் கண்டு பிரளயகாலருத்திரனைப்
போல உருத்தெழுந்து யிவ்வஞ்சகன் தேவனோ அவுணனோ அரக்கனோ
யின்னானெனத்தோற்றவில்லை அரிதிற்பெற்றுயிதுபரியந்தம்போற்றிவந்த
நதியைக்கவிழ்த்ததுமன்றியில் அம்மம்ம நம்மையும் மதியாமல் அகந்தை
கொண்டு கெம்பீரமாகப்போவனோ எத்திறத்தனாயினும் யிவன்வலியை
யிந்நிமிஷத்திலறிகின்றனனென்று வுருத்து துடர்ந்தபோது மெய்வழி
பாடுசெய்பவர் அல்லலை நீக்கியாளும் எமதிறைவன்பயந்தவனைப்போலவே
கங்கொண்டு ஓடுமுன்னிலையில் அகஸ்தியர் யிரண்டுகரங்களையும்பிடித்தமா
க்கிக்கொண்டு தலையதிரக்குட்டநினைந்து பின்பற்றிவரக் கணேசர்ஒருதிரு
விளையாடலைநினைந்து சமீபித்தவனையொத்துக் காட்டியும் வானத்தில் உல
வியுந் திசைகளிற்பாய்ந்தும் பின்பு பூமியிற்றோற்றியுங் கரத்துக் கெட்டு
பவனைப்போலநின்றுந் தூரத்திலிலகியும் யிவ்விதமாகச் சகலருக்கும்
மேலாகிய விநாயகர் அகஸ்தியர் கோபித்துத்துடரவெங்கும் உலவித் தப்
பித்துக்கொண்டு திரிகின்றதறுவாயிற் கும்பமுனிவன் யிளைத்து வலியடங்
கிச்சோர்ந்து யிவன்மாயவல்லபத்தின் முயற்சியை யளவிட்டறியப்படவி
ல்லை யினி யென்னசெய்வேனெனக்கவலையுற்று வருந்துவதை விநாயகர்தெ
ரிந்து கிருபையுற்றவராய்த் தமது நிசதெரிசனத்தைக்காட்டினர் அக்கோல

த்தை முனிவன்கண்டவுடன் திடுக்கிட்டுக்கலங்கி ஐயையோ யித்திருவிளையாடலைச்செய்யக்கணேசரோ திருவுளங்கொண்டு எழுந்தருளிய பிறையோசனத்தைத்தெரியாதவனாய் நாயினேனுந் துரத்துவதோவென்று யேங்கிவருந்திப் பிள்ளையாரைக் குட்டக்குவித்தகரங்களைநீட்டிக் கோடையிடியானதுபற்வதத்தின்மீதுவலிகொண்டு யிடைவிடாமல்விழுவதைப்போலத்தமது நெற்றிவருந்தமாறிமாறியிருகன்னங்களிலுங்குட்டுகின்றதறுவாயில்தாரகப்பிரமசோரூபியாகிய யானைமுகக்கடவுள் மிகுத்த தயாரசத்துடன்பார்த்து ஓ ரிஷியேஎன்னசெய்கின்றனைஉன்கருத்தைச்சொல்லுமென்கேழ்க்கச்சுவாமிதேவரீரைப் பிராமணப்பிள்ளை யென்றெண்ணிச் சிரத்திற் குட்டநினைந்தனன் அப்பாதகந் தீரத்தக்கதாய் யித்தெண்டனையைச் செய்துகொள்ளுவேனென விண்ணப்பஞ்செய்ய நகைத்து அகஸ்தியரோ வருந்தவேண்டாம் நில்லும் நில்லுமெனக்கையமத்தியபோது குட்டுவதைத்தவிர்ந்து கற்தன்பாதாரவிந்தங்களிற் பலமுறை விழுந்தெழுந்து அவர்குணதிசெயங்களைத் துதித்துத்தேவரீர்பெருமைகளை எவ்வளவுந்தெரியாமற்செய்தகுற்றங்களிற் சிறிதும்நினையாமல் ரட்சிக்கவேண்டுமெனப்போற்றுமுன்னிலையில் விநாயகர் பரிந்து ரிஷியே யிதனைக்கேழ்ப்பாயாக தேவேந்திரன் சிவபூசனைசெய்வதற்கு ஒருநந்தவனமுண்டாக்கியிருந்தனன் யிக்காலத்தில் நீர்ப்பசுமையற்று அக்காவானது வாடிச்சோர்ந்து துகள்படுவதைக் கண்டு வேறுகதியில்லாதவனாய் நம்மைப்பூசித்துவேண்டினன் ஆகலாற் காக்கையாகிவந்திறங்கி உன்குண்டிகையிலிருந்த நதியைக்கவழ்த்து அத்தலத்திற் பெருகவுங்கட்டளையிட்டனம் அதற்குப்பொறுமல் நீ நமக்குச்செய்ததுகளைச் சற்றுங் குற்றமாக மனதில் நினையாமல் அவையனைத்தையும் உவப்பாகவே கண்டுமகிழ்ந்தனம் யிவையனைத்தும் நமக்கொரு திருவிளையாடலாகுமல்லது கோபமில்லை நீண்ட சடாதரராகிய எம்மையனுக்கு நீர்மிகுத்தபத்தனாதலால் நமக்கும் அவ்வாறே யாவையினியுனக்குவேண்டும வரங்களைத் துரிதமாகக்கேளுந் தருவோமென்றருளக்கேட்ட அகஸ்தியர் மனக்கவலையைப்போக்கிக் கற்தன் திருவடிகளிற் சேவித்துத் தேவரீர்கிறுபைக்கும் பாத்திரனாய்ச் சகலவினைகளையும் நீங்கிப் பிழைத்தேன் யின்மேலுந் தமதிடத்திலும் விஷ்ணுதேடிக்காண்பரிய பரமசிவன் திருவடிகளிலும் மிகுத்தபத்திவிளைந்து வழிபடும் பேற்றினைத்தரவேண்டும் யிதனையே பிறியமாகக் கோறுகின்றனன் யிதுவன்றியும் யிக்காலத்தில் நாயினேன்செய்கையைப்போலவே யாவராயினும் யின்மேற்பட வழிபட்டுக் குட்டிக்கொள்வராயின் தாயையொத்துப்பரிந்து காட்சிதந்து ரட்சிக்கவும் வேண்டுமென மூத்தமிழ்த் திறங்களைவிரித்த அகஸ்தியர்சொல்ல விநாயகர்களித்து அவ்வாறேதந்தனம் யிதுவன்றியும் உன்மனதில் விரும்பியவைகளையுங் கேட்டுக்

சொன்னாலையென்றருளச் சுவாமி அடியேன் அரிதிற்பெற்று கமண்டலத்திலடைத்திருந்த தீர்த்தத்தைத் தேவரீர்கவிழ்த்ததனால் ஒருகணமும் நில்லாமல் முற்றும் பூமியிற்பெருகிப்போய்விட்டது அனைத்துமாய் உயிராய் உலகம் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பரமன் தயைசெய்து கடாட்சித்த காவிரியைப்போன்ற பவித்திரமாகிய தீர்த்தம்யான் மூழ்கத்தக்கதொன்றை இனி எங்கேனுங்கிடைக்கவல்லதோ ஆதலால் தேவரீர் இருடையுற்றக் குற்றமற்றநங்கையை அடியேனுக்குத்தர வேண்டுமெனப்போற்றுந்தறுவாயில் மேகமானது சமுத்திரத்திலிறங்கியதைப்போலத் தமதுதுதிக்கையினை நீட்டிக் காவிரிப்பெருக்கின் சலத்தினைக்கிரகித்து அகஸ்தியர் கமண்டலத்தில் விட்டனர் மற்றப்பிரவாகமனைத்தும் பூமியிற்பெருகிப்போயிற்று குண்டிகையிற்பூரித்த நீரனைத்து பழையபடிக்கு ஒலித்து நிறைவெய்தியதைக் கும்பமுனிவர் கண்டு அற்புதமடைந்து ஆனந்தபரவசராய் ஓடிப்போகின்றபுனலிற் சிலவற்றை யிதனிற்சொரிந்தனர் அஃது எதாய்ப்பிறகாரத்தோற்றநின்றது வலிலவராயினும் யாவர் யிப்படிச்செய்வர் பிரமன் விஷ்ணுமுதலானவர் வந்தித்துப்போற்ற அவர்கள் கோரிக்கையின்படிக்கு வரங்களைத்தந்தருளியும் முதன்மையாகிய பிரணவவாக்கியத்தின் பொருளாகவும் விளங்கும் நமதிறைவனுக்கு யிச்செய்கை அரியதோவெனக்கொண்டாடி விக்கினேஸ்பரர் பாதாரவிந்தங்களில்வணங்கி நாயினேனுக்கு யாதொருகுறைகளுமில்லாமற் சுவழ்ந்தோடிய கங்கையினை உதவிரட்சித்தீர் மூலகாரணக்கடவுளே புத்திஹீனனாகியசிறியேன் தேவரீர் பரிபூரணகடாட்சத்தினால் வளங்களனைத்தினையுங்கிடைத்திட்டேனன் யித்தினமுதற் சுவாமிகளைச்சிந்தித்ததறுவாயில் மறவாமல் எழுந்தருளிரட்சிக்கவேண்டுமென்றிரக்க அவ்வாறேசெய்யக்கடவோமெனத் தேற்றிப் பலபூதகணங்கள் சூழ்ந்துவரப் பத்திவான்களைப்பாதுகாக்கும் பரமசிவகுமாரன் சகலருங்களிக்கமறைந்தனர் அத்தறுவாயில் குறுமுனிவன் விம்மிதனாய்ச்சராசரப்பிரபஞ்சங்களெவற்றினும் பொருந்தி நடிப்பிக்கும் ஆதிதேவபுத்திரனாகிய விநாயகர்திருக்கோலத்தைத் தியானித்துப்போற்றித் தமதுகமண்டலத்திற்குமிழியலைந்திருக்குங் காவிரியைப்பார்த்து நகைத்தவராய்த் தம்மைத்தொடர்ந்த பிரமஹத்தியை நீக்கிப் பவித்திரனாகிய கோங்குதேசத்தைக்கடந்து தென்திசையை நோக்கிப்போயினர்.

திருக்குற்றாலப்படலம்.

சவுனகாதிரிஷிகளே கேட்பீராக. அகஸ்தியர் யிவ்வாறு கோங்குநாட்டைநீங்கி புறவத்திற்கலையாயுஞ் சொல்லவொழுந்த ஆலகாலனி

த்தைப்பரித்துண்டு பிரமன்முதலிய தேவர்க்கள் பத்தினிமார்பொற்றாலிகளைக்காத்தாண்ட பரமேஸ்பரன் புகழினைத்துதித்தவராய்க் காளமேகவண்ணனாகிய விஷ்ணுவாசஞ்செய்யுங்குற்றாலத்தைச் சேர்ந்தனர் அப்பதியில் அச்சுதன்வாசஞ்செய்யும் ஆலயமொன்றுண்டு பூமண்டலவாசிகள் அம்மம்ம யிதையொத்த சிறந்தகோயில் பிரபஞ்சத்திலெங்குங்கிடையாதெனப்புகழ்வதுமன்றியில் தெய்வநாட்டினரும் அவ்வாறே கொண்டாடுவர் அத்தலத்திலிருக்கின்றவயிணவப்பிராமணர் தமது சாஸ்திரக்கிரமங்களை ஆராய்ந்தமோகத்தினாற்றமதுமதசாம்பிறதாயமே மேம்பட்டதெனக்கருதி யிறுமாந்து அவ்வகந்தையினால் எமதிறைவனாகிய சிவனடியவரைக்கண்டால் ரவுத்திராகாரமாகக்கோபித்து யிகழ்ந்து அவர்கள்முகத்தைப்பார்ப்பதும் மகாபாதகமென்று இவ்விதத்துற்மார்க்கங்களை யனுசரித்தவர்களாய் வேதபாரகரென்ப தொருசொல்லைமாத்திரந்தாங்கி தமதுநெறிகளிலுங்கிறமமாக நடத்துகொள்ளாதவர்களாய்வீறியிருப்பதை அகஸ்தியர்தெரிந்து இவர்கள்மதாங்காரத்தை அடக்கவெண்ணி அப்பழம்பதியின்வீதிகளைக்கடந்து விஷ்ணுவெழுந்தருளும் ஆலயத்துக்கருகில்வருவதை அத்தலத்தில்நெருங்கியிருக்கும் வயிணவர் தூரத்திற்பார்த்தவுடன் சென்மவயிரிகளைக்கண்டுபதைபதைப்பவரைப்போலப்பெருமூச்செறிந்து கோபித்தவர்களாய் இதனைச்சொல்லுவர் காணச்சகியாத ருத்திராட்சத்தையுந் திருநீற்றையுந்தரித்தவனுதலாற்றேவரனைவருங்காண உலகத்திற்பிச்சையேற்ற சிவனுக்கடிமையாகும்நீ பவித்திரமாகிய இத்தலத்தின் எல்லையையும் மிதிக்கப்படுமோ உன்கர்த்தன் ஓடேந்தினான் நீயுங்கரத்திற்கோலையுங் குடுவையையுந்தாங்கினைபுத்தியீனனே எமதுபெருமாள்வீற்றிருக்குந்திவ்வியதேசத்தில் நில்லாமற்சீக்கிரமாய் அப்புறப்பட்டுபோவையெனத் துரத்துகின்றவர்மீது அகஸ்தியர் கோபியாமல்நகைத்து ஓபிராமணரோ வேதமார்க்கங்களை யிகழ்ந்தநீங்கள் இவ்விடத்திலிருப்பதைத் தெரிந்தவனுமல்ல யாருஞ்சொல்லக்கேட்டதுமில்லை சற்சனர் யிருப்பதாக நினைந்துவந்தோம் - உங்கள் குணநிசயங்களைத் தெரிவேனாயில் வரவும் நினைக்க மாட்டேன் கோபிக்கவேண்டாம் இதோபோய்விடுகிறேனெனச்சொல்லியும் அப்பாதகர் மனம்பொறாமல் பாஷாண்டிக்கடிமைப்பட்ட நீயிச்சிறந்த ஸ்தலத்தில்வந்ததே மகாபாதகமாகுந் துரிதமாய்நடந்துவிடும் நடந்துவிடுமென்று முடுக்குகின்றவர்களைப்பார்த்து சத்தியமாகிய வசனத்தையே சொன்னீர் மேலும் பூர்வாசிரியர்களினாற் பிரசித்தப்படுத்திய சாஸ்திரங்களின் துணிபும் இதுவேயாமென்றதக்கன்மரபில்வந்த அப்பிராமணரை நீங்கிவருகின்றவர் ஞானவான்களாற் புகழப்படுந் திருக்கயிலாயவரை,

வைக்காவல்கொண்டிருக்கும் நந்திதேவர் உத்திகமலையாகிய பிரம
தேவன் தூருவாசன் பிருகு கவுதமன் கண்ணுவன் ததீசி இத்தியாதிய
தபோநிதிகள் சபித்தகொடுமை வீண்போவதில்லையென நினைந்து மன
ம்பொருந்தவராய் உயிருக்குயிராய்நின்ற பரமேஸ்பரனையிகழ்ந்துவசை
பேசிய இவ்வயிணவர் மயக்கவாஞ்சையிற்பட்டிருக்கின்ற அசந்தையை
வேருடன்களைவேனெனக் கிருபைக்கடலாகிய அகஸ்தியர் நிச்சயித்து
பாதரசச்சுவடுபட்டபொன்னைப்போலமாயைவிஞ்சைவலியினால் தூவாத
சத்திருநாமம் நெத்திமுதலியாங்கவுந் துளசிமாலை மார்பிற்புரளவும்
பாகவதவடிவுகொண்டு விஷ்ணுவுக்குவகந்ததாசனைப்போலத் திரும்பிதூ
ரத்தில்வருவதை அவ்வாலயத்தைச்சூழ்ந்து நெருங்கியிருக்கின்ற வயி
ணவர்கண்டவுடன் இவர்மகத்துவாகக்காணுகின்றதென்றெண்ணிஎதிர்
கொண்டு சுவாமி தேரீரைதெரிசிக்கமுன்னம்என்னதவஞ்செய்தனமோ
வெனப்போற்றி பாதங்களிற்சேவிக்க நாராயணனுக்குப்பிரியாகவென
வாழ்த்தித் தம்மைப்பணிந்தவரைப்பார்த்து ஓபிராமணசிரேஷ்டரே நீங்
கள் ஆதிமூலமாகிய விஷ்ணுவினிடத்தில் மிகுந்த அன்புள்ளவர்களென
பலர்சொல்லக்கேழ்விப்பட்டு அதைக்கண்டுகளிக்கநினைந்து இத்தலத்தி
ல்வந்தனம் இப்போது திஷ்டாந்திரமாகத்தெரிந்துகொண்டதன்றியில் இப்பூ
மண்டலத்தில்உங்களுக்குச் சமானமானவர் யாவருமில்லையெனத்தெளிந்
தனம்இப்படிக்கொத்தவரை தெரிசித்தமுயற்சியினால்நாமும்பேறனை
வைக்கிடைத்தோமெனக் கொண்டாடிவேதபாரகரே மோட்சவீட்டையெ
ளிதிற்றரவல்ல கிருபாநிதியாகிய அழகர்கோவிலில்யாம்வெகுகாலமாயி
ருந்தோம்இப்போது அத்திகிரியிற்சிலதினந்தவஞ்செய்திருக்கநினைந்து
போகின்றயாம்நமது பெருமாள் எழுந்தருளியகோயிலித்தலத்திலிருக்
கின்றதெனமகத்துக்களாற்கேழ்விப்பட்டு அச்சந்நிதனைத்தெரிசித்துப்பர
விப்போகும்விருப்பத்தினால் வந்தோமென்றவுடன் அவர்கள் கைவிரலி
னொன்றினுற்சுட்டி அதுதான் திருமாலிருக்கையெனக்காட்டக் கரங்க
ளைக்கூப்பித்தொழுது விஷ்ணுவெழுந்தருளிய ஆலயத்திற் றுரிதமாகப்
போய்ப்பத்திவினையத்துடன் மும்முறைவலம்வந்து செந்தாமரைக்க
ண்ணன் பாதாரவிந்தங்களிற்பணிந்துபோற்றித் திவ்வியப்பிறபந்தபா
சுரங்களை ஓதிநிற்கின்ற அடியரைப்பார்த்து இத்தேவனைவழிபட்டுக்கட
த்தேற நமதுள்ளம் விரும்புகின்றதாதலால் அதற்குவேண்டுந் திருமஞ்
சனமே முதலிய திரவியங்களை விரைவிற்சேகரிக்கக்கடவீரென்றனர் அத
னை அருச்சகராகவிருக்கின்ற வயிணவர்கேட்டு சந்தோஷித்தவராய் நல்ல
காரியம் அவ்வாறே தரக்கடவமென்று சிலரோடி சுத்தோதகம் பீதாம்
பரந் திவ்வியபரிமளமிகுத்த துளசிதளம் புஷ்பமாலைகள்சுகந்தம்விசுஞ்

திருக்குற்றலப்படலம்.

சந்தனக்கலவை புனுகு சவ்வாது தூபதீபநைவேத்தியமாதியவகைகளை வேதவிதிப்படிக்குத் திரட்சியாகக்கொண்டுவந்து குறுமுனி முன்னம் வைத்து சுவாமி உமது திருவுளப்படிக்குப்பூசனையை முடிப்பீரெனச் சொல்லிய வயிணவக்கூட்டத்தினைப்பார்த்தருளி ஓ பரமபாகவதரோ இதுபரியந்தங்கண்ணனை நீவிர் வழிபட்டிருந்தீரன்றோ யித்தினம்யாம் அத்தேவனை அரிச்சிக்கும் முறைமைகளையாவருந்தெரிசிப்பீர்களென்று திருமால்வீற்றிருக்குமிடத்திற்போய்ப் பச்சறுகு கொன்றை கங்கை பிறை சற்பமுதலியவற்றைத்தரித்துவிளங்கும் அழகிய சடாமண்டலதாரியாய் எமதிறைவனுமாகிய சிவபிரானைப்பத்திவிசுவாசத்துடன் தியானித்து தமதுகுறிய கரங்களை உலகையளந்த நாரணக்கடவுளினது திருமுடியின் மீதுவைத்து குறுகுகுறுகுகுற்றலாவென்றழுத்திச் சிவந்தஅரக்கினுற் செய்த பாவையானது அக்கினிசம்பந்தப்பட்ட காலத்தில்உருகுமாறுபோலக்குழையச்செய்து திரட்டியுருட்டிச் சிவலிங்கவடிவமாக்கிப் பொற்றமனைப்பீடத்தினுறுன பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் எக்காலத்துந்தேடிக்காண்பரிய பரப்பிரமவஸ்துவை ஸ்தாபித்து பஞ்சாட்சரமுதலிய சகஸ்திரத்திருநாமமந்திரங்களையெடுத்து வாயார்த்துதித்து தாங்கொண்டிருந்த வயிணவக்கோலத்தினைமாற்றி பழையபடியே விபூதி ருத்திராட்சம்விளங்குஞ் சிவவேடத்தினைத்தாங்கித் திருமஞ்சனமுதலிய திரவியங்களை மந்திரபூர்வகமாகச்சுத்திசெய்து சிவனாமங்களையோதி அரிச்சிக்குமுன்னிலையில் அவ்வாலயத்தினிடத்திருந்த வயிணவப்பிராமணர் இச்செயல்களைப்பார்த்துச் சரீரம்புழுங்கக்கோபித்து ஒருவரொருவர்பார்த்து யிதனைச்சொல்லுவார்கள் கண்டீர்களோ யிம்மாயப்பிராமணனைக்காணுமிடத்து வடிவில்மிகவுங்குறியவன் திரிபுரதகனனை உருத்திரனைவழிபடும் பாஷாண்டிக்கோலங்கொண்டு முன்னம் யிவடம்வந்தான் யாங்கண்டு யிகழ்ந்து துறத்தச்சற்றும்நில்லாமல் அஞ்சினவனைப்போல வோடினவன் மாயவித்தையினால் பாகவதவடிவினைப் பெற்று அதற்குரிய நடைநொடியாவனைகளையுங்காட்டி மீட்டும்வந்து வஞ்சகசித்தனாய்இச்சிறந்தசமையத்தினையும் ஸ்தலவிசேஷத்தினையும்நமது திருமாலின்கோலத்தினையும் ஏககாலத்தில் அழித்தான் ஐயையோயிதற்கென்செய்வோம் மிகுத்தமாயன் வஞ்சகன் சூதன் தப்பித்துக்கொண்டுபோமுன்னம் பிடியுங்கோள் கட்டுங்கோள் அடியுங்கோளென்று பலபலவசைகளைப்பேசிக்கொண்டு சூழவளைந்து மேலிட்டுப்பிடிக்கவருவதை அகஸ்தியர்கண்டுகோபித்து கண்களிற்றீபொறிசிதற நோக்கிக்கடலினடங்கிநின்ற வடவாமுகாக்கினி மேலிட்டெழுந்ததைப் போல முனிபுங்கவனுக்குண்டாகிய சீற்றக்கனலதிகரித்துப்பரந்து பலதிக்கினு

ம்வுருத்துவந்த வயிணவனைச்சுற்றிக்கொண்டுதிரோகங்களைச்சுட்டுப்பொரித்துக் கரித்து வாட்டியலைத்துத் தூக்கித் தொடர்ந்தமாத்திரத்திலவ்வழப்பிராமணர் என்செய்வர் அக்கொடுமைக்குத் தாபரித்திருக்கப்படாமையால் அத்தலத்திலும் நில்லாமல் பூர்வீகமாயிருந்த பதியையும் விழந்து கைகாலொடிய பலதிக்கிலும் யிறைந்தோடி ஒளித்தனர் -இவ்வாறு கடினசித்தமுடைய வயிணவப்பிராமணர் முற்றுந் தேசாந்திரிகளாய்ப்போயினர்- திருக்குற்றாலமானது அத்தினமுதல் விஷ்ணுஸ்தலமென்பதுமாறி சிவஸ்தலமாயிற்று குறுமுனியும் ஆதிகற்தனாகிய சிவக்கொழுந்தைவேத விதிப்படிக்கு சோடசவுபசாரங்களுடன் அர்ச்சனைசெய்து வணங்கிப்போற்றிவிடைபெற்று அப்பதியினை நீங்கி வேறுபிறதேசத்தினைநோக்கிப்போய்ப் பலதேயங்களைக்கடந்து சடையில் பொற்சன்னங்களுடன் நவமணிகளினையும்வாரிப்பெருகும் அருவிகள் சூழும் பொதியபர்வதத்தினைச்சேர்ந்து ஓரிடத்தில் அமர்ந்தவராய்ப்பரமேசுரன் திவ்வியசரணாரவிந்தங்களைக்கருதி அரியதவவிரதங்களினைச் செய்திருந்தனர் கட்டேர்கமொளா சவுனகாதிரிஷிகளேயிதுபரிய நீரம்மகரந்தங்களைவீசி தேன்களையிறைத்து திசைதிசைக்குப் பரிமளிக்குந் திவ்வியமலர்களைவாய்ந்த சோலைகள் தோப்புகள் நந்தவனங்கள்முதலிய சிறப்புகள்மலிந்திராநின்ற தென்மலையில் அகஸ்தியர் சேர்ந்தவனாயிற் செற்றனம்- இனி தேவேந்திரன்பரமசிவனை வழிபடுதற்குயோக்கியமாகிய பலவகைப் புஷ்பங்களை அலர்ந்திருக்கும்பூங்காவிற் காவிரிநதிபெருகியவிதமும் மற்றையசரித்திரங்களினையுஞ் சொல்லுவோமென்று சூதபுராணிகர் ஆரம்பித்தனர்.

இந்திரன்சிவார்ச்சனைப்படலம்.

சிவகுமாரனாகியவிநாயகமூர்த்தியானவர் ஆதியில் தேவேந்திரன்கோரிக்கையின்படி காக்கையுருக்கொண்டு அகஸ்தியர் கமண்டலத்தின்மீதிறங்கிக்கவிழ்த்தகாலத்தில் அதனிடத்திருந்தகாவிரி பூமியின்கண் பெருகியதோற்றமெப்படியிருந்ததெனில் நீக்குதற்கரியகாமக்குரோத லோபமத மாற்சல்லியமென்னுந் தீயவையினைக்கடந்து நன்மார்க்கத்திற்செல்லுமுன்னிலையில் ஞானாசிரியனைச்சேர்ந்து பஞ்சாட்சரவுண்மையினையனுக்கிரகிக்கச் சிவபதவியைச்சேரும்பிராணிகளைப்போல லோகோபகாரமாகப்பாய்ந்தும் மந்திரவலியினாலொருவன் குடத்திலடைக்கப்பட்டிருந்த சர்ப்பமானது தடையைநீக்கிவிட வெளிவந்தோடுவதைப்போப்பவேகங்கொண்டு பாய்ந்தும் அஞ்ஞானஒழுக்கத்தினை நீக்கவல்ல

௨௯௨ இந்திரன்சிவார்ச்சனைப்படலம்.

சிவபிரானருளிய ஆகமசாத்திரமார்க்கத்தினையும் வேதஒழுக்கத்தினையு ங்கிரமப்படிக்கு அனுசரித்து நோக்கம்பெற்றவர்பெறும்ஞானவாரியி னையும் எமது சற்குருவாகியபரமன் கிருபாசமுத்திரத்தினையும்போன்று ம துரமிகுந்தசலசம்பத்தியாகியகாவிரியானதுபெருகியும்அளவுபடாதசத்த சாகரங்களானவைபூமியினால்அணைபட்டிருந்த தடையைநீக்கக்கருதிஅவ ற்றின்கரைகளைக்கரைத்து ஏகமாய்ப்பெருகிஓவென்னுமிரைச்சலுடன்ப ரவியதைப்போன்று பூமியெங்கும் பரந்துஆர்ப்பரித்துக் கலங்கியோ டியதுகேட்டோர்களோசவுனகாதிதவத்தோரேதெளிந்தறிகளோமாதிபிரா னின்ற கட்டளைத்தினைப்பிரமாணமாக உள்ளங்கையினேற்று ஆபோசன ஞ்செய்ததவச்சிரேஷ்டரான அகஸ்தியர் சிவபூசனைக்குதவியாசயிச்சித்து வேண்டியகாலத்தில் தேவாதிதேவனாகிய பரமன் கிருபையுற்றுக்கொடுக் கசமுத்திரத்தினையேற்றபெருமைபெற்ற கரத்திற்றாங்குங் கமண்டலத் திற்பரிக்கப்பெறுமாயின் அந்தீர்த்தத்தின் பெருமையினைஎன்போலிக ளால் உவமித்துப்புகழவும்போதுமோ யிதுவல்லாமல் பழையபடிக்கு க்குறுமுனிவந்தனன் மீட்டும்பொசித்துவிடுவனோவென்றுசமுத்திரமா னது பயப்பிரந்திகொண்டு யிரைந்து பலமுகங்களாக அளவுபடாமல் பூமியின்கண்பரந்ததையொத்துத் தழைசெறிந்தசோலைகள் நந்தவனங் களாதியாக வேருடன்பறித்து வாரி ஒலித்துப்போகிய காவிரிவெள்ளமா னதுசந்தனம் அகில்விருட்சங்களையுஞ்சங்கினங்களையும்முத்துகளையுங் கவரிகளையும் மதயானைத்தந்தங்களையும் பொற்சுண்ணங்களையும் மணிவ கைகளையும் அலைகளினால் மோதிக்கொண்டுபோகும் பெருமிதத்தினை யோசிக்குமிடத்து வருணராசன் பித்திரவியங்களனைத்தையுந் தேவேந் திரனுக்குப் பெருமகிழனுப்புவதையொக்கும் இஃதன்றியுந் தேர்களை ப்போலப் பாரித்தோங்கியமலைகளையும் மதயானையினங்களையும் வேடர் முதலியமனிதரையும் அலைகளையொத்துத்தாவுங்குதிரைக் கூட்டங்களை யும் அணிபடவாரிக்கொண்டுவிண்ணகத்தைத்தாவிவேகமாய்ப்போவது சூரபன்மன் கோபித்துத் தேவராசன்மீது சண்டைகொடுக்க ஏவியசே னாசமுத்திரப்பெருக்கையும்போன்றது இவ்விதசிறப்பினைக்கொண்டு ஆ காயத்தினையளாவ அலைகளைவீசிப் பலகாதவெல்லையளவையிற்பரந்து பூ மியைமூடி கிழக்குத்திசையினைநோக்கிப் பெருகுங்காவிரிவெள்ளமான து தேவேந்திரன்வாசமாய் சிவபிரானைவழிபட்டிருக்கும்வனத்தில் பரி மள புஷ்பவகைகள் மலிந்திராநின்ற பூங்காவிற்பாய்ந்து வாடிநின்ற நந்தவனங் குளிர்ந்து பசுமையாகத்தோற்றுவதை மனவாட்டத்துடன் வருந்தியிருக்கின்ற தேவேந்திரன் கண்டு மனவெழுச்சிபெற்றவனாய் ஆன ந்தக்கூத்தாடி திரோகங்குலுங்கநகைத்து எமது சற்குருவாகியபரமசிவத்தின்

அருச்சனையானது குறைவறநிறைவெய்து மென்னும் மகிழ்ச்சியினாற்பரமனையும்விநாயகமூர்த்தியையும்வேதவாக்கியங்களினாற்றுதித்துப்பாதகமலங்களைத்தியானித்துவணங்கிச்சலைபற்றானது மகேந்திரச்செல்வச்சிறப்பினைப்போக்கிநீங்கரு திரிலோகவாழ்வினை முற்றிபுவனங்களனைத்திலும்புகழ்ச்சகலசிறப்பினையும் பெற்றுவிளங்கும் பொன்னுலகவாழ்வினையும்பறித்துக்கொண்டதுமன்றிப்பிற்றானது பிராணனுசகும்பிறுநிலைபத்தேடியிருக்கின்ற சூரபன்மனைச்செயித்துத்தலைமை ஆயிஸ்வரியங்களைப்பெற்றவனைப்போல அளவற்றசந்தோஷிக்குழக்கயனுய்முகமலர்ந்திருந்தனன் ஒ ரிஷிகளோ அந்தருணத்தில் இந்திரன் கொண்டமகிழ்ச்சியின்பெருக்கினை யிவ்விதமென்று யாவராற்சொல்லப்படும் பகைநீக்கத் தனவிடத்தில் ஏழ்நிலவனை முத்தியிற்சேர்க்கவல்ல மகத்துவமுள்ளகாவிரிப்பெருக்கானது பாய்ந்தமாத்திரத்தில் தேவேந்திரன் மனதைப்போலவாடிச்செவிப்பற்றிருந்த பூங்காவானது அந்நிமிஷத்திற் தழைத்துத்திரோகத்தினைவாட்டும் பசிப்பிணியினுல் வாடியிருந்தவருக்கு பெறுதற்கரிய தேவாமுதந் தற்செயலாய்க்கிடைத்துண்டு களித்ததைப்போலக்குளிர்ந்துதளிர்த்து நின்றதன்றியும்வனத்திற்பாரியமேகங்கள் பொழியுந்திவலைகளின்பரிசம்பட்டவுடன் காட்டிடைதி ஒளிர்கின்ற விருட்சங்கள்புதலைகள் கொடிகள் முதலானவை தளிர்த்து விளங்குவது போல தேவராசனைத்தகாயிற் றங்கப் பூஞ்செடிகள் தழைத்துக் கிளைத்துப்புஷ்பித்துபரிமளித்து தேனைச்சொரிந்து நின்றன அவற்றுள் வானத்தையளாவவளர்ந்தோங்கியிருக்கின்ற புன்னைவிருட்சங்கள் முற்றிலும்மலர்களையரும்பி நின்றகாட்சியானது மகாவிஷ்ணுவானவர் பிரகாசிக்கருக்கும் முத்துத்தாழ்வடங்களைத் திரோகமுற்றிலுமணிந்திருப்பதைப்பொருதுங் குளிர்ந்து பசுந்தயிலைகளைவாய்ந்த புன்னைமரங்கள் பார்ப்பதற்கழகாக கிளைத்திருக்குங்கிளைகளொடியப் புஷ்பித்ததோற்றமானது பற்பல நட்சத்திரக்கூட்டங்கள்சொலிக்க ஆகாயத்திலிடத்தில் மேகசாலங்கள் விளங்கியதைப்போன்றுங்கீதங்களைப்பாடியலவும் வண்டினங்கள் முகரப்படாத திட்சணியமுள்ள சண்பகத்தருக்கள் மலர்ந்திருப்பது பொன்னிறைற்செய்யப்பட்ட மலர்களைத்தாங்கிநின்றதைநிகர்க்கும் மேகங்கள் தவழுமுன்னதமுள்ளதாக வளர்ந்திருக்கும் பாதிரிமரங்கள் வண்டினங்கள்தொனித்திறங்கித் தேனையுண்ணப்பூத்திருப்பது வசந்தகம்மியன் அவ்வண்டினங்களுதம்படியாகச் செய்துவைத்தபல சிறுசின்னங்களைப்போலத்தோற்றவும் வானத்தைத்தாவவளர்ந்திருக்குங் கோங்குத்தருக்கள் பூத்திருப்பது ஆகாயத்திலிவிளங்குஞ்சூரியசந்திரர் நட்சத்திரங்களின் அழகைப்பார்ப்பதற்காக பூமிதேவியானவள் பலகண்ணாடிகளைத் தொ

ருத்துவைத்ததையொத்தும் பொன்னையொப்பவிளங்கும் மலர்களை பு
ஷ்பித்திராநின்றகொன்றையும் அழகிய பூக்களைவாய்ந்த காயாமரமும்
யிருபாரிசத்திலும் நிற்க நடுப்பிறதேசத்திற் றங்கத்தகட்டினையொத்த
தளிர்களையுடைய மாவிருட்சந்தோற்றுவது ஆதியில் பரத்துவநிச்சயத்
தினைத்தாபிக்கும்பொருட்டு மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் வாதுகொ
டுத்திருக்கின்றதறுவாயில் அவர்கள்சண்டையினையும் அஞ்ஞானவிருளை
யும்விலக்கநினைந்து மத்தியில் நின்றதநித்தபரஞ்சுடர்த்தோற்றம்போ
ன்றுஞ் சூரியமண்டலத்தினுக்கு மேலாக வளர்ந்து அசைந்திருக்குந்தெ
ங்குகளின்பாளைகள்வெடித்துத் தொங்குங்காட்சியானதுபுவியில்வாச
ஞ்செய்யும்லட்சுமிகரம்பொருந்தியகன்னியர் அணியத்தக்கதாக நீட்டிய
ஆணிமுத்துகளின் கோவைகளினைநிரைத்தும் வயிரத்தினையொத்தமேனி
யும்மூங்கிலைநிகர்த்தசெழிப்பினையும்வாய்ந்த பசியகமுகுகள்பாளைகளை
விரித்து நிற்குந்தோற்றமானது பலரும்விரும்பத்தக்க குளிர்ந்த சோ
லையென்னும்பெண்ணுக்குஅளவற்றவர்சாமரைகளைவீசத்தாங்கியதைப்
போலவுஞ்செழித்தோங்கிநிற்கும்அலரிச்செடிகள்கிளைகள்தோறும் அபரி
மிதமாகப்பூத்திருப்பதுநாற்புயங்களையுடையஈசுரனுக்கு இந்திரனேத்
திவைத்தமணிவிளக்குகளையொத்துவிளங்கவுஞ்சிறுசண்பகம்மல்லிகையி
ன்மீதுவல்லிசாதக்கொடிகள் படர்ந்திருப்பதுகணவரைத்தருணமங்கை
யர் ஆலிங்கனஞ்செய்திருப்பதைப்போற்றோற்றமுல்லைகள்அரும்பியிரு
ப்பதுயிதுவென்ன அதிசெயம்பகற்போதிலும் நாணமின்றிப்புருடரை
த்தழுவுவதுநீதியோ சற்புக்கழகோவென்றேசி நகைப்பதைப்போற்றோ
ற்றவும்மதுரமாகியசெலசமற்திகொண்டுபரந்திருக்குந்தடாகங்களிற்க
ருங்குவளைமலர்கள் பசியதழைகளின் மத்தியில் அலர்ந்திருப்பதுஎப்ப
டிக்குத்தோற்றுவதெனின் அதைச்சூழநிற்கின்றதருக்களினதுகுளிர்ந்தநி
ழலின்கண்வீற்றிருந்தரசுசெலுத்துந்தேவேந்திரன் விழிகளின்பிறகாசத்
தினையொப்பக்காட்டவுஞ் சமுத்திரத்தினிடையிலடங்கிநிற்கும் வடவா
முகாக்கினியானதுகொழுந்துவிட்டுமேலோங்கிவிளங்குவதைப்போல
ச்செவ்வல்லியும்அரக்கினதுநிறம்பெற்ற ஆம்பலும்வாவிகளிற்பூத்துப்
பிறகாசிக்கவும்பொய்கைகளினிடத்தில்யிலைகள்விரிந்திருக்கஅவைகளின்
மத்தியிற் செந்தாமரைகள் விகஷித்திருப்பது அக்கினியானது புகைப்
படலஞ்சூழ நீரினிடையிற்றவஞ்செய்திருப்பதை நிகர்த்துக்காட்டவும்
இத்தகைய சிறப்புகளைக்கொண்டிருக்கும் பூங்காவினிடையிற் றழை
த்தோங்கிநிற்குந் தருக்களுங் கொடிகளும் புதர்களே முதலியவைகளி
னிடத்திற் பலவிதபுஷ்பங்கள்அலர்ந்திருப்பதுஎப்படிக்குத்தோற்றிய
தெனின் மாலைக்காலத்தில் விளங்குஞ் செக்கர்வானமும் அதன்மத்தி

யிற்றேற்றிய தாரகாகணங்களின் காட்சியை யொப்பநின்றது இத்த கையபலவனங்களைக்கொண்டு தேவேந்திரன்மனவெழுச்சிபெற்றுனந் தவாரியின் மூழ்கத்தக்கதாக பூங்காமுற்றிலும் பரிமளமிகுந்துப்புஷ்பித்திருப்பதைக்கண்டவுடன் தேவராசன் திரோகபாவசத்தனாய் ஆடிப் பாடி அத்தகையதிவ்வியசுகந்தமலர்களைக்கொண்டு ஆதிதேவனாகியபரமசிவத்தையருச்சிக்கவிருப்புற்றவனாய்பிருதகாலத்தெழுந்து நித்தியகருமங்களைமுடித்துக்கொண்டு வண்டுகளிறங்கி மூசராமுன்னம்புழுக்கடிமுதலியகுற்றங்களில்லாத பத்திர புஷ்பவகைகளைக் குடலைகளிற்சேர்த்துக் காலையிலும் அந்திப்போதிலுங் கற்றன் சன்னிதானத்திற்போய்ச் சகஸ்திரநாமங்களையோதி சோடசவுபசாரங்களுடன் அருச்சித்துவேதவாக்கியங்களினால் வழுத்தி கண்ணுதற்பிரான் திருவடிகளைத்தியானித்து வணங்கி யிப்பிரகாரம் அத்தினமுதல் தேவதேவோத்தமனை ஆராதித்து அச்சண்பகவனத்தில் வாசமாயிருந்தான் சேட்டர்களோ சவுனகாதிரிஷிகளே அவன்பக்தியுபிராக்கிய முக்கியங்களை யிவ்விதமெனச் சொல்லவும்போதுமோ அத்தருவாயில் நடந்தசரித்திரங்களையும் விளக்குவோம் கேட்பீராகவென்று சூதபுராணிகர்பேசுவதாயினர்.

தேவர்புலப்புறுபடலம்

இவ்விதமாகத்தேவசரான்பரமசிவத்தைவழிபட்டுவருமுன்னிலையில் அவுணருக்கரசனாகிய சூரபதுமனிட்ட கொடியபணிவிடைகளைச்செய்து திரேசமும மனமும்மிகவும்வருந்திய தேவர்களிற்சிலர் ஒகற்தனே எந்தகாலம் யிவ்வினைத்தொழில் எங்களைவிட்டு நீங்கப்போகிறதென்றிரங்கியாடிப் பொன்னுலகத்திலுந் தாபரித்திருக்கப்படாமையால் அவ்விடத்திலும்நீங்கிபூமியின்கண்வந்து மதுரமாகியஇயலிசைநாடகமென்னும் முத்தமிழுஞ்செழித்தோங்கும் தென்பிறதேசத்தைச்சேர்ந்து மகத்துக்கள் புகழ்ந்து வழிபடத்தக்கசிறப்புள்ள சீகாழித்தலத்தில் விறியிருக்கும் நந்தவனத்திற்போய் தேவராசனைக்கண்டு பரிமளமிகுந்த தாமரைக்கமலம்போன்ற அழகியபாதங்களிற் பணிந்துபோற்றி திரிபுவனசக்கிரேஸ்வரனே ஒப்பற்ற தருமத்தினைமறந்து லோகங்களனைத்தினையுந் தமது வயப்படுத்திக்கொடுங்கோல்செலுத்தும் பாபிகளாகிய ராட்சதத்துடக்கில் அடியோங்களைக்காட்டிக்கொடுத்துவிட்டு வந்துவிடலாமோ யிது தேவரீருக்கழகோ எமக்கு நீர் அரசனல்லவோ பிறையினையொத்த தந்தங்களைப்பெற்ற யானைமுகத்தையுடைய தாருகாசுரனுஞ் சிங்கமுகாசுரனும் புவனங்களனைத்தினையும் வாட்டிவருத்திவிக்கும புலியொ

த்த சூரபன்மன் சிறையில் அளவுபடாத தேவர்கூட்டங்களாகிய பசுக்களை யாதொரு ஆதரணையுமில்லாமல் ஒப்பித்துப்போட்டு நீர்மாத்திரம் பிராணனை நப்பித்துக்கொண்டு யிவ்விடத்தில்மறைந்திருப்பது நீதியோ உம்மையொத்த சூரனுக்குப்பயப்படுதோ யிதுவல்லாமல் பன்றி மான் மரை பசுமுதலிய மிருகங்களை வதைத்துச்சேர்த்த மாம்சங்களையுஞ் சமுத்திரத்திலிராநின்ற மகர மச்சவகைகளையுந் தேவரெனப்புகழப்பெற்ற எங்கள் தலைகள் மொட்டையாகும்படிக்குச் சுமந்து சுமந்து வலிபெற்ற அசுரரிட்ட தகாத யேவற் பணிவிடைகளையுஞ் செய்து மானங்கெட்டு அருமையாகக்கிடைத்த வேதாகமவிசாரணைகளையும் மறந்துவிட்டோங் காளகண்டமூர்த்தியாகிய பரமசிவனால் அளவிறந்தவரமுயற்சிகளைப்பெற்ற சூரபன்மனுக்குச்செய்யத்தகாத தொண்டுகளை நடாத்தினோம் ஒழுக்கம் நீதி பெறுதற்கரியமான முதலியசிறப்புகள் முற்றும்போக்கினோம் ஜபனை மிகவும் அலுத்தோம் இதுவல்லாமல் முற்காலத்திலுங் கசமுகாசூரனிட்ட தொழில்களை பலகாலம்நடாத்திவருந்தி முறையிடுவதற்குசிவபிரானிரக்கமுற்று விநாயகமூர்த்தியைப்படைத்து அவனையும் எங்களுக்கடுத்திருந்த துயரத்தினையும் ஒழித்தாட்சித்தார் இக்காலத்தில் மீட்டும் பாதகனாகிய சூரனானவன் எங்களைவாட்டப்பொறுக்கப்படாமையாற்சிறந்த பொன்னுலகவாழ்வையும் யிழந்து அலைகின்றனம் அரசனே இனி எங்களால் முடியாது முடியாது எப்போதுந் தேவரீரையேசரணென்றிருந்தயாங்கள் அவனாற்சோர்ந்து துக்கசாகரத்தில் அழுந்திவாட உமது பிராணனைமாத்திரம் முக்கியமாகவெண்ணி இத்தலத்திலொளித்துப்போற்றியிருக்கின்றீர் ஓரரசனே யிது உமக்குத்தகுமோ அல்லதுபுகழின்பாலதோ உலகமுள்ளளவுந் தீராதவசையன்றோ ஆதலாற் சூரன்முதலியகொடிய அசுரரானவர் தமதுவீரங்கெட்டு நாசமடைவதற்குமிவ்வுலகிலெக்கணயாவரும்பழிக்க நாங்கள்பெற்றிருக்கும் யிடையூறுகள்தீரும்படிக்குமெதாவது ஒருகாரியங்களைமுடியாயோவெனப் பற்பலமுறைகளைச் சொல்லி வாடுவதை அவர்களுக்குயிறைவனாகிய இந்திரன்கேட்டு தேவர்படும்மனவாட்டத்தினையுந் துன்பத்தினையுந் தெரிந்து நெடும்போதுயோசித்துபரிபவப்பட்டுபெருமூச்செறிந்துயிதனைப்பேசுவான் மாயைபுத்திரனாகிய சூரபதுமன் அகோர தவங்களைச்செய்ய யெத்தனித்த அத்தினமே நமதுசுதந்திரங்களும் பொன்னுலகவாழ்வுந் தோற்றோமெனச்சொல்லவில்லையோ அவ்வாறேதவமுடிந்தமுன்னிலையிற் பரமசிவகடாட்சத்தினால் அளவற்றவரங்களைப்பெற்று நமது வளங்களனைத்தையுங் கைக்கொண்டு மகதயிஸ்வரியங்களை யநுபவித்திருப்பவன் சமுத்திரத்திலிருக்கும் மச்சங்களைப்பிடித்துக்கொண்டு வரவும் நிணங்களொழு

கும்மாம்ச வகைகளைச் சேகரித்துவரவும் யிவ்வித யிழிபான தொழிலை
யுங்கட்டளையிட்டான் அதுகளையுஞ்சகித்துக்கொண்டு நாளகம்நேருகின்
றபரியத்தம்உபாயமாகநாட்களைக்கழிக்கலாகுமென்று நினைத்திருக்கும்
போதுமறுபடியும் எதோவொருபாதக நினைவைக்கொண்டு இலக்குமிக்
குச்சமதையாகிய கற்பையுடைய இந்திராணியைக் கொண்டுவரவும் என்
னைபற்றிச்சிறையில் அடைக்கவும் உத்தேசித்து தன்கொடியசேனைக
ளைப்பொன்னுலகத்துக் கனுப்பினன் யிச்சூட்சிகளைத் தெரிந்து நானும்
இந்திராணியும் விண்ணுலகைவிட்டு வெற்றுருக்கொண்டு யிச்சிறந்த த
லத்தைச் சேர்ந்து ஒளித்துத்தவஞ்செய்திருக்கின்றனம் இவ்வுபாயத்தினை
யோசித்து முடியாமலிருப்பேமாகில் மீண்டுமந்தயழிபுடன் மானபங்
கமும்நேருவதன்றியில் மீளாதசிறையிலும்பட்டுப் பலநாளுந் துக்கிக்க
வும்வரும் அப்படிக்குநேருமாயின் இன்புபிராணனை வைத்திருக்கவும்
போதுமோ ஆதலால் நமதுபகைவராகிய ராட்சதர் குலநாசமடையவும்
யாமெல்லவருந் துன்பம் நீங்கிசவுக்கியத்தினைப்பெறவுஞ்சிவபூசையினை
யிருப்பிடத்தில்முடிப்பது அரிதெனக்கருதி உங்களைச் சிலகாலமிருந்த
துக்கசாகரத்தில்மூழ்கவிட்டுயிவ்விடத்திற் சுந்தனை வழிபட்டுப்போற்றியி
ருக்கின்றனன் நீவிரமுறையிடுகின்றதைநுட்கேட்டுச்சகிக்கப்படாமையாலு
ம்நமதுசுதந்திரங்களனைத்தினையும்யிழந்ததுமன்றியில் அவுணரால்மிக
வும்அலைச்சற்படுவதாலும்யாமெல்லவருந்திருக்கயிலைக்குச்சென்றுலோ
கநாயகருக்குஇவைபனைத்தினையும்விண்ணப்பஞ்செய்துநமதுதுக்கவரு
த்தங்களைநீக்கிக்கொள்ளக்கடவோம் வாருமென்றனர் அவ்விசேஷந்தே
வர்செவிகளிற்பட்டவுடன்காருண்டமேகத்தினைக்கண்டமயிலினங்களை
யொப்பஆனந்தமடைந்துஇரோகபரவசராய் நிருத்தஞ்செய்து கரங்களி
னைக்கூப்பினவர்களாய் தேவரீரை அடியோங்களுக்குச் சிறந்தஅரசனுக
வுங்குலதெய்வமாகவும் ஞானசிரியனுகவுஞ்சகலசெல்வங்களாகவுந்தவப்
பேறினையொத்தும்பிராணனையொப்பவும் இன்பதுன்பமேவற்றமாக
வும்நம்பியிருப்பதால் நாயினெங்களுக்கொருபயமுமுண்டோபூர்வத்
தில்பெருகாலம் அலைத்துபாதைப்படுத்தியிருந்தராட்சதப்பாதகரனை வு
ளையுங்காலமறிந்து தந்திரவுபாயங்களினுற்கொன்று யின்றளவும்ராட்சித்
திரயிக்காலத்திலும்வருத்தியலைக்கின்றசூரனுதியானவர்கள் நாசமடைய
யெசிக்கின்றீர்சிறந்ததவப்பெற்றினைவாய்ந்த ரிஷிசிரேஷ்டர்களுக்கும்
பலவளங்களைவாய்ந்தபூமண்டலத்தில்நீதிபாராகஅரசசெலுத்திவரும்அர
சர்களுக்கும் பாதலவாசிகளுக்கும் மற்றனையருக்கும் உம்மையன்றி
யாவர்சார்பிருக்கின்றனர் தேவரீர்கட்டளையிட்ட தொண்டுகளை முடித்
துஉம்மையேபோற்றியிருப்பது நமதுகடனுகும் எமதுவருத்தங்களி

னை நீக்கிரட்சிப்பது உமக்குப்பொறுப்பன்றோ ஆகையால் ஐயனே அடியோங்கள்துக்கவருத்தங்களைத் தவிர்ப்பதாக திருக்கயிலைக்கெழுந்தருளும்போவதற்கென்று வேண்டுமுன்னிலையில் இந்திரன் சம்மதப்பட்டவனாய் தேவரா அவ்விடத்தில்நிறுத்தி அயிராணிவாசமாகிய தலத்திற்குப்போயினான்.

அயிராணிசோபப்படலம்.

இவ்விதயெண்ணங்கொண்டு வருங்கணவனைக்கண்ட இந்திராணியானவள் அன்னத்தினையொப்பமெல்லநடந்தெதிர்கொண்டுசெவித்துஓபிராணநாயகனே ஏதோஒருயெண்ணத்தினை உத்தேசித்து வருவதாகக்காணப்படுகின்றது அதுகாரணமியாதென்றுவினாவுமுன்னிலையிற்றேவராசன்நகைமுகனாய்பெண்களரசேசூரனால்வருந்திய சிலதேவர்வந்துதமதுதுக்கங்களினை முறையிட்டமையால் அவர்களினதுயிடறினையும்நமதுசிறுமையினையும்நீக்கிக்கொள்ளும்பொருட்டுதிருக்கயிலாயத்துக்குப்போய் பரமசிவத்துக் கிவையனைத்தினையும் விண்ணப்பஞ்செய்து அவர் அனுக்கிரகத்தினைப்பெற்றுவருவதாகயெத்தனித்ததால் அதனைவுனக்குத்தெரிவித்துச்செலவுகிடைத்துப் போகவிருப்புற்றுப் பொருந்தவென்றவாக்கியஞ்செவிகளிற் கேட்டவுடன் வேடன்வலையிற்பட்டு யிடருற்றமஞ்ஞையினையொப்ப மயங்கி துக்கசாகரத்தில் அழுந்தி கணவன்பாதங்களில் விழுந்து மூர்ச்சித்த தறுவாயில் இந்திரன் கண்டு மனக்கோட்டத்துடன் ஆசானுபாகுவாகிய நீண்டகரங்களினால்வாரியெடுத்து மார்பிலணைத்துமடியில்வைத்து சோபத்தினையொழிப்பதாகச்சிவசயித்திய உபசாரங்களினை செய்யுந்தறுவாயில் இந்திராணிக்குச் சற்றுதெளிவுபிறந்து முன்னையவிசனமானது சூழ்ந்தலைக்க நடுநடுங்கியிதனை முறையிடுகின்றனள் ஓ பிராணநாயகனே சூரன்கொடுமைக்கஞ்சிபொன்னுலகவாழ்வினையிழந்து பூமியின்கண்வந்து தவங்களிற்சிறந்த மகத்துக்கள் சேர்வைசெய்து அவர்கள் அனுக்கிரகத்தினைப்பெற்று தேவரீர் ஆதரணையில் யிதுபரியந்தங்களித்திருந்தேன் பிறியமுள்ளகணவனே அடியாளைத்தனிமையிற் பிறிந்துபோகத் துணிவீராயின் எனைக்கு மற்றுமொருதுணையுமுண்டோமேலும் பகைவருக்குத் தப்பிப்பிழைப்பதெவ்விதம் ஓ பிராணவல்லபா நேயிப்பட்சிக்கும் வானம்பாடிக்குங் குளிர்ச்சிபெற்றமேகமுஞ்சந்திரனும் உதவியாகவிருக்கின்றதனையொப்பத்தேவராசனே நீரல்லது என்சோபத்தினை நீக்கத் துணையாக விருக்கின்றவர் வேறொருவருண்டோ அல்லது உம்மைப்பிரிந்து மனவுறுதிபெற்றுயிரா

ணைத்தரித்திருப்பேனாயினும் யிக்காரணத்தினை விவேகமற்ற ராட்சதர்
காணப்பெறுவராயில் கெடுதிநேருவதற்கையமுமுண்டோ மேலுங்குரா
ன் நினைந்திருக்கின்றவஞ்சகத்தினைத் தெரிந்து போதப்பூமியினைத்தேசத்தினை
மறந்து யிவ்வரியகானகத்தில் வந்தொளித்துத் தவஞ்செய்திருப்பது ப
ழியினுக்கஞ்சியன்றோ பலமாய்கையினையுடைய கொடியராட்சதப்படை
வீரர் தேடித்திரிகின்றனர் மேலும்பாதகங்களையல்லது தருமமென்பதை
எவ்வளவேனும் அறியார்கள் பழிக்கும் அஞ்சார்கள் ஓ கற்பனே யிவை
தேவரீருக்குப்பார்த்தமாகத்தெரிந்திருப்பதன்றோயித்தருணத்தில் நமது
பிறியமுள்ள குமாரனுமிங்கில்லை தேவர்களுதவியுங்காணேன் அயிராபத
மாவதுசமீபத்திலிருக்குமாயின் சத்துதயிரியங்கொள்ளலாம் அதுபோன
யிடந்தெரியவில்லை அல்லது ஒருவலிபெற்றபெண்துணையேனுமில்லை
யிவ்விதமாகயாதொருஉதவியுமற்றுப்பேதமைப்பால்களாகிய அடியாள்
கலக்கமின்றி தனித்திருக்கக்கூடுவதோ ஓ என்பிராணநாயகனே கொடு
மையே குடிகொண்டிருக்கும் மனதையுடைய ராட்சதர்கள் என்னைக்
காணுவராயில் தட்சணமே பிடித்துப்போய் என்செய்வரோ யிப்பழி
பாதகம் உம்மையன்றியாரைச்சேரும் ஆதலால் யிவ்விடத்தில்தேவரீரைப்
பிரிந்துதனிமையிலிருக்கச்சகியேன் தேவரீருடன் லோகநாயகனாகிய ப
ரமசிவமெழுந்தருளியிருக்கின்ற திருக்கயிலாயத்துக்குவருவேன் போ
வோம்வாருமென்றெழுந்து விழிகளில்நீர்சொரிய நிற்கின்றஇந்திராணி
யைதேவராசன் யிரக்கமாகப்பார்த்து என்மனதுக்கினிய பெண்ணமு
தமே நீகூறித்ததனைத்துந் தகுதியேயாமென்றவளை அணைத்துமுத்தமிட்
டு ஓ பிராணநாயகி தயிரியத்தினைவிட்டு பயங்கொள்ளவேண்டுவதில்லை வ
ருந்திவாடுகின்ற தேவர்களுடன் நான்வெள்ளியங்கிரிக்குப் போய்த்திரு
ம்புமுன்னிலையில் உன்னைப்பாதுகாக்கத் தகுதியானவர்க ளில்லாவிடி
னன்றோ நீஎன்னுடன்தொடரவேண்டியது ஆதியில் ஒருகாரணத்தினால்ப
ரமசிவத்துக்கும் மகாவிஷ்ணுவுக்கும் உற்பவித்துஉலகங்களைப் பாது
காத்துவருகின்ற அரியபுத்திரர் நமக்கொரு காவலாகவிருக்க விசனப்
படவேண்டியகாரணமென்னை ஆதலால் அத்தேவனைத் துதித்தழைத்து
நான்கயிலைக்குப்போய்வருமளவும் யிமையினைப்போலக்காத்துரட்சிப்
பதாக உன்னை அந்ததேவன் வசப்படுத்திப் போகவிருக்கின்றேன் வலியி
ற்சிறந்த நமதையன் உனக்கொன்றும்நேராமல்போற்றியிருப்பர் யினி
மேலாகிலுஞ் சங்கைபற்றுயிவடத்திற் பதலமாகவிருக்கக்கடவையென

பேற்பலஉறுதிப்பாட்டினைச் சொல்லித்தேற்றஅயிராணியானவள்ஒருமித்துநல்லகாரியம் அக்கடவுளினதுவரலாற்றினைச்சாங்கமாகவெனக்குப்போதிப்பிம்படிக்குஅநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றுவினவதேவேந்திரன்அச்சரித்திரங்களைக் கேழ்ப்பாயெனத்தெரிவிப்பதாயினன்.

மகாசாத்தாப்படலம்.

கேளும் பெண்ணரசியே முன்னொருகாலம் பரமசிவகடாட்சத்தினைப்பெருமல் மகாவிஷ்ணுமுதலானவர் அமுதமுதலியவளங்களைப் பெறநினைந்தவர்களாய்த்தம்மிற்கூட்டமாகச்சேர்ந்து ராட்சதர்களுடன் மந்தரகிரியினைக் கோலிவந்து மந்திராகநாட்டித் திருப்பாற் கடலினைக்கடையுமுன் விலையிற்சயமுக விருந்தவாசுகிக்கு அவ்வருத்தஞ் சகிக்கப்படாமையால் ஆவலித்துப் பெருமூச்செறிந்து சிதிக்கக்கியநஞ்சும்மந்தரகிரியினைத்தாங்கிநின்ற ஆமையினதுமுதுகோடுவருந்தி அசாபட்டுக்கிளம்பியதீயுங்கலந்து ஆலகாலமெனப்பெயர் பெற்றோங்கிகொடிய வெப்பத்தினைவீசி சுவாலைமிகுத்து தகித்துவரக்கண்டவிஷ்ணுபிரமன்இந்திரனுகியாகிய தேவர்நடுக்குற்று யிடயின் ஒலியினைக் கேட்டருபிலினம்போன்றுகலங்கிநிலைகெட்டோடிவேறுகெதிகாணுதுகிருக்கயிலையினைச்சேர்ந்துநந்திதேவர்அநுமதியின்பேரில் பரமசிவத்தினைத்தெரிசித்துப்போற்றிசமக்குற்றவருத்தத்தினைமுறையிட்டகாலைத்திந்தீனசரண்ணியனுதலால் அவர்களிடத்தன்புகூர்ந்து பயப்படாதீர்களென்று ஆதரித்திருத்தி அக்கொடிய விஷத்தினைத்திருவ்வித்துக்கரத்திலேற்றமுண்டு அண்டத்தில் நிறுவியபின்பு விஷ்ணுமுதலியவரைக் கிருபையாகப்பார்த்து நீங்கள்மீட்டுஞ்சென்றுதிருப்பாற் கடலினைக் கடைவீராயின் உங்கள்கோரிக்கையின்படிக்கு அமுதமுதலியது உதிக்குமெனக் கட்டளையிட்ட படிக்குபரமனைச் சேவித்துவிடைபெற்றுச்சென்றுமறுகாலமத்திக்கு முன்னிலையில் முந்தி கணபதிதேவனை ஆராதித்து ஆரம்பிக்காத காரணத்தினுல் மந்தரகிரியானது சத்தளித்துச் சார்பற்றுக் கவிழ்ந்து பாதலத்தினைச் சேரவருந் தருவாயில் அதனைக்கண்ட மகாவிஷ்ணு முதலியர் கலக்குற்று விநாயகமூர்த்தியினை முந்தி வழிபடாமையால் யிவ்வாபத்துகள்நேர்ந்ததெனத் தெளிந்து பயபத்தி விசுவாசத்துடன் கணேசரைப் பூசித்து நிவேதனங்களைப்படைத்து அக்கடவுளினது அநுக்கிரகத்தினுல் பாதலத்திற் பட்டமந்தரத்தினை யெடுத்து நிலைபெறநிறுவிமீளக் கரகொணச்சுழல மத்திக்கின்ற தருவாயில் சிந்தாமணிபதுமநிதிசங்கநிதிஅயிராபதம் பஞ்சதாருக்கள் முதலிய வளங்களின் மத்தியில் பூரண

ச்சந்திரோதயத்தினையொப்ப அமுதமானது சோதிமயமாகப் பிறகா
சித்து குளிர்ச்சியைவீசி யெழக்கண்ட அவுணர் இராக்கதர் தேவர்முதலி
யர்தமது தமது வல்லபங்களினால் உண்டாபதென்றெ நவருக்கொருவ
ர் முந்திச்சென்று எமது எமது யெனக் கலகப்பட்டு வாதாடுமுன்னி
லையில் பிரமனை மகாவிஷ்ணு கண்டு அவர்களிற் கைகலப்பதற்குமுன்னம்
விலக்கநினைந்தவராய் தமது மாயாசக்தியினால் நிமைப்போதில் செக
ன்மோகினிக்கோலங்கொண்டு நிற்கின்றதுவாயில் திரிலோகங்களினும்
பார்க்கக்கிடைப்பாத அப்பெண்ணரசியினது சவுந்திரியவடிவுகளைக்கண்ட
மாத்திரத்தில் அசுரர்காமிகளாதலால் அமுதத்தினை விரும்பாமல் மோகினி
யையவளைந்துபற்களைத் துறந்து நகைமுகமாய் நிமைகொட்டாமல்பார்த்துநி
ன்றார் விசேஷகாமிகளாகியதேவர்களுமகப்பட்டு அப்பெண்ணர
சியினைச் சூழ்ந்து வாய்களைச்சப்பி விழுங்கசித்திரங்களைப்போல அசை
வற்றுபிரமித்துநின்றனர் கேட்டீர்களா சவுனகாதிரிஷிகளே மண்ணா
சை பொன்னாசைக்குமேலான பெண்ணாசையினை நீக்க ஐம்புலன்களையு
ம் வென்றமகத்துக்களாலும் அரிது அப்படிக்கிருகிறவருங் காமியராக
மேல்விழுந்துவருகின்றனத செகன்மோகினியானவள் மான்விழியி
னையொத்தகண்களைச்சுழற்றிப்பார்த்துக்கோகிலமும் நாணத்தக்கதாக ஒரு
வார்த்தைசொல்லுவாள் ஓ தேவரோ அவுணரோ நீயிரன் அடித்துப்பிடி
த்தீர் நானொருபுறமாயிச்சிறந்த அமிர்தமொருபுறமாயிருக்க உங்களுக்குவே
ண்டியதைப் பெற்றுக்கொண்டு அனுபவித்துக்களிப்பீர்கள் யிதனிலும்
உங்களுக்குக்குறைவுதிவேறில்லையென்று சொல்லக்கேட்டதானவர் அசுரர்கா
மிகளாதலால் அவசரப்பட்டு முந்திபெண்கள்சிகாமணியே நீதான் எங்க
ளுக்குவேண்டும் உமதுவாய்மொழிமதுரத்திலும்மேலானதோ அமுத
மெனச்சூழ்ந்தனர் சிவகடாட்சத்தினாற்றேவருக்கு நல்லுணர்வுதோன்றி
அமுதத்தினையே யிச்சித்துவளைந்தெடுத்துக்கொண்டு ஒருபுறத்தில் நின்
றனர் தேனையும் பாலினையும்பழித்தமாதுரியமாகிய ஒருசொல்லினை
ப்பெற்றமோகினியினை அசுரர்முத்திக்கைபோட்டுக்கொண்டிருக்க அவர்
களின்மீது பெண்கள்சிகாமணியானவள் விழியினைப்பரப்பியரிமளித்து
தேன்களைத் துளிகளுங்குளிர்ந்தமலரணையில் என்னையணையவல்ல ஒருவ
ரனையின்னமுங்காணேன்காமவிகாரத்திற்பட்டுவருந்துகின்றேன் நாம
தப்பாமல் வெளிப்படுவீர் வெளிப்படுவீரென்று மோகினியாகநின்
றசன்வன் சொல்ல நாசமடையவிருக்கின்ற தானவராயிவ்வசனத்தினை
க்கேட்டவுடன் எனக்கொருவரும்நிகருண்டோ நானேசுத்தவீரனுமென
னவீற்றுவீற்று சபதங்கள் பேசிஎன்னிடத்துவா என்னிடத்திரக்க
முற்றுவாவெனச்சூழ்ந்து காமவெறியினால் சுற்றமென்றுந் துணைவரொ

ன்றும்பாராமல் வயிரமிருத்து ஒருவருக்கொருவர் சண்டைகொடுத்து
மாண்டனர் தீக்கடைக்கோலிலுதித்த அக்கினியானது தன்கிளைகளாகியவி
ருட்சங்களைக்கொளுத்துமாறுபோல ராட்சதர் தங்களிற்சண்டைகொ
டுத்துச்சாம்பலாகமாள்வதை அவர்களில்யிருவர்கண்டு திடுக்கிட்டு இஃது
விஷ்ணுவினது வஞ்சகமேயாம்வீணிற்சாவதிற்பலனென்னை யெனநிதா
னித்தவர்களாய்த்தேவப்படிவங்கொண்டு அக்கூட்டத்திற்கலந்து மறைந்
திருந்தனர் அக்காலத்தில்மாய்கைக்கரசியாகியமோகினியானவள் ராட்ச
தர்முற்றும்மாண்டதைக்கண்டவுடன் தேவகூட்டங்களை அணிபடநிறுத்
தி அமுதத்தினைப் பகிர்ந்துகொடுத்துவருகின்ற தறுவாயில் அவர்களினது
மத்தியில் மாறுருக்கொண்டு நின்ற தானவக்கள்வர் நீட்டிய கரங்களில்
அமுதினை விட்டமாத்திரத்தில் மந்திர பூர்வகமாக உட்கொள்ளாமல்பய
பீதியினுற்றார்தமாகச்சாப்பிடபக்கத்தில் நின்றசந்திரசூரியர்யிதனைக்க
ண்டியிவர்கள்ராட்சதரென்று நிதானித்துயிதற்கென்செய்வதென்றுசற்
றுயோசித்துமோகினிவேடத்தினைத்தாங்கிச்செல்லும்மகாவிஷ்ணுவுக்கு
யிச்சூட்சியினை கண்சைகையினுற்றெரியக்காட்டியவுடனே தமதுகரத்தி
ற்பற்றிய சட்டுவத்தினுல் அவர்களின் சிரங்களினைக்கொய்து தள்ளிய
பின்புதேவர்க்கள்முற்றும் பகிர்ந்தனர் மேற்குறித்தயிரண்டு ராட்சத
ர்களுடமட்டும் அமுதம்படிந்ததால் உடலழிந்தும் சிரஞ்சீவித்திருக்க
யிவர்களுக்கு நாசமில்லையென்றுசிவகடாட்சப்படிக்குநட்சத்திரப்பதவி
யிற்சேர்த்தனர் பின்புஅவர்களும் விஷ்ணுவைநோக்கித்தவஞ்செய்து அ
த்தேவனது கடாட்சத்தினுல் செம்பாந்தள் கரும்பாந்தளாக இராகுகே
துவென்னும்நாமங்களைப்பெற்று தங்களைக்காட்டிக்கொடுத்தசந்திரசூ
ரியரைக்காலங்களில் மறைப்பர் இதனைக்கிரகண புண்ணியகாலமெனச்
சொல்லப்படும் மேலும்நவக்கிரகங்களிலுங் கலந்திருக்கின்றனர் இவை
நிற்க அமுதமுண்டதேவர்யிம்மோகினி வேடத்தினைத்தாங்கி நம்மைப்
பாதுகாத்து ரட்சித்தவர் விஷ்ணுவென்றறிந்துபின்பற்றிப்போற்றிவரு
பவரைவிடைகொடுத்தனுப்பியபின்பு அத்தலத்தினைநீங்கிதமதுயிருப்பி
டமாகிய திருப்பாற்கடலில்விஷ்ணு வானவர்போயிருந்தார் அத்தறுவா
யில் பரமசிவமானவர் யிக்காரணங்களைத்தெரிந்து நவசத்திகளில் விஷ்
ணுவும் ஒருருவாதலால் அதனைச்சகலருக்குந்தெளிவிக்கும் பொருட்டு
திருவுளங்கொண்டு விஷ்ணுவேமுதலியர்மோகிக்கும்பிச்சாடனப்படிவ
ங்கொண்டு வேதங்களையோதி திருப்பாற்கடலினருகில் வருவதைமோகி
னிகண்டு வாடுவதைத்தெரிந்து உம்மைப்புணரும் யிச்சைநமக்குண்டா
யது நீகொண்டகோலம் பெருசுந்தரமாயிருக்கின்றதென்ற வாக்கியத்
தைக்கேட்டமோகினியானவள் உமதுதிவ்வியவடிவைக்கண்டு விருப்புற்

னால்நீரென்னையிச்சிப்பதுதகுதியோவென்றுபிற்பிரமசிருட்டிவிருத்தியடையசத்தியுருக்கொண்டுவந்ததுகாதலோ உமக்குவெறுப்புவிருப்பில்லையாதலால் நீர்பெற்றயிச்சையும்நிச்செயமாவதோ நீர்நினைந்துவந்தகாரணம் எனக்குத்தோற்றவில்லை தேவரீர்திருவிளையாடல்களை தேவரீரல்லது மற்றும்யாவராலறியப்படும் மேலும்புருடர்புருடனைக்கலந்து பின்புமுற்றினவனைக்கண்டதுமில்லை சற்றனைபலவத்காரமாகவென்னை அணையவருவதுநீதியோ உம்மையொத்தவருக்கடுப்பதோவென விஷ்ணுவானவர் சொல்லக்கேட்டபரமசிவம்நகைத்து நீ சொல்லியதனைத்தும் அன்னியருக்குத்தகாதனவேயாம் நீயோ நமக்கோருசத்தியாவை அக்காரணத்தினல் நாம்பிச்சாடனப்படிவமாய் தாருகாவனத்துக்கெழுந்தருளிய காலத்தில் நீமோகினியாகவந்ததறியாயோமேலும் ஆதியிற்பிரமனிறந்தகாலத்தில்உன்னையாமணைய உன்னுந்திகமலத்தில் மீட்டும் பிரமனைப்பெறவில்லையோ ஆதலால்யிக்காலத்திலும் உன்னிளமைநலத்தினையனுபவிக்கவிருப்புற்று வந்தனம் தாமதஞ்செய்யாது நெருங்கவருவாயென்றுசமீபித்தமாத்திரத்தில்மோகினி ஒட சுத்தனும்பின்தொடர்ந்துகரத்தினைப்பற்றிக்கொண்டு சரசலாபங்களுடன்சென்றுநாவலந்தீவினைச்சூழ்ந்த சமுத்திரவடபாரிசக் கரையினிடத்து தழைத்து வானத்தினையளாவிஞளிர்ந்தநிழலினைப் பரப்பிநிற்கின்றவடவாலவிருட்சத்தடியிற்சேர்ந்து சிறந்த பெண்ணுருப் பெற்றிருக்கின்றமகா விஷ்ணுவினது திரேகமும்மனமும்பூரித்துக்குழைந்து களிக்கக்கட்டியணையுமுன்னிலையில்காமவெப்பத்தினல் யிருதிறவருக்கும் வியர்த்தொழுகியசெலமானது பெருகிக் கண்டிகை நதியெனப் பெயர்பெற்று விளங்கியது அந்நீரில் யிருபக்கங்களிலுஞ்சக்கரத்தாரைகள் பொன்மயமாய் விளங்க வச்சிரதந்தியென்னுங் கிடங்களுற்பவித்துஉலவிநின்றது அக்கண்டிகை தீர்த்தமானது பெருகி பூலோகத்திற்பாய அதிற்றோற்றிய கிடங்களினைமானிடரெடுத்துபொன்னையுரித்துக்கொண்டு அதின்றோற்றிகரமுச்சியத்தினல் மகாவிஷ்ணுவினது சொரூபமாகக்கருதி சாளக்கிராமமெனப்பெயர்விளங்கப்பூசித்து வருவர் யிச்சரித்திரம் நிற்க பரமசிவமும் மோகினியாகநின்றமகாவிஷ்ணுவுங் கலந்தின்பமுற்றியகாலத்துநமதையனுகிய அரிபரபுத்திரர் சுறுத்த திரேகமும் நீண்ட சடைகளும் விளங்க உதையமாய் யிருகுரவரையும் வணங்கிநிற்கப்பரமசிவமானதுகிருபாநோக்கம்பாலித்து அவன்வேண்டியவரங்களை மென்மேலுங்கொடுத்து உருத்திரர் கூட்டத்தலைமைபெற்றுவிளங்கவும் மேலுஞ் சகல புவனங்களினுந்தமதாணை ஆக்கினைசெலுத்திப் பாதுகாக்கவுந்தேவரனைவருந்தொழுதுபோற்றத்தக்கசிறப்பினையுந் தந்தபின்பு மீட்டுந்தம்மையன்

ந்திபெருமானுக்கும் மகாவிஷ்ணுவுக்கும் விடைகொடுத்தனுப்பி சிவ
பிரான்றிருக்கயிலைக்கு எழுந்தருளினார் சேசவனும்வைகுந்தநகரினைச்சே
ர்ந்திருந்தனன் நமதையனாகிய அரிய புத்திரருந்தமக்குக் கட்டளையிட்ட
பதவியிற்போய் அளவுபடாத பூதப்படைகள் சேவிக்க உருத்திரகணங்க
ள்சூழ்ந்துபோற்ற வீற்றிருந்து புவனசராசரங்களனைத்தினையும் இரவு
பகலாய்ப்பாதுகாத்து ரட்சித்துவருவர் இவ்விதமகத்துவமுடைய அத்
தேவனை உன்னை ரட்சிக்கக்கடவன் நான்வருமளவும்வருத்தமன்றியிவ்விடத்
திலிருப்பையாகவென்று இந்திரனானவன் தேற்றரவுசொல்லக்கேட்ட இந்
திராணியுமனக்கவலையொழிந்து சம்மதமாகவிருந்தனள் அக்காலத்தில்தே
வராசன்விளைவிற்பரிசுத்தனாய் பத்திவினையங்களுடன் அரியரபுத்திரனை
தியானித்துப்போற்று முன்னிலையில்இந்திரன்பத்திக்கிரங்கி வெள்ளையா
னையின்மீது ஆரோகணித்து பலகோடிபூதகணங்கள்வெண்சாமரை ஆல
வட்டங்கள் அருகுவெண்பட்டுக்குடைகள்முதலாகவேந்திச்சூழ்ந்துவர
பற்பலவாத்தியங்க ளதிரவருவதை தேவேந்திரன்கண்டவுடன் எதிர்
கொண்டோடிப் போற்றிவணங்கியிருகரங்களினையுங் கூப்பிநிற்கின்ற
தனை பரிவாகப்பார்த்து உனக்குவேண்டிய வரங்களினைத்தாவிருப்புற்ற
னம்கேட்பையாகவெனத் திருவாய்மலர்ந்தபோது தேவராசன்வாயி
னைப்பொத்தி கர்த்தனேசூரபதுமன் முதலானவர்களால் மிகவும்வருந்தி
பொன்னுலகவாழ்வினையிழந்து பதிதராயித்தலத்தில்வந்தும் அக்கொ
டியவருக்கஞ்சி மூங்கிலுருக்கொண்டிவளும்நானுமாகத்தவஞ்செய்திரு
க்குமுன்னிலையில் தேவரிற்சிலர் சூரனுக்கஞ்சி உலகமெங்குந்தே
டிகடையில் இத்தலத்திலென்னைக் கண்டுதங்களுக்கு நேர்ந்தகுறைபாடு
களினைத்தெரிவித்து அவனைப் போக்கி ரட்சிக்கும்படியாக முறையிட்
டுப் புலம்புகின்றனர் அவரது துக்கத்தை நீக்கநினைவுகொண்டு திருக்
கயிலாயத்துக்கழைத்துப்போய் பரமசிவத்துக்கெமது குறைபாடுகளி
னை விண்ணப்பஞ்செய்து அவரனுக்கிரகத்தினைப் பெற்றுவரநிதானித்து
யிவளையிப்பதியில் வைத்துப்போகவிருக்கின்றேன் தனிமையிலிருக்கயி
வள் வருந்திநான்நீங்கியகாலத்தில் ராட்சதர்பிடித்துப்போவரெனப்பய
ங்கொள்ளுகின்றனள் ஆதலால் ஐயனே நான்மீட்டும் வருமளவும்யிப்பே
தையினைப்பாதுகாப்பதுதேவரீர்கடமையென்றிரக்கஅரியரபுத்திரரிது
வையுற்று ஓ தேவேந்திரனே உன்தேவிக்கு யாதொருகுறைகளும்நேரா
மற்போற்றுகின்றனம் தனித்துவிட்டுவந்தனனென்னுங் கவலைஉனக்கு
வேண்டுவதில்லை சந்தோஷமாகவேதிருக் கயிலைக்குப்போய்வரக்கடவை
யெனச்செலவுகொடுத்து வாட்படைவல்லபத்தில் முக்கியனுஞ்சவுரிய
பராக்கிரமங்களுக்கொப்பற்றவனுமாகவுந் தமதுசேனைத்தலைவனுமாகவும் யி

ரானின்ற மகாகாளனைப்பார்த்து இந்திரன் பரமசிவத்தினைத் தெரிசித்துவருமளவும் இந்திராணிக்கொரு கவலையுநேராமற் போற்றியிட்டுத்திலிருப்பையெனக்கட்டளையிட்டுதமதுபதவியினைச்சேர்ந்தனர்.

இந்திரன்கயிலைசெல்படலம்.

அதன்பின்பு தேவாசன்களிப்புடன் இந்திராணியினைப்பார்த்து நமதையன்உனக்கு யாதொருயிடையூறுகளுமின்றி ரட்சித்திருப்பர் ஆதலால்மனக்கவலையற்றிருப்பையெனப்போதரவுசொல்லிச்செலவுபெற்றுக்கொண்டு தேவரிருக்குமிடத்தைச்சேர்ந்து அவர்களுடன்பரமனெழுந்தருளியிருக்கும் வெள்ளியங் கிரிக்குப்போய் முதல் வாயலில்வீற்றிருந்து அரசுசெலுத்தும்நந்திதேவனைவணங்கித்துதித்துநிற்குந்தறுவாயில் அவனதுமுகச்சோர்வையும் மனவாட்டத்தினையும் நிதானித்துயிரங்கினவனாய் ஓ தேவேந்திரனே தேவருடன் வாடிவதங்கிவருங்காரணமென்னையென்றுதிருவாய்மலரச்சுவாமிசூரபதுமன் யிரக்கமற்றுயேவியதகாதபணிவிடைகளைச்செய்து மிகவும்வருந்திமற்றொருசார்புமில்லாமையால் அடியோங்கள் துக்கங்களினைச் சிவபிரானுக்கு முறையிட்டுயிதற்கொருமார்க்கத்தினைத் தேடிப்போகப் போந்தனமெனச் சொல்லுகின்ற விண்ணவர்களுக்கரசனிடத்தில் அன்பாய் ஓ தேவராசனே யின்னமுமுங்கள்வருத்தங்களை நீக்குங்காலமில்லை அதுவென்னையெனில் எமதுகர்த்தன்சனகசனந்தனர்சனற்குமாரர்களுதனர்யித்தவச்சிரேஷ்டருக்குயோகநிலைமைகளைக்காட்டிக்கொண்டு ஏகாந்தமாகவிருக்கின்றனர்யிக்காலத்தில்யாவரும்போய்தெரிசிக்கப்படாதெனச்சொல்லியவிசேடஞ்செவிகளிற்பட்டவுடன்யிறங்கியவிடமானதுமீட்டுஞ்சிரத்துக்கேறியதைப்போல தேவேந்திரன்வாடிவருந்திநடுக்கடலிற்கப்பல்கவிழவருமுன்னிலையிற்றிகைசிப்பவனையொப்பதேவருடன்பரிபவப் பட்டுப்புலம்பி ஐயையோ எமதுதுன்பங்களையொழித்துச்சிலகாலம் வாட்டமற்றிருக்கலாமென்று இவ்வளவுதூரம்வந்தும் காலபக்குவப்படவில்லையே என்செய்வோம்பூலோகத்தில் ஒளித்திருப்போமென்றாலும் ராட்சதர்தேடி அலைக்கின்றனர் சுதந்திரமாகிய பொன்னுலகையுமிழந்தோம் யினியென்செய்யக்கடவோம்தீனராய்நின்றனமென்றுபற்பலதுயரவசனங்களைப்பேசிமீட்டும் நந்திதேவனைவணங்கி நல்லொழுக்கம் பூததயவு பச்சியாத்தாபமென்பதெவ்வாவெனுமற்ற சூரபதுமன்செய்த தவத்திற்கு நமதிறைவன்மெச்சி அளவற்றவயதும் வச்சிரதேகமும் அகண்டசாம்பிராச்சியச்செல்வப்பெருக்கினையுந்திரிமூர்த்திகளே முதலியர்வநதிக்கும் அரசாட்சியினை

யுத்தந்தனர் யாங்கள்பலநாட்களாக அரியதவ விரதங்களினையும் சிவபூசனைமுதலிய நல்லொழுக்கங்களினையும் பெரியோர்கள் சேர்வையாகிய சதகருமங்களினையும்பத்தியுடன் செய்துமுடித்ததற்குரியபலப்பிரப்பத்தி எவ்வளவெனுங்கிடையாமல் யிழந்ததுமன்றியில் அடியோங்கள்முற்செய்தபிரார்த்தவினையின்சம்பந்தப்படிக்கு நமதுசுதந்திரங்களினை யிழந்தும்மேலும் அப்பாதகன் ஏவலிற்பட்டுதசாதவினைகளைமுடித்துப் பலருமேசப்பிராணனைச்சுமந்து வாழ்கின்றனம் யிவையனைத்தும்லோகநாயகனாகிய பரமசிவத்துக்குத்திருவிளையாடலாகும் ஐயனேசண்டாளர்தொழிலினைதேவரொன்று மற்றையர்பூசிக்குஞ் சிறப்பினையுடைய எங்களுக்கிடுகின்றசூரன்கொடுமைகளை விண்ணப்பஞ்செய்துசொள்ளவந்த காலத்தில் ஆதரித்து அடியோங்கள்முறையினைக்கேட்டு அவைகளுக்கொரு நிவாரணத்தினைத்தேடிரட்சியாமல் பராமுகமாயிருந்தால் இறுமைக்குநாயகனெனப்பலபூதகொடிகளுந்துதிக்கின்றபெருமைக்குத்தாழ்வன்றோ வேதவாக்கியங்களுக்கும் மாறுபடாதோயாங்களேமுதலியசர்வபிராணிகளையும் பருவமறிந்துஆண்டுரட்சிக்குங் சற்குணவர் மோகமற்ற ரிஷிகளுக்குச்சிவயோகசாதனைகளைக்காட்டி யிருக்கின்றனரோ அவரையல்லது மற்றதேவர்களில் அடியோங்களுக்கடுத்ததுக்கத்தினைத்தீர்க்க வல்லவர் தேவரீரறியயாவரிருக்கின்றனர் அதற்குதிஷ்டாந்திரம் மகாவிஷ்ணுவேஒருகாலம் அப்பாதகருடன்பொருதுலோகங்களைவயிறும் புகழ்ந்திருக்கும்வலியுள்ளசக்கரப்படையையும் யிழந்துவணங்கியிருந்தனர்மற்றையர்பாடுகளைப்பேசவும்வேண்டுமோ மேலும் பரமசிவத்தைத் தெரிசித்துஎங்கள்குறைகளை விண்ணப்பஞ்செய்துக்கொள்ளயிதுதருணமல்லவென்றுஎங்கள்பதவிகளுக்குப்போவோமாகிலும் இராக்கதப்பாதகர்பற்றிவாட்டிசிறையிற்படுத்துவது நிச்சயம்யிதற்கொரு ஐயமுமில்லை ஆதலால்நினைசரண்ணியனை நமஸ்கரிக்கக்காலம்நேருமளவுந்தேவரீர்எழுந்தருளும்முகவாயில் மண்டபத்துக்கொருபாரிசத்தில்காத்திருக்கின்றனந்தேவரீர்எங்களிடத்தன்புற்றுவிடை தரவேண்டுமெனப்பலவிதங்களாகப்போற்றுகின்றதேவாசனுபாத்துக்கிரங்கி நந்திதேவர்கிறுபையுற்றுதேவருடன் வருத்தமின்றியித்தலத்திலிருக்கக்கடவீரொன்றுகட்டளையிட்டவாறே இந்திரனுமவன் பரமசிவத்தினைத் துதிசெய்துக்கொண்டிருந்தான்.

அசமுகிப்படலம்.

கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே யிவ்வாறு தேவேந்திரன்பரமேஸ்பரனைவணங்கியா திருக்கயிலைக்குச்சென்றதுவாயில் பூலோகத்

நிற் சிறந்தோங்கிபெசிகாழியென்னுந் தலத்தில் விளங்கியபூக்காவிவிடத்து தன்கணவனேவலின்படிக்குப் பலதேவகன்னியர்கள் வணங்கிகாலங்களில் வேண்டும்பணிவிடைகளினைச்செய்துகாக்க இந்திராணியானவள் தன்கொழுனன் குறித்துப்போயிருக்குங் காரியங்கள் சித்தியாதற்பொருட்டு தன்னிஷ்டதேவதையினை வேண்டித் தவஞ்செய்திருந்தவள் இந்திரன்வருவதற்குத் தாமசப்பட்டதால் ராட்சதப்பாதகரால்யென்னநேர்ந்ததோ வெள்ளியங்கிரியிற் கர்த்தனைக்காணப்பக்குவப்படவில்லாமற்காத்திருக்கின்றனரோ ஏதுந்தோற்றவில்லை யிதற்கென்னசெய்வோமென்னும்ஏக்கத்தினுல் தினமொருவாட்டமாகத் தன்மேனிமங்கி வலிகுறைவுபடவருந்தினாள் குறித்தவனிலையிற் குறைவுபடாமல் முடித்துவருந்தவாயில் அவ்விடத்தில்நேர்ந்தசேதியினைச் சொல்லுவோங் கேட்பீராக

ஒருதினஞ்சூரபதுமனுக்கிளையாள் பலவாலியனைச்சேர்ந்துஞ்சற்றுமிளையாள் அசமுகியென்னும் நாமம்பெற்றவள் யிவள்காமலாகிரிகொண்டுலகங்களிற்சஞ்சரிக்குமுன்னிலையிற்சிறந்த தவச்சிரேஷ்டாகிய முனிபுங்கவர் தேவர்முதலியரைக்காணப்பெறுவளாயின் பலவந்தாமாகமேல்விழுந்துநாணமின்றி கண்டயிடங்களிற் கூடிக்களித்துக்குலவுவள்கொடைகாலமேகசெற்சிதம்போலவசனிக்கும் உரத்தகுரலினைப்பெற்றவள் பொறுமைசிறுமை நீதிமுதலிய சத்கருமங்களில் எவ்வளவேனும்மனங்கிடையாமல் கற்பின்வரம்பைக்கடந்து மனதுக்கினியபடியேநடத்திதேவர்பூதலவாசிகள் முதலாயினருக்கொரு எமனைப்போலத்திரிந்து மண்விண்பாதலமிவற்றுட் பட்டயிடங்களெங்கும் ஒருநாழிகைப்போதிற்சென்று அவ்விடங்களில்தனதிஷ்டப்படியேசெலுத்திப்பொய்வஞ்சகம்மாயையித்தியாதியகெடுதிகள் நிறைந்தமனதைப்பெற்று மதுமாம்சாதிகளை யெக்காலத்தும்பொசித்து புலால்நாற்றமெங்கும் வீசவெறிகொண்டுமதயானையினை யொத்துலவிஎதிர்ப்பட்டவரைச்சற்றுமஞ்சாதுபற்றிசருகைப் போலக் கசக்குங் கரங்களினைப் பெற்று எக்காலத்துங்கண்கள் சிவந்து அனற்பொறிகள் சிதறப்பாதகங்கள னைத்தும் ஒருருக்கொண்டதைப்போன்று அக்கினிக்கொழுந்தினையொப்பு செம்பட்டமயிர்துலங்க எவ்விதவலிபெற்றவ ரொதுத்துப் போராடினுஞ் சற்றுமிளையாமல் அவர்களைவாட்டிடமாய்கையென்னும் வித்தைக்குமுக்கியளாய்சூரன்முதலிய துணைவரினும் அதிகவலியைப்பெற்றுஇரத்தினமலையினையொத்து அசைவற்றதிரேகத்தினைப்படைத்து சத்தசாகரங்களினையும் ஓரடியினுற்றுண்டித்துப்போட்டு சூரனுதியர்களிகள் முற்றும்வொருச்செய்யும்லும்வினையைப்போலவும் காலஎமனையொத்தும்ஒருகரத்தில் சூலத்தினைபற்றிசொக்கிக்கக்கொண்டு தன்மனதுக்கினிய கோபியாகிய தற்

முகியென்னும் பாதகியுடன் ஆகாசமும்வடவனலும்போன்று யாவரு த்தடுக்கிட்டோடவருபவள் இந்திராணிவாசஞ்செய்யுஞ்சோலைக்குச் சமீபத்தில்நெருங்கியபோது அப்பூங்காவின்செழிப்பினை நோக்கிக்களித்து அடடா யிதன்வளப்பத்தினைக்கண்டையோ தேவேந்திரன் நமக்கஞ்சியொன்றுலகத்திலிருந்தகற்பகச் சோலையினையித்தலத்திலிறக்கிவைத்ததாகவேண்டும்யிதற்கையமுமுண்டோ நாந்திரியாதபதங்களிராதலெவ்விடத்திலும்யித்தகையசிங்காரவளப்பத்தினைப் பெற்றநந்தவானத்தினைபார்த்துமறியோங்கேட்டதுமில்லை அம்மம்மயிதன்விசாலமும்தழைத்துக் குளிர்ந்தநிழலைப்பரப்பி பரிமளத்தினை வீசுவதைப்பார்க்கப்பதினுயிரம் விழிகள்வேண்டும் ஆதலால்அடிதோழியிதனுள்புகுந்து முற்றிலும்பார்த்துப்போவோம் வாடியென்று அவளுடன் ஆலத்தையொத்த அசமுகியானவள் அதிற்பிறவேசித்துப் புஷ்பவகைகள் அலர்ந்துதேன்களைச்சொரிந்து அலங்காரமாயிருப்பதையும் வகைவகையாக அணிவகுத்து மல்லிகைமுல்லைஅசோகுமந்தாரங் கொங்குசெண்பகம் பாதிரிபுன்னை மருமருக்கொழுந்து பாரிசாதமுதலிய சிறந்தசெடிகள் நிற்பதையும் பலாமாகுருக்கத்தி ஆதியாகிய விருட்சங்கள் வானத்தினையளாவித் தழைத்தோங்கிநிற்பதையும்அன்னங்கள்முதலியபட்சிசாலங்கள் செந்தாமரை வெண்டாமரைஅல்லிநிலோத்பலமாதியபுஷ்பசாதிகள்நெருங்கிவராவினங்கள்சூழ்கொண்டு மதுரமாகிய செலப்பெருக்கினைவாய்ந்த தடாகங்கள் கூவல்கள் தகுதியாகஅமைந்திருப்பதையும் மற்றசிங்காரங்களையுங் கவனித்துப்பார்த்து யிவ்வனமேயித்தியாதிய சிறப்பினைப்பெற்றிருக்குமானால் யிதைப்படைத்தவர்களெத்தன்மையினை யுடையவர்களாகவிருக்கவேண்டும் அவர்களையும் பார்த்துப்போவது தகுதியென்று நிச்சயித்துப்பலதிசையிலும் உலவுகின்றதை காவலாகவிருந்த அதிசூரனெனும் மகாகாளர் பார்த்து யிவள்சூரன் தங்கையாகிய அசமுகியாக வேண்டும் யிவள் துற்மார்க்கியெனக் கேழ்விப்பட்டிருப்போம் ஆகிலும்யிப்பாதகியினது செய்கையினைத்தெரிந்தபின்பு அதற்குத்தகுதியாகிய பிராச்சிதத்தினை நடத்தக்கடவோமென நினைந்து ஒருசார்பில்மறைந்துபார்த்திருந்தனர்அத்தறுவாயில்அசமுகியானவள் துற்முகியென்னும்பாங்கிகரத்தினைப்பற்றிக்கொண்டுஉல்லாசமாகப்பேசிக்கொண்டுபோகுமுன்னிலையில்அவர்களுக்கெதிரில் குளிர்ந்தநிழலினைப்பரப்பியிருக்கும் ஒருவிருட்சத்தினடியில்தபோதத்தியானமாய் பரமனைநினைந்து இந்திராணிதவஞ்செய்திருப்பதைஅசமுகிகண்டு அடிதோழியிவள் இந்திராணியாகும்யிவள்வடிவினையும்யிளமைப்பருவத்தினையும்போன்ற உருவத்தைநாயிதுபரியந்தம் நாம் எவ்விடத்திலுங்கண்டதில்லை யித்தகைய சந்திரமுகியானவள் நமதிறைவனு

கைஞ்சிகைகல்வளைமுகளும் அமைந்து பலராலும் புகழப்பட்டிருப்பானு
ட்டினைவிட்டுயிவ்விடம்போந்தொளித்திருக்கின்றனள் என்றலைமையனேயிவ
ளிடத்திலைமையல்கொண்டு பிடித்துவரும்படிக்கு அளவற்றசேனைகளை
அனுப்ப அவர்களும்மிகுந்தாவேசத்துடன் ஆயுதபாணிகளாய்த்தெய்வலோகத்
தினைச்சேர்ந்து அரண்மனைமுதலியயிடங்களிற்றேடிக்காணாது திரும்பிவ
ந்து அச்செய்தியினைச்சொல்ல அவ்வீரர்மேல் அதிககோபங்கொண்டுமீட்டு
ம்வேகமுள்ள பலகோடிதூதர்களைத்தூண்டினன் அவர்களும் வாயுவேக
மனோவேகத்தினுங் கடுகிவான நாடுகள் முற்றிலுந்தருவிக்காணாது பா
தலமெங்கும் ஆராய்ந்துஞ் செய்திதெரியாது யிப்போது சமுத்திரஞ்
சூழ்ந்த பூமண்டலங்கள் தீவுகள்வனங்களேமுதலிய யிடங்களிற்சென்
றுதேடுகின்றனர் நமக்குளளிதிற்கிடைத்தாள் ஆகையால் துரிதமாய்நாணி
வளைக்கொண்டுபோய் என்றலைமையன்கொண்டிருக்கும் விசனாபத் தீரத்
தக்கதாக அனைந்துகளிக்கக்கொடுப்பேனுகில் என்மீதுமிகவுங்களிப்பு
ண்டாவன் யிதுவேநல்லகாரியம் மேலும் இந்திரன்யிப்பெண்கொடிக்
கு யாதொருகாவல்களுமின்றிவிட்டுப்போயிருக்கின்றனன் அவன்வருகி
ன்றதற்கு முன்னமேயிவளைக்கொண்டுபோகவேணுந் தாமசப்படலாகா
தென்று கோடையிடியினையொப்ப வசனித்துபற்வதங்கால் முளைத்துந
டப்பதைப்போலக் கறுத்துயாரித்ததிரேகமும் மூன்றாம்பிறைப்பிளவி
னைநிகர்த்துவிளங்குங் கோறதந்தங்களினையும்பெற்ற அசமுகியானவள்
நெருங்குவதை இந்திராணிகண்டவுடன்பிராணனைக்கொண்டுபோகவரு
ம்எமனைநேர்ந்ததுக் கிணையாகத்திடுக்கிட்டு நடுநடுங்கிகுலைகுலைந்து தயி
ரியமுங்குறைந்தவளாய் யிதோவருகின்றவளைப்பார்க்குமிடத்துராட்சசி
யாகவும் பசாசத்தினைப்போலவும் நிருதக்கன்னிகையையொப்பவுங்கா
ணப்படுகின்றது அல்லதுகாளிக்கேவல்செய்பவளோயின்னதெனத்தோற்
றவில்லை யிதற்கென்செய்வோமெனப்பயப்பிராந்தியுடன் துரிதமாகத்த
ன்தவநிலையைவிட்டெழுந்து அப்புறம்போகயெத்தனப்படுகின்ற கால
த்தில் நில்லுநில்லென்றதட்டி சமீபத்தில்வந்துஓ இந்திராணியேயுனதிள
மைப்பருவமும்வனப்பும் அப்பிரயோசனமாக விருக்கின்றது அவல
த்தைநித்தியமாகவெண்ணி ஏன்விருதாவில் சரீரம்வருந்தித்தவஞ்செய்
கின்றனை யிவ்வெண்ணங்களினையினிவிட்டுவிடக்கடவை உனதுசுந்தரவ
டிவுக்கிணையாக சொர்க்கமத்திய பாதலங்களிலில்லை சகலரும் புகழ்ந்
துதுதிக்கப்பெற்ற பெருமையினைவாய்ந்த மகாவிஷ்ணுவினதுமார்பக
மேயிடமாகவாசஞ்செய்யும் லட்சுமிதேவியும்உன்வனப்புக்கொவ்வாள்
எவ்விதங்களிலும் உவமானக்குறிப்புகளிலாவது யிப்பேர்ப்பட்டவளது அ
த்தகையசிறப்பினைப்பெற்ற நீயானவள்பதியையிழந்தநிலைமையில்யித்

பூமண்டலத்தில் வந்தொளித்திருப்பானென் அல்லது தவத்தினைத்தான் செய்யவேண்டுமென்னில் உன்னிளமை நலத்தினைப்பிறையோசனப்பட க்கட்டியணைத்து யிஷ்டாலாபமாகச்சேரவேண்டி என்தமையனாகிய சூ ரபதுமன் வருந்தித்தவஞ்செய்கின்றனன் இதுபரியந்தம் நீவங்கணமா க்கலந்திருந்த தேவராசன் உன்வடிவுக்குச்சமமான புருஷனல்ல அல்லா மலும் தன்னழகு தனக்குத்தெரியாதென வசனிப்பர் அதனை உன்னளவில் திஷ்டாந்திரமாகக்கண்டேன் பாகனிடத்துமதயானை யடங்குமாறுபோ லவே பலநாட்களாக அவனுக்கிணங்கியிருந்தனை யிஃதன்றியில் உனக்கு க்காரியாகாரியங்களையறிந்து நடந்துகொள்ளவகைதெரியாது ஐயோஎ ன் அனியாயமாகநாட்களை விருதாவிற்கழிக்கின்றனை உன்னைக்கண்டமாத் திரத்தில் உன்னிடத்தெனக்கு மிகுந்தபிறியமுண்டாயது நீ கடத்தேறு ம்வகையினையோசிக்கின்றனன் மேலுஞ் சிலதிஷ்டாந்திரமாகியவித்தியா சங்களைக்காட்டுவேன் அதனாலாவது யினிபுத்தியுண்டாய் பிழைக்கக்கட வை என் தமையன்பெருமித்தனையும் உன்கணவன் சிறுமைகளையும்வி ரித்துக்காட்டுவேன் அதுவென்னையெனில்உன்புருஷனாகியதேவேந்திர னோ அற்பவாழ்வினைப்பெற்ற சொற்லோகமாத்திரமே அரசுசெய்திருப் பவன் என்தமையனாகிய வச்சிரகாயம்பெற்ற சூரபதுமன் யித்தகைய இ ந்திரர் அடங்கிய ஆயிரத்தெட்டு அண்டங்களை தன்னுணையாக்கினையிலட ங்காவல்செலுத்தும் செல்வவல்லபமுள்ளவன்—இந்திரனோ அவனிட்ட யீனப்பணிவிடைகளைத்தினையுஞ் சிரத்திற்றாங்கி தினந்தோறுஞ்செலு த்தியிளைத்துவாடியொளித்திருப்பன் சூரன்யிவன்முதலிய பலதேவர்களை யெவரையும் ஏவல்கொண்டுஉலகங்களனைத்தினையும்யெதிரின்றியேகச்சக்கி ரத்தினைச்செலுத்திஆள்பவன் மேலுஞ்சலனமற்றவச்சிரப்படிவத்தினைவா ய்ந்தவன் இந்திரன்காலாதிகளில்மாளுஞ் செய்கையைப்பெற்றவன் சூர ன்பழியென்பதில்லாமல்கீர்த்திப்பாலனுகமானாம லிருப்பவன்இந்திரன் பழிவேலையில் மூழ்கி நிலைபெறுதலைந்து திரிந்தும்மேலும்யிடைவிடாம ற் பாதிகருத்துக்கத்தினை அனுபவித்திருப்பவன் சூரன் எக்காலத்துந் திர ளாய் களித்து வாழ்ந்திருப்பவன் இந்திரன் பலதேவதைகளைப் போ ற்றித்தொழுந்தாழ்வைப்பெற்றவன் சூரன்தேவர்க்களே முதலியபலரும் பணிந்து தங்கள் குறைகளை முறையிட்டுப் பெற்றுவாழும் மகிமையி னைவாய்ந்தவன் ஆதலால் இந்திராணியேகேளும்யின்னமும்பற்பலபேதங் களுண்டு அவற்றிற் சிலதெரிவித்தேன் யிவ்வித அகண்ட செல்வ சாம்பி ராச்சியப்பெருக்கினைப்பெற்று வாழுஞ்சூரபதுமனைச்சேர்ந்து யின்ப ரத்தினைப்பெற்றிருக்கத் தெடவறியாமல் அவன்பணிவிடைகளினைச்செ ய்தொளித்துதிரிகின்ற அயலனை இந்திரனையே பெரிதாக வெண்ணியி

ருப்பதென்னகாரணம்இதுவுனது பெருமைக்குத் தகுதியோமேலும்மு
ன்யோசனையின்றி உனது வாலிபதலத்தினைப் பலகாலமாக விரதத்திற்
கழித்தனை யிதுநலமோ தேவர்களவருடன் இந்திரனும் மற்றராசுரே
முதலாகதமதுதேவியருடன் நீயிட்ட பணிவிடைகளைச்செய்துபோற்றத்
திரிமூர்த்திகளுந் துதிக்கும்படியானசிறப்பினையும் வல்லபத்தினையும்பெ
ற்றுயாழுஞ் சூரபதுமனிடத்திற் சேர்ந்து அவனுடன் உலகங்களனைத்தி
னையும் ஆளும்படிசெய்வேன் சூரன்லட்சுமியேமுதலானவரை விரும்ப
ப்பட்டவனன்று உன்பாக்கியமேபாக்கியம் நீ சம்மதப்படுவையேயாகி
ல்உன்மனயிஷ்டப்படிக்கு நடத்துவதன்றியில் அளவுபடாதயின்பத்திற்
களித்திருப்பன் யிது உண்மையாகும் ஆதலால்விரைவிலென்னுடன் வரு
க்கடவையெனக்கற்பினையுந் தர்மத்தினையும் எவ்வளவேனும்விரும்பாத
பாதகியானஅசமுகிபேசினள்.

இந்திராணிமறுதலைப்படலம்

இவ்விதங்களாகக்குறாதியாகிய அசமுகிசொன்னகொடிய சொ
ற்களைஇந்திராணிகேட்டமாத்திரத்தில்சிவக்கக்காய்ச்சியநாராசத்தினைச்செ
விகளிற்சொரிகியதைப்போலக் கேட்டுப்பதைபதைத்துவருந்திசெவிகளை
ப்பொத்திபரமனைத்தியானித்து ஏங்கினவளாய் எதிரில்நிற்கின்றகொடி
யவளாகியஅசமுகிகேழ்க்க யிதனைச்சொல்லுவதாயினள் அடிதுர்மார்க்கி
யிப்போதுபேசியதீயவல்லனவாகிய வார்த்தைகளினைவிரும்பியவர்கள் எக்
காலத்திலும்நிவாரணமில்லாதறவரவாதிநரகயாதனையிற்பட்டு யிடைவி
டாமல்வருந்துவர்யித்தகையதும்போதனையை நினைந்தடனக்குநேருந்
தீங்கினையாவராற்சொல்லிமுடியும் வேதங்களைநிருமித்தபிரமபுத்திரனா
கியகாசிபருக்குப் பெண்ணாகப்பிறந்ததீஅறிவில்லாதவரைப்போலநீ
க்கிடையூறாகிய வார்த்தைகளைப் பேசப்படுவதோ ஒருவருக்குந்தீங்குசெ
ய்யாதவர்கள்தாங்களும்வருந்தாமல் பலருக்கும்யினியராகவே யிருப்பர்
நீ யிதனைநினைந்ததில்லையோ மேலுந்தருமத்தினைச்சீர்தூக்கிப்பார்த்தவ
ல்லஉலகினர் நடவடிக்கைகளையுங் கற்பின் திறங்களையும் மேம்பாட்டி
னையும்மறக்கலாமோமேலும் நீபிறந்தமரபினையும்உரிமையினையுமுடை
மையும்மேல்வரும்பழிபாதகங்களினையுந் திரிலோகங்களினும்யிகழ்ந்து
பேசும்வார்த்தைகளையும்நமக்குரிய முறைகளையும் மற்றுஞ்சிறந்தகரும
ங்களினையுந்தீயனவாகிய செய்கைகளையும்எவ்வளவேனும் பகுத்தறிந்தா
லோசித்துருத்தனமென்று யோசித்துப்பேசினவளல்லை . உன்னையொக்க

௯௰௨. இந்திராணிமறுதலைப்படலம்.

வன்பித்தகையபதியசொற்களை போதிக்கப்படுவதோ மேலுந்தனக்குக்கி
டைத்தயிருந்தசெல்வத்தினையும் நீண்ட வயதினையும் யிம்மை மறுமை
காலங்களிற் பலராலும்புகழவினங்குங் கீற்திப்பெருக்கினையும் போக்க
வல்லாருக்கு யிக்கெடுமதி ந்தாற்றுமல்லது வேறல்லஉன்னையொத்தவன்
பித்தகைய நியகருமங்களிற்றுணிவுகொள்ளலாமோ யிதனைவிடுவையாகி
ல் பரமனருளினால் பெருகாலம்வாழ்ந்திருப்பைவிணைகப் பேசுவதிற்கா
ரியமென்னைஎன் துணிபினைக்கேட்பாயாக தேவேந்திரனிடத்தல்லதும
ற்றதேவர்கள்முதலியாரிடத் திச்சைகொள்ளேன்கற்புவரம்பிற்பிசகாமற்
காப்பாத்தும் பெண்ணுமுடையளனக்கு உலகவிருத்துவமான நடவடிக்
கைகளைப்போதிக்கத்துணிந்தனை யிவை உன்வம்சவிற்தியடைவதற்குக்
காரணமல்லவேதாகம புராணசாத்திரமுதலிய கல்விகளையும் பூரணமாக
க்கற்றுணர்ந்துஞ் செங்கோன்மைக்குவழுவாகிய தீங்குகளைச்செலுத்து
ம்விருப்புள்ள அரசர்களும்மற்ற கொடிய செய்கைகளினை விருப்புற்று
நடாத்திய வர்களுந்தாங்கள் செய்தகாரணங்களுக்கடுத்தவமதெண்டனை
யும்நரகயாதனைகளும்பெற்று மீளவறியார்கள் யிதனைநிச்சயமாகக்கொள்
ளக்கடவை மேலும் என்கணவன் நீங்காததுக்கசாகரத்தி லழுந்தினவன்அ
யலசொனப்பேசினை பரமன்கட்டளைப்படிக்குயாவருக்கும் யின்பதுன்
பவனுபவங்களுண்டுபிறார்த்தவினைகளைக் கடந்தவர்யாவர்மேற்குறித்தயி
ரண்டாவது கருபநாளைக்கே உங்களுக்குங் கிடைக்கலாகாதோ வேத
மாற்கத்துக்கடுத்தநீதிகளைத் தெருட்டவறியாதபேதாய் கற்பினெல்லையி
னைக்கடந்த கொடியையாதலால் உள்ளஅறிவும்மயங்கி பிறர்தகைக்குத்தீ
ங்குகளைச்சொல்லத்துணிந்தனையிவைஉன்னொத்தவருக்குயோக்கியமல்
லயினியாவது நீ நற்கதியினைபடைந்துபிழைக்கவேண்டுமாகில்யிவ்விதக்
கெடுதினைவைமறந்துவிடுயிவையன்றியில் நான்தனித்திருக்கிறதாயெண்
ணவேண்டாம் எனக்கொரு துன்பமும் நேராமலும் யாவரும்நெருங்க
வொட்டாமலுஞ்சிலதேவர்கள்காவலுண்டு உனக்கொருதீங்குநெருகின்
றதற்குமுன்னமேவிரைவில்யிவ்விடம்விட்டுஅப்புறம்போகக்கடவை நீ
யும்என்னைப்போலப்பெண்பாலாதலால் எதோதெரியாமல்யிவ்விசேஷ
ங்களைச்சொன்னாயென்று அக்குற்றங்களினைப்பாராட்டாது மேல்நேரு
ங்காரியத்தினைச்சொன்னேன் யிதனைகடைப்படியாக நம்பக்கடவையெ
ன்று இந்திராணியானவள்மாறுத்திரவுகொடுத்தவுடன் பாதகியாகிய அச
முகியானவள்விடைதாகத்தினைப் போலச்சீறிஅக்கினிப் பொறிகள்பறக்க
ப்பற்களைநறநெறெனக்கடித்து புகையும்அனலும்வீசப்பெருமூச்செ
றிந்துசிவந்தகண்களைச்சுழற்றிசொடையிடியினைப் போலக்காரங்களைத்தட்
டிநல்லகாரியம்நல்லகாரியமெனக்கோபித்தாள்கேட்டீர்களோ தையலீர்

ரணிய வாசிகளே சற்பின்வரம்பிற் பிசகின்றி நடக்கவல்லஇந்திராணிசொ
ல்லியநீதிவசனங்கள் அக்கொடியவனுக்கு பிறையோசனைப்படாமல் ஒரு
ஞானாசிரியன்தன்னையடுத்தபித்தனுக்குப்போதித்தஉபதேசத்தைப்போல
ப்பயன்படாதுபோய்விட்டது பின்பு ராட்சதியாகையால் தானெண்ணி
யதுசித்தியாகவில்லையென்றும் மானம்பாதிக்க இந்திராணியைஉருத்து
ப்பார்த்துயிதுவும் புண்ணியமெனநினைந்துஉன்வருத்தங்கள் நீங்கிசவுக்
கியமடையத்தக்கதாகவும் சீர்படும்படிக்கும் நன்மார்க்கங்களைச் சொன்
னல்யிதுவும்தெய்வசங்கல்பமென்றுயினிமேலாவதுசீர்படுவதாக என்னை
ஓட்டிக்கொண்டுவாராமல் ஏதோதெரிந்தவளைப்போல மறுதலை பேசினாய்
யிந்தட்சிணங்கொன்றுதின்றுகோபத்தணிவேன் ஆனால்என் தமையனுக்
குஉதவியாகநினைந்தகாரணத்தினால் பொறைசெய்தனன் யிதனை எதார்த்த
மாகவேயெண்ணக்கடவை உன்துன்பங்கள் நீங்கிசீர்படவேணுமாகில் அக
ண்டசாம்பிராச்சியச்செல்வப்பெருக்கினையுஞ்சகலருந்துதிக்குங்கீர்த்தியினை
யுமுள்ள என்சகோதரனிடத்துக்கு குறியாய்வரக்கடவை அல்லதுபழைய
படியே குறுக்குப்பேசுவையாகில் யிந்நிமிஷத்தில் உன்னைபலவத்காரமா
ய்பிடித்திழுத்துப்போவதுநிச்சையம் ஒருகாலந்திரிமூர்த்திகளே உனக்கு
உதவியாகநேர்ந்தபடியாயினும் எதுத்துப்போர்கொடுத்தாலும்அவர்க
ளைவென்று உன்னைக்கொண்டுபோகக்கடவேன் அதையும்யினிசற்றுநே
ரத்திற் காணுகின்றனையெனப்பேசிப் பாதகியானவள் மீறிஇந்திராணிகரத்தி
னைப்பற்றியிழுத்துநடக்குமுன்னிலையில் பூனைவாயிற்பட்டபசியகிள்ளையை
ப்போல் அலறியினைத்துவாய்குழறஓலமிடத்துடங்கி ஐயனேகாப்பாத்து
ம் பாதகிபற்றிவலிக்கின்றனள் விடுவிக்கவாரும்வாருமென்று கூவவுஞ்ச
ங்கையற்று வாயினைமூடிநடவென்றுதள்ள இந்திராணியானவள் அந்தசண்
டாளிகையிற்பட்டமாத்திரத்தில் பிராணனிழந்தவளைப்போலக்கலைத்துவி
ழிகளில்நீரைப்பெருக்கிசகதறவுங்கிஞ்செத்தும்யிதக்கமற்றுவலிக்கப்பதை
பதைத்துசுத்திலும்பார்த்துயாவரையுங்காணாதபடியாலதிகிற்கொண்டுபுல
ம்புவதாயினள்.

மகாகாளர்வருபலடம்

ஓ—கற்தனே யிப்பாதகிவலிதிற்பற்றி வலிக்கின்றனள் விடுவிக்கவ
ருவாய் ஓலம் மகாவிஷ்ணுவுக்கும் பரமசிவத்துக்கும் உதித்தஐயனேஅ
ரியபுத்திரனே ஓலம் தேவர்கள்தொழும்முதன்மைபெற்ற கடவுளேஓல
ம் அழகியசெண்டினை ஏந்திய கரதலத்தினைப்பெற்ற தீரனேஓலம் எமது

குலதெய்வமே ஓலம் பொய்யருக்குப்பொய்யனும் மெய்யருக்குமெய்ய
னும் விளங்குந் தினதயாபரமூர்த்தியே ஓலம்சகலரும்புகழ்கின்றவீரத்தன்
மைவாய்ந்தசவுரியபரனே ஓலம் என்முறையினைக்கேட்பாய் ஓலம்வே
தபாராயணராய் சிவக்கோலம்பெற்றுவிளங்கும் மகிமைபெற்ற உருத்தி
ரகணங்கள் சூழஅரசுசெலுத்தியிருக்குங்காரணக் கடவுளே ஓலங் கருநீ
லப்பெற்ற கடலினையொத்துக்கறுத்து விளங்குந்திரேகத்தினையடைத்த
எனதப்பனே ஓலம் வடிவினுங்குணத்தினுங் கற்புத் தன்மையினுஞ்சிரே
ஷ்டமாகப்புகழும்பூரணைபுட்கலையென்னுங் கன்னிகைக்குக்கணவனாகவிரு
க்குங்கடவுளே ஓலம் மும்மதங்களினையும் பெருக்கிட்டு பிளிறுவியிட்டு
கட்டுத்தறியினை முறித்துலவவல்ல யானையின் மீதில்வருங் கெம்பீரபுரு
ஷனே ஓலம் ஓல வென்று தேவராச பத்தினியாகிய இந்திராணி முறை
யிடுவதைமகாகாளர் கேட்டு ஐஐயோ எங்கள்ஐயனைக்குறித்துக்கூவியிட்ட
திவிறலைத ஓல மிடுவதோ அலறுவதோ நானிருந்தும்இத்தகையகாரியம்
நடக்கலாகுமோ வெனக்காருண்டமேகத்தினைப் பறக்கச்செய்யவல்லவா
யுவினைப்போலக்கொடியவர்களுக்கு மிகவுங்கொடியவனும்அரியரபுத்தி
ரர்சேனைக்குத்தலைவனாகவுந் தேவர்கள் அனைவருங்கொண்டாடுஞ் சவுரிய
பராக்கிரமமுள்ள வீரனாகவும் பிரமன்விஷ்ணுவாதியாக வந்திக்கும் புக
ழினைப்பெற்று அவர்களுக்கடுத்ததுன்பத்தீரவிஷத்தையுண்டுபாதுகாத்தப
ரமசிவனுமத்தினைப்பெற்றவனாகவுங் காலாதிகளில்மன்னுயிரனைத்தையுங்
கொண்டுபோகவல்லஎமதருமராசன் பங்குக்குநேரும்எமனையொத்ததீர
னாகவும் மூன்றும்பிறையினைக்கண்டித்துத்தரித்திருப்பதையொத்துவிளங்
குங்கோறதந்தங்களினைவாய்ந்தவனாகவுங் கோடைகாலமேகமானதுமின்னி
யிடிக்குந்தன்மைபாகவீசவாளினைகரத்திறபற்றிச் சுழற்றிப்பாயுங்கெம்பீ
ரனாகவும்பலரும்புகழும் மகாகாளனென்னும்பெயரினையும்படைத்த வீ
ராதிவீரன் லகுப்பாய்ந்துவந்து தேவராசபத்தினியாகிய இந்திராணியைவ
ஞ்சித்தெங்கேகொண்டுபோகின்றனை நில்லுநில்லென்று அதட்டி ஓபதிவிர
தாசிரோமணியேயிதோ வந்துவிட்டேன்இனிபயப்படாதேயெனக்கொள்
ளாதேவாழி வாழி யிப்பாதகியாகியகொடியஅசமுகிக் கெவ்வளவும்அஞ்ச
வேண்டாம்உன்னைத்தொட்டயிவள்கரங்களைவெட்டித்தள்ளிவிடுகிக்கவல்
லென்பாருமென்றுவீரன்பேசியதயிரியவாக்கியத்தினைபுலோமிசைகேட்டு
தனக்கடுத்த துன்பத்தினைச்சிறிதுநீங்கிவாடிநின்றபயிரானதுமழைத்தூவ
ல்படத்தழைத்தோங்கிநிற்பதையொத்துமுகமண்டலம்விளங்கவீரமாகா
ளனைப்போற்றினள் அத்தருவாயில் அசமுகியென்னும் பாதகியானவள்மா
காளனைப்பார்த்து நகைத்துமுத்தொழிலினை நடத்துகின்ற திரிமூர்த்திக
ளுந் திரிலோகவாழ்வினைப்பெற்றஇந்திரனேமுதலிய அஷ்டதிக்குபாலக

ரும்மற்றதேவர்களும் என்முன் நிற்பதற்கஞ்சிஒளிப்பார்கள் அத்தகையபுசபெலபராக்கிரமத்தினைப்பெற்ற நம்மைமவானவர்களிலொருவனாக விருக்கின்றயிவனேயிகட்சியாகப் பேசுவான் நல்லகாரியம் யிவன் ஆணவத்தைச்சற்றுநேரத்தில் அடக்குகின்றனனெனக் கோபித்து விழிகளிற் றீப்பொறிசிதறநோக்கிப்பற்களைச்சடித்துக்கொக்கரித்து கரும்பினைப்போல முறித்துயிவன்வல்லபத்தினை தொலைக்கின்றேன் சமீபிக்கட்டென் றெதிர்பார்த்திருந்த அசமுகிக்குநேராய்வீராதிவீரனாகியமாகாளன்வந்து அடிராட்தப்பட்டி பதிவிறதாசிரோமணியாகிய இந்திராணியை தனித்திருப்பதாக வெண்ணிவஞ்சித்துக்கொடுபோகின்றனையோ நல்லகாரியம் அவளைவிட்டுபோகக்கடவமேலும்பயங்கொள்ளவேண்டாமென்று சொல்லக்கேட்டு அசமுகியானவள் சீறிக்கொதித்து யிப்படிக்குத்துணிவுகொண்டுவசனிக்கும் உன்னையிவளைக்காக்கும்படியாய் வைத்தவர்களார் அவர்கள்பெயரைக்கேழ்க்கவிருப்புற்றேன் சொல்லடாவென்று தன்குலத்தினையூழ்வினையைப் போல நாசமடையச்செய்ய நினைந்திருக்கும் பாதகிகேழ்க்க வீரபராக்கிறம சாலியாகியமாகாளர்சொல்லுவார் அடிதுற்மாற்கி கேழ்ப்பாயாகதிரிலோகங்களினுந் துன்பமின்றிகாற்குந்தின தயாபரன் காருண்டமேகத்தினையொத்தகரியநிறம்பெற்றவன் வெள்ளையானையின்மீதுபவனிவரப்பட்டவன் வலியினுக்கொப்பற்றஅரியரபுத்திரர் எனக்கிப்பணிவிடையினைக்கட்டளையிட்டனர் நான் அவர்சேனைத்தலைவனாகும் என்பெயர் வீரரில்வீரனாவீரமாகாளனென்பர் யினியாவது இந்திராணியைவிட்டுப்போகவென்று சொல்லியவாக்கியத்தினை அசமுகிகேட்டு அரியரபுத்திரன்சேனைத்தலைவனென்பதுபோய்யிவன் தேவேந்திரன்மனிதனாகும்யிதற்கையமில்லை யெனநினைந்து அதிககோபங் கொண்டவளாய் நமக்குப்பயந்தொளித்துத் திரிகின்றதேவராசன் தொண்டனோ நம்மைத்தடைசெய்யவல்லவனென்றுசீறிகரத்திற்பற்றியிருந்த சூலத்தினைச்சுழற்றிமாகாளர்மார்புக்கிலக்காகவெறிந்தனள் அப்படையானதுவிடுபட்டவுடன்முத்தீயும்ஒருருக்கொண்டோங்கியதைப்போலப் புகைந்தெரிந்துமேல்வருகின்றதை வீரன்கண்டு குறுநகைகொண்டு ஆதியில் வடவாமுகாக்கினியினை வீரபத்திரக்கடவுள் அழித்ததுபோல தன்கைவாளினால் யிருதுணிவாகவெட்டித்தள்ளியகாலத்தில் அச்சூலமானது கடல்கடையுமுன்னிலையில்வருந்திவாசுகிகக்கிய விஷச்சுவாலையினையொத்துங் கோறதந்தங்களைவாய்ந்தகொள்ளி வாய்ப்பசாசமானது அனற்பொறியினைச்சிதறியதுபோன்றும் காரகாலத்தில்மேகமானது யிடித்தெழுந்துமின்னலை வீசியதுக்கிணையாகவும் அனற்பொறிகளைக்கொட்டி விழுந்ததுமேலும் அச்சூலத்தின்பெருமையினைக்கேட்பிராகஊழிகாலத்திலுலகங்களையழிக்கக்கடவின

௩௱௰௯ மாகாகாளர்வருபடலம்.

டங்கியிராணின்றவடவனலானதுசூலகாலவிஷத்தினைப்பூசப்பட்டுஅசமுகியென்னும்பாதகசரத்திற்பிடியுண்டு நின்றதையொப்பச்சொல்லவும் வேண்டும் அதனைத் திஷ்டாந்திரமாகக் காட்டுவேனென்றதைப்போலவீராதிவீரனாகியமாகாகாளர் வாளானது அதன்சுபாவகுணத்தினை வெளியிடத்தண்டித்ததையொப்ப வெட்டித்தள்ளியது யிவ்விதமாகத் தானேவியசூலமழிய அசமுகிசீறி அருகில்நிற்கின்ற வுயிருக்குயிராகிய தோழியினதுகரத்திலிருந்தசூலத்தினைவாங்கி எமனும் அஞ்சக் கொக்கரித்துத்தானெண்ணியகாரியத்துக்கிடையூறில்லாது தான்பற்றியிருந்த இந்திராணியைசற்றேகரத்திருமென்றுதோழிவசத்தில் ஒப்பித்துஇராகுவானதுசந்திரன்மீதுதாவியதைப்போலப்பாதகியாகிய அசமுகிபாய்ந்து வீரமாகாகாளர்பேரிற்குதித்துமார்பிற்குத்தநினைந்துமாறிமாறிவாதுகொடுக்குமுன்னிலையில் அக்குறிப்பினைத்தெரிந்துவீராதிவீரனாகியமாகாகாளர்தமதுகரத்தில்விளங்கும்வாளினால் அதனையும்வெட்டித்தள்ளி சிங்கநாதஞ்செய்தனர் அக்காலத்தில் அசமுகிசற்றுதளர்ச்சிகொண்டு பின்னிடைந்துபக்கத்தில்வானத்தினையளாவநின்றவொருபர்வதத்தினை வேருடன்பறித்தெடுத்துகிறுகிறெனச்சுழற்றி யிதனால்பொடிப்பொடியாக நாசமடையக்கடவையென்றெறிந்தனள் அதுவும்அதிவேகமாய்வரும்போதுமாகாகாளர்நகைத்துதமதுவெற்றிவாளினையுதறி ஓங்கிவீசபர்வதமும் அந்தவாளுந்துகள்பட்டது அதனைக்கண்டஅசமுகியானவள் ஊழிகாலசமுத்திரத்தினைப்போலக்கூவி அடாவீரமாகாகாளா என்டாதலைகீழாய்விழுகிறாய் முன்பின்யோசித்தவனல்லசூரபதுமன் ஆக்கினையையும் நினைந்தவனல்லஅதனைத்தெரிவித்தின்றனன்கேட்பாயாக உலகங்களனைத்தினையுஞ் சிருஷ்டிக்கவல்லமகத்துவத்தினைப்பெற்றபிற்மதேவன் பிருதகாலத்தில்ஆசாரவாசலில்வந்துகாத்திருந்துகாலம்பார்த்து பஞ்சாங்கத்தினைத்தினந்தோறுஞ்சொல்லிஆசீர்வதித்துப்போகவும் மற்றதேவர்களனைவரும் யிட்டஏவல்களைச்செய்துபோற்றிக்காற்கவும்வீராதிவீரர்களாகிய அவுணர்முதலாகக்கைகட்டி நின்றேவல்செய்க்கவும் அளவற்றஅண்டங்களினை ஆளப்பெற்றசூரனாகியஎன்தலைமையன் தோள்களைத்தழுவியணைந்து களித்திருக்கயிந்தஅயிராணியைக்கொண்டுபோவதையறியாது பேதமைப்புத்தியினாற்றடைசெய்தனையிதுமுக்கியமாகத்தகாதகாரியம் மேலுந்தாருகாசூரன்சேனைத்தலைவர்கள் யிவளையும்யிவள்கணவனையுந்தேடித்திரிகின்றனர் அவர்கள் ஒருகாலங்காணுவார்களாயின் உன்னைவிடவறியார்கள்கொன்றுதின்றுவிடுவர்அல்லாமலும் நானேஉன்னைவயிற்போட்டுகொறித்துவிடவல்லேன்ஆனால்பசிதணியப்போதாமையால்விட்டேன்கெடுதிநேருவதற்குமுன்னமேதப்பித்துக்கொண்டோடிப்பிழைப்பாயாகவிணிற்சாகவேண

டாம் ஓ அபலனே உன் மீது தயையினாலே இதனைச் சொன்னேன் தாமதஞ்செய்யாமல் நடந்து விடுவையென்று அசமுகி சொல்வதை வீரன் கேட்டு நகைகொண்டு நல்லகாரியம் என் வல்லபங்களை யறியாதாய் இவ்வார்த்தைகளைப் பேசினை வெகுகாலமாக வெற்றிபெற்று நின்ற உன் குலத்தைப் பொடிசெய்ததறியாயோ உன்னையும் வதைப்பது எனக்கரியதல்லவென்றாலும் உயிர் தப்பிப்பிழைத்தாய் யிதனையறிந்து விரைவில் இந்திராணியை யொப்பித்துப் போட்டு நடந்துவிடக்கடவை வீணிற் காயத்தினைப் போக்கடித்துக் கொள்ளாதேயென்று வீரன் பேசிய உண்மைகளை ஆழியின் சம்பந்தப்பட்டவளாதலால் யோசியாமல் இவள் கரத்திலிருந்தவாளும் போய்விட்டது மேலும் நிராயுதனுடன் சண்டைகொடுப்பதிற் பயனில்லை நீதிச்குடும்பிருத்துவமாகக் காணுகின்றது அல்லாமலும் யிவனைச் சுலபமாக எண்ணவும் போகாது வெல்வதரிதாயிருக்கும் யித்தருணத்தில் வீண் காரியத்துக்குள்ளாகாமல் நாம் நினைந்தபடியே இந்திராணியைக் கொண்டுபோய் விடக்கடவோமென நிச்சயித்தவளாய் தன் தோழியருகிற்போய் அவள் காவல் கொண்டிருந்த இந்திராணியைப் பழையபடியே தன் கரத்திற் பற்றினவளாய் பூர்வத்தில் வாயுதேவன் மகம்மேருபர்வதச் சிகரங்களைப் பறித்துப்போனதைப்போல அதிவேகமாய் நடப்பதை மாகாளர் பார்த்து அடிபாதகி எங்கே போகின்றனை நில்லு நில்லெனத் தொடர்ந்து கொடியமனதையுடைய அசமுகி கூந்தலை ஒருகரத்தினாற் பற்றி மற்றக் கரத்தினால் உடைவாளை உருவிக்கொண்டு இந்திராணியினைத் தொட்டிருந்த வலதுகரத்தினைத் தோள்வரையில் தேவர்களித்துக் குதித்துக் கொண்டாட வெட்டித்தள்ளி யிருண்டபிலத்தில் வகைமோசமாய் அகப்பட்டுத் தப்பிப்போகவகைகாணாது மயங்குகின்றவரை வெளியிற்கொண்டு வந்து விட்டதைப் போலமதிமயங்கி வருந்தித் துக்கித்திருந்த இந்திராணியினை பதலமாய் அப்புறப்படுத்தி பின்பு மனஞ்சகியாமல் பாதகியாகிய அசமுகியை தமதுபாதத்தினால் மலையின்மீது பட்ட யிடியைப்போல உதைத்துத் தள்ளியுருட்ட அதைக்கண்டு துக்கித்துப் பக்கத்தில் நிற்கின்ற துர்முகியைப் பார்த்து இந்திராணியைத் தொட்டதையுனக்கும் யிருக்கலாகாதென்று உதிரம் பெருகக் கொய்து தள்ளி அவளையுங் காலினால் உதைக்க ஓவென்றலறி பூமியில் விழுந்தனன்.

அசமுகிசோபப்படலம்

இவ்வாறு வீரகெண்டைசத்திக்கும் பாதங்களினையுடைய மாகாளர் கோபித்து இரண்டு ராட்சதக்கன்னியர் கரங்களினை வெட்டித்தள்ளியகாலத்தில் ஊற்றெழுந்து பெருகுவதைப்போல யிரத்தமானது பீறிட்-

௩௱௰௮ அசமுகிசோபப்படலம்.

டோடவிழுந்துகிடந்ததெப்படிக்கிருந்ததென்றால் அகண்டசாம்பிராச்சியச்செல்வப்பெருக்கினையும் புசபெலபராக்கிரமத்தினையும் பெற்றிராநின்றசூரபதுமனிடத்துயிதுயரியற்தம்வாழ்ந்திருந்த லட்சுமியைச்சுடுவதற்கமைத்தகுறைத்தலைக் கொள்ளியினையொத்துவிளங்கியது பின்புசுழித்தோடும் ஆற்றைப்போலயிரத்தமேலிட்டுப்பெருக அசமுகியானவள் வருந்திவிழுந்தமூற்சித்துத் தெளிந்தவுடன் தனக்குநேர்ந்ததுன்பத்தினாற் சமுத்திர மிளாவதைப்போலகோவெனப்புலம்பி மருண்டுபதைபதைத்துயிடதுகையைபூமியில் அடித்துநெரித்துமாகாகாளன்மீட்டுமெங்கேவருகிறானோவென்னுமேகத்தினாற்சுற்றும்பார்த்து வெருண்டும்கரத்தினாற்பூமியிளக்க மோதியும்முதுகும்மார்புந்தேய கடகடெனப்பூமியிற்புரண்டுஞ்சரீரமுற்று மிரத்தந்தோய்ந்தபடியால் அந்திவானத்தினையொப்பவிளங்கியும்யிவ்வபாயத்துக்குக்காரணம் இந்திரன்தேவியாதலாலவளைப்பற்றிப்பிசைந்துமென்றுதின்றுகோபந்தணிவேனெனச்சடுதியிலெழுந்துவிழுவாள் சற்றுமவுனியைப்போலச்சும்மாயிருந்தெண்ணிவாடுவள் முன்னும் பின்னுஞ்சாஞ்சுசொடுப்பள் பலயீனத்தினால் மூற்சையாவள் கோபத்தினால் உதட்டினைக்கடிப்பள் பெருகும்உதிரத்தினைக்கொப்பளித்து உமிழ்வள் நல்லகாரியம் நல்லகாரிய மெனத்தலையையசைப்பள் யிடியினையொப்பப் பற்களைகடிப்பள்பயபீதியினால் திகைத்துப்பார்ப்பள் என் செய்கைவெகு நேத்தி நேத்தி யென்றுநகைப்பள் சபாசென்று விரலைமூக்கின்பேரில்வைப்பள் கோபஅனல்மென்மேலும் மூளபுகையும்அனலும் பெருகவாயினாலூதுவள் உம்மெனக்கெற்சிப்பள் நல்லதாகட்டுமெனக்கோபிப்பள் விழிகளிற்றீப்பொறிபறக்கச் சுற்றமுற்றும்பார்ப்பள் வீரமாகாகாளன்பராக்கிரமத்தை யெண்ணியெண்ணி மெச்சுவள் சரீரம்வியர்க்கவருந்துவள் தனக்கடுத்தகுறையை நினைக்குந்தோறும்வெட்கித்தலையையிறக்கிக்கொள்வள்அறுபட்டுபூமியிற்கிடக்கின்றகரத்தினைமற்றையகரத்தினா லெடுத்துப்பார்ப்பள் கண்களில்ஒத்திக்கொள்வள் புசத்திற்சேர்த்து அமுக்கிப்பள் யிப்பாடுபட்டவர்கள் என்னைவிடயாவரிருக்கின்றனரென்பள் யித்தனை அவமானம் நேர்ந்தகாலத்தில் உயிர்தரியாமல் யிறப்பதேஉத்தமமெனக்கருதுவள் அகண்ட சாம்பிராச்சியப்பெருக்கையுடையசூரன் தங்கையாகிய எனக்குமிப்படிக்கு நேருமோவென்பள் ஐஐயோயிதுமிகவும் அனியாயம் அனியாயமென்பள் திறமூர்த்திகளேமுதலியபலரும்புகழவாழும் என்தமையன்முன்யிக்கோலத்துடன் யெப்படிக்குப் போவேனென்பள் பலபலஎண்ணமிட்டுஅழுவள் யினிவாலிபமுள்ள புருடர்என்னைத்தொடக் கூசுவரோயென்செய்வதென் அவாவென் முடமெனச் சகலரும்ஏசுவரோ யென்று பிலேபிப்பள் பயந்

தொளித்துத் திரியுந் தேவர்கள் பழிபேசுவரே என்பன் யிதற்கென்செ
ய்வோம் ஒருதந்திரமுந்தோற்றவில்லையேஎன்பன் பொன்னுலகவாசிகளை
யெல்லாருங்கொன்றாலொழிய நம்முடைய கோபந் தீராதென்பன்
முனொரு காலத்தில் உமையம்மை தன்னிரு கைகளால் சிவபெருமான்
அவர்களுடன்மற்ற உலகங்களையுஞ் சாம்பலாக்கி நூறுவேனெனக்கோபி
ப்பள் சகலபுவனங்களினுமிராநின்றபிராணிகளையும் நாசமடையச்செ
ய்துகோபம்நீங்குவேனென்பன் கடையுகத்திற்சராசரப்பிறபஞ்சங்
களினைத்தனிக்கவல்லவடவாமுகாக்கினியை யவிப்பேனென்பள் அன்
டவந்க்குலையகிழ்மேலாக்குவேனானத்தில்விளங்கும் நட்சத்திரரா
சிகளைவாரிக்கொறிக்கவோவென் றிவ்விதங்களாகப்பலபலகோபவார்த்தை
களைப்பேசுவதைக்கேட்ட தோழியாகிய துன்முகிராட்சதக்கன்னிகையா
யினும்விவேகசாலியாதலால் மன்னுயிருக்கிரங்கி அசமுகியைப்பார்த்தடி
டி அம்மா என் னிவ்வார்த்தைகளையாடுகிறாய் நீ யிப்போதுகுறித்ததனைத்
தும் உன்னையென்னசெய்தது அப்படிக்கல்லவென்று நீ நினைத்தபடிக்
குமுடிப்பையாயினும் உன்னைத்தடுப்பவர்யாவர் உன்தமையனுகியசூர
பதுமனறிந்தால் தன்வளத்துக்குகுறைபாடுசெய்தனையென்றுஉன்னைத்
தெண்டிப்பன் ஆதலால் நீ யென்விதுதாவிற்காலங்கழிக்கிறாய் நாம் வி
ரைவில்விரமாமயேந்திரஞ்சேர்ந்து எமதாசனுக்கு நமக்கடுத்தசம்பவத்
தினைச்சொல்லிக்காட்டினுல் அந்தநிமிஷத்தில் தேவரைப்பற்றி வருவித்
து தகுந்ததெண்டனைகளை செய்துகொல்லுவன் மேலும் நமக்குமாத்திர
மேயிவ்வூனம்நேர்ந்ததென் றெண்ணவேண்டாம் முற்காலத்திற்றக்க
ன்செய்தயாகத்தில் வந்திருந்ததேவகன்னியர்கள் வீரபத்திரரால்சிகையி
ழியுண்டுமூக்குதாக்குமுலையிழந்ததையுஞ் அப்புகளைப் போக்கினையப்பட்டு
வருந்திமானங்கெட்டதைக் கேட்டதில்லையோ யிதுவல்லாமல் உனக்கு
முக்கியமாய்த்தெரிவிப்பதென்னவென்றால் சிவனடியார்கள்தவிர மற்றுயி
ராணிகளுக்குவூழ்வினைத்துடக்கைமாற்றப்போமோ அனுபவித்துக்கழி
க்கவேண்டும் யிக்காரணத்தினுல் நமக்கடுத்ததுன்பத்துக்கு விசனப்பட
வேண்டுவதில்லை யின்பதுன்பங்கள் அமைப்பின்படிக்குமன்னுயிர்களுக்
குகாலாதிகளில் நேரும்அதற்கு வருந்தி கோபித்ததினுல் பிறையோசனை
மென்ன எழுந்திரும்போவோமென்றுபற்பலதிஷ்டாந்திரங்களைச்சொ
ல்லித்தேற்றஅசமுகியானவள் ஒருவகையாகத்தெளிவுகொண்டவளாய் எ
திரில்நிற்கின்ற இத்திராணியைப்பார்த்து பற்களைக்கடித்துச் சொல்லுவா
ள் என்தமையனுகியசூரபதுமன் ஆணை ஆக்கினை எந்தஅண்டங்களினுஞ்
செல்லுகின்றது ஆகையால் நீங்களிருவரும் எவ்விடத்திலொளித்திருப்
பினுந்தூதரால்பிடித்துவரச்செய்து கொல்விப்பன் மறைந்தவிடமிட

னைப்போலத்திரியும் உன்புருஷனையும் மற்றதேவர்களுடன் பத்திமாருத்
சிறையிலடைப்பிப்பேன் யிப்போதுதான்சொல்லியபடிக்குச்செய்வியா
மற்போவேனாகில் நான் சூரன்தங்கையுமல்லஎன்மார்பிலிருப்பதுகொ
ங்கைகளுமல்ல பேடியாவேனென்று பற்பலசபதங்களைப்பேசி அவ்வி
டத்தைக்கடந்துபோயினள்

இந்திரன்மீட்சிப்படலம்

இவ்விதமாகச் சூரன்தங்கையாகிய அசமுகியென்னும்பாதகியா
னவள் வீரங்களைப்பேசித்துற்முகியென்னுந் தோழியுடன் மறைந்தபின்
புமனச்செருக்குடன் விளங்குகின்ற இந்திராணிமுகத்தை வீரவாகுவீரனு
மாகாளனும் பார்த்து தாயேஅசுரப் பட்டிமக்களுக் கெவ்வளவேனு
ம்அஞ்சாதே உன் கணவனாகியதேவாரசன் வருமளவும் உனக்கியாதொ
ரு யிடையூறுமின்றி காக்கக்கடவோம் மனக்கவலையற்று பழையபடியே
தவஞ் செய்யக்கடவையென்று தயிரியங்கள்சொல்லி தமதிருக்கையே
போயிருந்தனர் பின்புஇந்திராணியானவள் யினத்தைப்பிரிந்தமானைப்
போலத் தனிமையிற்றன் னிலையிலிருந்தனள் இச்செகிசலை நாரதரிஷிதெ
ரிந்தவராய் தாமதஞ்செய்யாமல் விரைவிற்றிருக்கயிலாயத்துக்குப்போ
ய் இந்திரனைக்கண்டு ஆசிர்வதித்து இந்திராணிக்கடுத்ததுன்பங்களினையு
ம் மாகாளனர் சகாயங்களையுஞ் சவிஸ்தாரமாகச் சொல்லக்கேட்டவுடன்
மனங்கலங்கி கிலேசித்துப்பரமனைப்போற்றி தட்சிணமேதேவர்களுட
ன் நந்திதேவரிடத்தக்குப்போய் வணங்கித்துதித்து கந்தனே அடியே
ன்யிவடம்வந்தபின்பு என்தேவிக்கு அசமுகியென்னும்பாதகியினாற்சில
துன்பம்நேர்ந்ததாகக்கேழ்விப்பட்டேன் மேலும்நாயினென்வினைக்கீ
டாய் கந்தனைக்காண்பதற்குக் காலமும்நேரமில்லை ஆதலாற்பூலோகத்து
க்குப்போய்யின்னஞ்சிலகாலந் தவஞ்செய்யத்தக்கதாக அடியேனுக்கும்
மற்றதேவர்களுக்கும் விடைதரவேண்டுமென்றிரக்க நல்லகாரியம் அவ்
வாறேபோய் வரக்கடவீர்களென் றனுக்கிரகஞ் செய்தபடிக்கு உடனே
சகலரும் அரகரவென்னுஞ் சத்தத்துடன் வெள்ளியங்கிரியினைக்கடந்து
பூலோககயிலாயமாகிய சீகாழித் தலத்தினைச்சேர்ந்து மாகாளனைக்க
ண்டு ஆவலுடன்கட்டிக்கொண்டு நீர்செய்தவுதவிக்குக்கைமாறுண்டோ
என்பிராணபரியந்தம் யிதனைமறப்பதில்லையெனப் பற்பலஉபசாரங்க
ளைச்சொல்லி அவ்விடங்கடந்துபோய் தனதிருத்தேவியாகிய புலோ
மிசையைக்கண்டு அவள்துக்கத்தினைத்திரும்பொருட்டு பலஉறுதிகளைப்

பேசினன் அக்காலத்தில் இந்திராணியானவள் அசமுகிகுறித்தபயத்தக
ளிளையும் வஞ்சகங்களிளையுஞ் சவிஸ்தாரமாகச்சொல்லக்கேட்ட இந்திர
ன்றிடுக்கிட்டிவ்விதற்கென்ன செய்வோமென்று யோசித்துநாமதஞ்செ
ய்பவாகவெனத்துணிவுகொண்டு தேவர்களுடன் இந்திராணியை யழைத்
துக்கொண்டு மகம்மேருச் சாரலிற்போய்ப் பதுங்கியிருந்தான்.

சூரபதுமன் அரசியற்படலம்

இவ்விதமாக இந்திரன்பதுங்கியிருந்த தருவாயில் முனங்கைஅ
றப்புண்ட அசமுகியானவள் தன்றோழியுடன் சொழிப்பதியைக்கடந்
துபிருந்தமனவாட்டத்துடன்வீரமாமயேந்திரபுரத்தைச்சேருவதன்மு
ன்னஞ் சூரபதுமன் அரசுசெலுத்தி யிருந்தசிறப்பிற் சிலவற்றைச்சொல்
லுவோம் சவுனகாதிரிஷிகளே கேட்பீராக எண்ணிறந்த பிரமர்கள்கூடி
நமதாசனுகியசூரனுக்கு சபாமண்டபஞ்சோடிக்க வேண்டுமெனக்கரு
தி அவன் குடைநிழலிற்பட்ட ஆயிரத்தெட்டண்டங்களி லிராநின்றஆயி
ரத்தெட்டுமாத்துடைய சொர்ணமலைகளைப் பறித்துவர்துஉருக்கி கற்க
ளாகச்சோடித்தமைத்ததைப்போல கனத்ததாய் ஒயாத்திலு மிருந்துசக்
கிரவாளகிரியையொப்பாகவளைந்து ஆயிரம்யோசனைவிஸ்தீர்ணமுள்ளதா
ய்ப்பசுமைதங்கியகாந்திகளை வீசிவிளங்குஞ் சபாமண்டபமானது வீரமா
மயேந்திரத்தின் உள்பிருகார நடுப்பிறதேசத்திலுண்டு அதனிடையிற்
சொர்ணமலைகளைச்செக்கடமிட்டுபட்டைகள்தீந்துதொழில்முற்றப்பெ
றச்செய்தமைத்தாயிரானின்றஆயிரக்கோடி தூண்கள்மத்திமத்திபிலுறு
ட்டிமேற்பரப்புகளைத்தாங்கிநிற்கவும் அண்டகோடிகளினிரானின்றசொ
ர்ணபூமிகளிற் சிறந்ததாய்மாத்தொசந்ததா யிருப்பவைகளைச்சேகரித்து
உருக்கியொத்துச் சீர்படுத்தி மெருகிட்டிருப்பதைப்போல சொலித்திரா
னின்றவிசாலமாகியமேற்பரப்பு வானத்தினை அளாவநிற்கவும் பலவளங்
களையுடையபூமண்டலத்திலுண்டாயிருக்கின்ற குலகிரிகளைப்பேத்தெடு
த்துப்பிளந்து செக்கடமிட்டுஅமைத்திருப்பதுக்கிணையாக விளங்கும்
பிரத்தினமயமாகியபொன்கொடுங்கைகள் உத்திரங்கள்போரிகள்அவை
களினிடையிற் சிற்பநூல்வலைகளுமேற்பட்ட சிங்காரமுள்ளவோவி
யங்கள்பலவகைத்தாகியபிறதன்மைகள் அதுகளின்செய்கைகளை நடத்தியி
ருக்கவும்பற்பலபுவனங்களில் விளங்கியசெக்கர்வானங்களைச்சேகரித்து
வரிசைப்பட்டத்திருத்தி அமைந்தவைத் திருப்பதை நிகரத்துசெந்தாம
ரைகளெமுதலியபலவகை புஷ்பங்களினும் சோடித்தவிதானங்கள்பரிம

கஅஉ சூரபதுமன் அரசியற்படலம்.

ரித்துருளிர்ச்சியாய்மேற்பரப்பினிடையேசட்டி விளங்கவும்பன்னிரு
கோடிசூரியனைப் பிடித்துவந்தமைத்ததை யொப்பமுத் திலும்நிலைக்க
ண்ணுடிகள் தூக்கியிற்கவும் அளவுபடாதசந்திரகிடசோடசகலைகளையும்
மேகவகைகளையும்ஏகமாகச்சேர்த்து ஒழுங்குபெறச்செய் தமைத்ததைப்
போலகணக்கிறந்த வெண்சாமரைகளையும் ஆலவட்டங்களினையும்வெ
ண்பட்டாடைத் தொங்கலினையும் மயிற்பிஞ்சுகளை முதலியசிறப்புக
ளைபற்பலசிங்காரவளப்பமுள்ள வாலிபப்பெண்களேந்திப்பரிமாறவும்
முத்துக்கோவைகளினாலும் நவரத்தினங்களினாலும் பட்டிலங்களினாலு
ஞ்சோடித்துதிசையெங்கிலுங் காந்திகளைவீசவிளங்கும் பூச்சக்கிறக்கு
டையானது சந்திரபிம்பம் போன்றதையவும் அளவைபடாத அண்ட
ங்கடோறுமிராநின்ற பிறகாசங்களைமுற்றுஞ்சேகரித் தொன்றாகப்பிற்
ப நூல்களிற்றேர்ந்தவரால் அமைத்திருப்பதைப்போலச் சொற்றைத்திரு
லும்ரத்தினவகைகளினாலுஞ்சோடித்து வானத்தில்விளங்கும் நட்சத்திர
வகைகளைப்பொறுக்கி மாலைசெய் தமைத்ததைப்போல ஆணி முத்துக்
கோர்வைகள்தொங்கிட்டுவிளங்கவும்பூரணச்சந்திரர்களைப்பற்றி யிலக்க
ணப்படிக்குச்செய்ததைப்போல விளங்குஞ்சந்திரகாந்தக் கற்களினாற்
சோடித்தசிங்கங்கள் நாற்புறத்திலுந்தாங்க பொற்பாவைகள்பக்கங்களி
னின்றுதடித்திருக்க யிவ்விதசிங்காரங்களைப்பெற்ற சிங்காதனமானது அஷ்
டலட்சுமிகளுங் குடிகொண்டிருசகுஞ்சபாமண்டபத்தின் முகப்பில்அ
வுணருக்கரசனான சூரன்வீற்றிருக்கும்படிக்கு விளங்கியது அவ்வாசனத்
தின் மீது ஆயிரகோடிஅண்டங்களிலிராநின்ற வடவாமுகாக்கினியும்ஆ
லகாலவிஷமும் யேகமாய்ஒருமித்து அமைந்ததைப்போல மாணிக்கம்
நீலரத்தினமே முதலியமணிகளினாற் செய்தமைத்த கிரீடம் குண்டலம்
வாகுவலயம் மதாணிப்பதக்கம்அரைவடங்கடகமுதலாகிய சர்வாபரண
ங்களுஞ்சொலிக்க ராட்சதவீரர்சேவிக்கமேற்குறித்த அண்டங்களின் அ
ரசுசெலுத்தியிருக்கும் சுற்றுவரானவருஞ்சேர்ந்தோன்றியதையொப்ப
வீரபராக்கிறமகெம்பீர உத்தண்டராச ராசப்பிறவுடகனான சூரபதுமன்
வானத்தையளாவவீற்றிருந்த காலத்திற் றன்பூர்வத்திற் செய்ததவத்திற்
பிரசன்னசிவபிரான் அனுக்கிறகஞ்செய்தபலஅண்டங்கடோறும்நடாத்து
கின்றஆணை ஆக்கினைச்செங்கோல்அளவுபடாதகீர்த்தியிவைகளனைத்தும்ஏ
ககாலத்திற்சேர்ந்தொருமித்துயிருகூறாக நிற்பதைப்போல உபயபாரி
சங்களிலும் தவளச்சக்கிறக்குடைகளினைத்தாங்கிநிற்பது சோடசகலைகளை
ப்பெற்றசந்திரர்ராசாதிராசனைவந்தித்துப் போகத்தலைகளைநீட்டிநீட்டிக்
காலம்பார்த்திருப்பதைப்போலவும் பூமண்டலத்தினைவளைந்திராநின்றக
ருங்கடலும் மகாவிஷ்ணுபள்ளிகொள்ளப்பெற்றதிருப்பாற்கடலும்யிர

ண்டிருக்கொண்டு நிற்பதைப்போல சவுரியபராக்கிரமசாலிகளான சிங்க
முகாசுரனுந் தாருகாசுரனும் பிருபாரிசங்களினுமிட்ட அரியணையிற்
கொடியசிங்கங்களையொப்ப வீற்றிருந்து தமையன் கட்டளைப்படிக்கு
காரியங்களைச் செலுத்தியிருக்கவுஞ் சூரியர் சந்திரர் மற்றகிரகங்களைப்
போல பானுகோபன் இரணியன் முதலியகுமாரவருக்கங்களும் விவே
கசாலிகளாகியமந்திரிபிரதானிகள்சேனைத்தலைவருஞ்சூழ்ந்திருக்கவும் அ
ண்டங்களிலிருக்கின்றவாயுக்கள் வருணர்களுஞ்சேர்ந்து பனிநீர்தூவிகு
ளிர்ந்தகாற்றினைவீசிப் பணிந்தெழுந்தேவல்களைக்கேட்டிருப்பதுபோ
லநீலகிரியினுக்குச் சமமாகபாரித்திருக்குந் தேகத்தினையுடைய இராக்
கதர்கள் பிருபாரிசங்களினும்நின்று கவரிகளைவீசவும் பற்பலஅண்டங்
களிற் பரந்திருக்குந் திருப்பாற்கடல்களினெழும் நுரையினைச்சேகரித்
து வைத்திருப்பதுக்கொப்பாகவும் வெள்ளித்தகட்டுக்குஉவமிக்கும்வெ
ள்ளிலைபாக்குவருக்கங்கள்நிறைந்த பொற்பெட்டிகளைபலகன்னியரேந்
திநிற்கவும் ஆயிரங்கிரணங்களைவாய்ந்த சூரியர்களைப்பிடித்துருக்கியார்த்
ததுக்குநேராகச்சொலித்திருக்கும்பொற்படிக்கங்களை ராட்சதர்களேந்
திநிற்கவும் அண்டவெல்லையினைச் சூழநிற்கின்ற சக்கிரவாளகிரியிற்செ
ன்றிருளிரிந்த கிரணங்களினை சொலிக்குஞ் சிரோரத்தினக் காந்தியும்
அக்கிரியின்புறத்தில் விளங்குங்காடாந்தகாரமாகிய விருளுந் திருப்பா
ற்கடலினுதித்த சிறப்புள்ள அமுதமும் விசாலமாய் ஆழ்ந்திருக்குஞ் ச
த்தசாகரங்களும் நவரத்தினங்களேமுதலியவனைத்தும் ஆழிகாலத்திலொ
ன்றுடனொன்று கிரமத்தப்பிமாறிக்கலந்து விளங்குவதுக்கிணையாக வி
சாலமாகப்பரந்திருக்கும் அச்சபையில் இராசராசர்கள் அவுணத்தலைவர்
கள் ராட்சதவீரர்கள் பந்துவர்க்கங்கள் பெரியோர்கள் சிநேகிதர்கள் ஆதி
யாகவிடமின்றி நெருங்கி கிரீடங்களுடன் கிரீடங்கள்தாக்கச் சக்கிரே
ஸ்பரனுடைய நோக்கத்துக் கெதிர்பார்த்திருக்கவுஞ் தேனை சிந்திக்கப்பு
ஷ்பங்களினிறங்கி மிதிக்குந்தோறும் மகரந்தங்களேமுதலிய படிந்து
மணத்திருக்குஞ் சுரும்பினங்களின் அசட்டினைபராந்து மன்னுயிர்களு
க்குக் களிப்பினைத்தருங் குளிர்ச்சியுடைய சோடசகலைகளை வாய்ந்தசந்
திரனது கிரோகத்தினைத்தழுவி மகாவிஷ்ணுவிருப்பமாகப் பள்ளிகொள்
ளத்தக்க சீதளத்தினைப்பெற்றுமதுரமிகுத்ததிருப்பாற்கடலிற்றவழ்ந்து
டல்லும்நீதபூமண்டலந் தெய்வலோகமிவற்றுட் சிறந்திராநின்ற பூங்
காவுள் நந்தவனங்கள்மாமுதலிய சிறந்ததருக்கள் யிலைகளிற்றினைத்து
தண்மேலத்தினை யடக்கிமெல்லெனவசைந்து குளிர்ச்சியாக மந்தமாரு
மானதுடலவிந்திரியவுஞ் சுத்தமேகங்களும் மாறிமாறி தெய்வகெங்கை
யிற்றோய்ந்து சந்திரனுடனுறவுகொண்டு பனித்தூவலைமேய்ந்துபோ

௩௱௨௪ சூரபதுமன் அரசியற்படலம்.

ண்ணுலகத்திலிராநின்ற கற்பகச்சோலையிற் பலநாட்டியமிவந்து தன்மையாகச்சிறு துளிகளை யிறைக்கவும் ஊர்வசி ரம்பை திலோத்தமை மேனகையேமுதலிய தெய்வப்பெண்கள் இயக்கர்மகளிர் அரக்கர்மாதர் தானவப்பெண்கள் விஞ்சையர் கன்னியர் சாரணஸ்ரீகள் சித்தமங்கையர் முதலாகியசுந்தரமுள்ள நட்டுவப்பெண்கள் நவரத்தினமயமாகிய ஆபரணங்களைத்தரித்து பட்டாடையுடுத்தி புஷ்பவகைகளை அலங்கரித்துக்கொண்டவர்களாய் பரதசாஸ்திர விதிப்படிக்கு அபிநயங்காட்டி மயிலினங்களைப்போல நடித்துங்குயில் வருக்கங்களுக்குச் சமதையாகக்குரலோசையேழப்பாடியுஞ் சராசரப்பிறபஞ்சங்களைப் படைத்து வரும் பெருமையினையுடையபிற்மதேவனானவன் பிருதகாலத்தெழுந்துதன்கடன்களைமுடித்துக்கொண்டு சூரன் ஆசாரவாசலில்வந்து பஞ்சாங்கஞ்சொல்லிப்போக காலங்கிடையாமல் ஒருபாரிசத்திற் காத்திருக்கவும் அவர்பிள்ளைகளாகிய நவபிற்மாக்களுங் காலத்தினைநாடிநாழிகையினை முறைமுறைபாகப் பக்கங்களில்நின்று சொல்லிவரவும்மன்னுயிரை வாட்டுங்கொடுமையினைப்பெற்ற புலிக்கூட்டமத்தியில் சிலமானினங்கள் போவதைப்போல கடினசித்தமுடைய ராட்சதர் நெருக்கிலகப்பட்ட ரிஷிகள்கரங்களை நீட்டி ராச ராசனே வாழி வாழியெனப் பற்பல ஆசிகளைச் சொல்லி சமுத்திரகோஷத்தினு மேலிட்டொலிக்கும் ஆரவாரங்களினுற்செவிகளிற்படவில்லையோ வென்னும் ஐயப்பாட்டுடன் நிற்கின்றதவத்தர்பாரிசத்திற்சூரபதுமன் விழிகளைச்செலுத்துந்தோறுங்கரங்களைத்தூக்கிஅவ்ணத்தலைவனே சுகசீவியாக வாழி வாழியென்று சொல்லி வருந்தவுந்தேவேந்திரன்தவிர மற்ற தேவர்கள் அரசனைச் சேவிக்கச் சமீபத்திற்போயிருந்தகாலத்தில் ராட்சதர்கள் நெருக்கிலகப்பட்டு மீட்டுங் கடைவாயில் வரையிற்றள்ளுண்டு அரசனைவணங்குதற்கு காலதாமசமாகின்றதெனமீட்டும் அவர்கள் மத்தியில் நுழைந்தும் பழையபடியே தள்ளுண்டுவரக்கடைவாயிற்காற்போர் யிவர்கள் அடிக்கடிவருகின்றன ரெனப்பொற்பிரம்புகளினல் மோதப்பட்டுசபையை தெரிசிக்கப் பெருமையால்மனவாட்டத்துடன் அலைந்துநிற்கவும் அவ்வீரர்களிற்சிலர்செயசாலிகளாய்பொற்சட்டைகளை யுடுத்துகரத்திற் கோலைக்கொண்டு பராபரிசெய்து போம்போமென்று விண்ணவர் மகுடங்கள்சிதற மோதி மேகங்களைக்கலைக்குஞ் சூறுவளிக்காற்றினை யொத்துத் தூரத்தியுஞ் சிலர்தப்பிநுழைந்துசபைக்கருகிற்போய் சூரன் கீர்த்திகளைச் சொல்லிப் புகழவும்ஆயிரம்பிதழ்க்கள்வாய்ந்த பொன்னந்தாமரை வாசியாகிய மகாலட்சுமியானவள்பலவுருவுகொண்டு அணிவகுப்பாய் நிற்பதைப் போலச் சொர்ணமலைகளை யொப்பப்பாரித்துதேமல்பரந்து ததும்பிவிளங்குங்கொங்கை

னையுடைய பெண்கள் அளவற்ற சிரோரத்தின நியங்களை யேந்திவாழ்த்
தெடுத்துச் சுழற்றவும் கின்னரர் சித்தர் இயக்கர் கந்திருவர் வீணை
களைமீட்டி மங்களம் பாடவும் வீரமா மகத்தினைச் செய்து முடித்தது
இப்பாடுகளையும் அதற்கிரங்கி பரமசிவ மெழுந்தருளி வேண்டியவாப்
பிறசாதங்களை கடாட்சித்த முயற்சிகளையும் இந்திரனுதியாதியவர்களை
ப்புறங்கண்டு வெற்றிகொண்டு செய உச்சாகத்துடன் திக்குவிசையஞ்
செய்துதிரும்பிய புகழினையும் சிவபிரான் கட்டளையிட்ட ஆயிரத்தெட்
டு அண்டங்கடோறும் பிந்திர ஞாலத்தேரில் ஆரோகணித்துலவி அத்தல
வாசிகளை தன்வயப்படுத்தி தனது அரசத்தினை நிறுத்திச் செங்கோல் செ
லுத்திவரும் வீரப்பிறதாபத்தினையும் மற்றவெற்றிப் பாடுகளினையும்ப
லகோடி ராட்சதர்கள் கட்டியங்களினுற் சொல்லி பிருதாரிசங்களினும்
நின்றுதுதிக்கவும் அவுணராசர் திக்குப்பாலகர் முதலாகச் சேவிக்குந்
தோறும் அரசன் பாதங்களிற் சொரியும் பொன் மலர்களினையும் முனி
புங்கவர் பெரியோர்கள் பண்டிதர் கூட்டங் கூட்டமாகவந்து மந்திர
ஆசீர்வாதங்களைச் சொல்லி யிறைக்கும் அறுகு அட்சதைகளையுங் காலங்
களிற் காத்திருந்து வாயுவானவன் சுத்திசெய்து வரவும் வருணராசன்ப
னிநீர்களைத் தூவி புழுதிகளை யடக்கவும் பாதநாட்டியங்களை நாலின்மு
றையே அபிநயங்களைக்காட்டி. நடிப்பவருக்கும்ராசராசன்கீற்றிப்பிறதா
பங்களைக் கொண்டாடும் பட்டுவர்களுக்கும் கண்டகத்தி அஷ்டாவதா
னங்கவித்துவங்கள் செய்பவல்ல வித்துவச்சினங்களுக்கும் உசிதங்க
ளாகப்பேசிச் சபையினைக் களிப்பிக்கும் அகசியக் காறர்களுக்கும் மற்
றும்யாசகர்முதலாக வற்பவர்களுக்குங் கொடுக்க நவரத்தின மயமாகிய
கிரீடம் வாகுவலயஞ் சரப்பளி கடையமாதியாகிய விலைபெற்ற ஆபர
ணங்களும் பட்டுபட்டாடைகளும் திரவியவிதங்களையும் பிருதாரிசங்க
ளினும்யேந்திநிற்பவர் சூரன்மகிழ்ந்து விரலினைச்சுட்டிக்காட்டியவர்க
ளுக்குக் கொடுத்துவரவும் தேவர் ரிஷிபுங்கவர் முதலாகத் தங்களிடத்தி
ற்குற்றங்களில்லாவிடினும் அரசன் ஒருவர்மீதிற் கோபங்கொண்டகா
லத்தில் தங்கள்பிராணனுக் கிறுதிநேருகின்றதைப்போலப் பயங்கொண்
டுயிருகரங்களினையும் யேந்தித் துதித்துவாட்டவும் சூரன் தலைமுறையைத்
தோற்றியகாலத்திற் றமதுபிரானனுக் கிறுதியில்லையெனக் களித்தும்பி
கவித ஆடம்பரங்களைக் கொண்டிருந்தது சூரபதுமன் அரசசெலுத்தி

கூாஉக சூரபதுமன் அரசியற்படலம்

யிருந்தசபையானது கேட்டீர்களோ சவுனகாதி ரிஷிகளே யிச்செய்கைக ளெத்தன்மையாக விருக்குதெனின் இடிவிழும் போதெல்லாம்மந்திரங் களைச்செபிப்பவர்களையொப்பநின்றது

அசமுகி நகர்காண்படலம்

இவ்வித வோலக்கங்களுடன் சிங்காதனத்தில் வீற்றிருந்தருளுகன் அரசுசெலுத்தி வருகின்றதருவாயில் அசமுகியானவள் தோழியுடன்கா ங்களுறப்புண்ட சோர்வும் மனவாட்டமும்வருத்த பற்பல வளங்களைக் கொண்டிருக்கும் வீரமாமயேந்திரபுரிக்குச் சமீபத்தில்வருகின்றதெப் படிக்குத்தோற்ற நின்றதென்றால் அப்பட்டணத்திற் குகிகொண்டிரு ந்தஅஷ்டலட்சுமிகளுங் குலைகுலைந் தோடத்தக்கதாக மூதேவியானவ ளிதன்தோழியுடன் வருமாறுபோன்றது- இவ்விதமாக அசமுகியானவ ள்வானத்தினை அளாவநிற்கின்ற கிழக்கு கோபுரவாயல் மூலமாகப்பட் டணத்திற் பிறவேசிக்கின்ற தருவாயில் யிவர்கள் சிறுமையினைக் கண்ட புரசெனங்கள் அக்கித்துவிழிகளில் நீர்சோரச் சமீபத்திலுஞ்சேரவஞ்சி ஐஐயோ இப்படிக்குத் துணிவுகொண்டு செய்தவர்கள்யாவர் அவர்தன் பிராணன் தப்பிப்பிழைப்பதோ வெனக் கோபித்துச் சிலர்பேசவும் யீ னமானமற்ற அசமுகியானவள் புசத்தில்யிரத்தம் பெருகவருவது ஒரு காலத்திலும் வளமைகுன்றாதபட்டணத்திற்குயினி நேரவிருக்கின்ற து யரத்துக்குவழிகாட்டியதைப்போலத்தோற்றஅக்கொடுமையினைக்கண் டசிலஅவுணவீரர் தமது தொழில்களை மறந்துவந்து கும்புகும்பலாக க்கூடி விழிகளிற்செலம்பெருக மனம்பதைபதைக்கத்தீயும்புகையுமெ ழப்பெருமூச் செறிந்து கோபித்துயிதனைச்சொல்லுவர் இவ்வனியாயந் திரிபுரதகனராகிய பரமசிவத்தின் செய்கையோ வென்றும் மயிடாசுர ன் நிகும்பன் கும்பன் முதலாகிய ராட்சதர்களைவாட்டிய காளியினது செய்கையோவென்றும் மகாவிஷ்ணுவுக்கும் பரமசிவத்துக்கும் உதித் தஅரியரபுத்திரர் செயலோ வென்றுங் கயமுகாசுரனைவென்ற விநாயக மூர்த்தியினது கட்டளையோ வென்றும் ஆயிரம் பணமகுடங்களினைப் பெற்ற ஆதிசேடன்மீது பள்ளிகொண்டிருக்குங் கேசவன் தென்டனை யோவென்றும் அப்படிக் கவன்செய்யத் துணிவனோ அல்லதபிறமதே வன்றான் யிக்கொடிய காரியத்தினைக் கனவிலும் நினைப்பானோவென் றுஞ்சூரனால் வருந்தி ஓடிப்போன தேவேந்திரன் வஞ்சகத்தினால் நேர்ந் ததோவென்றும் அப்படிக்கொளித்த திரிபுவன் யிதனைக் குறிக்கவுமா

ட்டான் அவனால் முடிந்ததல்லவென்றும் தேவர்களொருகாலம் முடிப்பரோவெனநினைப்போமெனின் அவர்கள் தமதேவல்களைத்தினந்தோறும் நடாத்திவாடிவருந்துமவராலாமோவென்றும் குடியன் அல்லதுவெறியன் செய்கையாகுமென்றும் இவன் கொடுமைகளுக்கஞ்சியோடியொளித்திருக்கும் ரிஷிகோஷ்டிகள் சாபத்தின் வழியினாலோவென்றும் மதுமாம்சங்களை மிகவும் அருந்திய வெறியினால் அறிவுமயங்கி யவர்களிலொருவருக்கொருவர் கலகப்பட்டு வெட்டிக்கொண்டனரோவென்றும் இவனையாவர்தான் பார்க்கவல்லவர் ஒருகாலம் மோகத்தினால் ஒருபுருஷனை விரும்பி அவன் கோரிக்கையின்படிக்கி யிவளை வெட்டி யெறிந்ததாகவேனுமென்றும் இதுவெப்படி முடிந்ததென்றுமிவளைக் கேழ்க்கலாமோ அப்போதுகோபிப்பளோ நமக்கென்னவென்றும் இவளைக் கேழ்ப்பானேன் பூமண்டலமுற்றிலும் நிமைப்போதிற்சுற்றிவருவோமாகில் இதனுண்மையினங்குமென்றும் இப்படி பலபலவிதங்களாக ராட்சதப்பாதகர் வசனித்துத்தொடர அவர்கள் தேவிமார் அசமுகிகோலத்தைக்கண்டவுடன் மாரிலறைந்துகொண்டுகூந்தலவிழ்ந்து புரள தாமரைமலர் முத்துகளைக்கொட்டுவதுபோலவிழிகளில் நீர் பெருகத் தொடர்ந்து புலம்பிவரவும் இவ்விதங்களாக நகரவாசிகள் கிலேசித்திரங்கயிச்சுட்டத்தினையும் பற்பலவீதிகளையுங்கடந்து ராசாதிராசன் கொலுவிருக்கின்ற சபாமண்டபத்துக்கருகினில்வருகின்றனன்.

அசமுகிபுலய்புறுபடலம்

இவ்விதக்கோலத்துடன் வருகின்ற அசமுகியானவள் தாயைதமையனை மருகனைக்கூவி அச்சபையினிடத்தில் விளங்குஞ் செயலட்சுமியேமுதலாகவிலகிப்போகப் புலம்பிக் கண்ணீர் பெருகப் பாடிப்பாடியிப்படிக்கு அழுவதாயினள் - ஓதாயே ராட்சதராசனுக்குப் புத்திரியாகத்தோன்றி மாய்கைக் காசியாய்ப்பரமசிவகடாட்சப்படிக்கு காசிபர்மூலமாகவெங்களைப் பெற்றுச் சீர்படுத்திப் பிறிஜென்றகாலத்தில் நான்மறையவிருந்து உங்களுக்குயாதொரு தீங்குகளும்நேராமற் பாதுகாத்திருப்பேனென்று சொல்லிப் போனவாக்கைப் பிசகலாமோ என்னைப்போனதுடனக்குத் தெரியாததோ பயப்படவேண்டாமென் றொருவார்த்தைபாடலாகாதோ தாயே நான்கனடப்பெண்ணைப் பிறந்துபட்டதுன்பம் போதும்போதும்பி ராவணவன் பிள்ளைகளிடத்து விருப்பமுள்ளவனும்மாதாவானவள் பெண்களிடத்து விருப்பமாயுமிருப்பபொன்றுகொலச

விற்பேசிக்கொள்ளக்கேட்டிருப்பேன் ஆதலால் தாயேஎனதுதுக்கத்தி
னை ஆற்றவாராயோ ஐஐயோ யாவருமின்றிஒருதவியுமற்றவளைப்போலெ
ன்கையைப் போக்கியும் யின்னமும் யிந்தபாழும் உயிரைச்சுமந்திருப்
பேனோ ஓ என்மரபினரோ சுற்றத்தாரோ படைவீரரோ கொடியவேகத்தி
னையுடைய தூதரோ நீங்களெங்கு முலவி நம்மவருக்கொருதுன்பமும்
வாராமற் காத்தாட்சிப்பீரொன்றுந் தயிரியத்தினால் யெவ்வளவும் அஞ்
சாமல் ஒளித்திருந்த இந்திராணியை தற்செயலாய்க் கண்டவுடன் நமது
அரசனுக் காவலெனத் துணிவுகொண்டு பலவந்தமாய்ப்பற்றிவலித்துவ
ருகின்ற தறுவாயில் அயலரான தேவர்களுக் கேவல்செய்யும் மகாகா
ளனென்பவன் என்னைத்தடுத்து அரசனுக்கினிக்கு யெவ்வளவும்பயப்ப
டாமல் என்கையினை வெட்டி அவளையும்விடுவித்துக்கொண்டுபோயினா
ன் அந்தநந்தவன மார்க்கமாய் நீங்களொருவரும் போகீர்களோ அவனு
க்குப்பயந்தீர்களோ தேவர்கள் செல்வத்தினையும்வீரத்தினையும் வன்மை
யினையுஞ் செருக்கினையுங் கொள்ளைகொண்டு பதிதராக்கினோமென்றுவீ
ருப்படைந் திருந்தீர்களே ஓ வீரர்களே அத்தேவரி லொருவன் என்கர
த்தினைவெட்டியதை யறியீர்களோ யிச்செய்கை யென்னுடன் போனத
ன்று உங்களனைவருடைய மூக்கையரிந்த அவ்வளவு அவமானமல்லவோஎ
ன்கோலத்தினைப் பாருங்கோள் பாருங்கோள் ஓ சுற்றத்தாரோ யிப்படி
க்கொத்த அநியாயம் நேர்ந்ததற்கு நீங்கள்சுத்தவீரரொன் றிருப்பதிற்
காரணமென்னை பேடிகளானீர்களோ உங்கள்விழிகளுக்குத் தோற்றவி
ல்லையோ தேவேந்திரனனவன் பழிக்கஞ்சாமல் நமக்கு மீன்சுமந்துயி
ட்டபணிவிடைகளைச் செய்து பயந்தோடிப்போய் ஒளித்தானென் றெ
ண்ணி அசட்டையா யிருக்கிறீர்கள் அவன் அனுப்பியஒருவனென்றெ
த்தவள் கரத்தினைத் துணிப்பானாயில் அவனைச் சுலபமாக வெண்ணவும்
போதுமோ மேலும் அவன்செய்கையானது ஒருவன் தான்வாசஞ்செய்
யப்பட்ட கிரகத்தினை அக்கினிப்போர்வையினால்மூடிப் பாதுகாத்ததற்
கொப்பாயிருக்கின்றது இதுவல்லாமல் எள்ளினிடத் துகிர்ந்ததுகட்பி
றமாணம் பகைஒருவனுக்கிருக்குமாகில் அதனையுந்தட்சிணமேஒழித்து
விடாமல் எவ்வளவென்று அசட்டையாயிருப்பின் ஒருகாலம் அச்சிறிய
கைவனேவலிகொண்டு கேடுபடச்செய்துவாட்டுவனென்று பெரியோர்க
ள்சொல்வர் அஃதுண்மையென்பது யிதனாலிற்கண்டேன் அதாவதுந
மக்கஞ்சி ஒடுங்கி யிட்டதொண்டுகளைமுடித்து வணங்கியிருந்த இந்திர
ன் கபடத்தினைமனதிற்கொண்டு ஒளித்தவனைப்போற்காட்டி தன்னேவ
லாளியினால் என்கையைவெட்டிவைத்தான் யிதனைச்சகலரும்பாருங்கோ
ள் மேலுஞ்சமுத்திரத்திலடங்கி நின்றவடவாமுகாக்கினியானது காலம்

பார்த்து அண்டரண்டபுவனங்களையும் அழிப்பதைப்போலப் பதுங்கி யிருந்தவன் என்கரத்தினைப்போக்கினன் யின்னுஞ்சிலகாலத்தில் உலகங்களை யுங்கொல்லுவானென்பதற்கையமுமுண்டோ ஆதலால் யிவ்விடத்திற் சவு க்கியமடைந்திருந்து செய்கின்ற கருமம் யாது விண்ணவரைச் சுலபமாக நினைந்தவர்களே யிப்போதென் செய்வீர் ஓ மருகனே பாலபருவத்தில் நவரத்தினமயமாகிய தொட்டிலில் நித்திரைசெய்யும்போது சூரியனது கிரணகாந்திமுகத்திற்படக்கோபித்து வானத்திற்பாய்ந்து அவனைப்பற்றிவந்து தொட்டிலினைத்தாங்கி நின்ற சொற்ணச்சங்கிலியிற் கட்டிப்பள்ளிகொண்டிருந்த உன்னைப்பிரமன் வேண்ட அவன்சரத்தைப்பெற்று சூரியனைவிடுத்து அவ்வெற்றியினாற் பானுகோபனென்னுஞ் சிறந்தநாமம்பெற்றனை அத்தகையகீர்த்தியாளனாகிய என்னுடைய மருகனே தேவரிலொருவன் அஞ்சாதென்னைப்பற்றிக்கரத்தினைக்குறைப்பதோ யிதனைவிசாரித்துத்தண்டிக்கலாகாதோ யிதென்ன கொடுமை அவனுக் கிளையவர்களாகிய மருகரோடங்களில் இரணியனென்பவனுக்குத் தங்கத்திரோசமும் மூன்றுசிரங்களுமுண்டு சுவாலைவீசிக்கொண்டிருக்கும் அக்கினிமுகனாகிய உனக்கு இரண்டுசிரங்களுண்டு வயிரத்திரோசத்தினைப்பெற்ற வச்சிரவாகுவே உனக்குப்பத்துசிரங்களுண்டு இச்சிரசமோகங்களினை ஏன் விருதாவில்வளர்க்கின்றீர் யிவையென் செய்யும் ஒருசிரமுள்ளதேவனே என்கையையறுப்பவன் அவனுக்குடங்களையாத்த வீரபராக்கிரமமுள்ளவர்கள் அஞ்சுவதோ அவனைப்பிடித்துக் கசக்கிப்பிழிந்து யிக்காயத்திற்பூசி என்விசனத்தைத் தணியிரோ யிளைய அண்ணாவோ தாருகாசூரனே திக்குவிசையஞ்செய்கின்றகாலத்தில் உன்னுடனெதுத்துப்போர்செய்த உலகங்களோரடியிலளந்த மகாவிஷ்ணுவானவன் கோபித்தேவியசக்கரத்தினைக்கழுத்தணியாகத்தரித்து வெற்றிகொண்ட நீ யிக்காலத்தில் உன்னொருதங்கையிக்கோலமாகவாடிநிற்கும்படியான பழியினையுந்தரிக்கலாகுமோ குறும்பதைவரியித்த கையவஞ்சனைகளைச்செய்துகளிக்க நீயுஞ்செங்கோல்செலுத்தி உலகங்களை ஆளுகின்றனை என்விஷயத்தில் உன்சவுரியங்குறைந்து போகலாமோ சோறதந்தங்கள்பிறையினைப்போலவிளங்கும் ஆயிரஞ்சிரங்களைப் படைத்தசிங்கமுகாசூரனென்னும் நாமம்பெற்ற சின்னண்ணாவோ ஒருகாலந் தேவர்களுக்கரசனாகிய இந்திரன்வெள்ளைநிறம்பெற்ற ஐயிராவதத்தின்மீது ஆரோகணித்து வச்சிராயுதத்தினையேந்தி வந்தெதுத்தகாலத்திற் சீறி ஒருகரத்தினாற்பற்றிவானத்தெறிந்து திரும்பிபூமியில்விழுந்தவனைக்காலினாலுதைத்துவெற்றிகொண்ட வீராதிவீரனென்றுன்னைப் பலருங்கொண்டாடக்கேட்டு மகிழ்ந்திருந்தேன் இதுவென்னகட்டுரையோ அத்தேவராசன் தூதரிலொருவன் என்கரத்தினைக்கண்டித்தானே யிக்கோலத்தை

அசமுகிபுலப்புறுபடலம்.

போர்த்து அவர்களுக்குத்தக்கதெண்டனைசெய்யலாகாதோ ஓ மூத்தஅண்ணாவோயவருஞ்சூரனென்றுகொண்டாடும்பெயரைப்பெற்றனைசெய்தற்கரியமகத்தினைமுடித்துபரமசிவகடாட்சத்தினாற்சகலவளங்களையுங்கிடைத்துவாழும் அவுணர்கள் பெருவாழ்வே ஆயிரத்தெட்டு அண்டங்களிலும்உன்னாணைசெல்ல ஏககாலத்தில் அரசுசெலுத்தி உன் ஆக்கியாசக்கரமெங்குமுலவிதுஷ்டநிக்கிறகசிஷ்டபரிபாலனஞ் செய்துவாழுகின்றனையித்தகைய சவுரியபராக்கிறமம் உன்கட்டளைக்கஞ்சி ஒளித்துவாழும் இந்திரனைவாளரி லொருவனை வீரமாகாள னிடத்தில் மாத்திரங்காணவில்லையே வலியர்முன்செல்லமாட்டாதோ இவையன்றிச் சத்திராதிகளாகிய தேவர்புணர்ப்பினால்முன்னம் என்புத்திரனைக்கொல்லுவித்தனர் யிக்காலத்திலும் என்கையைக்கண்டிப்பித்தனர் அகண்டசாம்பிராச்சியவானாகிய உனக்கிளையவள் கரமிழந்துயாதொரு துணையுமின்றிவருந்திவாடிபரதவிக்க யிதைவிசாரணைசெய்யாமல் அரசுசெலுத்துவது உன்னுத்தசூரனுக்கழகோபழிப்பன்றோ பெருமிதத்துக்கப்பதோ ஓ மன்னாவோ டன்னாவோ நான்பட்டுவாடும்பழியைமதிக்காயோ சகலபுவனங்களிலும் உன்னாணை ஆக்கினைசெல்ல ஆண்டுவரும் அண்ணாவோ கரத்தினையிழந்தேன் மானபங்கமானேன் பலரும்நகைக்கலானேன் யிவ்விசனத்தைப் போக்கிமனதைத்தேற்றுவார் எனக்காரிருக்கின்றனர் ஆனப்பட்டும் பிழைத்திருப்பதிழுக்கன்றோ யினிதரியேன் பிராணனைவிடுவேன் அதற்குமுன் என்பகையினைவென்று களிக்கமானம் பூரிக்கின்றது பாவிபெண்ணாகப்பிறந்து பெறும்பயனிதுவோ விதிதனக்கென்னிடத்திற்பகையுண்டோ வென்செய்கே னென்செய்கே னென்றிவ்விதங்களாதப் புலம்பி வருகின்றனள்.

சூரன்றண்டஞ்செய்படலம்

மேற்குறித்தபடிக்கு அசமுகியானவள் புலம்பிக்கொண்டுதோழியாகியதுர்முகியுடன் ஆசாரவாசலைக்கடந்து அவுணர்இராக்கதர்மந்திரிசாமந்தர்படைவீரர்புத்திர வருக்கங்களைமுதலாக நெருங்கியிருக்கும் ரத்தினமயமாகிய சபாமண்டபத்தின் முகப்பில்விளங்குஞ் சிங்காசனத்தின்மீது வயிரமலையைப்போலவீற்றிருந்து அரசுசெலுத்துஞ் சூரபதுமன் பாதாரவிந்தங்களில் அலறிவிழுந்துசகடையையொத்துச்சுழன்றுபுரண்டுதிரிகின்ற தருவாயில் அச்சபையிலிருந்தவர்களனைவரும் மருண்டு அவள்படும்வருத்தத்துக்கிரங்கி ஐயோ ராசபரமேசுபரன்றங்

கைக்கும் யிப்படிக்குநேருவதோ யிதனைத்துணிந்து செய்தவர்யாவர் சூரன்கோபாக்கினியினால் அவர்களென்படுவரோ யிப்படிக்கொத்தசகுனமித்தமுடையவர்களுமுண்டோ வென்றுமிவேஷித்த சூரனானவன் தன்தங்கைக்கடுத்தகுறைபாட்டினையும் வருத்தத்தினையுங் கண்டவுடன்கோபமேலிட்டு அக்கினிப்பொறிகள் விழிகளிற்குபீல்குபீலெனக்கொட்டவருந்தியொன்றுந்தோற்றாது என்னுடைத்தங்கையே உன்னையின்னொன்றுமறியாமலும் என்சூரத்தினைநினையாமலும் யிதனாற்றங்களுக்குநேரும் தெண்டனையைக்குறியாமலும் உன்கரத்தினையும் யிவள்கரத்தினையுங் கண்டித்தபாதகர் யாவனெனக்கேழ்க்க அசமுகியானவள் சற்றுதேறிச்சொல்லுவாள் ஓ அண்ணா அவுணருக்கரசே என்சொல்வேன் நானுமிவளுமாகப் பூலோகத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருமுன்னிலையில் ஒரு பட்டணத்துக்கருகில் பலபலபுஷ்பசாதிகள் மலிந்துபரிமளித்திருக்கும் பூங்காவினைக்கண்டு அதனுள் போகின்ற காலத்தில் ஒருவிருட்சத்தினடியில் தேவேந்திரன் பத்தினியாகிய இந்திராணியானவள் மின்னற்கொடியினைப்போலத் தவஞ்செய்திருந்தாள் அவளைக்கண்டவுடன் மிகுந்தசந்தோஷத்துடன் உன்புசத்தினை அணைவதற்கு யிவள்தகுதியானவளென்றெண்ணி நன்மையில்வாராதபடியால் வலிதிற்கொண்டுபோக உத்தேசித்து கரத்தினைப்பற்றி யிட்டுவரும்போது தேவர்களிலொருவனானவன் ஒருபாரிசத்திலிருந்து ஓடோடியும்வந்து முன்பின்யோசியாமல் எங்களிருவர்கரங்களினையும் வெட்டியெறிந்ததுமன்றியில் உதைத்துத்தள்ளி அவளையும்விட்டுக்கொண்டுபோய் விட்டானெனச்சொல்லி முடிவதன்முன்னம் வடவாமுகாக்கினியைப்போற்கொதித்து கொவ்வைக்கனியைப்போல விழிகள்சிவந்து தீயினையிறைத்துச்சுழலவும்புருவம்நெற்றியிலேறவும் நாசிகளிற்சுவாலையும் புகையும்பெருகவும் பற்களுதட்டைக்கடிக்கவும் அண்டகோளகைகள் வெடித்ததைப்போல நகைதோன்றவும் யிதழ்துடிக்கவும் பற்களைக்கடித்து முத்துகளைப்போல முகத்தில் வேயர்வைதோன்றுந்தோறும் ரோமங்களின்மூலமாயெழுஞ்சுவாலையானது புலரச்செய்ய யிவ்வித உற்பாதங்கள் நேருவதாகச் சூரன் கோபங் கொண்டகாலத்தில் யிவ்வதிற்சியினால் யுகாந்தமுடிவோ யாதோவென்றையப்பட்டுநின்று தாபரிக்கப்படாமையால் திக்குப்பாலகர்ஓட்டெடுக்கவும் ரிஷிகள்பரதநாட்டியஞ்செய்யும் நாடகப்பெண்கள் அரசன்புகழைப்பாடுவரோ முதலாகப் பதைபதைத்துக்கலைந்து திசைதப்பிப்பதுங்கவும் திக்கேசங்கள் வீறிட்டலறிஓடுங்கவும் அஷ்டமாநாகங்களுந்தடுமாறி அடங்கவும் மகம்மேருகம்பிதப்படவும் விண்ணவர் மண்ணவர் பாதலவாசிகள்பொறிகலங்கிச்செய்கைபற்றுபாதுநேருமோ

நாகஉ சூரன்றண்டஞ்செய்படலம்.

வெணப்பதைத்துவாடவும் பூமண்டலந்தத்தளிக்கவும் பொன்னுலகலை க்கவுஞ் சத்தசாகரங்களும் கொதிப்பெடுத்துச் சுவறி யடங்கவும்வை குந்தமும் பிற்மலோகமுதலாக அதலகுதலப்படவுங் கொடியமனதை யுடைய அவுணர்களுந் திடுக்கிட்டுவருந்தவும் யிவ்விதமாகத்தடுமாறுமா யின மற்றவைபட்டபாடுகளைச்சொல்லவும் வேண்டுமோ சவுனகாதிரிஷி களே சூரனுக்குகோபம் பிறவேசித்தகாலத்தில் யாவர்வருந்தாமலிருந்த வர்கள்உடனே தேவனைவரையுந்தொலைக்க நினைத்தவனைப் பக்கங்களிலி ருந்த துணைவரைப்பாத்து யிதனைச்சொல்லுவான் புலாலநாற்றமிகுத்தமச் சங்களைத்தலையிற்சுமந்து நமதேவல்களைச்செய்தினைத்தோடிஒளித்திருக்கு ம்இந்திரனென்கள்வன்வஞ்சகத்தினுற் றனதேவலாளியைக்கொண்டுயிவர் கள் கரங்களைத்துணிப்பிப்பானுகில் யினிமானிடரும் ராட்சதர்களைக்க ண்டயிடத்தில் கொல்வதற்கையமுமுண்டோபரமசிவம்விஷ்ணுபிரமன் இந்திரன் முதலானவர்களில்யிச்செயலினைமுடிக்க விரும்பார்கள் யிவர் களிலொருவன் பணிவிடைக்காறனே யிவர்கள்கரத்தினைப் போக்குவா ன் நல்லகாரியம்முன்னமே தேவனைப்பற்றிவந்து ராட்சதர்களுக்கினா யாகக்கொடாமல் தருமத்தினையெண்ணிவிட்டேன் மேலும்இந்திராணி யுடன் தேவேந்திரனைநானும்படிக்கு அரியசிறையில் வைத்தவனுமல்ல அபலனென்றும் ஓடியொளித்தவனென்றும் பராமுகமாயிருந்தேன் அ துவெப்படிக்காயதேனின் தீயானது பற்றியகாலத்திற்குறைவற அவியா மற் சிலதைவிட்டு பின்புஅதுமிதி வருந்துகின்றவர்களைப் போலானேன் யிப்படிக்கு அத்துமீறுவர்களென்று ஒருபோதும் யோசித்தவனேயல் லயிவர்கள் கரங்களைக் குறைத்ததை என்னென்றிருக்கின்றீர் என்கிரோ தத்திற் படுத்திபலூனமல்லது வேறுமுண்டோ சவுரியபராக்கிறம சாலிக ளாகிய தம்பிமார்களிருக்கின்றீர் உலகமுற்றினும் நிமைப்போதில் நா சஞ்செய்யவல்ல பிள்ளைக ளிருக்கின்றனர் கணப்போதில் அண்டரண் டபுவனங்களினையுஞ் சுற்றிவரும்பெருமைபெற்ற இந்திரஞாலத்தேரி ருக்கின்றது துஷ்டநிக்கிறக சிஷ்டபரிபாலனஞ் செய்யவல்ல ஆக்கியா சக்கிறமிருக்கின்றது பரமசிவகடாட்சம்பெற்ற செயசாலியாகிய நானு மிருக்கின்றேன் யாரிருந்துமென்னபலன் மகம்மேருவுக்கொப்பாகஉய ர்ந்து கிடக்கின்றபஞ்சினகுவையில்அக்கினிப்பொறிஒன்றுபட்டெரிந்த தைப்போல யிவர்கள் கரங்கள் வெட்டுண்ட காயங்களி லிருந்தொழு கும் உதிரத்துளியினுற் பலஅண்டங்களிலும் நிறைந்துநின்ற நமதுகீ ர்த்திப்பிறதாபங்களனைத்தும் மங்கிப்போயது யித்தகைய குறைபாடுக ளும் யிவர்களுக்குநேருவதோ தேவர்க்கள் உபத்திரவமும் யின்னமும் யிருப்பதோ எக்காலத்துந்தீராதயிப்பழியும் என்னிடத்திற்சார்வதோ

யித்த அபகீர்த்திக்கொழியுங்காலமுமுண்டோ என்போன்றவன் யிதனை
ப்பொறுப்பதோ நமது ரதகஜதுரகபதாதிகள் திவ்வியாஸ்திரங்கள் மு
ற்றிலும் யிடைவிடாது நெருங்கிப்பாதுகாத்திருக்க ஒருதங்கையாகிய
அசமுகிக்கு யிப்பாடும்நேருமோ என்செங்கோன்மைவெகுநேர்த்திநேர்த்
தியென்று கோபநகைகொண்டு சபையைப்பார்த்தகாலத்தில் ஒருபாரிசத்
திலிருந்த பானுகோபனென்பவன் சகிக்கப்படாமல் கடலிடைநின்ற
வடவாமுகாக்கினி அர்த்தியகாலத்தில் மீறியெழுவதைப்போல காலிற்கட்
டிய வீரவெண்டயங்கள் தொனிக்க உத்தரியந்தாழச்சபையிற் சிங்காதன
த்தினையிட்டெழுந்து பிதாவாகிய சூரன்பாதங்களிற்சேவித்து ஐயனே
தேவர்கள் தேவரீர் கோபத்தினைப்பொறுக்கவல்லரோ க்ஷமித்தருளக் ந
மதேவல்களைமுடித்துவருகிற இந்திரன் போனயிடந்தோற்றாதொளி
த்திருக்கின்றனன் தேவர்க்கவொருபோதும் யிவ்விதகருமத்தினை நினை
க்கவேமாட்டார்கள் ஆதலால் தேவரீர் தங்கைகரமிழந்ததென்னமாய
மோ ஒன்றுந்தோற்றவில்லை விண்ணவர்களிலொருவன் யிவர்களூனஞ்
செய்தானெனச்சொல்வது எப்படிக்கிருக்கின்றதெனில் வெகுகாலம்மல
டியாகவிருந்த ஒருத்திபெற்றகுமாரன் வானத்திற்செல்லுஞ் சூரியனைப்
பற்றிவந்ததையொக்கும் மேலுந்தம்மையொத்த வீராதிவீரன் பரமசிவ
ம் மகாவிஷ்ணு பிரமதேவன் யிப்படிக்கொத்த கன்னியர்மீது கோப
த்தினைச் செலுத்துவதுதகுதியாம் ராசாதிராசனே நமக்குத்தொண்டுசெ
ய்துதிரிகின்ற சிறியரிடத்திற் சீற்றங்கொள்வது பெருமிதத்துக்கடுத்த
தோ புகழின்பாலதோ தயைசெய்து சற்றுகோபந்தணிக ஓ சக்கிரேசு
பரனே கிருபையுற்று அடியேனுக்குச் செலவுகொடுப்பீராயின் யிந்நி
மிஷத்தில் யிவர்கள் கரங்களிழந்த யிடத்தினைச்சேர்ந்து பயமற்றுயிக்
கொடுமையைச் செய்தபாதகனையும் உமக்குவிரகத்தினைத்தந்த இந்திரா
ணியையும் நமக்குப்பயந்தொளித்துக் காலங்கழிக்கின்ற தேவாசனையு
ம் அவனேணையிற்பட்டுதிரிகின்ற விண்ணவனையும்பிடித்துவருகின்றேன்
அத்தலத்திற் காணப்படாமல் ஒளிப்பராயினும் அண்டரண்டபுவனமு
ற்றிலுந் தேடிக்கொண்டுவரக்கடவேன் மேலும்பொன்னுலகத்தினை மு
த்திக்கையோட்டுக்கொண்டு அக்கினிதேவனுக்கிரையாக்கி நாசஞ்செய்
து தேவர்கூட்டங்களை அவர்கள் பெண்பிள்ளைகளுடன் பந்தித்துஒரு
நாழிகைப்போதில் தேவரீர்முன் விடக்கடவேனென்று குமாரனாகியபா
னுகோபன்வணங்கி விடைகேழ்க்கும்போது சூரபதுமனுக்குச் சற்று
கோபந்தணிந்து குமாரனே உனதுசேனைப்பெருக்குடன் தாமதஞ்செ
ய்யாமற்போய் நீ சொல்லியவாறே நமதுபகைவனைத்தள்ளிவந்துசேர்க்க
க்கடவையெனக் கட்டளையிட்ட பிதாவை மீட்டும்வணங்கி யிளையபிதா,

னையும் வந்தித்துவிடைபெற்று ராசசின்னங்களுடன் தன் அரமனைக்குப்போய் பயணத்துக்கு முஸ்தீதுசெய்துக்கொண்டிருக்குமுன்னிலையிற் சபாமண்டபத்தில்நின்ற சூரனவன் விழிகளைப்பரப்பி எக்காலத்துங் கண்கள்சிவந்து அனற்பொறியினை வீசிக்கொண் டிருக்கும் நேத்திரங்களைவாய்த்த சிலதூதர்களை அழைத்துபிரமனிவடம் வந்திருப்பான் அவனைவிரைவில் நமதிடத்துக்குக் கொண்டுவாக்கடவீரென்ற வுடன் வணங்கிபோடி தேடிக்கண்டு ராசாதிராசன் உம்மைவரும்படிக்குக்கட்டளையிட்டாரெனச் சொல்லக்கேட்டவுடன் திடுக்கிட்டுபஞ்சாங்கத்தினை யவிழ்த்துகால்கள்நடுங்க பூணூல் மார்பிற்புரள கோவணம் அவிழ்ந்துபுரள சபையினைச்சேர்ந்து ஆசீர்வதித்து தினச்சரியைபடித்துக்காட்டிநிற்கின்றவனைப்பார்த்து பிரமனேயிவர்கள் கரங்களினையேதாப்பிறகாரஞ் சிருஷ்டிக்கக்கடவையென்றவாக்கிய முடியாமுன்னம் அசமுகிதுற்முகியென்னும் யிருவர்கரங்களும் பழையபடிக்காகவெனச் சிந்தித்தவாறே திமைப்போதில்வளர்ந்தது அச்செய்கையினைச் சூரன்கண்டுசந்தோஷித்தருய் பாட்டனே உன்வல்லபத்துக்குமெச்சினேன் சபாசென்று கொண்டாடிஉடனே தங்கையைப்பாத்து அரமனையிற்போகக்கட்டளையிட்டு அவள்தோழியைக் குமாரனுடன்போய் அத்தலத்தினைக்காட்டும் படிக்குத்திரவு செய்தனுப்பிவிட்டபின்புமீளவுஞ் சிலதூதரைநோக்கிச் சூரியன் சந்திரன்முதலிய நவக்கிரகங்களினையும் ராசிகள் மற்று மிராநின்றவரையும் யிந்தமிஷத்திற்கொண்டு வருவீரெனத்திருவாய்மலர்ந்ததறுவாயில் வணங்கிப்போற்றி யோடிமுற்குறித்தவரனைவரையும் யிழுத்துவந்து சூரன்சன்னிதானத்தில்நிறுத்தினர் அவர்களைக்கண்டவுடன் மேகசம்பந்தத்தினுல் மறைந்திருந்த சூரியன்மீட்டும்வெளிவந்து சொலிப்பதுபோல மாறியகோபமானது மென்மேலுமதிகரித்து ஓ சூரியனுதியானவர்களே திமைப்போதும் ஒழிவின்றி மாறிமாறி வானத்திற்றிரிகின்ற உங்கள் விழிகளுக்குத்தோற்றுதது ஒன்றுமிராதே என்னுடைத் தங்கைகரத்தினை வெட்டியகாலத்தில் அதற்கொருதடைசெய்யாமல் சும்மாய்பாத்திருந்த காரணமென்னை யிக்கொடுமையினை அஞ்சாதுமுடித்தவன் பிராணனைப் போக்கினவர்களுமல்ல அல்லது அவனைக் கட்டிவிடத்துக்கு கொண்டுவந்தவருமல்ல யித்தகைய அநியாயம்நடக்கின்ற தென்றறிவித்ததுமில்லை யிச்செய்கைஉங்கள் பார்வையிற்பட்டதன்றிவேறில்லை நமதேவலின்படிக்கு உங்களுக்குரிய பணிவிடைகளைநடத்திவருகின்ற நீங்கள் உலகங்களில்நடக்கின்ற ஞாயஅநியாயங்களைக்கண்டறியாமலிப்படிக்குஅசாக்கிறதையா யிருக்கலாகுமோ உங்களை பொறுத்தவர்களுக்கெனோவென்று நீதியறியாத சூரன் சீறிப்பேசிய

காலத்திற் சூரியனாதியானவர்கள் நடுநடுங்கிக்கைகளைக் கூப்பிக்கொண்டு ஓ இறைவனே அடியோங்கள்பேரில்கோபிக்கவேண்டாம் அசமுகிதன் கரத்தைக் கண்டித்தவனைக் கண்டதில்லை தேவரீர் ஆக்கினையின்படிக்கு நாங்கள்திசைகளிற் பிசகின்றி விழிகளைச்செலுத்தி நின்றனம் இக்காரியம் எங்களுக்குத்தோற்றுமாயின் அப்படிக்கு நடக்கப்பார்ப்போமா அவனையுமவிடவல்லமோ இதனாலெங்களை மன்னிக்கவேண்டுமெனப் போற்றி நின்றவர்களை அதட்டிச்சபையிலிருப்பவரைப் பார்த்துச்சொல்லுவான் கேட்டீர்களோ இவர்கள் சொன்னவார்த்தைகளை வெகுநேர்த்தியாயிருக்கின்றது நமதுதங்கை கரமவெட்டுண்டதைப் பார்க்கவில்லையாம் நமதுநகரியிற் சென்றபோதிலும் இவ்விதக்கொடுமை நடக்கின்ற முன்னிலையிற் றோற்றுமற்போமோ இவர்கள்போற்றுதல் நன்றாகவிருக்கின்றதெனக் கோபித்து தண்டநாயகரைப் பார்த்து இவர்களைக் கொடிய சிறையிலடைப்பீரெனக் கட்டளையிட்டுமீட்டுஞ்சிலவேவுகாறரைநோக்கி தசவாயுக்களையும் யிந்நிமிஷத்திற் றருஷணமொன்ற மாத்திரத்தில் மனோவேகத்திலுமே விட்டோடி அவர்களைப்பிடித்துவந்து அரசனெதிரில் விட்டகாலத்தில் விழிகள் சிவக்கக்கோபித்துப்பார்த்து நீங்கள் வானநாடுகளிலும் பூமண்டலப்பரப்பிலும் பாதலவெல்லையிலுந் திசாதிசைகளிலுஞ் சத்தசாகரங்களிலும் அதிற்பட்ட தீவுதீபாந்திரங்களிலுஞ் சரீரத்திலும் அதிற்றங்கும் உயிரிலும் மற்றும் எவற்றிலும்பரவியும் பொருந்தியுமிருப்பீர் ஆதலால் என்சகோதரிகரத்தினைத் தேவரிலொருவன்வாளினாற் சேதித்ததைக்கண்டிருப்பீர்களே அவனுங்கள் பார்வையிற் படாமலிருப்பனோ இதனை உடனே எனக்கறிவித்தவர்களுமல்ல அவனைக்கண்டித்தவர்களுமல்ல இதனையோசிக்குமிடத்து உங்களினமாகிய தேவர்க்களால் அசுரருக்கித்தகைய பழிவருவது நன்றென்று மகிழ்ந்துபார்த்திருந்தீர்கள் உங்கள் சேவகம் நன்றாயிருக்கின்றதென்று அதிகநிட்சண்ணியமாகப்பேசும்போது என்னவிளையுமோவெனப்பயந்து மாறுத்தரஞ்சொல்ல வஞ்சிஊமரைப்போல் நின்றவாயுக்களை திக்குக்கொருவனாகச்சிறைசாலையில் வைப்பித்தான் கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே இச்செயல்களைப்பார்க்குமிடத்திற் றவத்திலுஞ்சிறந்த பொருளொன்றுமில்லை சூரன் தண்டனை நிதிமுற்றிகளிலு மேலிட்டிருக்கின்றது அதன்பின்பு விசாரணைப்பார்த்து ரிதுக்கன்ராசிகள் கிரகங்களைக்கொண்டு வருவீரெனச்சேவித்தோடி அவர்களைப்பிடித்து தள்ளிவந்து சூரன்முன் விடும்போது நிவெழப்பார்த்து தேவேந்திரன் மனிதன்செய்த கொடுமையைப்பார்த்து சம்மதித்திருந்தீர்கள் எவ்விடத்திலும் பரவியிருக்கப்பட்ட உங்களுக்குத்தெரியாத காரணமொன்றுண்டோ என்றங்கைக்குச்சம்பவித்த அப

வாதத்தினை எனக்குக்காட்டினவர்களுமல்ல எப்போதும் நமதேவலிலிருந்ததினாற் பயனென்னைமுக்கியமாகத்தேவர்கள்செய்த்தினையேநினைந்திருப்பதுபிதனாற் சாணப்படுகின்றதெனப்பொங்கி அவர்களையுஞ் சிறையில் வைப்பித்துமேலுஞ் சிலதூதரினால் திக்குப்பாலகரைவருவித்து அவர்கள்மீது தீயைப்போலக்கொதித்து விழுந்து நமதேவலுக்கஞ்சி தேவேந்திரன் தன்தேவியுடன் பூமண்டலமெல்லையிற்பதுங்கிக் களித்திருக்கின்றனன் அதுதெரியாமல் நீங்கள் திசைகளைப்போற்றிவருவதுநன்றாயிருக்கின்றது இந்திரனேவல் செய்வோன் எனக்கிளையாளைப் பின்னப்படுத்தியதும் அவனிருக்குமிடமும் உங்களுக்குத்தெரியாது மதுபானஞ்செய்தவெறியினால் மெய்மறந்து நினைவழிந்திருந்தீர்கள் போற்காணுகின்றது அல்லது உறக்கமிகுதியினாற் காவலைமறந்தீர்களோ அல்லது செல்வச்செருக்கினாற் கண்கள் மூடிப்போயதோ என்பகைவனுடன் உறவுகொண்டு பராமுகமாய் விட்டீர்களோ அல்லது அவர்களுக்கஞ்சி யிருந்தீர்களோ பெண் மையலிற்பட்டு காமாந்தகாரத்தினால் உங்களுக்குரிய தொழிலைமறந்தீர்களோ சொல்லுவீரெனக் கேழ்க்கும்போதுவாய்புலராதவறளக்கரங்களைக்கூப்பிக்கொண்டுஎமதுசுற்றமேதேவரீர் குறித்த காரணங்களொன்றினும் பட்டவர்களல்ல தேவரீர்கட்டளையின்படிக்கு எதாப்பிறகாரம் திசைகளைப்போற்றி வருகின்றனம் உமதுபகைவனைக்கண்டதுமில்லை அவர்களொளித்திருக்கும் யிடமெவ்வளவேனுந்தெரியாது கேட்டதுமில்லை எங்கள்தாயாகிய அசமுகியானவள் தன்தோழியாகிய துன்முகியுடன் யின்னயிடத்துக்குப் போனார்களென்றும் அவர்கள்கரங்களினை யிழந்தகாரணமும் எவ்வளவேனுந் தெரியாது பார்க்குமிடத்தில் யிதுமாயவஞ்சகமா யிருக்கின்றது எங்களால்யாதொருபிசகுகளுமில்லை ஆதலால் தொண்டனாக்ஷேமிக்கவேண்டுமெனப்போற்று முன்னிலையிற் சூரன் வடவையைப்போற்கொதித்து மதாங்காரத்தில்அழுந்தி பரிபாலனஞ் செவ்வையாய் நடத்தினவரல்ல அதுவெனக்கு நன்றாகத்தெரியவந்தது எனக்கிந்தபழிச்சொலசம்பவித்ததுமாயமென்று அதிசெயமாய்சொன்னது வெகுநேத்தி நேத்தியாமெனச் சீறி வயிரவாளினையுருவி பக்கத்திற் காத்திருக்கின்ற தண்டநாயகர் கையிற்கொடுத்துக் கட்டளையிட்டபடிக்குச் சிலர் நாவினைக்கொய்துஞ் சிலர்மூக்கினைக்கிள்ளியுஞ் சிலர் கரங்களைக்கண்டித்துஞ் சிலர் செவிகளை அரிந்துஞ் சிலர் மார்பினைப்பிளந்துஞ் சிலர்முதுகினைச்சேதித்துஞ்சிலர் தாள்களைத்தோள்களைவீசியுஞ் சிலர் சிரத்தினைஉருட்டியுஞ் சிலர்கண்களைக்கெல்லியுஞ் சிலர் வாய்களைப்பிளந்துஞ் சிலர் பற்களுதிரஅடித்துஞ் சிலரைநொருக்கிப்பிழிந்துஞ் சிலரைச்சின்ன பின்னமாகவரிந்துஞ் சிலரைவாச்சி

களினாற்சேதுக்கியுஞ் சிலரைத்தரையிற்றேய்த்துஞ் சிலரைப்புலிமுதலி
யகொடிய மிருகங்களினாற் றண்டித்தும் யிவ்விதங்களாகத் திசைக்கா
வலரை வாதைசெய்வித்தபின்பு சற்றுகோபந்தணிந்து சிங்காதனத்தை
விட்டிறங்கி துணைவரபுத்திரர் மந்திரிபிரதானிகள் சேனைத்தலைவர் முதலி
யோர்மற்றுஞ் சபையிலிருந்தவர்களுக்குச் செலவுகொடுத்தனுப்பிய பி
ன்பு பிரமன் மீது விழிகளைச்செலுத்தி வேதக்கிழவனேபோய் வாருமெ
ன்ற தறுவாயில் பற்பலஆசிகளைச்சொல்லி ஓ அரசனே யோசித்துக்கேட்
டருளாய் நீ கட்டளையிட்ட தெண்டனைகளிற் சற்றுங்குறைவறநடந்த
போதினுஞ் சூரியன் சந்திரனாகிய நவக்கிரகங்கள்ரிதுக்கள் இராசிகள்
முதலாக உமதுபணிவிடையின்படிக்கு நடந்துகொள்ளப் பட்டவர்கள்
இவர்கள் சஞ்சரியாமல் உலகபாலனம்நடவாது முக்கியமாய் உமது அர
சுக்கேவிருத்திவமாக விருக்கின்றதால் அவர்களைமாத்திரம் மன்னித்து
விடுதலைசெய்ய வேண்டுமெனப்போற்ற அதற்குச்சம்மதித்து சிலதூத
ரை அனுப்பிவரவழைத்து விலங்குகளைப் போக்கிவைத்து சூரியனாகிய
ரைப்பார்த்துபத்திரம் யினியெக்காலமும்நம் மவர்களுக்கொரு கெடுதி
நேருமாகில் உடனேதெரிவிக்க கடவீர்கள் நமதாணையைக் கடப்பீராகி
ல் கொடியதெண்டனைகிடைக்கும் நமக்குப்பகைவனான இந்திரனுடன்
உறவாடப்போதீர்கள் மோசம்வரும் பயபத்தியுடன் உங்கள்தொழில்
களைநடாத்திவரக்கடவீர் ஆலச்சியஞ்செய்யாமல் உங்கள்பதவிகளிற்சே
ர்ந்து வாழ்ந்திருப்பீர்களெனச் சொல்லியகாலத்தில் சூரனை வணங்கிப்
போற்றி தேவரீர்கட்டளையிற் பிசகின்றி உலவக்கடவோமெனப் பற்பல
நல்லவார்த்தைகளைப்பேசி தப்பினோமென்னுஞ் சந்தோஷத்துடன் எதா
ப்பிறகாரம் தங்களுக்குரிய தொழில்களைச் செலுத்தினர் பின்புபிரமனை
யும் அவன்பிள்ளைகளையும் ரிஷிகளையும்அனுப்பிவிட்டுதானுந் தன்னரம
னையிற்போய்போசனமுதலியசவுக்கியங்களைப்பெற்றிருந்தனன் யினியா
னுகோபன் தெய்வலோகத்துக்குப் போயினசேதிகளைக் கேட்பீராக.

அமரர்சிறைபுகுபடலம்

பலசாலியாகியபானுகோபனெனவன் மேகங்கள்சஞ்சரிக்கும் உ
ன்னதமுள்ள தன்மாளிகையினைச்சேர்ந்தபின்பு ரத்தினமயமாகியகிரீட
ம் வாகுவலயங்கள் மதாணிப் பதக்கங்கள் சரசாடு விசல்சாடு வயிரக்க
வசமேமுதலிய அணிந்துகொண்டு அம்புறாத்தூணிரத்தினை முதுகிலி
றுக்கி தேவாஸ்திரமுதலாகிய படைகளைச்சேகரித்தவனாய் வெற்றிமாலை

[illegible] அமரர்சிறைபுகுபடலம்

[illegible]த்துடத்தசன்னத்தனுப்பச் சிலதூதரை அழைத்து நமது சேனைகளைத்தருவியெனக்கட்டளையிட்டுதன் அரமனைப் புறவாயதலைச்சேர்வதன் முன்னம் பொன்னுருளைகள் நவரத்தினமயமாகிய அச்சுமச்சுருத்துக்கால்கொடிங்கை பிரம்பரக்கொடிகள் தோரணம் முத்துக்குடை முதலிய வனங்களினுற்சோடித்துயற்வதாகிறுதியாய் தத்தித்தாவி மனோவேகத்தினுங்கடுகிச்செல்லவல்ல யிலக்கணமுள்ள இரண்டாயிரம்புரவிகள் பூண்டிரானின்றதிரதத்தினைப்பாகன் கொடுவந்து நிறுத்த அதின் மீதுசிங்கத்தைப்போலத்தாவிஅரோகணித்த தறுவாயில்முன்சென்றதூதர் அறிக்கையிட்டவுடன்சற்வாயுதபாணிகளாய்சவுரியபராக்கிறமசாலிகளா யிராணின்றாடதவீரர் அயிரம்வெள்ளமும் அத்தொகைகொண்டபாரித்தாதங்கள் மேருவையொத்த யானைகள் பஞ்சலட்சணமுள்ள குதிரைகள் யிந்நால்வகைச்சேனைகள் சேர்ந்த வெள்ளங்களுடன் படைத்தலைவன் வந்து வணங்கிச் சூழும்போது சூரியனைச்சிறையனிட்ட விராதிவிரனுன பானுகோபன் அவர்கள்மத்தியில் நட்சத்திரங்களின் நடுப்பிறதேசத்திற் சோடசகலைகளைவாய்ந்த சந்திரன்தோற்றம்போலப் பிறகாசித்தவனுய்ரணபெரி செயபேரி வெற்றிச்சங்கங்களேமுதலிய பற்பல வாத்தியங்கள் அண்டமதிரத்தொனித்துவர நடக்கின்றதறுவாயில் பூமியெங்குஞ் சேனைகளாகப்பரந்து போகின்றதறுவாயில் தூளிபடலமானது மிகுத்தெழுந்து திக்குகளைத்தூரத்து கடல்களைதிடர்செய்யவும் வீரர்கள் புசங்களோங்கவும் அவர்களணிந்திராநின்ற புஷ்பமாலைகளில் வண்டுகளிறங்கித் தேனையுண்டுகளித்துத் தொனித்திருக்கவும் யிவ்வாடம்பரங்களைத் தெரிந்த தேவர் மனவாட்டங்கொண்டுவாடி யொளிக்கவும் இவ்வெள்ளங்களின் பாரத்தினைத்தாங்கமாட்டாமல் ஆதிசேஷன் ஆயிரஞ் சிரங்களும் வருந்திநெளியவும் பராகங்கள்மேலெழுந்து வானத்தைத் தாவுவது ராட்சதர் முந்திசேதிதெரியும்பொருட்டு தூதனைத்தேடவிட்டதைப் போற்றோற்றவும் புரவிகள் வாய்களினின்றொழுகும்விலாழியும் இயானையினது துதிக்கையில் நின்றுபாயும் நீரும் முமம்மதச் செலங்களும் ஏகமாய்ப் பெருகுவதுமழைபொழிய பற்வதங்களி னின்றுமிழியும் அருவிகள் கானயாறுகளினையொத்துக்காட்டவும் பற்பல நிறங்களினைவாய்ந்த துவசங்களுங் குடைகளும்பெருத்து வானத்தினை அளாவுநிற்பது காக்கைகழுகுபருந்துமுதலிய பட்சிசாலங்கள் ஆன்பொசிக்கும் விருப்பினுல் ஆகாயத்தில் உலவித்தொடர்வதுக் கிணையாகவும் வெண்பட்டுக்குடைகள் வீரமாமகேந்திரபுரியினைத்தோற்றாது மூடிநிற்பது சூரன் ஆக்கினைக்கஞ்சி பற்பலசந்திரர் சூரியன் காந்திபடாமல் போற்றியிருப்பதுக்கிணையாகவும் யித்தகைய ஆடம்பரங்களுடன் பானுகோபன் தன்சேனைகளுடன் பலபெ

ண்கள் ஆலமெடுப்பமிழ்ந்தவனும் பட்டணத்து வீதிகளைக் கடந்து
வெளிவந்து அசதியாகச் சூழ்ந்துநிற்குஞ் சமுத்திரத்தினைத் தாண்டிக்
கடையிற் பூமண்டலத்தைச் சேர்ந்தவுடன் தற்முனி முகத்தைப் பார்த்து
உங்கள்கரங்களைவாளினால் வெட்டியெறிந்தயிடமேது காட்டுவாயென்
று செப்புமுன்னிலையில் இராசகுமாரனை அதோதோற்றுகின்றவனை
த்தானென்று விரலினாற்சுட்டிக்காட்டி அவ்விடத்தில் எங்கள்கரங்களை
ச்சேதித்தவனும் இந்திராணியும்யிருந்தனர் வாருமென்று பன்னிருதிரு
நாமங்களைப்பெற்ற சீகாழிப்பதியிற் கொண்டுபோய்ச் சேர்க்குமுன்ன
மே தாசிப்படையானது அவ்வனத்தினைவளைந்துகொண்டு செழித்திரு
ந்த பூங்காவுகள் சோலைகள் முதலாகப்பறித்துக்கசக்கி யெறிந்து இந்தி
ராணியையும்மகாகாளனையுந்தேடிக்காணாதபடியால் இராசகுமாரன்கட்
டளையின்படிக்கு பூமண்டலமுற்றும் ஆராய்ந்துதோற்றப்படாமையா
ல் தெய்வலோகத்தைநோக்கி நடக்குமுன்னிலையில் இராக்கதவெள்ளங்
கள் பொன்னகரைச் சூழ்ந்து கொண்டபோது அவர்கள் ஆபரணகாந்
தியானதுமுற்றும்பரவிபொன்னுலகம்வேறொருபொன்னுலகமாகக்கா
ட்டியது இதுவல்லாமற் சதுரங்கபெலன்களும் அந்தலத்தினைச்சேர்ந்த
போது தோற்றப்பட்ட வேடிக்கைகளிற் சிலசொல்லுவோங் கேட்பீரா
க எக்காலத்துங்கோபமே மேலிட்டு கொவ்வைக் கனியையொப்ப விழி
கள் சிவந்துகாட்ட உதட்டினைக்கடித்துக்கொண்டு தேவர்களே முதலிய
பலரும் அஞ்சிவாடும்வெடித்த சொல்லினைவாய்ந்த ராட்சதப் பாதகர்
பெருக்கினையும் அவர்கள்செய்யுங் கொடுமைகளையும் யின்னபடித்தெ
ன்றுஎன்போலிகளாற் சொல்லப்படுவதோ நான்குபாதங்களினும்பொ
ன்வெண்டையங்கள்சத்திக்க திக்குகளிற்பாய்ந்துகடல்களைத்தாவி வான
த்தினுலவி எதிர்த்தவர் சிரங்களில்மிதித்து சுழிசுத்தங்களிற் குறைவின்றி
வாயுவேகத்தினு மேலிட்டுச் செல்லுங் குதிரைப்பந்திகளின் அளவையி
னைப்பேசப்படுவதோ மேலும் அவையாதங்களைப் பெயர்த்துவைக்கு
ந்தோறும் எழாநின்றதூளிபடலமானது படிந்துபிறகாசத்தினை வாய்ந்
தபொன்னுலகத்தினை மண்ணுலகமாக்கவும் யிவ்விதசிறப்பினைப்பெற்ற
குதிரைக்கூட்டங்களெங்கும் நெருங்கவும் நீலகிரியினைப்போல பாரித்
ததிரேகமுடையதாய் யிருபாரிசங்களினும்மணிகள்மாறியொலிக்கபொ
ன்னாட்டைக் கரிநாடாக்கி பனையையொத்ததுதிக்கைகளை நீட்டிவானக
ங்கைவறளவுண்டு பாகனைச்சீறும் மதயானைகளெங்கு முலவிவரவும்அ
வற்றின் மதநீர்ப்பெருக்கில் மூழ்கியுண்டு களித்துத் தொடர்ந்து வந்தவ
ண்டினங்கள் யெக்காலத்துமறியாத தேவகன்னியர் கூந்தல்களிற் செரு
கியபாரிசாத புஷ்பங்களிலிடத்திறங்கும் புதியமதுவினையுண்டுகளித்தி

ருக்கவும் அதனால் இக்கன்னியர்கள் பூலோகத்திலிராநின்ற மானிடப் பெண்களோ வென்றையப்படத்தக்கதாகவிருந்தது இஃதன்றியும் நவரத்தினமயமாக அலங்கரித்து கொடிகொடைமுதலிய சிங்காரங்களைப் பெற்று மகம்மேருஅசைவதைப்போலச் செல்லுந்தேரணிகளினது காட்சி யெப்படிக்கிருந்ததெனில் பூதலத்திலிராநின்ற மலைகளனைத்துஞ் சேர்ந்து ஆலோசித்து நமதுசிறகுகளை அரிந்துபங்கப்படுத்திய தேவராசன் சூரனுக்கஞ்சி ஒடியொளித்தான் அவன்குமாரன் தனித்திருப்பதால் அவனையாவது பற்றிஅலைத்து நமதுபழியினைத்தீர்த்துக்கொள்ளவேண்டுமென நிதானித்துஏகமாய்ப் பொன்னாட்டுக்கு வந்ததைநிகர்க்கவும் இத்தகைய வுவமைப் பெருக்கினைப் பெற்ற இரதகெச துரகபதாதிகளாகிய நால்வகைச்சயின்னியங்களுஞ் சத்தசாகரங்களுங்கூடி ஏகமாய்ப்பெருகுவதுபோல யிளைந்து எங்கும் யிடமில்லாமல் வருகின்றதை தேவர்கண்டு நடுநடுங்கிவியர்த்து மயங்கி ஒடி இந்திரசபையில் ரத்தினவகைகளினுஞ் சோடித்திருக்குஞ் சிங்காதனத்தில்வீற்றிருந்து அரசுசெலுத்துகின்றசயந்தராசனுக்குமுன்போய் அடியற்றபனையினைப்போலவிழுந்துசேவித்துவாய்புலரநாக்குழறயிதனைமுறையிடுவார்கள் ஓராசகுமாரனேயிக்காரணங்களைக்கேட்டருளாய் பரமசிவகடாட்சத்தினாற்பலவளங்களைப்பெற்று நம்மவரை அலைத்துவாழுஞ் சூரன்பிரதமகுமாரன் பானுகோபனென்னும் வீராதிவீரன் அளவற்றவெள்ளஞ் சேனைகளைக்கூட்டிக்கொண்டுவந்து நமதுபதியினைமுத்திக்கை போட்டுக்கொண்டான் இனி நாம் என்னபாடுபடவருமோ தெரியாது எங்களைரட்சிப்பது உமது பாரமென்றுவருந்திப் பேசுகின்றவரைப்பார்த்து யிதனைச்சொல்லுவான் கேட்டீர்களோ விண்ணவரோஎன்னை அரிதிற்பெற்ற தாய்தந்தையரோ அப்பாதகர் கொடுமைக்கஞ்சிப்போன யிடமேதெரியாது நமது குலக்குருவாகிய பிரகஸ்பதி பகவானுமிங்கில்லை தேவர்களில் அனேகர் சூரன் தெண்டனைக்கஞ்சிப் பதுங்கிப்போயினர் மற்றசிலருடன் நான்மாத்திரமிருக்கின்றேன் வந்தவனோ மகாபலாட்டியன் திரிமூர்த்திகளையும் வென்றதீரன்நாமவனுக்குதிறணப்பிரமாணமாகும் மேலுமிருந்தவினையின்படிக் கென்னமுடியுமோ தெரியாது திரிலோக சக்கிரேஸ்வரனைப் பலதேவர் ரிஷிகள்போற்ற விருந்தஎனது பிதாவானவர் யிச்சிறந்தபொன்னாட்டின் வாழ்வினையிழந்து சூரனிட்ட தகாதபணிவிடைகளைச்செய்து பழியில்மூழ்கிவாடிப் பதுங்கியிருக்கவும் நான்மாத்திரம் யிதுபரியந்தம் யிப்பதியில்உங்கள் ஆதரவிலிருந்தேன் யித்தினம் நினைத்தற்கரிய துன்பம்நேருவதாகக் காணப்படுகின்றது ஆதலாற் குற்றமற்ற மனதைப்பெற்ற தேவரோ நான்பாவியனாதலால் யிக்காரியம்

களைச்சாங்கோபாங்கமாகயோசித்துயிந்த அபாயத்துக்கொருதந்திரத்தி
னைச்சொல்லவேண்டும் அதற்குமுன்னம் எனதுகருத்தினையும் உங்களு
க்குத்தெரிவிக்கின்றேன் என்னைப்பெற்றதாய்தந்தையர் அளவற்றதேவர்
களுடன்கூரனுக்கஞ்சிஒளித்திருப்பினும்பாதகன்கட்டளையின்படிக்கு அ
ளவற்றராட்சதத்தூதர்தேடித்திரிகின்றனரெனக்கேட்டோம் அப்படிக்கி
ருப்பதால் யிப்போது நாமெவ்விடத்திற்சென்று பதுங்கப்போகின்ற
னம் அல்லது அப்பாதகன்குடை நிழற்படாதயிடமும் யிருக்கின்றதோ
மேலும்காலத்தில்உதவிசெய்யவல்லசார்புமொன்றுமில்லை ஆதலால்அவர்
களுக்குப்பயந்தெங்கும் ஓடவும்மாட்டேன் போனவிடத்திற் பகைரு
மங்களும் மூட்டுதலாய் விசனப்படவுமாட்டேன் அல்லது அதினலாகு
ம்பிரயோசனமென்னை பரமன்கட்டளைப்படிக்கு வருகின்ற துன்பம்
தான்செய்யும் முயற்சியினால்விலகுவதுமுண்டோ பிராணனைப்போக்க
லாமெனநினைப்பினும் அமுதமுண்டபலத்தினாற் சாவும்நேராது திரி
லோகசக்கிரேஸ்பரனாகிய இந்திரகுமாரனாகவிருந்த யானொருவருக்குமி
ளைத்து வணங்குவதோ தீரனாய்ப்பகைவருடனெதுத்துச் செயங்கொ
ள்வேன் அல்லது அவர்களைக்கண்டதுண்டங்களாகவெட்டி மடிந்து வீ
ரசொர்க்கமடைவேன்யிதைவிடவுமிப்போதாகியகாரியமொன்றில்லை ஓ
தேவர்களே பிராணனை ஒருபொருளாகநினையாத வீரனானவன் விஷத்தி
னையொத்த தீங்குகள்வரினும் வருந்திதீரத்திற் குறையான் அவ்வாறே
தமது பதவியினைவளைந்திருக்கும் ராட்சதப்பாதகருடனெதுத்துச் சண்
டைகொடுத்துச் சின்னபின்னப்படக்கொன்று வெற்றிபெறக்கடவேன்
யினி ஒருகணப்போதேனும் தாமசப்படாமல் தயிரியத்துடன் அவர்க
ள்மீது சண்டைக்குப்போக நினைந்ததால் என்சகாயத்தினை விரும்பி
னவர்கள் வுடன்பட்டுவரக்கடவீர்கள் அப்படிக்குச் சம்மதமில்லாதவர்க
ள் யிப்போதே சொல்லிநின்றுவிடலாம் அல்லது அனைவருக்குமே என்
னுடன்வருவது யுத்தமாயிராவிட்டாலுஞ் சம்மதமே அப்போதுங்
கொஞ்சமாவது அஞ்சி பின்னிடைவேனென்று நினைக்கப்போறீர்கள்
துணிந்தவர்களுக்குத்துக்கமில்லை யெனப்பலபலப்பிரதிக்கினைகளைச்சயந்
தன்சொல்லுந் தருவாயில் தேவர்க்களுக்குயிரக்கமும் வருத்தமும் ம
னதைவாட்டியலைக்க இராசகுமாரனைப்பாத்து யிதனைச்சொல்லுவார்கள்
ஐயனே உமது மனக்கருத்திதுவாகில் அதற்குவிருத்துவமாய் நாங்கள்
நினைக்கப்படுமோ அரசன்மனப்படிக்கு குடிகள் முதலாக நடந்துகொ
ள்ளவேண்டும் அதிற்பிசகுவாராயின் மீளாதநரகமுண்டென்று வேதசா
ஸ்திரங்களிற் சொல்லுகின்றதையறிவோம் ஆகையால் நாங்களும் பாத
காரிய நாட்களிற்பாதையிற்பட்டுவருந்தமாட்டோம் மேலுந் யிவ்வித

மாசநடுங்கி உயிர்வாழ்வதிலுங் கூடியமட்டும் போராடிச்செற்று ஒழிஞ்ச
ம்மதமெனத் துணிந்திருக்கின்றனம் யினிகாலதாமதஞ் செய்யாமற்ச
ண்டைக்குப்போவோம் வாருமெனச்சொல்லிய தேவர்க்களைச்சயந்தன்
இறைபையாகப்பாத்து நல்லகாரியம் உங்களுக்குந் துணிவுபிறந்ததால்யி
தோபுறப்படுகின்றனனென விரைவிற் சிங்காதனத்தினைவிட்டிறங்கி த
ன்னரமனையைக்கடந்து புறவாயலினிடத்தில் வருபவன் றினைவையறிந்
து பிறையினையொத்த தாம்கொடுகள் விளங்கப்பொன்மணிகள் மாறி
யொலிக்க யிரத்தின முகபடாம் பிறகாசிக்கக் கயிலையங்கிரியினைப்போ
ன்றுபாரித்து வெள்ளைநிறம்பெற்ற அயிராபதமானதுவந்து இராசகு
மாரனை வணங்கிநின்றதறுவாயில சயந்தனுனவன் சற்வாயுதபாணியாய்
அதன்பிடரியில் ஆரோகணித்து வீராவேசத்துடன்நடக்க தேவர்களுந்
தீரரைப்போல வில்வாள் கேடையம் பரிசு தண்டம எறியீட்டி முசலஞ்ச
க்கரமாதிய படைகளைப்பரித்து பயமீதியானது மனதையலைக்க அரசனை
ச்சூழ்ந்து போகின்றவரிற் சிலர்சத்துவழிகளைக்கண்டபோது அதின்மூ
லமாய் ஓடிப்பிழைக்கநினைந்து அப்படிக்கிச் செய்வோமாகில் மீளாத
வசையாமே ஒருகை பாத்துவருகிறதே ஆண்மைக் கழகெனத் துணி
ந்து துடர அக்காலத்தில் தேவதுந்துமி காகளஞ்சின்னமாதிய வாத்திய
ங்கள் தொனிக்குமொலியும் அயிராபதத்தின் வீறிடுமோசையும் அச்ச
மெருடிகொண்டிருக்கும் விண்ணவர்களினது ஆரவாரங்களும் யேகமா
ய்தொனிப்பது எப்படிக்கிருந்ததெனில் ஓ தேவரோதுன்பம் வரவிருக்
கின்றது வரவிருக்கின்றதென முறையிடுவதுக்கொக்கும் யிவ்விதஆட
ம்பரங்களுடன் தேவசேனையானது ஆழிகாலவாயுவைப்போல அதிவே
கமாய்நடக்க அவர்கள்மத்தியிற்சயந்தனுவன் அயிராபதத்தின்மீதுவீரசி
ங்கத்தினைநிகர்த்துச்சென்றுபட்டணத்துக்கு புறத்தியிற்சூரியனைச்சிறை
யில்வைத்தவீராதிவீரனுடையபானுகோபன்சேனைசமோகஞ் சூழ்ந்திருக்கக்
கண்டவுடன் தொக்கரித்துமேலிடுவதைராட்சதருக்குத் தெரிந்மாத்திரத்
திற் கரங்களினைக்கொட்டிநகைத்து நேத்தியவுணையில் நமதேவல்களைச்
செய்துவருந்தி ஒளித்துத்திரிகின்ற பதிதரானதேவர்கள் தாமும் ஒரு வீ
ரர்களைப்போலச் சண்டைகொடுக்கவருவது மிகவும் அதிசெயமெனப்
பேசிதாங்களும் அதிககோபத்துடன்யெதிர்ந்தனர் யிவ்வாறயிருதிறத்
துப்படைகளும் றவுத்திராகாரமாகிய கொதிப்புடன்கைகலந்து ஒருவர்
மீதொருவர் வேல்களைவீசியும் வாளினால்வெட்டியும் தனுசுக்களைவட்ட
மையாகவளைத்து குறூரமாகிய பாணங்களைப்பிறையோகித்தும் எழும
மூதோமரம்பிண்டிபாலம் முசலங்கப்பணங்குலிசஞ் சூலஞ்சக்கரமே
முதலாகிய அஸ்திரசஸ்திரங்களைகொடைகால வருஷித்தினைப்போலப்பி

றையோசித்ததறுவாயில் யிருபிறத்துச் சேனைகளிலுங் கால்களற்றும்மார்
புபிளந்து கரங்களிற்றுச்சிரங்கள் துண்டித்து யிவ்விதங்களாகச்சின்னபி
ன்னப்படுமுன்னிலையிற் கொல்லன் உலக்கணத்தில் அக்கினிபெழுவதை
ப்போலாத்தவெள்ளமானதுபெருக் கெடுத்தோடியது யிவ்வாறுஉபை
யவாகிகள்படைகளுஞ்செயத்தினைப்பெற வேண்டுமென்னும் ஆசையி
ற் போராடிநிற்குதறுவாயில் ராட்சதவீரருக்கஞ்சி தீனராகியதேவர்படைசி
ன்னபின்னப்பட்டுக் கலந்தோடும்போது எதிரிகள் செக்கவிகொட்டிபி
ன்பற்றித்துடர்ந்து பிடித்துக்குத்தி புசங்களொடிய நெருக்கிதாரியிஞ
ற்சட்டி மானினங்களை புலிக்கூட்டங்கள் கவ்விக்கொடுபோகுமாறுயிழு
த்துப்போய் பானுகோபன்முன்விட யிவர்களைக்கொடியகாவலில் வைப்
பீரெனக்கட்டளையிட்டபடிக்கு முத்திக்கையில்வைத்தனர் அதனை அயி
ராபதத்தின்மீதிருந்த சயந்தன்கண்டுகோபித்து தன்கரத்திற்பற்றிய வி
ல்லைவளைத்து குணத்தொனிசெய்து சத்துருக்கள் சின்னபின்னப்படுவதாக
சரவருஷங்களைப்பொழிய அதனாற்காயங்கள் பட்டபோதினும் ராட்ச
தவீரர்சிறிமனோவேகமும் பின்னிடமுன்னிட்டு ஊழிகாலத்தில் வெள்ளி
யங்கிரியினைச் சூழநிற்குஞ் சாகரங்களைப்போல அயிராபதத்தினைவளை
ந்துகொண்டு ஆர்ப்பரித்துச் சயந்தராசன்மீதும் நவரத்தினமயமாகிய
கட்டுகள் பொருந்திய நான்குகோடுகளினையுடைய வெள்ளையானையின்
மீதுங் கோடானகோடி பாணங்களைச்சந்திரனை இராகுசூழ்ந்ததைப்போ
லப் பிறையோகித்து ஆர்ப்பரித்தனர் அவைகளைச்சயந்தன் கண்டித்து
மேலுந்தன்வில்லில் அளவிறந்தபாணங்களைச் சந்தித்து சத்துருக்கள்
பிடித்தவில்லுகளை அவர்கள்சிரங்களுடன் கண்டித்துத் தள்ளியீட்டுஞ் ச
ரமாரிகளைப்பொழிந்து நீலகிரியினைப்போன்ற கரியநிறமுடையயானை
களையும் மனோவேகத்தினுங் கடுகிப்பாயும் புரவிகளையும் பற்வதங்களி
னை நிகர்த்தரதங்களையும் பொடிப்பொடியாக்கி யிவ்விதமாகவொருவெள்ள
ஞ்சேனைகளை தும்சஞ்செய்யும்போது அயிராபதமுஞ் சிலரோங்கிவாலி
னாற்சில ராட்சதனைவாட்டியுந் துதிக்கையினாற்பலரை வாரிவானத்தெறி
ந்துங் கால்களினாற்பலரைத்தெயத்துங் கோடுகளினால் அளவிறந்தவரை
க்குத்திப்பிளந்தும் யிவ்விதங்களாக நாறுவெள்ளம் ராட்சதரை நிமைப்
போதில்நாசஞ்செய்தது அத்தறுவாயில்பெருகிப்பரந்தஉதிரவெள்ளத்தி
ற்பட்டபலபாணங்களும் ஆபரணவகைகளும் மச்சராசிகளை நிகாத்துமித
ந்துபோக மேவிட்டு ஆகாயகெங்கையினைமாறு கொண்டோடியது யி
க்கொடுமையினைக்கண்ட நீலகேசனென்னும் ராட்சதச் சேனைத்தலைவன்
கோபித்து அடாபயலே உன்னைப்பிடித்துக் கொண்டுபோகத் தேடிவந்
ததைப்பறியாமல் விளக்கிற்படும் விட்டிலைப்போல வண்டாதலைகிழாய்

விழுகின்றனே அபலனுனதீயோ யிவ்வளவுசேனைகளைக்கொல்பவன் போகாதே நில்லுநில்லென்றெதிரில்வந்து வளைத்துக்கொண்டு நீண்டதன்வில்லை வட்டாகாரமாகவளைத்து பாணவருஷங்களைச்சொரிந்து சொக்கரித்தான் அதனைச்சயந்தன்கண்டு சிறுநகைகொண்டு ராட்சதப்பட்டிமகனே பிளத்தியகுலாவதென்னை எதோ சிலபாணங்களைப் பிறையோகித்தனை மெனமெசற்விக்க வேண்டாம் அவைபடும் பாட்டையிதோ பாரடாவென்று குரூரமாகிய பாணங்களைச்செலுத்தி அதுகளை நடுவதுபாதியில் வெட்டியெறிந்து மேலும் அளவற்ற திவ்விய சரங்களைத்தூண்டி சேனைத்தலைவன் பூண்டிருந்த ரத்தினக்கவசத்தைப்பிளந்து சரீரத்தையுஞ்சல்லடைக்கண்களாகத்துளைத்து ஆர்ப்பரித்த தறுவாயில்அவ்வருத்தங்களுக்குச் சகிக்கப்படாமையால் நீலகேசனென்போன் சற்றுமயங்கி பெருமூச்செறிந்துநின்று உடனேதெளிந்தவனுய் வடவனலைப்போற்சீறிதன்வில்லிலொரு அர்த்தசந்திரபாணத்தினைப் பூட்டிச்செலுத்தி சயந்தன்கரத்திற்பற்றியவில்லினது நாணியினைப்பட்டாலு மென்றறுத்துக்கொக்கரித்தான் அதனையெறிந்துபோட்டு சீக்கிரமாக மோகமந்திரமொன்றையுச்சரித்து பற்பலஉருவங்களைக் கொண்டெதுத்துச் சிங்கநாதம்பண்ணிவளைந்து மேல்வருகின்றதை ராட்சதவீரன்கண்டு மிகுமெத்தஆச்சரியம் ஒருஆனையின்பேரில்வந்தவன் அளவற்றதோற்றங்களாக நின்றுபொருவதை யோசிக்குமிடத்து மாயையின் முயற்சியாகவேண்டும் யிதுவை நம்மால் விலக்கப்போகாது யினிசற்றுநிற்போமாகில் பிராண ஆனிவருமென்று பயந்துதன்தேரை விட்டுக்குதித்தோடிப் போயினன் யிவ்வாறு சயந்தன்சிலரோங்கிப் போராடுமுன்னிலையில் அவன்பாணங்கள்சுறுக்குச்சுறுக்குமெனத்தைத்துவதைக்கச் சகிக்கமாட்டாமல்அஞ்சிசின்னபின்னப்பட்டுபானுகோபன்சேனைகளோடுவதைக்கண்டசோமாகூரன் மாயாவலி சுரகேசரிபதுமன் வலிகண்டன் வாமன் வருணன் மாகதன் முதலானசேனைத்தலைவர்கள் மனம்பொறுமல் தங்கள்ரதங்களை முடுக்கிக்கொண்டு மேலிட்டுவந்து சயந்தன்மோகனவித்தையின் முயற்சியினைத்தெரியாமல் தாங்கள்கற்றிருக்கும் மாயமந்திரங்களனைத்தினையுஞ்செபித்துச் சண்டைகொடுத்துந் தேவராசகுமாரன்வித்தை வலியினைக்கடக்கப்படாமையால் திகிற்கொண்டுமனமயங்கியேங்கி யினிஎன்னசெய்வோம் யிச்சிறியன்கையில் அகப்பட்டுமுழிக்கலாச்சுதே சற்றுதாழ்த்தோமாகில் மோசம்வரும்போற்காட்டுகின்ற தென ஒருவரைஒருவர்பாத்துயோசித்திருக்கின்றதை பானுகோபன்கண்டு மனம்வருந்தி தன்சேனைகள் பட்டபாட்டையும் படைத்தலைவர்கள் சிக்குப்பட்டுத்தியங்குவதையுஞ்சயந்தன்செயத்தையும்நிதானித்துயினிநாம்சற்றுதாழ்ப்போமா

யில் மோசம் நேருமென்று அதிசீக்கிரமாகத் தன்குலக்குருவாகிய சுக்கி
ரசாரியானவன் தனக்குப்போதித்திருந்தஞானோபதேசமென்னும் மந்தி
ரத்தை ஆசிரியன் திருவடிகளை நினைந்துவிதிப்படிக்கு உச்சரித்தகாலத்திற்
சயந்தன் மோகனமந்திரவலியழிந்து பழையபடியே தானென்றுணர்நி
ன்றவன் யிஃது சுக்கிரசிரியன் மந்திரவல்லபத்தினு லாயதெனவறிந்து
மானமுங்கோபமும் மனதைவருத்தவாடியிருப்பதைச் சூரன்மகன் பா
ர்த்துத் தன்றேரைத் தூரத்திலேவந்து எதிரில்நின்றுகொண்டு யிதனைச்சொல்
லுவான் ஓ இந்திரகுமாரனே உனதுமாய்கையின் முயற்சியுஞ்சவுரியமு
ம் நான்வருவதன்முன்னமே போய்விட்டதைக் கண்டனை யினியுன்னை
ச் சூரியனைப்போலப்பற்றிச் சிறையில்வைப்பேன் கூடுமாகிற்சண்டை
கொடுக்கவரலாமெனப் பானுகோபன்பேசிய விசேஷத்தைச் சயந்தன்
கேட்டு நகைத்துச்சொல்லுவான் வல்லவர்கள்வெல்லவதும் மாட்டாதார்
தோற்பதுமெனநினைவது அறிவின்மையிலையும் வினைப்படிக்கு மாறி
வரும் யிப்படிக்கிருக்க உன்சவுரியத்தினை நீயே துதிக்கப்படுமோ செ
ல்வச்செருக்கினாலிதனைக்குறித்தனையென்பதை பானுகோபன்கேட்டு
சவுரியமில்லாதவர் பேசும்வசனத்தைச் சொன்னாய் சத்தவீரன்யிப்படிக்
கு நினைக்கவுமாட்டான் உன்னுடன்வீண்வார்த்தைகளை யாடியிருப்பதிற்
பயனென்னை இதோபாருஞ்சற்றுநேரத்தில் நான்குறித்தபடிக்கு மு
டிப்பேனென்று எமனக்கும் எமனுகவிருக்கின்ற தனதுநீண்டவில்லி
னை வட்டாகாரமாகவளைத்து குணத்தொனிகொண்டு சிங்கநாதஞ்செய்
தான் சயந்தனுஞ்சற்றும் மனந்தளராமலதிராய் கிண்கிணிகள் கலிக்கு
ம்பொன் வில்லைமண்டலாகாரமாகவளைத்து நாரியினையேத்தி டங்காரச
த்தங்காட்டி மண்டிபோட்டுநின்றான் அதனைபானுகோபன் கண்டவுட
ன் வடவாமுகாக்கினியைப்போலச் சீறிகொஞ்சமாவது பயமில்லாமற்ச
வுரியங்காட்டுவையோ நல்லகாரியம் உன்னுணவத்தை யடக்குறேனென்
று கழுகிறகுகள்பூண்டு தங்கக்கட்டுகள் பிகிந்து சாணைபிடித்து நகத்த
காயமாய்விளங்கும் அலகைப்பெற்ற குரூரமாகியபாணங்களை அம்பு
க்கூட்டிலிருந்தெடுத்து கோடைகால வருஷத்தைப்போலச் சொரிந்து
ஆர்ப்பரித்தனன் சயந்தனும் வீராவேசங்கொண்டு தனது நெடியகாண்டீ
பத்தில் விஷித்துவைபவிட்டுக் கூர்மையாயிராநின்ற தீட்சணியமாகியசர
வருஷங்களை மென்மேலுஞ்சொரிந்து தன்புகைவன்செலுத்திய கணை
களைக்கண்டித்துத்தள்ளி மேலும் அபரிமிதமற்றபாணங்களைக் காற்றி
னுங்கடுமையிற்செலுத்தினான் அதுகளைப்பானுகோபன் சின்னபின்ன
மாக்கி மேலும் பாணங்களைச்செலுத்தச் சயந்தன்கண்டிக்க யிவ்விதமா
க விருதிறவரும் இருளும் மின்னலும்போல மாறிமாறிப் போர்செய்து

வருமுன்னிலையிற் றேவராசபுத்திரன்கைமேலிட்டு பானுகோபன் அ
ண்டபசிலீமுகங்களினைச் சொரிந்ததன்றிமேலும் ஆயிரக்கோடிபாண
ங்களைப்போக்கி பகைவன்வில்நாரியைப் பழுதென்றறுத்துசிங்கநாதஞ்
செய்தகாலத்திற் பானுகோபன் ஆலகாலத்தினைப்போலக் கொதித்துவே
றொருவில்லையெடுத்து வளைத்து மிகுந்தகூர்மையுள்ள பாணங்களினைத்
தாண்டி எறிவிட்டசரங்களைத் துத்தமுறுக்கிமீளவும் ஆயிரம்பாண
ங்களையேவி சயந்தன்சரீரத்தினைச்சல்லடைக்கண்களாகத்துளைக்க அதனா
ல் வருத்தியுஞ்சற்றும் பயப்படாமல்தானும் ஆயிரங்கூராமாகிய பா
ணங்களைப்போக்கி நன்பகைவன்தேராட்டைத்துங் குதிரைகளைக்கொன்
றுமேலும் அளவற்றசரங்களைப்பிறையோகித்து ராட்சதச்சேனைகளைக் க
ண்டதுண்டமாக விழக்கண்டித்தான் அத்தருவாயிற் பானுகோபன் த
ன்தேர்பின்னப்பட்டதையும் படைகள்படும் பாட்டையுங்கண்டு சற்பத்
தைப்போற் சீறி மற்றொருதேமத்தெரிற்பாய்ந்து பற்களைக்கடித்து இ
டியினையொப்ப கெற்சித்து வில்லையிழுக்கி நூறாயிரகோடி சரங்களைத்
தூண்டி சயந்தன் கரத்திற்பற்றியவலிய வில்லைக்கண்டித்து அவனுடனு
ம் அயிராபதத்தின் சிரோசமும் ரத்தமயமாகத்துளைக்கஅதனால் இந்திரகு
மாரன் மிகவும்வருந்திக்களைபட்டுசண்டைசெய்யத் திறவகிக்கமாட்டா
மல் வெள்ளையானையின்மீது மூர்ச்சித்துவிழுந்தான் கேட்டர்களோசவு
ணகாதிரிஷிகளே அமுதமுண்டவமியிஞற் சயந்தன்பிறர்களைல்ல ஆதி
லுஞ்சாவுக்குச் சமமானகளைபட்டு பசியபிலைகளின்மத்தியிற் செந்தாம
ரைப்புஷ்பித்திருப்பதுபோலச் சரீரமெங்கும் உதிரம்பீரிட்டோடச்க
ளைத்து விழுந்துகிடப்பதை அயிராபதங்கண்டு வருந்தி ஐஐயோ திறபு
வனசக்கிரேறவ்பான் குமாரன் யிப்பாடுபடவேதோ விதியினைவெல்லவல்
லவொருவருமில்லையென்பது யிதனால்திஷ்டாந்தமாக விருக்கின்ற
து யினிதான் சும்மாயிருப்பேனாகில் ஒருகாலம் அபாயம்நேருமென்
று அதிககோபங்கொண்டதாய் துதிக்கையினைச் சுலவி அதிவேகமாய்ப்
பானுகோபன் தேரிற்பாய்ந்து மோதியது அத்தாக்கலினாற்குதிரைகள்
பொடிபட்டு பாகனுதுகள்பட்டு தேர் தும்சப் பட்டுப் போகப் பானு
கோபன் தப்பித்துக்கொண்டு பூமியிற்பாய்ந்து அயிராபதத்தைக்கோ
பித்துப்பார்த்தான் அத்தருவாயில் அதற்குக் கோபந் தணியாமற் பின்
னிடைத்து வேகங்கொண்டுவயிரம்போன்ற ராட்சதவீரன் மார்பிற்பாய்
ந்தமுன்னிலையில் மடமடென்றநான்குகோடுகளுமொடிந்து பின்னிட்
டொடிவருந்தி நிற்கும் வெள்ளையானையினது மத்தகத்தி னிடத்திற் றன்
வலிகொண்டுகுத்தினன். அத்தாக்கலின் உதிரியினாற் சகிக்க மாட்டாம
லிருப்பாற்கடல்உடைந்ததைப்போலவீறிட்டுஉதைத்துக்கொண்டுதில

த்தில் விழுந்து சாவுக்குச் சமமான களைபட்டது அத்தருவாயில் அதின்மீதுழும்பித்திருந்த சயந்தனுக்கு ஆயாசந்தீர்ந்து கண்களை விழித்ததுஅபிராயதத்துக்கு நேர்ந்த வருத்தத்தினைப் பார்த்து அதிகக்லேசப்பட்டுத்தேறியிதனை நினைப்பான் நமது ஆசிரியன் அன்பாகப் போதித்த மோகனமந்திரப்பெருமை மங்கியதுமன்றியில் நிற்சச்சயமில்லாமல்லவியுங்குறைந்தேன் பின்பாபிகள் பற்றிக்கொண்டுபோய் கொடியசிறையிலிடுவர் யிதற்சையமில்லை, பொன்னுலகமும் நாசப்பட்டுப் போமென்றுமனமே சிறதும்வருந்தவேண்டாம் கர்த்தன் கட்டளையின்படி நடப்பது நிச்சயமாதலால் நீ துக்கப்படுவதினு லாவதொன்றில்லை யென்றுசமாதானப்படுத்தித் தியங்கி நிற்பதையும் அபிராயதங் களைபட்டுக்கிடப்பதையும் ராட்சதத் தலைவர்கண்டு ஆர்ப்பரித்து பல சர்ப்பங்கள்கருடனைவளைந்ததுபோல இந்திர தனையனைச்சுற்றிப் பிடித்துக்கொண்டபோதுராட்சதர் மேல்விழுந்து இவன்வஞ்சகன் மாயாவாதியாகையாற்பதலைப்படுத்த வேண்டுமெனச் சிலர்சொல்லச் சிலர்அடியுங் குத்தும் பிராணனைப்போக்குமென்றும் பியவிதங்களாகப் பேசித்துடைச் சயந்தனைக்கைப்பிடியாகக் கொண்டுபோய் பானுகோபன்முன் விட்டபோது சேனைத்தலைவனைப்பார்த்து என்னுடைய பாணங்கள் படுத்திய காயத்தினால்மிகவுஞ் சரீரம்நொந்து பேசவுஞ் சக்தியமில்லாமலிருக்கின்றனன் ஆதலாற் சத்துருவென் றெண்ணி யிவனைவருத்தாமல்தேவர்களுடன் காவலில்வைப்பீரென்று அரசன்கட்டளை யிட்டபடிக்கு மந்தரகிரியினைவாசுகியிறுற் பந்தித்ததைப்போல வில் நாரியினால் யிரண்டு புயங்களும் யிறுப்போயிற்றென்ன வரிந்துகட்டி விண்ணவர் கூட்டத்திற்சேர்த்தனர்.பின்பு பானுகோபா னவன் சிலசேனைத் தலைவரைப்பார்த்து யிவ்விடத்தில் அகப்பட்டவர்களல்லாமற் பட்டணத்திலிருப்பவரையுந் தேடிப்பிடித்துகாவலிற் படுத்தியபின்பு பொன்னுலகினை அக்கினிப்பிறவேசப்படுத்தி சாம்பலாக்கி அச்சமாச்சாரத்தினை அதிதீவரமாக தெரிவிப்பீரென்று ஆக்கியாபித்தபடிக்கு வணங்கிப்போய் நகரமெங்குந் துருவிகண்ணிற்பட்டவர்களை தேவகன்னியருடன் தாமணியாகப் பிணித்துவந்துதமதரசன் பணித்தவாறே அவர்களையுங் காவலிற் சேர்த்துப்போய்ப்பொன்மயமாய் ரத்தினங்களினால் அலங்கரித்த முத்துத்தொங்கல் விளங்கப் பலநிலைகளைப்பெற்று சித்திரப் பிறதமைகள் மற்றஅலங்காரங்களைவாய்ந்திருக்கும் மாடமாளிகை கூடகோபுரம் மண்டபங்கள் அரமனை சபாமண்டபம் நாடகச் சாலைகள் கற்பகவனங்கள் உத்தியானவனங்களேமுதலிய பலவனங்களைக் கொண்டிருக்குஞ் சொற்க லோகத்தைப் பலதிசையினும் அக்கினியை மூட்டிக்கொளுத்திய காலத்தில் அப்பொ

௧௱௪௮ அமரர்சிறைபுகுபடலம்.

ண்ருடானது பூர்வத்திற் பரமசிவத்தின் விழிக்கனலினுற் றிரிபுரங்களெ
ரிந்ததைப்போலச் சாம்பலாய் உருத்தெரியாமற் போயிற்று, கேட்டீர்
களோ சவுனகாதி ரிஷிகளே யூழிகாலத்தி னல்லது அழிவில்லாத விண்
ணுடானது தகிக்கப்பட்டு அதற்குக் கர்த்தனுகிய இந்திரனும் வறியனுய்
ப்பதுங்கத் தேவருஞ் சயந்தனுஞ் சிறையிற்பட்டமையாற் செல்வத்தி
னை நிலையெனச் சொல்லப்போமோ சலனமற்றதாய் பலபுவனங்களினு
ம்புகழப்பெற்ற வளமிகுத்த விண்ணவர் பதவியானது கடையிர்சுட
லையைப்போல வெள்ளிடையாக மாறுபட்டது யிச்சேதியைப் பானு
கோபன் கேட்டவுடன் மனமகிழ்ந்தவனுய்ச் சயந்தன்முதலாகியதேவர்
களைமுத்திக்கை போட்டுக் கொண்டிருந்த ராட்சத வீரரைப் பார்த்து
ஓ படைத்தலைவரோ யிவர்களைப் பதலமாய் கட்டுக் காவலுடன் முன்னு
தாக வீரமாமயேந்திரபுரியிற் சேர்ப்பீரெனக்கட்டளையிட்டனுப்பிவிட்
டுத்தானும் ரதகெச துரகபதாதிகள்சூழ செயவுச்சாகத்துடன் செயபே
ரிரணபேரி வெற்றிச் சங்கங்களாதியாகிய வாத்தியங்கள் சமுத்திரகோ
ஷடியினுமேலிட்டுமுழங்கபொன்றுபட்டகோலத்தைகண்குளிரப்பா
ர்த்து அதிகசந்தோஷத்துடன் அப்பதியைக்கடந்து பூமண்டலத்தில்வ
ந்திறங்கி பலதேசங்களைத்தாண்டி சமுத்திர மத்தியில் உலகங்களுக் கர
சாகவிளங்குந் தன்பதியைச்சேர்ந்து சேனுசமோகங்களுக்குவிடைகொ
டுத்தனுப்பிவிட்டு தானுந்தேரைவிட்டிறங்கிப் பலமங்கலவாழ்த்துகளை
ச்சுமங்கலிப் பெண்கள்பாட முத்துமுதலிய நவரத்தின ஆலாத்திகளெ
த்திநிற்கப் பட்டணவீதிகளைக்கடந்து சிறையிற்கொடுவந்த சயந்தனுதி
யவிண்ணவப் பசுக்களைக் கொண்டுபோய் ஆயிரத்தெட் டண்டங்களுக்
கதிபனுகிய சூரபதுமன்முன் னிறுத்திச் சேவித்தவனுய் ஐயனே தங்கள்
கட்டளையின்படிக்குப்போய் பொன்னுலகம் பூலோகம்பாதலமேழுந்
தியயிடங்களெங்குந்தேடியும்இந்திரனை அவன்பத்தினியுடன்காணுமை
யால் விண்ணுட்டைக் கொளுத்தி அதிலிருந்ததேவராசபுத்திரனுகிய சய
ந்தன் மற்றவிண்ணவரை அவர்கள் பத்தினிமாருடன் கொண்டுவந்து
சேர்த்தேன் யிது தங்கள் சித்தமறிகவென்றுன்—யிதனைக்கேட்டசூரன்ம
னமகிழ்ச்சியுடன் குமாரனை அருகிலழைத்து கட்டித்தழுவிச்சமீபத்திலி
ருத்தியபின் தேவர்கள்மீது விழியினைச்செலுத்தி பற்களைக் கடித்து அதி
கோபத்துடன் தண்டநாயகர்களைக்கூவி யிவர்கள் உறுப்புகளைச் சின்
னபின்னப்படுங் கண்டிக்கக் கடவிரொன்று உத்திரவுசெய்தான் அவ்வா
றே அவர்களுந் தங்கள் கரங்களிற் பற்றியிருந்த ஆயுதங்களை யுதறிக்
கொண்டு சிறைபட்டிருந்தபுலியானது விடுபட்டு மான்கூட்டங்களின்மீ
துபாய்வதைப்போல தேவர்கள்மேற் றவிப்பற்றினவர்களாய்சூரன்தன்

யையாகிய அசுர களிக்கும்படியாகச் சிலர்கரங்களை சிலர்புயங்
களைச் சிலர்தோள்களைச் சிலர் கன்னத்தினை ஒவ்வொன்றலறுஞ் சிலர் கண்ட
ங்களைச்சிலர் நாசிகளைப்பலர் கபோலத்தினைப்பலர் தொடைகளை மார்ப
ங்களை கண்களை மற்றுமிராநின்ற உறுப்புகளை வெவ்வேறாகக் கண்டி
த்துங் கெல்லியும் பிளந்தும் யிவ்வாறு பலவாகத் தெண்டித்தும் அமு
தபோசனமுண்ட மகிமையினால் மீட்டும் அவைகளெதாப்பிறகாரந்தோ
ற்றக்கண்டு சூரன்அதிசெய்ப்பட்டவனாய் தெண்டிப்போரை நிறுத்தி இ
வர்களைக்கொல்லவுமாகாது பங்கப்படுத்தவும் போகாது யித்தகையசிற
ப்பினைவாய்ந்த பெருமைக ளனைத்தும் பரமசிவகடாட்சத்தினால் நாம்
பெற்ற வரமுயற்சியினாலடங்கி மங்கினவொ நிதானித்து ஆனாலும்ஒரு
போதும் நீங்கப்படாத கொடிய நரகத்தினைப்போன்ற கடிய சிறைச்சா
லையில்வைத்துப் போற்றக்கடவீரெனக் கட்டளையிட்டான் எதிரில்நின்ற
தூதர் மகாபாக்கியமெனச் சேவித்துச் சயந்தனாதியாகிய தேவர்களைப்
பிடியினைப்பற்றித்தள்ளிப்போய் நினைத்தற்கரிய கொடியசிறைச்சாலை
களிற் காவல்கொண்டிருக்கும் வீரருக்குக்காட்டி நமதரச னேவலின்
படிக்கு யித்ததேவ கூட்டங்களைப் பதலமாகக் காத்திருப்பீர்க ளெனச்
சொல்லிப் போயினர்- பின்பு அத்தலத்தினைப்போற்றுங் கொடியராட்
சதர் சற்றும் யிரக்கமில்லாமற் பாரவிலங்குகளை யிறுதுவாகிய கால்களி
ல்மாட்டி சிறைச்சாலைகள் தோறும்பிரித்துவிட்டு அத்தலங்களிற்காவலா
யிருப்பவருக்கு திட்டவட்டங்களைச் சொல்லிப்போட்டு தமதிடங்களி
ற்போற்றியிருந்தனர்- யிவைநிற்கச் சபாமண்டபத்தில் அரசுசெலுத்தி
யிருந்த சூரன் தன்குமாரனைப் பார்த்து அப்பனே அலசினையசீக்கிரமத்
தில் உன்னரமனையைச் சேர்ந்து சவுக்கியமா யிருப்பாயெனவிடைகொ
டுத்தனுப்பிவிட்டு துணைவர் மித்திரர் மந்திரிகள் முதலாகியசபையாரு
க்குஞ்செலவுதந்து தானும்ராசபரிவட்டங்களுடன்அரமனையேபோய்ச்
சகல சவுக்கியங்களையும் அடைந்திருந்தான் - செட்டீர்களோ நைமிசார
ணியவாசிகளே யிவ்வாறுராட்சதர்கள் களித்திருக்கச் சயந்தனும் மற்ற
தேவர்களுஞ் சற்பத்தினது படத்துக்கிணையாகிய நிதம்பத்தினையும் உடு
க்கையையொத்த சிறுத்தயிடையினையும் வாய்ந்த தேவர் பத்தினிகளுந்
துக்கசாகரத்தி லழுந்திகொடியராட்சதர்கள்நாட்டில்வேடன்வலையிற்பட்
டமயிலினங்களை யொத்து மிகவுமஞ்சி பட்சிசாலங்கள் கூண்டுகளில்
வைத்திருக்கும் மின்மினிகளைப்போலச் சிறைச்சாலையிற் கட்டுண்டு அசு
த்தமாகிய பணிவிடைகளை நடாத்தி மனவாட்டத்துட னிருந்தனர். அவ
ர்கள்படுந் துன்பத்தை ஒருவராலுஞ் சொல்லிமுடியாது இவையன்றியுந்
திரிலோக சாம்பிராச்சியத்தினைப் பெற்றுவாழ்ந்த இந்திரன் தன்பதி

ளையிழந்து காடேகெதியாயிருக்கவும் பலராலும் புகழ்பெற்ற பொன்
னுலகம் பொரிந்து கரிந்து சாம்பற்பட்டு நாசமடையவுஞ் சயந்தன் மு
தலிய தேவர்க்கள் நீத்தற்கரிய சிறையிற்படவும் மிவ்விதமாகத் தெய்வ
போகங்களையிழந்தபடியால் பரமசிவ கடாட்சத்தினாற்பெறும் மோட்ச
சம்பத்தினையன்றியிற் றுன்பமில்லாத சவுக்கியம் வேறொன்றுமில்லை, இ
ச்சரித்திரங்களைக் கேட்டோரன்றோ யினி பானுகோபனால் அகப்பட்டவி
ன்னாட்டில் நடந்த சேதிகளையுஞ் சொல்லுவோம் தேவர்களனைவரை
யுஞ்சிறை சாய்த்துக்கொண்டு போனபின்பு முன் பானுகோபன்மார்
பிற்பாய்ந்து தந்தங்கள் முறிந்து அவன் குத்தினால் மூர்ச்சித்துக் கிடந்த
ஐராபதமானது தெளிந்து விண்ணாடுபட்ட பாட்டைக்கண்டிரங்கின
தாய் யினியிவடத்திலிருப்பதிற் பயனென்னை அரசனில்லாதயிடம் பாழ
ன்றோவென்று சிந்தித்துச் சயந்தன் முதலானதேவர்களென்பட்டனரோ
வென்றேங்கினதாய் மனவருத்தத்துடன் அப்பதவியைக் கடந்து சமுத்
திரஞ்சூழ்ந்த பூமண்டலத்திற்போய்ப் பலஸ்தலங்களைச் சேவித்து கடை
யிற் றிருவெண்காடென்னும் பெருமையிற்சிறந்த நகரைக்கண்டு இஃது
சிறந்த நாமெனக்கருத்திற்கொண்டு அப்பதியில் மூலகாரணராய் பரம்
பொருளாய்ச் சர்வசீவகாருண்ணியராயிராநின்ற பரமசிவக்கோலமாகியவி
லிங்கத்தினை ஸ்தாபித்து காலைமாலைப்போதிற் றானஞ்செய்து திவ்யபரிம
ளபுஷ்பவகைகளைத் தேடி யெடுத்துவந்து சந்தனச் சுத்தோதகங்களினால்
அபிஷேகஞ்செய்து வேதவிதிப்படிக்கு அருச்சனை முதலிய ஆராதனைகளை
பத்தி பூர்வகமாக நடாத்திப்போற்றி வணங்கிப்பூசித்து வருமுன்னிலை
யில் அதன் பணிவிடைகளுக்குப் பரமன் களித்து அனுக்கிரகஞ்செய்தப
டிக்கு முனமிற்றகோடுகள் நான்கும்பழையபடியே முளைக்கக்கண்டு க
ளித்து அப்பதியை நீங்காமல் லோகநாயகனை வழிபட்டிருந்தது யிது
நிற்க பொன்னுலகமழிந்து தேவர்சிறையிற் பட்டவுடன் தேவதுதர்மி
கவும்வருந்தி மனோவேகத்திலே மேவிட்டோடி மகம்பேருச்சாரலிற்றவ
ஞ்செய்திருக்கும் இந்திரனைக்கண்டு வணங்கிப்போற்றி கோவென்றழு
து ஓ யிறைவனே யென்சொல்வோம் தேவரீர் பொன்னாட்டை நீங்கினபி
ன்பு ராசகுமாரன் அரசுசெலுத்தி நேத்தியவனாயில் எங்களைப்போற்றி
வந்தனர் சூரன்குமாரன் பானுகோபனென்பவன் அளவற்றராட்சதப்ப
டைகளைக் கூட்டிக்கொண்டுவந்து பொன்னுலகை முற்றிக்கைபோட்டு
க்கொண்டதையறிந்து தமதுகுமாரன் கோபித்தவனாய் தேவப்படைக
ளுடன் ஐராபதத்தின்பேரில் ஆரோகணித்துப்போய் அகோரயுத்
தங்களைச்செய்து பற்பல ராட்சதரை வாட்டியுங்கடையிற் சத்துருக்க
ளுக்கிளைத்துத் தாமும்விண்ணவர் அவர்கள் தேவிமாருடன் பாதளசி

அமரர்சிறைபுகுபடலம்.

றயிற்பட்டுப் போயினன் கொடியமனதையுடைய ராட்சதர் அத்துடன்போகாமற் சொர்க்க லோகத்தினைத் தீக்கிரையாகக் கட்டுக்கொளுத்தி நாசஞ்செய்தனர் அவ்வனியாயத்தை யிவ்விதமெனச் சொல்லவும்போமோ வாயெழவில்லையென்று கண்களில் நீரைப்பெருக்கி முறையிட்டதைக்கேட்டவுடன் திகிற்கொண்டு புத்திரசோகமேவிடச்சோர்ந்து ஐயனே பகைவர்கையிற் சிக்கினையோ அக்காலத்திலென்னை நினைந்தனையோ மிகவும் வருந்தினையோ என்செய்வேனென்று துக்கசாகரத்திலழுந்தினவளாய்க் கிலேசிக்குமுன்னிலையில் இந்திராணியானவள் செவிகளில் யிச்சம்பவங்கேட்டவுடன் சாவுக்குச்சரியான மூர்ச்சையாய்ச் சற்றுநேரத்திற்றெளிந்து ஓ குமாரனே ஓ புத்திரசிகாமணியே ஓ என்கண்மணியே எங்கள்யாவரும் பிராணனைப் பெரிதாகவெண்ணி உன்னைத்தவித்து விட்டுவந்தோம் பின்புநீசுகமாய் அரசுசெலுத்தி யிருக்கின்றனை யென்பதைப் பக்ஷிகள் சொல்லக்கேட்டு மனமகிழ்ச்சியா யிருந்தேன் யிக்காலத்திற் சிறுபிள்ளையாகிய நீயானவன் கொடிய செய்கைகளை யுடைய ராட்சதப் பாதகர் கையிலகப்பட்டுச் சிறையிலிருக்கின்றனை யென்பதைக்கேழ்க்கவும்போதுமோ என்னுடைமகனே என்னைவிட்டுப்போகலாமோ ஒடிவந்து என்துக்கத்தைத்தீராயோ பாவியொருபெண்பிறந்து படாதபாடும்பட்டும் புத்திரனையும் யிழக்கலாச்சுதே தெய்வமே யென்செய்வேன் உனக்கென்னிடத்திற் குறையுண்டோ ஓ என்பிராணனுக்கினியமகனே நீ ராட்சதர் வசப்பட்டனை யென்னுங்கொடிய சொல்லைக்கேட்டும் பிராணனைவிடாமலிருக்கின்றேன் என்னினுங் கல்மனதையுடையவர் யாரிருக்கின்றார்கள் பரமன் செயலிவ்வாறோ வென்று பலபலதுக்கத் துக்கேதுவாகிய சொற்களைச் சொல்லிச்சொல்லிப் புலம்புகின்றகாலத்திற் றேவராசன் அவளையொருவகையாகத்தேற்றி மனவருத்தத்துடன் பழையபடியே பரமனைவழிபட்டு யிருந்தான் கேட்டீர்களோ சவுனகாதிரிஷிகளே யிதுபரியந்தஞ் சொல்லிவந்த கதாப்பிரசங்கங்களை கேட்டீரன்றோ இனிமதிறைவளுகிய சுப்பிரமணியக்கடவுள் பாமசிலத்தின்மூலமாக உற்பவித்த சரித்திரங்களைச் சொல்வோம் கவனமாகக்கேட்கக்கடவீரென்று சூதபௌராணிகர் ஆரம்பித்தனர்.

அசுரகாண்டம் முற்றிற்று

முதற்பொஸ்தகமுடிவு.